என்று தணியும் இந்த
எழுப்புதல்
தாகம் ?

லியோனார்ட் ரேவன்ஹில்

~ தமிழில் ~

Pr. Romilton

என்று தணியும் இந்த
எழுப்புதல்
தாகம்?

லியோனார்ட் ரேவன்ஹில்

வானங்களைக் கிழித்திறங்கி.. வருகைக்கு முன்னே வரப்போகும்
வரலாறு காணா எழுப்புதலுக்கு வழிகாட்டி...

என்று தணியும் இந்த
எழுப்புதல்
தாகம்?



- தமிழில் -

அடைபட்ட அக்கினி

Pastor. S.Romilton
246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091.
Mob: 9810646981

வேதத்தின்

அதிகம்

கேட்கப்படாத,
பிரசங்கிக்கப்படாத,
எடுத்தாளப்படாத,
அறிமுகமாகாத,

எபிரேயர் புத்தக விசுவாச வீரர்களின் பட்டியலில்
இல்லாத மனிதர்களில் இவரும் ஒருவர்.
சிமியோன் என்று பேர்...

புதிய ஏற்பாட்டின் காட்சிக்கு வரும்போது இவருக்கு ஏறக்குறைய 90 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்! அவரைப் பற்றி வேதம் சொல்கிறது. “சிமியோன் என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான். அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டும் இருந்தது.”

(லூக் 2: 25, 26)

பழைய, புதிய ஏற்பாட்டுக் காலங்களிலும், கிறிஸ்தவ வரலாற்றிலும் தேவன் எழுப்புதலை வாக்குத்தத்தம் செய்து, அவ்வப்போது அநேகரை எழுப்புதலின் கருவியாகப் பயன்படுத்தியது உண்டு. இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்த இந்த சிமியோனுக்கு, தான் காலங்காலமாய்க் காத்திருந்த அந்த இரட்சண்யமாகிய இயேசுவை தன் கண்களால் காணும் பாக்கியம் கிடைத்திருந்தாலும், அவரைப் போலவே எழுப்புதலுக்காக ஏக்கமாய் ஏங்கித் தவித்து எதிர்நோக்கிக் காத்திருந்த அநேகர் அதைத் தங்கள் வாழ்வில் காணக்கிடைக்காமல் அதற்காகத் தாங்கள் ஜெபித்து ஜெபித்தே ஜீவனை விட்டதும் உண்டு...

இவர்களைப் போன்றவர்களைக் குறித்தே வேதம், "இவர்கள் எல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடு மரித்தார்கள்.." (எபி 11: 13) என்று சொல்கிறது.

அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான்

லியோனார்ட் ரேவன்ஹில்

அவர்கள்...

மரித்தும் இன்னும் பேசுகிறான்...

எழுப்புதலைக் காட்டிலும் எழுப்புதலின் தேவனையே நேசித்து, வாஞ்சித்து, 50 வருடகாலம் எழுப்புதலையே சுவாசித்து, பிரசங்கித்து, ஜெபித்து, எழுதி, அதைத் தூரத்திலே கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, தன் காலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமல் போனாலும், தனக்குள் இருந்த தீயை நம்மைப் போன்ற அடுத்த தலைமுறைக்குள், தப்பாமல் பற்றவைத்து விட்டே சென்றிருக்கிறவர்...

“மரித்தும் இன்னும் பேசுகிறான்...” என்ற வார்த்தை இவரைப் போன்றவர்களுக்காகவே எழுதப்பட்டது. இவரது புத்தகங்களும் ஆடியோ வீடியோ செய்திகளும் இன்றும் இடைவிடாமல் பேசிக் கொண்டே இருக்கின்றன.

எழுப்புதலைக் கண்ணாரக் கண்டவர்களும் எழுப்புதலில் கருவியாய் இருந்தவர்களும், எழுப்புதலைக் குறித்து சரித்திரம் எழுதிய எத்தனையோ பேரும் இருந்தாலும்– எழுப்புதலின் எழுத்துக்கள் என்று வந்துவிட்டால், ரேவன்ஹில்லின் பேனா முனையிலிருந்து வெளிவந்தது வெறும் மை அல்ல... அபிஷேகத் தைலத்தால் பற்றவைக்கப்பட்ட நெருப்புப் பொறிகள்! அவரது வார்த்தைகள் ஒப்பீடுகளுக்கு அப்பாற்பட்ட தனித்தன்மை வாய்ந்தவை.

பல வருடங்கள் முன்பு ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் பெரு முயற்சியால் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட “எழுப்புதல் தாமதிப்பது ஏன்” என்ற காலத்தால் அழியாத ஒரு புத்தகம் தவிர, தமிழ் கிறிஸ்தவ உலகுக்கு வெளிவராத அவரது எழுப்புதலின் ஜெபம், எழுப்புதல் – தேவன் வழி, சோதோமில் வேதம் இருந்ததில்லை, இருதயத்துடிப்பு, Meat for Men போன்ற அநேக புத்தங்களும், செய்திகளும், ஏராளம் உண்டு.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக லியோனார்ட் ரேவன்ஹில் அவர்களது பல ஆங்கிலச் செய்திகளை தமிழில் மொழிபெயர்த்து பல வாட்ஸப் குழுக்களில் பதிவிட்டு வந்தோம்.

இந்த, காலத்தால் அழியாத தேவ செய்திகளை அழியாமல் நிரந்தரமாய்ப் பாதுகாக்கவும், வரும் தலைமுறைகளுக்கு பொக்கிஷ வைப்பாக வைத்துப் போகவும் விரும்பி, இவைகளை புத்தக வடிவில் கொண்டுவர வாஞ்சித்து எடுக்கப்பட்டிருக்கும் எங்களாலான ஒரு சிறு முயற்சியே இது.

தேவன் தந்த பாரத்தோடு, கிறிஸ்துவுக்காக நாம் படும் எந்தப் பிரயாசமும் விருதாவாய்ப் போகாது என்று நம்பி, இந்த எழுத்துக்கள் தமிழ் கிறிஸ்தவ உலகின் எழுப்புதல் பக்க வரலாறுகளில் ஒரு சிறு நெருப்புப் பொறியையாவது பற்ற வைக்க ஏதுவாயிருக்குமோ என்ற நெஞ்சம் நிறை வாஞ்சையோடு, எலும்புகளில் அடைபட்ட அக்கினியாய், ஆண்டவர் ஒருவரே உயர்ந்திருக்கும்படியாய் அவரது பாதங்களில் சமர்ப்பித்துத் தருகிறோம்...

ஆங்காங்கே குறைவுகள் நிறையவே காணப்படும். உங்களது மேலான ஆலோசனைகளையும் திருத்தங்களையும் மனதார வரவேற்கிறோம்.

“அவன் என் நாளைக் காண ஆசையாய் இருந்தான். கண்டு களிகூர்ந்தான்.” (யோ.8:56) என்ற **வாக்குத்தத்தம் கடைசிக்கால எழுப்புதலின் காரியத்தில் எங்களில் வந்து நிறைவேறி பலிக்காதோ என்ற ஏக்கத்தில் ஜெபத்துடன் உங்களில் ஒருவனாய்..**

- PASTOR. ROMILTON
DELHI

LEONARD RAVENHILL

கிறிஸ்துவுக்குள் இன்னும்
குழந்தைகளாய் பாலுண்பவர்களுக்கு அல்ல....

கிறிஸ்துவின் போராளிகளான யுத்த வீரர்களுக்கு நான் எழுதுகிறேன். என் இருதயம் பால் மறந்த குழந்தையாய் இளைப்பாறிக் கொண்டிருந்தாலும், என் மனமோ எழுப்புதலுக்காய் இளைப்பாறுதலின்றி ஏங்கித் தவியாய்த் தவிக்கிறது. எனக்குள் சமாதானம் இருந்தாலும் – நானோ, எழுப்புதல் பாய்ந்தோடும் வழிகளையும் வாய்க்கால்களையும் சபைக்குள் அடைத்துக் கொண்டு நிற்கும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் விரோதமாய் நேருக்கு நேர் மல்லுக்கு நின்று இந்த மல்யுத்தத்தில் களம் இறங்கி நிற்கிறேன்!

நான் மாத்திரமல்ல....

அநேக பரிசுத்தவான்கள், என்னோடு கூட முதலாவது அவரது வருகைக்கு முன், கிறிஸ்துவை அவரது உலக மகா எழுப்புதலின் வல்லமையிலும் – அதன்பிறகு மத்திய ஆகாயத்தில் அவரது மகா மாட்சிமையிலும், காண வாஞ்சையும் தவனமும் ஏக்கமுமாய் ஏங்கி நிற்கின்றனர். அதற்காக என் தேவனுக்கு நான் நன்றி சொல்கிறேன் !

நான் எழுதும் இந்த எளிய வார்த்தைகள் அவர்களுக்காகவே! தேவன் தாமே உங்கள் பசியுள்ள ஆத்துமாக்களுக்கு இவைகளை ஆசீர்வதித்துத் தருவாராக!

“ பொன்னுமில்லை வெள்ளியுமில்லை என்னிடம் என் ஆசை அபிலாஷைகளில் மூழ்கித் திளைக்க...

ஆனாலும் தேவனே!
உமது பரிசுத்த அக்கினியைப் பிழம்பாய்ப் பிரதிபலிக்கும் வாழ்வு ஒன்றிற்காக மாத்திரமே ஏங்குகிறேன்.... கெஞ்சுகிறேன்...
தேவனின் பரிசுத்த மனிதர் சிலிர்த்தெழுந்து.... கிளர்ந்தெழுந்து, ஆவியில் ஆர்த்தெழுந்து...

தேசத்தை அசைக்கும் நாளை நான் காணும்வரை என் மனபாரங்கள் ஒழிவதுமில்லை... என் கையில் என் எழுதுகோல் உறங்குவதுமில்லை !! ”

- Ravenhill

ரேவன்ஹில் அறிமுகவுரை

ரேவன்ஹில் அவர்கள்
DR. A.W. TOZER
அவர்களைத் தன் ஆவிக்குரிய வழிகாட்டி
என அழைக்கிறார். வழிகாட்டியாகிய டோஸர்,
ரேவன்ஹில் பற்றி எழுதிய ஓர் அறிமுகம்.

மிகப்பெரிய தொழிற்சாலைகள், அவைகளில் திடீரென்று இயந்திரக் கோளாறுகள் ஏற்படும் சமயங்களில் உடனடியாக களமிறங்கி செயல்படுவதற்கென்றே சிலரைக் கைவசம் தயாராக வைத்திருக்கும். இயந்திரங்கள் பழுதுபட்டு உற்பத்தி நின்று போகும்போது இவர்கள் உடனடியாக காரியத்தில் இறங்கி, பழுதுபட்டதை சோதித்து அறிந்து சரி செய்து இயந்திரங்களை இயக்கிவிடுவார்கள்.

இது போன்ற இயந்திர மனிதர்களுக்கு, அன்றாடம் பிரச்சனையின்றி ஓடிக்கொண்டிருக்கும் மிஷின்கள் மீது நாட்டமிருப்பதில்லை. கோளாறுகளைக் கண்டுபிடிப்பதிலும், சரி செய்வதிலுமே நிபுணரான இவர்கள் தங்கள் வேலைகளில் கைதேர்ந்தவர்கள்.

தேவனுடைய ராஜ்யத்திலும் இது போன்ற காரியங்களில் அதிக வேறுபாடு இல்லை. ஒழுக்க சீர்கேடுகள், தேசத்தின் ஆவிக்குரிய கொள்ளைநோய்கள், சபையின் பின்மாற்றச் சரிவுகள்–இவைகளால் நொறுங்கி இவைகளையே தங்களது கவலையாய்க் கொண்டிருக்கும் ஆவிக்குரிய நிபுணர்களை தேவன் தன்னகத்தே எப்போதும் வைத்திருக்கவே செய்கிறார்.

எலியா, எரேமியா மற்றும் மல்கியா என்ற இவர்களைப் போன்ற இன்னும் அநேகர், வரலாற்றின் நெருக்கடியான நேரங்களில் வெளிப்பட்டு, தேவ நாமத்திலும் நீதியிலும் தேசத்தைக் கடிந்து கொண்டு, உணர்த்தி உபதேசித்துத் தேவன் பக்கம் திருப்பினர்.

இஸ்ரவேலின் ஆவிக்குரிய வாழ்வோ, சபையோ சீராக சென்று கொண்டிருக்கும் காலங்களில், ஆயிரம் பதினாயிரம் ஆசாரியர்களோ போதகர்களோ, பேர் அறியாத மேய்ப்பர்களோ, ஆங்காங்கே ஊழியம் செய்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் ஜனங்கள் தேவனை விட்டு வழிவிலக ஆரம்பிப்பது தான் தாமதம், எங்கிருந்து தான் இந்த ஆவிக்குரிய ஸ்பெஷலிஸ்டு வெளிப்படுவாரோ தெரியாது, உடனே இவர் காரியத்தில் இறங்கி விடுவார். பிரச்சனையைக் கண்ட மாத்திரத்தில் இவர் தேவனுடைய பட்சத்தில் அவரது ஒத்தாசைக்கு வந்துவிடுவார்!

இப்படிப்பட்ட கடுமையும் காட்டமும், சில சமயங்களில் தீவிரமுமான மனிதனின் செயல்களைக் கூர்ந்து கவனிக்கும் கூட்டம், அவனைத் தீவிரவாதி என்றும், பைத்தியம் பிடித்தவன் என்றுமே பட்டம் கட்டுகிறது.

ஒருவகையில் அவர்கள் சொல்வது சரியே. காரணம் அவனிருக்கும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடியே, அவன் ஒரே மனதுடையவனாய் மிகத்தீவிரமான அஞ்சா நெஞ்சனாய் வலம் வருகிறான்.

ரேவன்ஹில் அறிமுகம்

சிலரை சிலநேரங்களில் அதிர்ச்சியடையவும் சிலரை பயமுறுத்தவும் செய்யும் இவன், தன்னை அழைத்தவர் யாரென்றும், தான் எதற்காக அனுப்பப்பட்டேன் என்றும் நன்றாகவே அறிவான். அவசரக்கால கட்டத்திற்கென்றே பயிற்றுவிக்கப்பட்ட இவனது ஊழியம், இவனை மற்றவர்களைவிட வேறுபட்ட வித்தியாசமான விநோதப்பிறவியாகவே காட்டும்.

இப்படிப்பட்ட மனிதர்களுக்கு சபை அதிகமாகவே கடமைப்பட்டு கடன்பட்டிருக்கிறது. இதில் விநோதமான காரியம் என்னவென்றால், இவன் வாழும் வாழ்நாள் காலத்தில் இவனைக் கண்டுகொள்ளவே கொள்ளாத இவனது சமுதாயத்தின், சபையின் அடுத்த தலைமுறை, தங்கள் முந்தய தலைமுறையால் வெகுவாய் புறக்கணிக்கப்பட்ட இவனது வாழ்க்கை வரலாற்றை ஏதோ அவசர அவசரமாய் எழுதி அவனுக்குக் கல்லறை கட்டி, நினைவிடம் எழுப்பி, தன் கடமையைத் தீர்த்துக் கொண்டு தனக்குள்ளே புளங்காதிதம் அடைந்து கொள்கிறது.

லியோனார்டு ரேவன்ஹில்லை அறிந்தவர்கள் அவர் ஒரு ஆவிக்குரிய நிபுணர் என்றும் சபையின் பழங்கால வேலைகளையே திரும்பத்திரும்ப செய்து கொண்டிருக்க அல்ல, ஆனால் பாகாலின் தீர்க்கதரிசிகளை அவர்களது சொந்த மேட்டிலேயே வெட்டிப்போடவும், கையாலாகாத ஆசாரியர்களை பலிபீடத்துக்கு முன்பாகவே வெட்கித் தலைகுனியப் பண்ணவும், கள்ளத் தீர்க்கதரிசிகளை முகத்துக்கு முகம் எதிர்த்து நிற்கவும், அவனால் நாசமாய்ப்போகும் ஜனத்தை எச்சரித்துத் திருப்பவும் தேவனால் அனுப்பப்பட்ட எழுப்புதல்வாதி என்றும் அடையாளம் கண்டுகொள்வார்கள்!

இப்படிப்பட்ட ஒரு மனிதரோடு தோளோடு தோள்மேல் கைபோட்டு சாதாரணமாய் நடப்பது என்பது சாத்தியமல்ல. பிரசங்கத்தை முடித்த கையோடு தன் எடுபிடிகளோடு ஆடம்பர ஹோட்டலுக்குச் சென்று அரட்டையடிக்கும் இன்றைய சுவிசேஷகர்களுக்கு இவரைப் போன்றவர்கள், கண்ணுக்கு எரிச்சல் தான்.

குழாயைத் திறந்து மூடுவது போல பரிசுத்த ஆவியானவரின் பாரத்தை இஷ்டத்துக்கு தேவைக்கேற்ப திறந்து மூடும் ரகம் அல்ல இவர்...

“எங்கும் எவ்விடத்திலும் எப்போதும் கிறிஸ்துவுக்காக சாட்சியாக நில்” என்பதையே எப்போதும் வலியுறுத்தும் இவரது கொள்கையே இவரை வித்தியாசமானவராக மற்றவர்களை விட்டு வேறுபிரித்துக் காட்டுகிறது.

ரேவன்ஹில்லைப் பொறுத்தவரை சமநிலையில் நிற்பது என்பது அவரால் இயலாத ஒன்று. அவரது நண்பர்களை மிகச்சரியாக இருபிரிவாய் பிரிக்கலாம். ஒன்று அவரை அதிகமாய் நேசித்து ரசிக்கும் ஒரு கூட்டம். இன்னொன்று அவரை முழுப்பகையாய் பகைத்து அவர் மேல் உமிழும் ஒரு கூட்டம்.

இந்த மனிதர் எப்படியோ அவரது புத்தகங்களும் அப்படியே. ஒன்று, படிப்பவன் படித்தபின் அதை மூடிவிட்டு தனி இடம் தேடி ஜெபிக்க ஓடுவான். அல்லது அதின் அழைப்புகளை அற்பமாய் உதாசீனம் பண்ணி, அதின் எச்சரிப்புகளுக்கு தன் இருதயத்தை அடைத்துவிட்டு தன் கோபத்தில் புத்தகத்தை வீசியெறிந்து விட்டுப் போய்விடுவான்.

எல்லாப் புத்தகங்களும், ஏன், எல்லா நல்ல புத்தகங்களும் கூட பரலோகத்தின் சத்தமாய் இருப்பதில்லை. ஆனால் நான் இவரது புத்தகங்களைப் பரலோக தொனியாகவே கேட்கிறேன். காரணம் பரலோகத்தின் சத்தம் கேட்கும் இவற்றின் ஆசிரியரின் ஆவியும் மூச்சும் இவரது புத்தகங்களின் உள்ளும் புறமும் சுவாசிக்கக் காணப் படுகிறது...

A.W. டோஸர்

ரேவன்ஹில் அறிமுகவுரை

ஒரு தேவ மனிதனுக்கு நினைவஞ்சலி

எழுப்புதல் அக்கினியைக் காணத் தவம் கிடந்து, இரவும் பகலும் அதற்காகவே கதறி அழுது, அந்த அக்கினியைப் பிறப்பிக்கத் தன் வாழ்வையே அதற்காகத் தானமாய் தந்த ஒரு தேவ மனிதனை நான் அறிவேன்...

தன் மணவாளனின் அருகே கறைதிரை இன்றி, பரிசுத்தமும் பிழையற்றதுமான, மகிமையின் கன்னிகையாக சபையைக் கொண்டு வந்து நிறுத்துவது ஒன்றே அவரது பசி தாக ஏக்க நோக்கமெல்லாம்...

பிரசங்க பீடத்தில் அவரைப் போன்ற அபிஷேக அனலும் சிம்மக்குரலும் கொண்டோர் வெகு சிலரே! ஆனாலும் அவர் வாஞ்சித்ததோ... தான் அறிந்த தேவனோடு தனிமையில் உள்ளறையில் தனித்திருப்பதையே!

மற்றவர்கள், மனிதரின் புகழாரங்களுக்காய், பாராட்டுதல்களுக்காய், பட்டங்களுக்காய் ஓய்வின்றி ஓட, இவருக்கு இருந்ததோ, உள்ளத்தின் வாஞ்சை ஒன்றே! அது, தன் எஜமானின் நாமத்தை உயர்த்துவதே!

எண்பத்து ஏழு ஆண்டுகளாய் விசுவாசத்தின் மாமனிதனாய் ஞானமும் மெய்த்தாழ்மையுமாய், அவர் வாழ்ந்ததெல்லாம் நித்தியம் ஒன்றுக்காக மாத்திரமே!

தானும் ஓர் நாள் தேவனது நியாயாசனத்துக்கு முன்பாக நிற்க வேண்டுமென்று நன்கறிந்த அவர்... தன் பந்தயப் பொருளின் இலக்கை நோக்கி ஓடினார்.... தேவனிடம் தான் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றி முடிக்க!

அவர் பின்வைத்துச் சென்றதெல்லாம் பொன்னும் வெள்ளியுமல்ல... ஆனால் மனந்திரும்பி, மறுரூபமாக்கப்பட்டு எழுப்புதலடைந்த, வெளியில் தெரியவராத எண்ணடங்கா மனிதர்களே!

இந்த மா மகா தேவ மனிதரை அறிந்திருப்பது மட்டுமல்ல அவரை என் சொந்தத் தகப்பனாராய்ப் பெற்றிருந்ததை விட மேலான வேறொரு சிலாக்கியம் எனக்கு இல்லை என்பேன்...

Written by
DAVID RAVENHILL
Evangelist & Preacher,
Eldest Son of Rev. Leonard Ravenhill

FAITH
TRUTH

அட்டவணை

எண்	என்று தணியும் இந்த எழுப்புதல் தாகம் ?	பக்கம்
01.	மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே.. (பாகம்-1)	019
02.	மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே.. (பாகம்-2)	043
03.	தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான்	057
04.	ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது	069
05.	வில்லியம் டுமாஸ் -தேவனின் கரங்களால் பொற்சால்வை போர்த்தப்பட்ட கறுப்பு வைரம்	081
06.	பரலோக நீதிமன்றத்தில் நீ நிற்கப்போகும் அந்த நாள்	093
07.	ஒரு உண்மைத் தீர்க்கதரிசியின் நிஜமுகம்	119
08.	சோதோமிலே வேதம் இருந்ததில்லை	127
09.	நான் கொடுக்கும் பாத்திரத்தில் நீ பானம் பண்ணுவாயோ ?	137
10.	401வது தீர்க்கதரிசி (Rev. Vance Havner)	151
11.	சபை கண்டிருந்த மா மகா ஜாம்பவான்கள்	161
12.	பரலோகத்தில் பதிவாகும் உன் வாழ்க்கை வரலாறு (Rev.Wesley Duewel)	175
13.	பாதாளத்தின் வயிற்றிலிருந்து	181
14.	எழுப்புதலுக்கு விலைக்கிரயம் செலுத்த நீ ஆயத்தமா ? (Rev.Wesley Duewel)	193
15.	டேவிட் - ஸ்வீயா : தேவனின் கோதுமை மணிகள்	201
16.	ஒரு மனுஷனை "இன்னும்" தேடிக்கொண்டேயிருக்கும் தேவன்	209
17.	ட்ரோஜன் குதிரை (Rev.B.H.Clendennen)	217
18.	ஜார்ஜ் வில்லட் - தேவனின் இருதயத்திற்கேற்ற மனிதன்	223
19.	நீயோ என்னை முத்தஞ்செய்யவில்லை	241
20.	சவுலுக்குள்ளிருந்து ஒரு பவுல்	247
21.	சுவிசேஷகன் ஒருவனுக்கு மனம் திறந்து ஒரு மடல்	255
22.	கிதியோன் ஓஸ்லே -நாட்டுப்புறங்களைக் கலக்கிய தேவனின் தண்டாயுதம்	261
23.	ஆரம்பகால மெத்தடிஸ்ட் பிரசங்கிகள்	269
24.	ரேவன்ஹில் தீக்கணைகள்	277
25.	ரேவன்ஹில் கவிதைச் சரங்கள்	305

எழுப்புதலின் பத்து கட்டளைகள்

(யோவேல் 2:12-17)

- சீயோனிலே எக்காளம் ஊதுங்கள்
- பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்
- விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்.
- ஜனத்தைக் கூட்டுங்கள்...
- சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்...
- மூப்பர்களை வரவழையுங்கள்.
- பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்.
- மணவாளன் தன் அறையையும் மணவாட்டி தன் மறைவையும் விட்டுப்புறப்படுவார்களாக.
- ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே கதறி அழுவார்களாக..
- கர்த்தாவே! நீர் உமது ஜனத்தை பழிக்கும் நிந்தைக்கும் ஒப்புக் கொடாதிரும் என்று புலம்பி அழுங்கள்!

CHAPTER 1

மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே...
பகுதி–1

மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே
பகுதி-1

"ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள்.. பலிபீடத்தின் பணிவிடைக்காரரே அலறுங்கள்.. என் தேவனின் தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து, இரட்டு உடுத்தியவர்களாய் இராத்தங்குங்கள்...

கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது...

[யோவேல் 1:13/ 2:17]
சில வருடங்களுக்கு முன்பாக Christianity Today பத்திரிகையின் ஆசிரியர் Dr.Carl F.Henry அமெரிக்காவின் 20 மிகப்பெரிய முன்னணி சுவிசேஷகர்கள் என்று கருதப்பட்டவர்களுக்கு கேள்வித்தாள் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அதிலிருந்த கேள்வி இது தான்.." இரண்டாயிரமாவது வருடத்தில் இயேசு கிறிஸ்துவின் திருச்சபை உலகளாவிய அளவில் எப்படி இருக்கும் என்று கருதுகிறீர்கள் ?"

அவர்களில் பதிலளித்த ஒருவரான Quaker தத்துவவாதி Elton True Blood என்பவரின் பதில் மட்டும் எனக்கு நன்கு ஞாபகம் இருக்கிறது..

அவரது ஆச்சரியமான பதில் இது தான்.."2000மாவது வருடத்துக்குள் கிறிஸ்துவின் சபை, விக்கிரக ஆராதனைக் கூட்டத்தாலும், புறமத வெறியர்களாலும் சூழப்பட்டு, நெருக்கப்பட்டு சுருங்கிப்போன சிறுபான்மையாகிப் போகும்.."

அந்த பதிலைக் கண்டு எனக்குள் விக்கித்துப் போன நான், அந்த இரவு 2 மணிக்கு ஒருவித மனஅழுத்தத்தாலும், ஆவிக்குரிய அஜீரணத்தினாலும் தூக்கமின்றி விழித்துக் கொண்டேன்.

அப்போது தான்.." கிறிஸ்தவம் ஒன்றும் வெள்ளித்தட்டில் வைத்து உலகத்துக்குப் பரிமாறப்பட்ட தங்க மதம் அல்லவே !" என்ற ஞாபகம் எனக்கு வந்தது..

கிறிஸ்தவம் பிறந்தது..

அன்றைய அதிநவீன சர்வாதிகார சமுதாயத்தில்..

ஆதிசபையின் ஒருபக்கம் மதிலாய் பயமுறுத்தி நின்றது..
வரலாற்றிலேயே சர்வ வல்லமை பொருந்திய இராணுவ பலம் நிறைந்த ரோம சாம்ராஜ்யம்..

இன்னொரு பக்கம் அவர்களைக் கலவரப்படுத்தியது...கிரேக்க அறிவு ஜீவிகளின் வானளாவிய மதில்..

சபை முன்னுக்கு நகர முடியாதபடி முட்டுக்கட்டையாய் தடைச்சுவராய் நின்றது.. கடவுள் தங்களுக்கே தங்களுக்குச் சொந்தம் என்று ஏகபோகமாய் உரிமை கொண்டாடி நின்ற யூதவர்க்கம்..

இவைகளுக்கு மத்தியிலும் " உலகத்தைக் கலக்கிய " அந்த சபையில் பெரிய பேச்சாளர்களோ அறிவாளிகளோ இல்லை.. அவர்களுக்கு பணபலமோ, படைபலமோ, சமூக அந்தஸ்தோ இல்லை..

எருசலேமிலே , புறக்கணிக்கப்பட்டு, புறம்பாக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அவர்கள்..

அவர்களைக் குறித்தே பிறகு குறிப்பாய்ச் சொல்லப்பட்டது..
“உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்..” என்று..

Philips புதிய ஏற்பாட்டை நமக்குத் தந்த Dr.J.B.Philips, அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் சில அதிகாரங்களைப் பற்றி சொன்ன அறிமுக வார்த்தைகளை, வாரம் ஒருமுறையோ அல்லது ஒரு நாளில் ஒரு முறையாவது நான் நினைத்துப் பார்ப்பதுண்டு..

அவர் சொல்கிறார்..
“ இன்று ஆசீர்வாதங்களில் செழுத்துக் கொழுத்து மூச்சுமுட்டி நிற்குமுன், அந்த முன் நாட்களில் இருந்த இயேசு கிறிஸ்துவின் சபை இதுவே..! "

“ இன்றைய ஸ்தாபன, நிறுவனப் பெருமையில், பணப்புழக்கத்தில், மாம்ச சுய பெலத்தில் சிக்கிச் சீரழியுமுன், அந்த முன் நாட்களில் இருந்த இயேசு கிறிஸ்துவின் சபை இதுவே..! "

" இன்றைய இறையியல் அறிவிலிகள் போல வேத ஆராய்ச்சி என்ற பெயரில் கூடி "உளவியல் மருத்துவ" ஆராய்ச்சிகளோ, பைபிள் சைன்ஸ் ரிசர்ச் - களோ செய்து கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை அன்றைய இயேசுவின் சபை...

மாறாக வியாதியஸ்தர்களை அங்கங்கேயே அவ்வப்போது அந்நேரமே குணமாக்கி, செத்தவர்களை உடனுக்குடன் உயிரோடு எழுப்பிக்கொண்டிருந்தனர் அப்போஸ்தலர்கள் - சர்வ சாதாரணமாக..

" அன்றைய இயேசு கிறிஸ்துவின் சபை,
ஜெபம் சொல்லவில்லை.." மாறாக பரிசுத்த ஆவியில் ஜெபித்தது.." ஜெபிப்பதற்கும் "ஜெபம் சொல்வதற்கும்" பாரதூர வித்தியாசம் உண்டு.."

இன்று நமது பைபிள் காலேஜுகளிலிருந்தும் செமினரிகளிலும் இருந்து வெளிவருபவர்கள் கர்த்தருடைய வார்த்தை கற்பிக்கப்பட்டவர்கள்..அந்தக் கல்வி உலகத்தைத் திருப்பப் போவதில்லை..

அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை அறிந்தவர்களா என்பது கேள்வியில்லை !

ஆனால் அந்த வார்த்தையின் கர்த்தரைத் தனிப்பட்ட முறையில் அவர்கள் அறிந்திருக்கிறார்களா என்பதே கேள்வி !

ரைட் ரெவரண்ட், லெஃப்ட் ரெவரெண்ட், டாக்டர் என்று ஏகப்பட்ட பட்டங்கள் வாங்கிக் குவித்த காரணத்தாலேயே ஒருவருக்கு பிரசங்கிக்க லைசன்ஸ் கொடுக்கப்படுகிறது என்பது, கண்ணற்ற குருடனுக்கு கார் ஓட்ட லைசன்ஸ் கொடுப்பது போன்றது !

தான் பிரசங்கிக்கும் ஆண்டவர் யாரென்றே தனிப்பட்ட முறையில் தெரியாத அவனுக்கு இங்கே என்ன வேலை ?

ஒரு நாள் லண்டனிலுள்ள ஹால்போன் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தேன். 25 வருடங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன்..

அங்கே ஒரு வயதான கூன் விழுந்த பெண்மணி ஒருவர் கைநடுக்கத்தோடு கடிதம் ஒன்றைத் தபால் பெட்டியில் போட்டுவிட்டு பக்கத்திலுள்ள கட்டிடத்துக்குள் நுழைவதைப் பார்த்தேன்..

என்னோடு வந்தவர், " இந்த அம்மா யாரென்று உங்களுக்குத் தெரியுமா ?" என்று கேட்டார்..

“ஸாரி..தெரியவில்லையே." என்றேன். "இவர் தான் மறைந்த Hugh Price Hughs அவர்களின் மனைவி.." என்றார்.

இந்த Hughs தான் ஒரு காலத்தில் இங்கிலாந்தின் " மெத்தடிஸ்ட் சபையின் பிரசங்க பீட மாவேந்தர்" என்று வர்ணிக்கப்பட்டவர்..

பின் நாட்களில் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய அவரது மகள் எழுதுகிறார்.."ஞாயிறு இரவு ஆராதனை முடிந்து அப்பா வீட்டுக்கு வருவார்...அன்றைய பிரசங்கத்துக்குப் பின் யாராவது இரட்சிக்கப்பட்டு தன்னை ஒப்புக் கொடுக்கவில்லை என்று கண்டால்...

வீட்டுக்கு வந்ததும் தன் நீண்ட கோட்டைக் கூட கழற்ற மாட்டார்..நேரே வந்து கட்டிலில் விழுந்து கதறி அழுவார்..
“ஏன் ஆண்டவரே ? ஏன் ஆண்டவரே ?
ஏன் ஒருவர் கூட இல்லையா ?” என்று அன்று இரவு முழுவதும் புசிக்காமல் குடிக்காமல் புலம்பி அழுவார்..
யாரும் அவர் அருகே சென்று ஆறுதல்படுத்தவே முடியாது. ஏன் ? ஏன் ? ஏன் ஆண்டவரே ? என்பதே அவரது சத்தமாயிருக்கும்.."

பெந்தேகோஸ்தே நாளின் ஒரே ஒரு பிரசங்கம் 3000 பேரை மனமுடைந்து மனந்திரும்பச் செய்தது என்று நினைத்துப் பார்க்கும் போது, அது உங்களை உலுக்கவில்லையா ?

அன்று ஒரே ஒரு பிரசங்கம் 3000 பேரைத் திருப்பியது. இன்று 3000 பிரசங்கம் பண்ணியும் ஒருவர் கூட மனந்திரும்பக் காணோம்..

"இதுவா எங்களுக்குப் பிரச்சனை ?" என்று ஆகிப்போன நமக்கோ அதைப்பற்றி எந்தக் கவலையுமில்லை ! பயமுமில்லை ! வெட்கமுமில்லை !

1880களில், அப்போதைய இரட்சண்ய சேனையின் நாட்களில், அதின் ஸ்தாபகர் ஜெனரல் வில்லியம் பூத்தின் வலதுகரமாய் இயங்கிய மேஜர் ரஸ்ஸல் என்ற வயதான மனிதர் ஒருவருடன் வேல்ஸில் 1932ல் ஒரு நாள் மதியம் பேசிக்கொண்டிருந்தேன்.நான் அவரை சந்தித்தபோது அவருக்கு வயது 80...

இரட்சண்ய சேனையின் ஆரம்ப எழுப்புதல் நாட்களில் நடந்த ஆச்சரியமான காரியங்களை அவர் விவரிக்க ஆரம்பித்தார்..

"அந்த நாட்கள் பரலோகமே பூமிக்கு இறங்கி வந்ததைப் போன்ற நாட்கள்..

பரிசுத்த ஆவி வந்து இறங்கியிருந்தார்..

வில்லியம் பூத்தின் பிரசங்கங்களில் அனல் பறந்தது..

ஒருநாள் இந்த வசனத்தை மையமாக வைத்து அவர் பேசினார்.."அறுப்புக் காலம் சென்றது கோடைக்காலமும் முடிந்தது நாமோ இன்னும் இரட்சிக்கப்படவில்லை." (எரே 8:20)

அவரது பிரசங்கம் ஜனங்களை நடுநடுங்கப் பண்ணிற்று..

"பின் வரிசையில் ஏனோதானோ என்று உட்கார்ந்திருந்தவர்களும் நேரம் போக்க சர்ச்சுக்கு வந்தவர்களும், வயதான வில்லியம் பூத்தின் அனல்பறக்கும் செய்தியைக் கேட்டு மார்பில் அடித்து அழுது கொண்டு போனார்கள்.."

பரிசுத்த ஆவியானவர் தம்மை எதிர்த்து நின்றவர்களையும், இருதயத்தை அடைத்துக் கொண்டவர்களையும் பின் பெஞ்ச்சில் இருந்து கூட்டத்துக்கு மத்தியில் அப்படியே 'அலாக்காகத்' தூக்கிக் கொண்டு வந்து ஆல்ட்டருக்கு முன்பாகப் போடுவார்.."

இரட்சண்ய சேனையில் எழுதப்படாத ஒரு விதி இருந்தது..

நாங்கள் எங்கள் சபைகளைப் "பாசறை" என்றே அழைப்போம்.. இராணுவத்தில் படைவீரர்களைப் பயிற்றுவிக்கும் "பாசறை.."

அங்கு எழுதப்படாத விதி ஒன்று உண்டு..

ஒவ்வொரு சனிக்கிழமை மாலை தெருப்பிரசங்கம் முடிந்ததும் 9 மணியானாலும் நேரே இரவு ஜெபத்துக்குப் போயாக வேண்டும்..

ஜெபம் நள்ளிரவு வரை தீயாய்ப் பற்றி எரியும்.. ஜெபத்தில் ஒருவர் சொல்லுவார்.. "நாளை கர்த்தர் நமக்கு இந்தக் கூட்டத்தில் அல்லது குறிப்பிட்ட இந்த சபையில் 10,15 ஆத்துமாக்களைத் தரப் போகிறார்..

அடுத்த நாள் அது அப்படியே நடக்கும்..

எனக்கு ஞாபகம் இருக்கிறது..
தெருப் பிரசங்கங்களில் அழுகிய முட்டைகளால் நாங்கள் அடித்து அபிஷேகம் பண்ணப்படுவது அன்றாடக் காட்சி..

இன்றைய நாட்களைப் போல அந்த நாட்களில் வீடுகளில் பாத்ரூம் டாய்லட் எல்லாம் கிடையாது..

அங்கே மூலையில் ஒரு பக்கெட் மாதிரி இருக்கும்..அதுக்கு மூடியும் இருக்காது..

மக்கள் எங்களைப் பார்த்து விட்டு வீட்டுக்குள் ஓடிப்போய் சிறுநீர் நிறைந்த அந்த வாளியை எங்கள் மேல் வாரி இறைப்பார்கள்..

எங்களுக்கு இதெல்லாம் சர்வசாதாரணம்..

இரண்டு கோட் வைத்திருப்போம்..
ஒன்று அழுகிய முட்டை அடிக்கப்பட்டது..

வீட்டுக்குப் போய் அதைத் துவைத்துப் (துடைத்து??)
போட்டுவிட்டு இன்னொன்றைப் போட்டுக் கொண்டு அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை வந்து உட்கார்ந்து விடுவோம்..

எழுப்புதல் எரிந்து கொண்டிருக்கும் போது இதைப்பற்றியெல்லாம் யார் கவலைப்பட்டது ?

ரஸ்ஸல் தொடர்ந்து சொன்னார்..
ஒரு நாள் நான் ஜெனரல் பூத்தின் ஆபீஸில் உட்கார்ந்திருந்தேன்..
அந்த நாட்களில் நாங்கள் லண்டனில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தோம்..

அப்போது யாரோ ஒருவர் எனக்கு ஒரு துண்டுச் செய்தி அனுப்பியிருந்தார்கள்..

அதில் எழுதியிருந்தது இது தான்..

" எழுப்புதல் வெடித்துள்ளது..

ஒரு வாலிபப் பையன்..
25 வயதுக்குள் தான் இருக்கும்..
அவன் போகிற இடமெல்லாம் கூட்டம் நிரம்பி வழிகிறது..

எந்த விளம்பரமும் கிடையாது..
கால் வைக்க இடமில்லாத அளவு கூட்டம் அலைமோதுகிறது.."

நான் அங்கே போகக் கிளம்பினேன்..
கூட்டம் நடக்கும் இடம் நிரம்பியிருந்தது..

ஈவன் ராபர்ட்ஸ் வந்திருந்த அந்தக் கூட்டத்தில் 800 பேர் இருந்திருப்பார்கள்..

ஈவன் ராபர்ட்ஸ் கூட்டத்தின் நடுவே நடந்து வந்து முன் வரிசையில் அமர்ந்தார்..
உட்கார்ந்தவர் தலை கவிழ்ந்து ஜெபிக்க ஆரம்பித்தார்..

3 மணி நேரம் தலையை உயர்த்தவே இல்லை..
அமைதியாய் ஜெபித்துக் கொண்டே இருந்தார்..

பின்னர் 15 நிமிடம் தான் எழுந்து நின்றிருந்திருப்பார்..

பரிசுத்த ஆவியானவர் அவர் மேல் அப்படியே வல்லமையாய் இறங்க..
வேறு மனுஷனானார் ஈவன் ராபர்ட்ஸ்..

அவர் ஜெபிக்க ஆரம்பித்தது தான் தாமதம்..
“கர்த்தரே வந்து இறங்கினார்..”

50 நிமிடம் பேசியிருப்பார் ஈவன்..
அதன் பின் இரவு பத்து மணிக்கு வெளியேறியவர்..

அந்த இரவெல்லாம் ஜெபித்துக் கொண்டே இருந்தார்..
அடுத்த நாள் கூட்டத்தின் அபிஷேகத்துக்காக..

இதையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த என்னால் நகர முடியவில்லை..

இங்கே ஒரு வாலிபப் பையன்..
இதைப் போல பிரசங்கித்து ஒருவரையும்
நான் என் வாழ்க்கையில் கேட்டதில்லை..

இதைப் போல ஜெபித்தோ அழுதோ வேறு யாரையும்
நான் பார்த்தில்லை..

ஒரு வாரம் சென்று லண்டன் ஆபீசுக்குத் திரும்பினேன்..

வில்லியம் பூத் என்னைப் பார்த்துக் கேட்டார்..

" எங்க போயிட்டீங்க ரஸ்ஸல்? "

அமைதியாகச் சொன்னேன்..
" பரலோகத்துக்குப் போய்ட்டு வந்தேன் ஜென்ரல்.. "

" எங்க போனீங்க ? "
" பரலோகத்துக்கு.."
“ என்ன சொல்றீங்க ரஸ்ஸல்.. பரலோகத்துக்கா ?”

" ஆமா ஜென்ரல்..
வேல்ஸ்ல ஒரு வாலிபப் பையன்..அவன் மேல ஆவியானவர் அபரிமிதமா வந்து இறங்கியிருக்கிறார்..

பைபிள் காலேஜ் கூட போகல அவன்..ஆனா கர்த்தர் வல்லமையா வந்து இறங்கியிருக்கிறார் அவன் மேல..

13 வருஷம் மறஞ்ச வாழ்க்கை..அவனுக்கு இப்போ 26 வயசு தான்..
13 வருஷமா ஜெபிச்சுகிட்டே இருந்திருக்கிறான்.."

ஜென்ரல் பதறிக் கொண்டு கேட்டார்..
" அப்படியா?
சொல்லுங்க..சொல்லுங்க ரஸ்ஸல்.."

நான் சொன்னேன்..
" ஆமா ஜெனரல்..
மத்த மீட்டிங்ல நடக்கிற மாதிரி ஜனங்களை முன்னால கூப்பிடுறதில்ல..

கை தூக்கச் சொல்றதில்ல..ஆனா ஜனங்கள் அழுகையும் கண்ணீரோடும் ஒப்புக் கொடுக்கிறாங்க.."

அந்த ஊரைப் பாக்கணும்.. போலீஸ் அரெஸ்ட்டே கிடையாது.. கோர்ட்டெல்லாம் மூடிட்டாங்க..எந்த சண்டை சச்சரவும் கிடையாது..

ஒயின் ஷாப், சினிமா தியேட்டர் எல்லாம் க்ளோஸ்..

நிலக்கரிச் சுரங்கமெல்லாம் அங்கங்க ஜெபக்கூட்டம்,ஆராதனை,பாட்டு..ஊரே பரலோகமா மாறிப் போயிருக்குது.."

சொல்லிக் கொண்டே போனேன்...

சந்தோஷமாய்க் கேட்டுக் கொண்டே இருந்த வயதான வில்லியம் பூத் சொன்னார்..

" ரஸ்ஸல்..உங்களுக்கு ஞாபகம் இருக்குதா ?
நம்ம ஆரம்ப நாட்கள்ல,இரட்சண்ய சேனையின் தொடக்க காலத்தில இதே மாதிரி தான் இருந்தது தெரியுமா?

கர்த்தருடைய மகிமை வந்து இறங்கியிருந்த உன்னதமான நாட்கள் அவை..

உண்மையிலே மறக்க முடியாத நாட்கள் !! "

கர்த்தாவே.. பூர்வ காலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும்.. (புலம்பல் 5:21)

எழுப்புதல் "இப்படித்தான் இருக்கவேண்டும்" என்று நீங்களாகவே அதற்கு ஒரு வரைமுறை வைக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட சபையின் எழுப்புதலை அல்ல ஒரு தேசத்தின் எழுப்புதலைக் குறிப்பிடுகிறேன்.

அமெரிக்காவுக்கோ அன்னிய தேசங்களுக்கோ ஒரே ஒரு நம்பிக்கைதான் உண்டு.அது தேவனே தேசங்களை சந்திக்க இறங்கி வரும் ஒரு மாபெரும் நிகழ்வு! உங்கள் சபைப் பிரிவையும் காலி இருக்கைகளையும் மறந்துவிடுங்கள்..

இடி முழக்கம் போல இறங்கி இருந்தது அன்றைய ஆதித்திருச்சபை !

சீயோனை நோக்கி ஜெய கம்பீரமாய் வீறுநடை போடுபவர்கள் அல்ல நாம்..
சொகுசுக் கப்பலில் சுகபோகமாய் பிரயாணிப்பவர்கள் !

அப்போஸ்தலர் நாட்களில் "அவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்" என்று பார்க்கிறோம்..
நமது இன்றைய சபையோ குதூகலக் கொண்டாட்டங்களிலேயே குறியாய் இருக்கிறது !

மேலறையில் நொறுக்கத்திலும் நெருக்கத்திலும் கண்ணீரின் ஜெபத்திலும் துவங்கிய சபை, இன்று கமிட்டி கூட்டங்களின் விருந்தறையில் மூடப்பட்டுக் கிடக்கிறது !

நாம் கூட்டத்தை எழுப்புதல் என்றும், கூச்சலை அபிஷேகம் என்றும், கட்டுக்கதைகளை கர்த்தருடைய வார்த்தை என்றும் தவறாக எடை போட்டு விட்டோம் !

எனக்குத் தெரிந்தவரை பிரசங்க பீடம் நாடக மேடை அல்ல..நமது இன்றைய தேவை பூர்வகால தீர்க்கர்கள் !

ஒரு தீர்க்கதரிசி, தன் அழைப்பு எப்படியோ அப்படியே தீனமாய், தீர்க்கமாய், தீயாய் நிற்பான் !

அவன் தன்னை அழைத்த தேவனுக்கு முன்பாக உத்தமமாய், அழிந்த தேசத்துக்கு முன்பாக உடைந்தவனாய் நிற்பான் !

தேவன் தம் ஜனங்களின் பாவ நிர்ப்பாக்கிய நிலையைக் கண்டு எப்படி அழுது அங்கலாய்க்கிறார் என்று பாருங்கள் !

நீங்கள் பழைய ஏற்பாட்டைப் பாருங்கள் ! அமலேக்கியர்களைப் பற்றியோ, ஏத்தியர்களைப் பற்றியோ, எமோரியர்களைப் பற்றியோ, எபூசியர்களைப் பற்றியோ, கிர்காசியர்களைப் பற்றியோ தேவன் போராடவில்லை.. அவருடைய வேதனை எல்லாம் தம் ஜனமாகிய இஸ்ரவேலரைப் பற்றியதே !

கம்யூனிசமோ, தீவிரவாதமோ அல்ல தேவனின் கவலை.. அவரது பிரச்சினையே அவருடைய சபை தான் - நாம் அவ்வளவு தூரம் உலகத்தோடு உலகமாகிவிட்டோம் !

ஒரு மாநகரத்தையே கூட்டி மாநாடு நடத்த கோடிக்கணக்கில் செலவாகலாம். ஆனால் எழுப்புதலோ உடைந்த உள்ளம் ஒன்று தவிர ஒரு பைசா செலவில்லாதது..

உங்கள் நிகழ்ச்சி நிரல்களை பிரம்மாண்டமாக நடத்தி எழுப்புதல் வெடித்து விட்டது போல நீங்கள் காட்டிக் கொள்ளலாம்..
ஊரைக் கூட்டி முழங்கலாம்.. ஆனால் எந்த வகையிலும் உண்மையான எழுப்புதலை மேடையேற்ற முடியாது..
அது தேவனே எழுந்தருளும் இரகசியத்திலும் இரகசியம்!

மிகப்பெரிய வேலை ஒன்று யோவான் ஸ்நானகனுக்குக் கொடுக்கப்பட்டது.

" நீ கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவாய் ! ”

நான் சொல்லுவேன்.. எழுப்புதலுக்குத் திறவுகோல் ஒன்று இங்கே யோவேலின் புஸ்தகத்தில் தரப்பட்டிருக்கிறது.

" ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே புலம்பி அழுவார்களாக ! "

நான் ஒரு கல்லூரியில் "அன்னாள் - ஒரு மன்றாட்டு வீராங்கனை " என்ற தலைப்பில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். அவள் உண்மையிலே ஒரு ஜெப வீராங்கனை என்று நான் நன்கு அறிவேன்..

திறப்பின் வாசலிலே நிற்கும் போது தான் கேட்பதைப் பெற்றுக் கொள்வேன் என்று ஒரு மன்றாட்டு வீரன் அறிவான்..

மன்றாட்டு வீரர்கள் என்று சொல்லும் போதே அந்நாட்களில் அமெரிக்காவின் தலைசிறந்த ஜெபவீரர்களின் ஞாபகம் வருகிறது..

1880களில் போர்ட்லாந்திலிருந்த Payson ஐ நினைக்கிறேன். அவரது அறையின் இரும்பு போன்ற தரையின் ஒரு பகுதியில் அருகருகே பள்ளம் போன்று இரு குழி விழுந்து காணப்பட்டது. தரையில் முழங்காலைத் தேய்த்து தேய்த்து ஜெபித்து ஜெபித்துப் பள்ளமாய்ப் போன இடம் அது !

சீனாவில் எழுப்புதலைக் கொண்டுவந்த யோனத்தான் Goforth ஐ மறக்க முடியுமோ ? "ஜெப ஹைட்" என்று பெயர் வாங்கி இந்தியாவின் பஞ்சாபில் எழுப்புதலைக் கொண்டு வந்த ஜாண் Hyde ஐ யார் மறக்க முடியும் ?

உங்களுக்கு நான் ஒன்று சொல்லட்டுமா ? 17 வயதில் நான் இரட்சிக்கப்பட்டவுடனே அந்த நாட்களில் என்னை தேவனோடு நெருங்க வைத்தது ஒன்று உண்டு.

டேவிட் பிரெயினார்டின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் ஒன்றை ஒருவர் எனக்குத் தந்தார். "இப்படியும் ஒரு சுயநலமற்ற மனிதன் உண்டா ?”

மெலிந்த தேகம்..வாலிப வயது.. அமெரிக்காவின் கடும்பனி பொழிவுக்காலம்..கழுத்து வரை பனி பெய்திருந்தாலும் அதற்கும் நடுவே நடந்து செல்வான்..செவ்விந்தியர்கள் மத்தியிலே.. காலை முதல் மாலை வரை அவர்களுக்காக ஜெபத்தில் போராடிய அவனைக் கண்டு வாயடைத்துப் போனேன்.

அவரது வாழ்க்கை எனக்குள் அக்கினியைப் பற்றவைத்தது.தாங்க முடியாத நான், அருகிலிருந்த Sherwood கானகங்களுக்குள் செல்வேன் - இரவு பகலாய் ஜெபிக்க ஆரம்பித்தேன்...

Finney காலத்து எழுப்புதலைப் போல ஒரு எழுப்புதல் இந்தியாவின் நாகலாந்தில் நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு அதைப் பார்க்கச் சென்றார் பால் கோஃப்மன். அவர் அங்கே சென்று இறங்கியதும் அவர் கண்டதெல்லாம், அடையாளங்களும் அற்புதங்களும் !

முடவர் நடப்பதையும், குருடர் பார்வையடைவதையும், பாவிகள் மனந்திரும்புவதையும், குடிகாரர்கள் தேவ சமுகத்தில் கதறுவதையும் நேரில் கண்டார் பால் !

அவரால் நம்பமுடியவில்லை.. இப்படி ஒரு எழுப்புதலா ? அங்கே என்ன நடக்கிறது என்று அறிய அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை அனுப்பியது.

சாராயக்கடைகள் மூடப்பட்டு விட்டனவா ? கண்மூடித்தனமான வாகன ஓட்டிகள் எங்கே ? கெட்ட வார்த்தைகளோடு தெருவில் சண்டை போடும் சிறுபிள்ளைகள் எப்படி இவ்வளவு ஒழுங்காக பள்ளிக்குப் போகிறார்கள் ?

இந்தியாவிலேயே சீர்குலைந்த வாழ்க்கை வாழ்ந்த இந்த ஆதிவாசிகளைப் போல எந்தச் சட்டத்துக்கும் அடங்காத இந்தக் கூட்டத்துக்கு திடீரென்று என்ன ஆனது ?
ஒரே இராத்திரியில் உலகமே மாறிப்போனது போல !

அவ்வளவு அமைதி ! குற்றம் வன்முறை என்ற பேச்சுக்கே இடமில்லை ! எங்கு பார்த்தாலும் அமைதி !
சந்தோஷம் ! சமாதானம் !

காரணம் என்ன ? இதற்குப் பின்னே யார் ? பால் கோஃப்மனும் விசாரணைக் குழுவோடு சேர்ந்து தேட ஆரம்பித்தார்.. தீர விசாரித்ததற்குப் பிறகு தெரிய வந்தது - ஒரு சிறு குழு - 20 வருடங்களாக நாகலாந்தின் எழுப்புதலுக்காக தேவனோடு போராடிக் கொண்டிருந்தது !

சொல்லுங்கள் ! எழுப்புதல் வராமல் என்ன செய்யும் ?

எத்தனை பெரிய அறிவாளியாகட்டும் - எனக்கு கவலை இல்லை ! தன் ஜெப வாழ்க்கையை விட மேலோங்கி நிற்கும் பெரியவன் ஒருவனுமில்லை !

தேவனுக்காக மனிதர் முன் நிற்பது ஒன்று.. ஆனால் மனிதருக்காக தேவனுக்கு முன் விழுந்து கிடப்பது என்பது முற்றிலும் வித்தியாசமான ஒன்று !

"பாடுகளில்லா பெந்தேகோஸ்தே" என்னும் ஒரு எழுப்புதலைத் தான் நாம் கேட்கிறோம்.. நமக்கு வேண்டியது நமது அன்றாட வசதி வாழ்க்கையைத் தொடாத, தொந்தரவு செய்யாத, ஈஸியான ஒரு எழுப்புதல்..

சத்தியமாய் அது சாத்தியமே இல்லை !

உண்மையான, மெய்யான, ஆழமான மன்றாட்டு ஜெபத்தின் மூலம் பிறக்காத ஒரு எழுப்புதலை வரலாற்றின் எந்தப் பக்கத்திலும் நான் பார்த்ததில்லை..

இங்கிலாந்தில் நான் வசித்த லீட்ஸ் நகரிலே ஒரு முறை எழுப்புதல் வந்தது. அதற்குப் பின்னால் ஒரு மனிதன் இருந்தான்..

பேர் அறியாத, படிப்பறியாத மனிதன்..ஆனால் அவனது இருதய பலிபீடத்தில் இரவும் பகலும் எரிந்து கொண்டிருந்தது அணையாத ஒரு அக்கினி ! அவன் பட்ட பிரயாசங்கள் கொஞ்சநஞ்சமல்ல..

மூன்று முறை செத்துப் பிழைத்தான். எப்படி தெரியுமா ? உபவாசம்..உபவாசம்..உபவாசம்.. சரீரம் நொந்து நூலாகிப் போயிருந்தாலும், அவனிடம் காணப்பட்ட அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் நரகமே நடுங்கியது!

காரணம் - அவன் மேலிருந்த அபிஷேகம் அப்படி !

பணம் கொடுத்து வாங்கி விடலாம் என்றால் உங்களில் சிலர் உங்கள் வீட்டைக்கூட விற்று வாங்கிவிடுவீர்கள் !
ஆனால் அபிஷேகம் என்பது விலை கொடுத்து வாங்கும் பொருளல்ல - அல்லது பல்கலைக்கழகத்தில் கிடைக்கும் பட்டமும் அல்ல !

நாம் கிறிஸ்தவம் என்ற மாப்பிள்ளைக்கு, வளமை செழுமை கொழுமை இளமை என்ற பெண் பார்த்து, சபை என்ற மணவாட்டியை, பேர் புகழ் பெருமை உல்லாசம் என்ற மணவாளனோடு முடிச்சு போட்டு மணமுடித்துவிட தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறோம் ! ஆனால் அது பரலோகத்தில் நிச்சயிக்கப்படாத,புவியிலே கூடிவர வாய்ப்பில்லாத ஒன்று !

இயேசு கிறிஸ்துவின் சபை, செழுத்துக் கொழுத்த யெஷூரனைப் போல உதைத்துக் கொண்டிருந்த போது அல்ல, பசியிலும் பட்டினியிலும் பவுலைப் போல பாடுகளில் நையப் புடைக்கப்பட்டுக் கொண்டிருந்த போதல்லவோ எழுப்புதலோடு எழுந்து நின்றது !

ஜெபம் ஏழைகளின் மொழி !

சுய-திருப்தி கொண்டவனுக்கு ஜெபிக்க வேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை !

சுய-நிறைவு பெற்றவன் ஜெபிக்க விரும்புவதில்லை !

சுய-நீதி நிறைந்தவன் ஜெபிக்க முடிவதில்லை !

ஆனால் "மனித சக்திக்கு அப்பாற்பட்ட 'டுனாமிஸ்' என்ற தேவ வல்லமை ஒன்றை எப்பாடுபட்டாகிலும் பெற்றே தீருவேன் !" என்ற முடிவோடு நிற்கும் ஒருவன், தன் ஆத்துமாவை ஜெபத்தில் ஊற்றி, அந்த அபிஷேக ஊற்றில் தானும் மூழ்கி ஊறி எழும்பவே விரும்புகிறான் !

35 மாணவர்களே கொண்ட ஒரு சிறிய பைபிள் ஸ்கூலிலே நான் படித்தேன்.ஆனால் அதின் பிரின்சிப்பல் ஒரு ஜெப வீரர் என்பது தான் அங்கு விசேஷம்! ரெவரெண்ட் சாம்வேல் Chadwick - 'ஜெபத்தின் வழி' புத்தகத்தை எழுதியவர்..

அடிக்கடி நாம் வாலிபர்களிடம் சொல்கிறோம்.." நல்லா பைபிள் படிங்க..ஜெபம் பண்ணுங்க..உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை சரியா வைக்கணும்னா உங்கள் ஜெப வாழ்க்கை சரியா இருக்கணும்.."

இல்லை..அது அப்படி இல்லை..அப்படி இல்லவே இல்லை.."

"உங்கள் ஜெப வாழ்க்கை சரியா இருக்கணும்னா, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை சரியா இருந்தாகணும்.."

எத்தனையோ புத்தகங்களை எழுதிய வேத விற்பன்னர் ஒருவர் தனியே என்னிடம் ஒரு முறை சொன்னார்.." வேத விளக்கவுரையோ, புத்தகங்களோ எழுதுவது எனக்குக் கஷ்டமே இல்லை.. மனமகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் நான் அதைச் செய்கிறேன்.. ஆனால் ஜெபிப்பது தான் எனக்குக் கஷ்டமாகவும் உலகத்திலேயே மிகவும் கடினமான காரியமாகவும் தெரிகிறது.."

அப்போஸ்தல நடபடிகளைப் பாருங்கள்..அங்கே நீங்கள் படிப்பதெல்லாம் ஜெபம்..ஜெபம்..ஜெபம்..ஜெபம் - ஜெபம் ஒன்றே !

அவர்கள் ஜெபம் பண்ணிய போது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது..

இயேசுவின் ஜெப வாழ்க்கையைப் பார்க்க விரும்புகிறீர்களா ? லூக்கா சுவிசேஷத்தைப் படித்துப் பாருங்கள் ! ஒவ்வொரு நிகழ்விலும் இயேசுவை ஜெபிக்கிற ஜெப மனிதராகவே காட்டியிருப்பார் லூக்கா !

1949 ல் வேல்ஸில் நாங்கள் நடத்திய தொடர் - கூட்டங்களை நினைத்துப் பார்க்கிறேன்..முதல் மூன்று நாட்கள் கூட்டங்களுக்குப் பிறகு, Mrs.லெவிஸ் என்ற வயதான பெண்மணி ஒருவர் என்னிடம் வந்து.." பிரதர் ரேவன்ஹில், இந்த நாட்களின் கூட்டங்கள், 45 வருடங்களுக்கு முன்பு 1904 ல் நடந்த வேல்ஸ் எழுப்புதலுக்கு கொஞ்சங்குறைய இருப்பது போல இருக்கிறது.." என்றார்.

"எதை வைத்துச் சொல்கிறீர்கள் ?" என்று கேட்டேன்.

"கூட்டங்கள் முடிந்து நேற்றும் முந்தின இரவும், முதல் நாளும், மலை மேல் ஏறி நாங்கள் வீடு திரும்பும் போது, அவரவர் வீடு சேரும் வரை ஒருவராவது வழியில் ஒருவர் ஒருவருடன் ஒரு வார்த்தை கூட பேசிக்கொள்ளவில்லை..

40 வருடம் முன்பு நாங்கள் கண்ட அதே தேவ பிரசன்னமும், மகிமையின் மேகமும், மகா மாட்சிமையின் பயபக்தியும் மறுபடியும் எங்களை இறுகிப் பிடித்ததை திரும்பவும் கண்டோம் !”

சபை இரண்டு காரியங்களை திரும்ப கண்டுபிடித்தாக வேண்டும் !
ஒன்று, தேவனின் பரிசுத்தமும் மாட்சிமையும் !
அடுத்தது பாவத்தின் பயங்கரம் !

ஆராதனை முடிந்து சபை வாசலை விட்டு வெளியே வருமுன்னே இன்று இரண்டு பேர் என்ன பேசிக்கொள்கிறார்கள் ? "இன்னைக்கு மேச்ல யாரு ஜெயிப்பாங்கன்னு நினைக்கிறீங்க.. ?" "இந்த பாஸ்டருக்கு வேற வேலை இல்ல.."-இதைத் தானே கேட்கிறோம் ?

நம்முடைய ஆலயப் பிரகாரங்களில் இறங்கிய அக்கினியால், தேவ மகிமையால், பயந்து பேச்சற்றுப் போய் ஒருவர் ஒருவருடைய முகத்தைப் பார்க்கக்கூட தைரியமின்றி ஒருவரோடு ஒருவர் ஒரு வார்த்தை கூட பேசிக் கொள்ளாமல் ஆலய வாசலை விட்டு மக்கள் வெளியேறி இப்போதைக்கு எவ்வளவு காலம் ஆகியிருக்கும் ? சொல்லுங்கள் பார்ப்போம் ?

உலகத்திலேயே மிக லேசான காரியமல்ல ஜெபம்..
உலகத்திலேயே மிகக் கடினமான காரியம் அது !

1950 முதல் ஹெப்ரிட்ஸ் தீவுகளின் எழுப்புதலில் தேவனால் உபயோகப்படுத்தப்பட்ட தேவ மனிதர் Duncan Campbell. அவருடன் சேர்ந்து அடிக்கடி ஜெபிக்கும் சிலாக்கியம் எனக்கு கிடைத்திருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி ஒரு நாள் அவரிடம் நான் கேட்டேன். அப்போது சொன்னார்..

"உண்மை தான், நான் ஹெப்ரிட்ஸுக்கு ஊழியம் செய்யச் சென்ற போது அந்தத்தீவு மாத்திரமல்ல, அதின் மேலுள்ள வானம் கூட இறுகிப்போன இரும்பாய் இருந்தது.

தேவன் ஏதோ கோடிக்கணக்கான மைல் தொலைவில் கண்ணுக்கெட்டாத தூரத்தில், கண்காணாத உயரத்தில் இருப்பது போலிருந்தது. என் பிரசங்கத்தின் செய்தி சுவரில் அடித்த பந்து போல என்னிடமே திரும்பி வந்தது.."

" அன்று என் முன்னால் அங்கிருந்த வெவ்வேறு சபைகளின் மூப்பர்களும் ஊழியர்களும் நிறைந்த பெரிய கூட்டம் ஒன்று உட்கார்ந்திருந்தது. அவர்களில் ஒருவர் பக்கமும் திரும்பாமல், அங்கே ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு 16 வயது பையனைப் பார்த்து, " தம்பி நீ ஜெபிப்பாயா ?" என்று கேட்டேன். சாதாரண ஒரு ஸ்கூல் பையன்..

எழுந்து நின்ற அவன் தனக்கே உரிய ஸ்காட்லாந்தின் ஸ்காட்டிஷ் பாணியில் பேச ஆரம்பித்தான்...

" ஓ ! தேவனை விட்டு தூரம் போய் சோரம் போய் நிற்கும் நம் ஜெபத்தால் யாருக்கு என்ன லாபம் ?" என்று சொல்லிவிட்டு, சங்கீதம் 24ன் ஒவ்வொரு வசனத்தையும் நிறுத்தி நிதானமாய்ப் படிக்க ஆரம்பித்தான்..

"யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான் ?
யார் அவருடைய பரிசுத்த பர்வதத்தில் நிலைத்திருப்பான் ?

கைகளில் சுத்தமுள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும்...." என்று வாசித்துக் கொண்டே போனான்..

Duncan சொன்னார்..

" நித்தியத்தின் நிசப்தம் அந்தக் கட்டிடத்தில் அப்படியே இறங்கியது !

பையன் ஜெபிக்க ஆரம்பித்தான்..10 நிமிஷம்..20 நிமிஷம்..30 நிமிஷம்..40 நிமிஷம்..45 நிமிஷம்..

பிறகு, கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒன்றைப் பார்த்து விட்டது போல, "பிசாசே ! உன்னைக் கடிந்து கொள்கிறேன் ! பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் இந்த இடத்திலிருந்து வெளியே போ ! இயேசுவின் இரத்தத்தின் வல்லமையில் போ என்று கட்டளையிடுகிறேன் !"

அவ்வளவு தான் !

உடனே பரலோகத்திலிருந்த பவர் ஹவுஸ் சுவிட்சை யாரோ 'ஆன்' பண்ணியது போல ஆண்டவரே அந்தக் கூட்டத்தில் வந்து இறங்கினார்..

கூட்டம் மட்டுமல்ல, ஊரே நடுங்க ஆரம்பித்தது.. நாடகக் கொட்டகைகளிலிருந்தும் நடன அரங்கங்களிலிருந்தும், ஊரின் சிவப்பு விளக்குப் பகுதிகளிலிருந்தும் எத்தனையோ வோல்ட் மின்சாரம் தாக்கியது போல அலறி அடித்து வெளியேறி ஓட ஆரம்பித்தனர்..

அந்தப் பையன் ஜெபிக்க ஜெபிக்க, பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்க, ஊரே பூமியதிர்ச்சியில் அதிர ஆரம்பித்தது !

பிரசங்கிக்கும் ஊழியனே ! நீ செய்ய வேண்டியதெல்லாம் ரெண்டே ரெண்டு வேலை தான் ! எழுவத்திரெண்டு இல்ல !"
கல்லா பெட்டியில உக்காந்து கணக்கு வழக்கு பாத்துட்டு இருக்கிற கடைக்காரன் மாதிரி சர்ச்சுல உக்காந்து பேங்க் பேலன்ஸ் எண்ணிகிட்டு இருக்காத !" ஞாபகம் வச்சிக்க ! எல்லாம் குப்பைலயும் குப்பை !"

நீ உண்மையிலே வேதத்தின்படி ஊழியம் செய்பவனாய் இருந்தால், அப்போஸ்தலர் 6:4ன் படி நீ இரண்டே இரண்டு காரியம் தான் செய்ய வேண்டும். ஜெபத்திலும் தேவ வசனத்தைப் போதிக்கிறதில் மட்டுமே இடைவிடாமல் தரித்திருக்க உன்னை ஒப்புக்கொடுத்துவிடு ! இது மட்டும் தான் நீ செய்ய வேண்டியது !

கிறிஸ்துவின் சேனையில் போர்வீரனாய் உன்னையே அர்ப்பணித்துக் கொண்ட நீ, உன்னைத் தன் சேனையில் சேர்த்துக் கொண்ட ஆண்டவர் பணிக்கிற வேலையை மட்டுமே செய்து அவர் இருதயத்தைக் குளிரப் பண்ணுகிறதை விட்டு விட்டு, தேவையில்லாத கண்டதையும் ஊழியம் ஊழியம் என்று சொல்லி, அந்நிய அலுவல்களில் சிக்கிக்கொண்டு ஏன் ஊர் ஊராய் சுற்றித் திரிகிறாய் ?

வியாதியஸ்தர்களை சந்திக்க வேண்டுமா ? - சபையின் மூப்பர்கள் போகட்டுமே ! அடக்க ஆராதனையா ? - அஸிஸ்ட்டன்ட்டை அனுப்பு ! (உங்களில் சிலர் என்னை ஒரு மாதிரி பார்க்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாமல் இல்லை..)

ஸ்கூல் அட்மிஷனுக்கும், ஹாஸ்டலுக்கும், வீடு மந்திரிக்கவும், கடை திறக்கவும், நிலம் வாங்கவும், விசுவாசிக்கு பேங்க் லோனுக்கும் ஏன் நடையாய் நடக்கிறாய் ? இது உன் வேலையா ?

இன்றைக்கு சபைகளில் எழுப்புதல் வராமல் போவதற்கு ஒரே காரணம் - மேலே அப்போஸ்தலர் 6:4 ல் சொன்ன இரண்டு வேலையை மட்டும் பாஸ்டர் விட்டு விட்டு மற்ற எல்லா வேலையிலும் தலையிட்டு, "நான் செய்யலனா யார் செய்யறது ?" என்று கையிட்டு, தேவ சமூகத்தில் தரித்திராமல், நாள் முழுவதும் சுற்றிக் கொண்டே இருந்தால், எங்கிருந்து எழுப்புதல் வரும் ?

நான் அதிகமாய் நேசிக்கிறவரும், மிக உயர்வாய் மதிக்கிறவருமான விலையேறப்பெற்ற தேவ மனிதர் Dr.A.W.Tozer.

அவருடைய அலுவலகத்தில் அவரோடு தனியாக நேரம் செலவிட்டு, நாங்கள் இருவரும் மணிக்கணக்காய் ஜெபித்த நாட்கள் உண்டு. அவர் ஒரு போதும் செமினரிக்கோ, பைபிள் காலேஜூக்கோ சென்றதில்லை.

ஆனாலும் நான்அறிந்து, அவரைப் போன்ற படித்தவர்கள் மிகச் சிலரே ! அவரது சபையின் அங்கத்தினர் ஒருவர் வீட்டில் ஒரு முறை தங்கியிருந்தேன்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அவர் சொன்னார்.." உங்களுக்குத் தெரியுமா பிரதர் ? கடந்த 25 வருஷமாக நான் டாக்டர். டோஸர் சபைக்குப் போகிறேன்.

இத்தனை வருஷத்தில் 5, 6 முறை தான் அவர் எங்கள் வீட்டுக்கு விசிட்டிங் வந்திருப்பார். ஆனால் வாரா வாரம் தேவனுடைய வார்த்தையை அவர் எங்களுக்குப் பிட்டுக் கொடுப்பார்..அதுவே எங்களுக்குப் போதுமானதாய் இருக்கும்.."

இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், பிரசங்கிக்கிற ஒரு ஊழியனுடைய முக்கிய வேலை ஜெபத்திலும் தேவ வசனத்தைப் போதிக்கிற வேலையிலும் மாத்திரம் தரித்திருப்பதே ! மற்றவைகளை மற்றவர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

நான் உங்களுக்குச் சொல்வேன்.." அக்கினிக்கு அட்வெர்ட்டைஸ்மென்ட் அவசியமில்லை..

நியூஸ்பேப்பர் விளம்பரம் தேவையில்லை..

தேவ மகிமை தேவாலயத்தில் வந்து இறங்கட்டும் ! அவரது வஸ்திரத் தொங்கலால் ஆலயம் நிரம்பட்டும் ! நூற்றுக்கணக்கான மைல் தொலைவிலிருந்து கூட மக்கள் வந்து குவிவார்கள் !

காரணம், எங்கு பார்த்தாலும் ஆவிக்குரிய அகாலம், வசனப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது !

கர்த்தருக்காகத் தீயாய்ப் பற்றி எரிகிற ஒரு சபையை எனக்குக் காட்டுவீர்களா ? இரவெல்லாம் ஜெபம்..ஜெபம்.. ஜெபமாய் பற்றி எரியும் சபை ?

முழு இரவு ஜெபமே இல்லாத ஒரு சபையை "இழுத்து மூடு" என்று சொல்லுவேன் !

உங்களுக்கு வேண்டியது என்ன ?
"நாங்கள் இந்த சபையாக்கும்!" என்ற மிடுக்கும் பெருமையுமோ ?

அல்லது,
" எங்க ஊர்ல நாங்க தான் பெரீய்யய சபையாக்கும் !"
என்ற விசுவாசிகளின் எண்ணிக்கையையே எண்ணி எண்ணி மார்தட்டலோ ?

அல்லது, உங்கள் சபையின் மேல் அக்கினி பற்றி எரிந்திட நீங்கள் வாஞ்சையாய் வாஞ்சிக்கும் பரிசுத்த அக்கினியோ ?

“இயேசுவையும் அறிவேன், பவுலையும் அறிவேன்.." என்று பொல்லாத ஆவிகள் சொன்னபோது, நான் நினைக்கிறேன்.. வரலாற்றிலேயே ஒரு பிரசங்கிக்குக் கிடைத்த மிகப்பெரிய கனமும் கௌரவமும் மனிதரால் அல்ல, பொல்லாத ஆவிகளால் வந்ததே ! இதைவிட என்ன வேண்டும் ?

பிரசங்கிப்போனே ! நான் கேட்கிறேன்.." தீவிரமாய்த் தேடப்படும் மிக ஆபத்தான 10 பேர்" என்ற ஒரு லிஸ்ட்டோடு இன்று உன் தேசத்தில் பிசாசு அலைந்து திரிந்து கொண்டிருப்பானானால், அந்த லிஸ்ட்டில் உன் பெயர் காணப்படுமா ?

என் பிரசங்கத்தினால் நீங்கள் எனக்குக் கொடுக்கும் அந்தஸ்தையும் கனத்தையும் விட, பிசாசின் அந்த most wanted டேஞ்சர் லிஸ்ட்டில் கடைசியானவனாய் இருந்தாலும் கூட, அதையே நான் வாஞ்சிப்பேன் !

நரகத்தில் நடக்கும் மாநாடுகளில் உன் பெயர் அடிக்கடி அடிபடாமல், நரகத்துக்கு நீ ஒரு அறியப்படாத, அவ்வப்போது அதை அதிர வைக்காத, அதற்கு நீ ஒரு அச்சுறுத்தல் இல்லாத அந்நியனாய் இருப்பாயானால் - நீ சல்லிக்காசு கூட பெறமாட்டாய் என்று தைரியமாய்ச் சொல்லுவேன் !

பிரதர், "எழுப்புதலுக்கான வழிமுறைகள்.." என்ற தலைப்பில் நீங்கள் ஒரு புத்தகம் எழுதினால் என்ன ?" என்று மக்கள் என்னிடம் கேட்பதுண்டு.." நோ ! நோ! நான் எழுதமாட்டேன்.."

எழுப்புதலுக்கான சூத்திரத்தை எங்கேயும் தேட வேண்டிய அவசியமில்லை. அதற்கான சூத்திரம் வேதத்தில் இல்லை என்றால் வேறு எங்கும் இல்லவும் இல்லை..

எழுப்புதலின் சூத்திரம் இது தான் ! ஐயோ ! நெஞ்சில் பாரமின்றி, கண்ணில் கண்ணீரின்றி நாங்கள் சோரம் போய்த் திரிகிறோமே ! என்று தங்களைத் தாங்களே தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக் கொள்ளுகிற பிரசங்கிகள் பலிபீடத்தில் முட்டி முட்டி அழுது புலம்பட்டும் !

ஐயோ ! பெருக்கம் பெருக்கமான "ரெகோபோத்" என்று சொல்லிக் கொண்டு அலைகிற பிரசங்கிகளாகிய எங்கள் நடுவிலிருந்து தேவ மகிமை விலகி "இக்கபோத்" என்ற இழிநிலையில் இருக்கிறோமே !" என்று இருதயத்தைக் கிழித்துக் கொண்டு, அப்போஸ்தலர் என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளுபவர்கள் அலறி அழட்டும் !

"பொன்னுக்குப் பதிலாக வெண்கலத்தையும், பரிசுத்தத்துக்குப் பதிலாக பரவசத்தையும், ஆவியிலும் உண்மையிலும் செய்யும் ஆராதனைக்குப் பதிலாக, ஆட்டபாட்ட ஆர்ப்பாட்டத்தையும் கண்டுபிடித்த எங்களை இரக்கமாய் மன்னித்துத் திரும்பவும் உயிர்ப்பிக்க மாட்டீரோ ?" என்று இரட்டுடுத்தி, தலையில் சாம்பலை அள்ளிப் போட்டுக்கொண்டு, மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே ஆசாரியர்கள் மூச்சுப் பேச்சின்றி மூர்ச்சித்து விழுந்து கிடக்கட்டும் !

அப்புறம் நடக்கும் அற்புதம் !

முடவன் துள்ளிக்குதிப்பது அல்ல நான் சொல்லும் அற்புதம்..

பரிசுத்தமில்லா உலகத்தின் நடுவிலிருந்து பரிசுத்தமில்லா மனிதன் ஒருவனைத் தூக்கியெடுத்து, பரிசுத்தமில்லா அவனைப் பரிசுத்தனாக்கி, மறுபடியும் பரிசுத்தமில்லா உலகத்துக்குள் அவனைக் கொண்டு சென்று, அவனைப் பரிசுத்தமாய் வாழ வைக்கும் அற்புதமே, தேவன் செய்யும் அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம் !" என்று நான் சொல்லுவேன்..

ஆனால், சபை இன்று பாவத்தை விட பரிசுத்தத்தைக் கண்டே பயப்படுகிறது !

அசுத்த ஆவியால் நிறைந்த அசுத்தமான மனிதன் ஒருவன், அசுத்தத்திலே வாழ்ந்து அசுத்தமானதையே செய்வானானால்..

கோபமும் மூர்க்கமுமான ஆவியால் நிறைந்த மூர்க்க மனிதன் ஒருவன், கோபமும் குரோதமும் நிறைந்து குரூரமான காரியங்களையே நடப்பிப்பானானால்...

பரிசுத்தமுள்ள ஆவியால் நிறைந்த ஒரு மனிதன் மட்டும், பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்து பரிசுத்தமானவைகளையே நடப்பித்து, நடமாடும் பரிசுத்தமாய் இல்லாதிருப்பது எப்படி ?

உனக்குள்ளும் உன் சபையிலும் எழுப்புதலைப்
பார்க்க விரும்புகிறாயோ ?
அடுத்த ஞாயிறு எழுந்து நின்று தைரியமாய்ச் சொல் !

ஒரு காலத்தில் எனக்கிருந்த தரிசனம் இன்று இல்லை !

ஒரு காலத்தில் எனக்குள்ளிருந்த
ஆவியும் அனலும் இன்று இல்லை !

அழியும் ஆத்துமாக்களுக்காக ஒரு காலத்தில்
எனக்கிருந்த பாரம் இன்று இல்லை !

என் கண்களில் கண்ணீரில்லை ! வேதத்தில் நாட்டமில்லை !
ஜெபத்தில் வாஞ்சையில்லை ! சபைக்கு வர விருப்பமில்லை !

வேண்டிய இவைகள் தவிர, வேண்டாத குப்பைகள் மனமெல்லாம்
நிறைந்து மண்டிக் கிடக்கிறது !"
என்று வெட்கத்தை விட்டு துணிந்து நின்று சொல்லிப்பார் !

பிறகு வெடிக்கும் எழுப்புதல் !

CHAPTER 2

மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே...
பகுதி–2

மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே
பகுதி-2

தன் முன்னே பரந்து விரிந்து கிடந்த உலக வரைபடத்தின் மேல் நிறுத்தி நிதானமாய் நகர்ந்த நெப்போலியன் போனபர்த்தியின் விரல்கள் ஓரிடத்தில் வந்து பின்னிக் கொண்டு நகர மறுத்தன..

தன்னைச் சுற்றி நின்ற தன் இராணுவ ஜென்ரல்களைப் பார்த்து சந்தோஷத்தில் சத்தமிட்டான்.." இதோ ! இதோ ! இதைத்தான் தேடினேன் ! ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் இந்த இராட்சசனைப் பாருங்கள் !

" அவன் தூங்கிக் கொண்டே இருக்கட்டும்..இந்தக் கும்பகர்ணன் எழும்பி, தன் மனித வளத்தையும், கனிம வளத்தையும், இயற்கை வளத்தையும், தன் மகா சக்தியையும் அறிந்து விட்டால் இவன் உலகத்தையே உலுக்கி விடுவான் ! அவன் தூங்கட்டும்..தூங்கிக் கொண்டிருக்கட்டும் !

நெப்போலியன் காட்டிய அந்த இராட்சத கோலியாத் வேறு யாருமல்ல..200 ஆண்டுகளுக்கு முன்னிருந்த, தன் ஆழ்ந்த நித்திரையிலிருந்து எழும்பி, இன்று உலகத்துக்கே தலைவலியாய் நிமிர்ந்து நிற்கும் இன்றைய சீனா தான்..

நெப்போலியனின் இடத்தில் லூசிஃபரை நிறுத்தி..சீனாவின் இடத்தில் இன்றைய சபையை வைத்து...நெப்போலியனின் வார்த்தைகளுக்கு சற்று ஆவிக்குரிய வர்ணம் பூசிப் படித்துப் பாருங்கள் ! உங்களுக்குப் புரியும் !

கிறிஸ்துவின் சபையின் கட்டுக்கடங்காத வாக்கையும் வல்லமையையும், அதின் ஆழ அகல நீள உயர ஆவிக்குரிய பிரம்மாண்டங்களையும் கண்டு கதிகலங்கிப் போன லூசிஃபரின் வாயிலிருந்த கோரப்பற்களின் நடுவிலிருந்து நெருப்பு கக்கியது !

அங்கே உலக உருண்டையின் முன்னே நின்று அவன் தன் நீட்டிய விரல்களால் இயேசு கிறிஸ்துவின் சபையின் மேல் வட்டமிட்டுச் சொல்லுகிறான்..

" இதோ தூங்கிக் கிடக்கும் கிறிஸ்து இயேசுவின் சபை ! அவள் மட்டும் பரிசுத்த ஆவியின் பெந்தேகோஸ்தே வல்லமையை மீண்டும் கண்டுபிடித்துவிட்டால்.. இயேசு கிறிஸ்துவின் உயித்தெழுந்த வல்லமையைக் காண அவளுடைய கண்கள் மட்டும் திறந்து விட்டால்.. அவள் மட்டும் விழித்தெழும்பி விட்டால்.. உலகத்தையே உலுக்கிக் கலக்கி விடுவாள் !

தூங்கட்டும் ! இன்னும் கொஞ்சம் உறங்கட்டும் ! அவளை எழுப்பிவிடாதிருங்கள் ! அவள் தூங்கிக் கொண்டே இருக்கட்டும் !

இன்று, சபை குறட்டையில் இருக்கும் Gulliver என்ற இராட்சதனைப் போல் உறங்கிக் கிடக்கவில்லையோ ? (Gulliver & Lilliput)

தெலீலாவின் மடியில் மதிமயங்கிக் கிடக்கும் சிம்சோனைப் போல நித்திரையில் இல்லையோ ?

அவள் மட்டும் இன்று விழித்தெழும்பி விட்டால் அவளது பலத்துக்கும் பராக்கிரமத்துக்கும் முன்பாக நிற்பவன் யார் ?

ஆவியானவரின் முழு ஆளுகைக்குள் நமது வாழ்க்கை எந்த அளவு அடங்கியிருக்கிறது என்று நான் யோசித்துப் பார்க்கிறேன்..

அப்படி அவரது பிடிக்குள் வந்து விட்டால், இன்று காண்பது போல் ஆட்டபாட்டக் கொண்டாட்டங்களை சபையில் காண முடியாது..

அப்போது தேவ மகிமை ஆலயத்தில் இறங்கியபோது ஆசாரியர்கள் ஊழியம் செய்ய நிற்க முடியாதிருந்தது போலிருக்கும், ஆவியானவரின் ஆளுகையும் அதிகாரமும் நம் மேல் !

மறுபடியும் செய்தியின் தலைப்புக்கு வருகிறேன்.
மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே ஆசாரியர்கள் புலம்பி அழுவார்களாக !

புகழ்பெற்ற ஒரு பைபிள் காலேஜில் 1400 மாணவர்கள் முன்பாக அவர்களது பட்டமளிப்பு விழாவில் பேசிக் கொண்டிருந்தேன்..

அந்த மேடையிலிருந்த பேராசிரியர்களையும் பேராயர்களையும் பார்த்துக் கேட்டேன்.." கனவான்களே ! நீங்கள் உங்கள் வாலிபர்களை ஊழியர்களாய் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் ! ஒரு வகையில், எதிர்கால சபையே நீங்கள் கற்பிக்கும் இந்த இளைஞர்கள் கையில் தான் இருக்கப்போகிறது !

எனக்கு ஒன்று சொல்லுங்கள் ! "ஆவியில் அழுது அங்கலாய்ப்பது எப்படி ?" என்ற பாடம் ஒன்றை எப்போதாவது உங்கள் பாடத்திட்டத்தில் சேர்த்திருக்கிறீர்களோ ?

'உன்னதப் பாட்டையே' உளமாறப் பாடிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு 'புலம்பலின் புத்தகத்திலிருந்தும்' புரியும்படியாக ஏதாகிலும் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்களோ ?

அப்போது வயதான புரஃபசர் ஒருவர் பின் இருக்கையிலிருந்து முன்னே வந்து அமர்ந்தார்.. இயேசுவின் இரத்தத்தையும், அக்கினி ஸ்நானத்தையும், நரக நெருப்பையும், பரிசுத்த வாழ்க்கையையும், சபை என்பது உலகத்தில் உயிரோடு வாழும், கிறிஸ்துவின் கறைதிறையற்ற கன்னிகை என்ற சத்தியத்தையும் அசையாமல் நம்பும் நல்ல ஒரு மனிதர்!

அப்போது அங்கிருந்தவர்கள் கிசுகிசுப்பது கேட்டது.." இந்தக் கிழவனுக்கு வேற வேலை இல்ல.."

"கிழவன் பேச்சு கின்னரத்துக்கு ஏறுமா ?" அன்றைக்கும் இன்றைக்கும் பழமொழி உண்மை தானோ ?

தேவ பக்தன் மோன்ட்கோமெரி உபயோகித்த ஒரு வரியை நான் விரும்புவதுண்டு..
“ பூமியும் பூமிக்குரியவைகளும் மண்ணோடு மண்ணாய்ப் போகும்..ஆனால் ஜெபமோ நித்தியத்தைப் பற்றிப்பிடித்து நித்திய நித்தியமாய் நிற்கும்.. "

கர்த்தர் காண்கிற விதமாகவே நாமும் கண்டு, ஆவியானவரோடு சேர்ந்து வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஜெபித்தோமோனால், பரிசுத்த ஆவியானவர் துக்கப்படும் காரியங்களால் நாமும் துக்கப்படாமல் இருக்கவே மாட்டோம்.

திரும்பவும் சொல்வேன்.. ஆசாரியர்களே, அலறுங்கள் ! பலிபீடத்தின் பணிவிடைக்காரரே, இரட்டுடுத்திப் புலம்புங்கள் ! என் தேவனின் தொண்டரே, இரட்டுடுத்தியவர்களாய் இராத்தங்குங்கள் !

பரலோகத்தில் பிறந்து, பூலோகத்தை அசைத்து, நரலோகத்தை நடுங்க வைக்கும் எழுப்புதலே நமது இன்றைய இன்றியமையாத தேவை !

ஆனால் அது உண்டாவதோ, உண்மையான உடைதலிலும், உருக்கமான நொறுங்குதலிலும், அழுகையிலும் கண்ணீரிலுமே !

ஒன்றை நான் ஒத்துக்கொள்கிறேன்..

ஒருவகை தேவபக்தி நம்மிலே உண்டு..

அசுத்தமும் அசிங்கமும் அசுசியும் நம்மிலே இல்லாமல் இருக்கலாம்.. உண்மை தான்..

நாம் ஒன்றும் குடிபோதையில் தள்ளாடுபவர்களும் அல்ல.. மனம் போல மறுமனையாட்டிகள் வைத்திருப்பவர்களும் அல்ல..(originally translated)

எல்லாம் நல்லது தான்..

ஆனால் இது என்னவோ அன்றைய இஸ்ரவேலரைப் போலத்தான் இருக்கிறது. எகிப்தை விட்டு வெளிவந்தது உண்மை..ஆனால் வாக்குப்பண்ணப்பட்ட கானானுக்குள் போவதற்குப் பதில் காதேஸ்பர்னேயாவிலேயே கூடாரம் அடித்துத் தங்கிவிட்டார்களே !

கானானின் நுழைவாயிலாய் இருக்க வேண்டிய காதேஸ்பர்னேயா, சோறு கண்ட சொர்க்கமாகிப் போனது !

வழியாய் மட்டுமே இருக்க வேண்டிய இடம், வந்து சேர்ந்த இடமாய் மாறிப்போனது ! படிக்கல்லாய் இருக்க வேண்டியது, தடைக்கல்லாய் ஆகிப்போனது !

விசுவாச வீரர்கள் பட்டியல் என்று நாம் அழைக்கும் அந்த ஆச்சரியமான எபிரேயர் 11ம் அதிகாரத்தை நான் அடிக்கடி வாசித்து எனக்குள் மனப்பாடம் செய்து கொள்வதுண்டு !

"விசுவாசத்தினாலே" என்ற வார்த்தை 24 முறை அங்கே சொல்லப்படுகிறது..
அந்த அதிகாரத்தின் திறவுகோல் வார்த்தை அதுவல்ல..
அதைவிட முக்கியமான ஒன்று ஆறாம் வசனத்தில் இருக்கிறது..

" தேவனிடத்தில் சேருகிறவன் "அவர் உண்டு"
என்று விசுவாசிக்க வேண்டும்.."
"அவர் உண்டு..
அல்லது அவர் இருக்கிறார்" என்று விசுவாசிக்க வேண்டும்.

"அவர் இருக்கிறார்" என்றால், தமது வார்த்தையில் தாம் சொன்ன எல்லாமாய் அவரே இருக்கிறார்" என்று அப்படியே விசுவாசித்து, மேற்கொண்டு 11ம் அதிகாரத்தின் கீழ்க்கண்ட இந்த வார்த்தைகளை எனக்குள்ளே சொல்ல ஆரம்பித்தேன்..

விசுவாசத்தினாலே அவர்கள் இராஜ்யங்களை
ஜெயித்தார்கள்..நீதியை நடப்பித்தார்கள்..
சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்..

அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள்..
பலவீனத்தில் பலன் கொண்டார்கள்..
யுத்தத்தில் வல்லவர்களானார்கள்..
அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்.

ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை
உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்..
வேறு சிலர் வாதிக்கப்பட்டார்கள்.

வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும்
காவலையும் அநுபவித்தார்கள்..

கல்லெறியுண்டார்கள்... வாளால் அறுப்புண்டார்கள்..
பரீட்சை பார்க்கப்பட்டார்கள்..
பட்டயத்தால் வெட்டப்பட்டு மரித்தார்கள்..
செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும்
போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும்
துன்பத்தையும் அனுபவித்தர்கள்..

இந்த வசனங்களைச் சொல்லிக் கொண்டே என் அலுவலகத்தில் ஜெபிக்க முழங்காலிட்டேன். "அதைத் திரும்பவும் சொல்லு.." என்று ஆண்டவர் சொல்வது போலிருக்கவே, மறுபடியும் அதே பகுதியை சொல்ல ஆரம்பித்தேன்..

"விசுவாசத்தினாலே அவர்கள் இராஜ்யங்களை ஜெயித்தார்கள்......."

அப்போது யாரோ ஒருவர் சொன்னது ஞாபகம் வந்தது.
"இவை எல்லாவற்றின் மத்தியிலும் அவர்களில் ஒருவரிடம் கூட "வேதாகமம்" என்று ஒன்று இருந்ததே இல்லை !"
எப்போதாவது இப்படி நீங்கள் யாராவது நினைத்துப் பார்த்ததுண்டா ?

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அந்த விசுவாச வீரர்கள், செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்துத் திரிந்த அந்த உபத்திரவத்தின் நாட்களுக்கு உங்களை சற்று பின்னோக்கி அழைத்துச் செல்ல விரும்புகிறேன்..

இங்கு நாம் பாலும் தேனும் ஓடும் தேசத்தில் மட்டுமல்ல, செழுமையும் கொழுமையும், வளமும் வாழ்வும், பணமும் மணமும் மலிந்தோடி வழிந்தோடும் மேற்கத்திய சபைகளில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறோம்..

நாம் வெளிவேடம் போட்டு impress பண்ணி, அதில் ஏமாந்து போக தேவன் ஒரு மனிதனோ ? அவர் இருதயங்களையும், உள்ளிந்திரியங்களையும், சகல எண்ணங்களின் தோற்றங்களையும் ஊடுருவிப் பார்க்கிறவர் அல்லவோ ?

ஆகவே மாய்மாலங்களை மறந்துவிடுங்கள் !

"கல்லெறியுண்டு, வாளால் அறுப்புண்டு, பரீட்சை பார்க்கப்பட்டு, பட்டயத்தினாலே வெட்டப்பட்ட அவர்களிடம் 66 புத்தகங்கள் இருந்ததில்லை !

“உங்களுக்குச் சொல்கிறேன்..உலகம் இன்னொரு நூறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து சுழன்று சுகித்திருந்தாலும், தேவன் தாம் எழுதிக்கொடுத்த தமது புத்தகத்தில் இன்னொரு அத்தியாயத்தைக் கூட்டி எழுதப்போவதில்லை!

மனிதனுக்குத் தாம் சொல்ல வேண்டியது எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொல்லி, அந்த அறுபத்தாறு புத்தகங்களுக்குள்ளே அவர் அடக்கிவிட்டார் ! -
பிற்சேர்க்கைக்கு அவசியம் எதுவுமின்றி !"

Dr.Campbell Morgan அவர்கள் ஓர் அற்புதமான வேத வல்லுநர்.அவர் அடிக்கடி வந்து வேத வகுப்பு நடத்தும் ஒரு இடத்துக்கு நான் என் வாலிப நாட்களில் செல்வதுண்டு. அந்த ஆரம்பப் பருவத்தில் நான் நினைத்திருக்கிறேன்..

" ஒரு நாள் க்ளாஸ் முடிந்து எல்லாரும் போனதும், தனியாகச் சென்று " என்னுடைய பைபிளில் இல்லாத இவ்வளவு விஷயங்கள் உள்ள அப்படி என்ன ஒரு ஸ்பெஷல் பைபிளை நீங்கள் வைத்திருக்கிறீர்கள்? என்று இவரிடம் கேட்பேன் என்று நினைத்திருக்கிறேன்..

எழுப்புதலைக் கண்ணாரக் கண்டு, தங்கள் தலைமுறையின் எழுப்புதலின் நாட்களில் அன்றிருந்த சபைகளைத் தங்கள் ஆவிக்குரிய ஆளுகையில் வைத்திருந்த ஜாண் வெஸ்லியோ , வில்லியம் பூத்தோ, சார்ல்ஸ் ஃபின்னியோ அல்லது அவர்களைப் போன்ற பெரிய எழுப்புதல் வீரர்களோ, இவர்கள் யாருமே நம்மை விட பெரிய மெகா சைஸ் பைபிள் வைத்திருந்தார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ ? மறந்துவிடுங்கள் ! நம்மிடம் இன்றிருக்கும் அதே, எழுதப்பட்ட வார்த்தை தான் அவர்களிடமும் இருந்தது !

நான் சொல்வேன்.." ஊழலில் ஊறி நாறி, அசுத்தத்தில் அழுகிப்போய்க் கிடக்கும் இந்த உலகத்துக்கு ஆவியும் ஜீவனுமுள்ள இந்தப் புத்தகத்தில் தீர்வு இல்லையென்றால், உலகத்தின் எந்தப் புத்தகத்திலும் இல்லை..

பாவத்தைப் பச்சைத்தண்ணீராய்க் குடிப்பதில் சோதோம் கொமோராவெல்லாம் நமக்கு முன்பாக nothing !

உங்களுக்குத் தெரியுமா ? அமெரிக்காவில் மட்டும் 70 கோடி பைபிள் இருப்பதாக ஒரு கணக்கு ! புதிய ஏற்பாடுகளுக்கும், கேசட்டுகளுக்கும், VCD, DVDகளுக்கும் எண்ணிக்கை உண்டா ?

எத்தனை ஆயிரக்கணக்கான செமினார்கள் ! செமினரிகள் ! பைபிள் காலேஜ்கள் ! இன்ஸ்ட்டிட்யூட்டுகள், ரேடியோ டிவி சேனல்கள் !

கொள்ளை கொள்ளையான இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் ஒரு பக்கமிருக்க, நாட்டின் மறுபக்கத்தையும் காட்டி முடிக்கிறேன்..

வரலாற்றிலேயே இன்றைய அமெரிக்காவைப் போல உள்கட்டுமானத்தில் உடைந்து சிதைந்து போயிருக்கும் தேசம் வேறு எதுவுமில்லை!

உலகத்திலேயே உடைந்த குடும்பங்கள் நிறைந்து கிடைக்கும் வல்லரசு !

உடைந்த உள்ளங்கள் !
உடைந்த வாழ்க்கைகள் !
உடைந்த உறவுகளால் உடைந்த பிஞ்சுக்குழந்தைகள் !

உடைந்த மனங்கள் - போதைப் பொருட்களால் !
உடைந்து சிதைந்த உடல்கள் - வயதுக்கு மீறிய உடலுறவுகளால் !
கருச்சிதைவுக்கு கணக்கும் உண்டா ?

அரசாங்கம் அறியாமல் திகைக்கிறது !
பணக்கார நாடு என்ற பெயர் தான் - பணத்தால் பண்பை விலைகொடுத்து வாங்க முடியுமோ ?
சட்டம் இயற்றும் சபாநாயகர்கள் கைவிரித்து விட்டனர் !

நம்முடைய சகாயம் - தேவனைத் தவிர வேறெங்கும் இல்லை !
அமெரிக்கா மட்டுமல்ல - அகிலம் எங்கும் இதே அவலம் தான் !

ஒப்புக்கொடுப்பதும் ஒப்பாரி வைப்பதும் தவிர வழி ஒன்றுமில்லை..
நொறுங்கிக் கதறுவோமா ?

"ஆண்டவரே !
ஒரு காலத்தில் எனக்கிருந்த தரிசனம் இன்று இல்லையே !

ஒரு காலத்தில் எனக்குள்ளிருந்த ஆவியும் அனலும் இன்று இல்லையே !

அழியும் ஆத்துமாக்களுக்காக ஒரு காலத்தில் எனக்கிருந்த பாரம் இன்று இல்லையே ! என்று கதறுவோமா ?

உன் சபையில் எழுப்புதலைப் பார்க்க விரும்புகிறாயோ ?
அடுத்த ஞாயிறு எழுந்து நின்று தைரியமாய்ச் சொல் !

"எனக்கு தரிசனமில்லை !
கண்ணில் கண்ணீரில்லை !
அழியும் ஜனத்தின் பாரமில்லை !
வேதத்தில் நாட்டமில்லை !
ஜெபத்தில் வாஞ்சையில்லை !
வர விருப்பமில்லை !

வேண்டிய இவைகள் தவிர, வேண்டாத குப்பைகள் மனமெல்லாம் நிறைந்து மண்டிக் கிடக்கிறது !"
என்று வெட்கத்தை விட்டு துணிந்து நின்று சொல்லிப்பார் !

பிறகு வெடிக்கும் எழுப்புதல் !

பவுலின் வாழ்க்கையின் வெற்றி இரகசியமே "ஒன்று செய்கிறேன்" என்று அவன் சொன்ன ஒன்று தான்..வேறு ஒன்று அல்ல..

கிறிஸ்துவாகவே வாழ்ந்தான் !
கிறிஸ்துவாகவே சிந்தித்தான் !
கிறிஸ்தவாகவே பேசினான் !
கிறிஸ்துவாகவே ஜெபித்தான் !
கிறிஸ்துவாகவே கிரியை நடப்பித்தான் !
- அவ்வளவு தான்..

கசையால் அடித்தாலும் சரி.. அவனைக் கல்லால் அடித்தாலும் சரி..அவனுக்குள்ளிருந்து கிறிஸ்துவை மட்டும் வெளியே எடுக்கவே முடியாது !

இரவு பகல் முப்பத்தாறு மணிநேரமும் மத்திய தரைக்கடலிலே மூழ்கிக் கிடந்தாலும், கட்டையைப் பிடித்துக் கொண்டு ஊறுகாயாய் ஊறிப்போய்க் கிடப்பானே தவிர, அவனுக்குள்ளிருந்துமட்டும் கர்த்தரை கழுவி எடுத்துவிடவே முடியாது !

சரீரத்தில் அவனைப் பட்டினி போடலாம்.. ஆனால் அவனை ஆவியில் பட்டினி போட்டுக் கொல்ல முடியாது !

காரணம் சிலுவை தரிசனம் ! உயிர்த்தெழுதலின் உன்னத பெலத்தின் தரிசனம் !

நித்தியத்தின் இக்கரையிலே, தேவனால் நிறைந்த மனிதனாய் வாழ்வதைவிட மகத்துவமானது வேறொன்றும் இல்லை என்பதை ஆணித்தரமாய் அறிந்தவன் அவன் !

தமது சபை, இன்று போல் என்றும் பின்தங்கிய, பின்வாங்கிய பேர்க்கிறிஸ்தவ சபையாய் இருப்பது அல்ல - தேவன் நினைத்திருந்தது - அல்லவே அல்ல..

அப்போஸ்தலர் காலத்து சபைக்கு எள்ளளவும் குறைவாய் தம் சபை இயங்குவதை தேவன் நினைத்துக்கூடப் பார்த்தில்லை..

சபையை முழங்காலில் கூட்டிச் சேர்க்கும் நேரமிது !

எழுப்புதலின் பத்துக்கட்டளைகள் இது தான் !

யோவேல் 2: 12 - 17

1. சீயோனிலே எக்காளம் ஊதுங்கள்..

2. பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்..

3. விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்..

4. ஜனத்தைக் கூட்டுங்கள்..

5. சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்..

6. மூப்பர்களை வரவழையுங்கள்..

7. பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்..

8. மணவாளன் தன் அறையையும் மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக..

9. ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே கதறி அழுவார்களாக..

10."கர்த்தாவே! நீர் உமது ஜனத்தை பழிக்கும் நிந்தைக்கும் ஒப்புக் கொடாதிரும்" என்று புலம்பி அழுவார்களாக !

நாம், நம்மை நாமே எவ்வளவு ஆவிக்குரிய பரிசுத்தவான்கள் என்று பெருமையடித்து பீத்திக் கொண்டிருக்கிறோமோ, அதில் பாதியாவது இருந்தோமானால், இந்நேரம் இரட்டுடுத்திக் கொண்டு, தகாத நம் தலைகள் மேலே உலையின் சாம்பலை அள்ளிப் போட்டுக்கொண்டு, மகிமை நம்மை விட்டுப் போயிற்றே என்று பரிசுத்த ஸ்தலத்திலே முகங்குப்புற விழுந்து புலம்பலாய்ப் புலம்புவோம் !

Duncan Campbell நாட்களில் ஸ்காட்லாந்தில் அவர்கள், "தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன் உருகும்படி செய்வீராக ! என்று கதறிய சத்தத்தை கொஞ்சம் குறைய என்னால் இன்னும் கேட்க முடிகிறது..

மக்கள் நடந்து போகும் போதும், வாகனங்களில் போய்க் கொண்டிருக்கும் போதும், பாவ உணர்வடைந்து, நெஞ்சில் அடித்துக் கொண்டு, நடைபாதைகளிலும், வழிகளிலும், ரோடுகளிலும், தெருக்களிலும் விழுந்து கிடந்து, ஆங்காங்கே நம்முடைய வீதிகளிலும், Highwayக்களிலும் traffic jam ஏற்படும் அளவுக்கு, கிரியை செய்யும் ஆவியானவரின் பலத்த கிரியைகளை நாம் நம் கண்களால் இன்னும் காணவில்லையே !

கலியாணங்களிலும், பார்ட்டிகளிலும், டிஸ்கோ க்ளப்களிலும் DJ என்ற வண்ண விளக்கொளி ஆட்டம் பேயாட்டம் நிரந்தரமாய் நின்று போவதை எப்போது பார்க்கப் போகிறோம் ?

நமது ஆலய வாசல் கதவுகள் மூடப்படாமல், நாட்கணக்காக, வாரக்கணக்காக விளக்குகளே அணையாமல், சங்கிலித்தொடர் ஜெபங்கள் சங்கிலியாய் நீண்டு நிரந்தரமாகும் நாட்கள் எப்போது வரும் ?

எழுப்புதல் வரலாறுகளின் நாட்களில், தொழிற்சாலைகளிலும், நிலக்கரி சுரங்கங்களிலும் அடித்த எழுப்புதல் அலைகளையெல்லாம் தூக்கி வீசிவிடும் ஒரு வரலாறு காணா எழுப்புதல் சுனாமி, நமது கார்ப்பரேட் ஆபீஸ்களையும், யுனிவர்சிட்டி கேம்ப்பஸ்களையும், பாராளுமன்றங்களையும், பட்டிதொட்டிகளையும், அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், ஆலய வளாகங்களையும்,ஆன்மீக ஆசிரமங்களையும், மருத்துவமனைகளையும், மாந்திரீக மயானங்களையும் எப்போது புரட்டிப் போட்டு கீழது மேலது ஆக்கப்போகிறது ?

லவோதேக்கிய சபையை அடித்துப் போடாதபடிக்கும், நாச தேசத்தை அழித்துப் போடாதபடிக்கும், சுவரிலே கண்ட திறப்பை அடைத்து, தமக்கு முன்னே அந்தத் திறப்பிலே நிற்க நம்மைத் தேடி வந்திருக்கிறார் !

அவர் இந்த பூமியிலிருந்த நாட்களில் தமது பிதாவின் வீட்டை சவுக்காரத்தால் அல்ல..சவுக்கால் சுத்திகரித்தார்..

இன்னும் ஒருமுறை அதே கழுவி எடுத்தல் கட்டாயத்திலும் கட்டாயம் என்பேன்..

வேதத்தை மட்டுமல்ல..
நம்மை நாமே ஆராயவும், உண்மையும் நேர்மையுமாய், 'நாம் விழுந்து போனோம்' என்பதை ஒத்துக்கொள்ளவும்,
ஜெபத்துக்கும் சுத்திகரிப்புக்கும் அபிஷேகத்துக்கும் உள்ளறையும் மேலறையும் தேடி ஓடவும் தேவன் உதவி செய்வாராக !

பாழ்பட்ட உலகுக்கும் - பரிசுத்தமுள்ள ஆவிக்கும் நடுவே பலமான - பாலமாய் மாறுவோம் !

நீண்டகாலமாய்த் தேடாமல் போன தேவனுடைய பெட்டியை திரும்ப நம் நடுவே கொண்டு வருவோமாக ! [1 நாளா 13 :3]

நம் நடுவிலிருந்து வெறுங்காலோடு நாம் கால்நடையாய்த் துரத்திவிட்ட நம் ராஜாவைத் திரும்ப வருந்தி அழைத்துத் தீவிரித்துக் கொண்டு வந்து, மீண்டும் சிங்காசனத்தில் அமர்த்துவோமாக !
[2 சாமு 18:11]

பூர்வ காலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும் என்று புலம்புவோமாக ! [புலம்பல் 5:21]

அப்பொழுது கர்த்தர் நமது தேசங்களுக்காக வைராக்கியம் கொண்டு, தமது ஜனமாகிய நம்மைக் கடாட்சிப்பார் ! [யோவேல் 2 : 18]

தேவ மகிமை நம் நடுவே திரும்ப வந்து இறங்கட்டும் !

யோவான் ஸ்நானகன் இன்று உயிரோடு திரும்பி
வருவானானால்,அவனது சத்தம் வனாந்தரத்தை அல்ல..
இன்றைய நமது ஆலய வளாகங்களை அதிரப் பண்ணும்..

ஓ ! தேவ சமூகத்தில் தரித்திருந்து, அவரது சத்தம் கேட்டு
அவரது வல்லமையில் மூழ்கி எழுந்து, அவரது செய்தியை,
நொந்து நோய்பட்டு நசல்கொண்ட சபைக்கும், செத்துக்
கொண்டிருக்கும் தேசத்துக்கும் ஆவியின் அதிகாரத்தோடு
பறைசாற்ற மனிதர் எவரும் இங்கில்லையோ?

இப்போது நமக்குத் தேவை ஆவிக்குரிய மாவீரர்கள் !
இன்றைய நமது அவசரத் தேவை பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகள் !

- ரேவன்ஹில்

CHAPTER 3

தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான்

தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான்

தங்கள் பெருமிதமும் பெருமையின் அடையாளமுமான தேவாலயத்தில் மகிமையும் மிடுக்குமாய் உயர் ஸ்தானங்களில் வலம் வந்து கொண்டிருந்த பிரதான ஆசாரியர்களையே பார்த்துப் பார்த்துப் பழகிப்போயிருந்த அந்த நாட்களின் ஜனங்களுக்கு, வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் ஆகாரமாய்க் கொண்டு, ஒட்டகத்தோலை உடுத்திக் கொண்டு வனாந்தரத்தில் காட்டுத்தனமாய்க் கத்திக் கொண்டிருந்த கற்கால மனிதனைப் போலக் காட்சியளித்த, ஆனால் தேவனால் அனுப்பப்பட்ட அந்தத் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளவோ அவனது வார்த்தைகளை ஜீரணிக்கவோ கடினமாகத்தான் இருந்திருக்கும்.

இந்த, வழக்கத்துக்கத்துக்கு அப்பாற்பட்ட, எந்தக் கணக்குக்கும் உட்பட்டு, யாராலும் கணிக்கவே முடியாத, யாரோடும் எதிலும் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லாத, இந்த மனிதனைப்பற்றி தான் இயேசு சொன்னார்...

" ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் இல்லை.." என்று.. (மத் 11:11)

இந்த ஆச்சரியமான மனிதனின் இரகசியத்தைப் புரிந்து கொள்வது சுலபம்.

- தனியனான இந்தத் தனிமை விரும்பியின் பார்வையும் தரிசனமும் - தேவ மகிமை ஒன்றிலேயே நிலை கொண்டிருந்தது

- தன்னகத்தே அவன் வைத்திருந்தது ஒரே ஒரு செய்தி - கிறிஸ்துவே உலக இரட்சகர் என்று அவரையே உயர்த்தி அறிமுகப்படுத்துவது..

- தன் ஒரே நோக்கம் - தேவ சித்தம் மட்டுமே நிறைவேற்றி முடிப்பது

யோவானுக்கு அவனது ஊழியத்தில் பல தெரிந்தெடுத்தல்கள் இருந்தன..

அவனை எதிர்த்து நின்ற அரசியல், மத எதிர்ப்பாளர்களின் அபாய வலையில் சிக்காமல் சாதுரியமாய்த் தப்பித்துக் கொள்ள அவன் முயற்சித்திருக்கலாம்..

காட்டு வெயிலில் காய்ந்து கிடந்த அவனது வறண்ட தோலின் உரசலால் எரிச்சலடைந்த ஜெப ஆலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட அங்கத்தினரோடு அவன் சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் இல்லை..அவர்களது கூடுகைகளில் அவன் தலைமை ஏற்கவுமில்லை..

அவன் ஆபிரகாம், ஈசாக்கை பலியிட எத்தனப்பட்ட அதே மோரியா மலை முகட்டில் நின்று உணர்ச்சிவசமாய்ப் பிரசங்கித்து ஜனங்களைக் கண்ணீர் மல்கச் செய்திருக்கலாம்..

அல்லது, எலியா அக்கினி இறக்கிய அதே இடத்துக்கு ஜனங்களை புனித யாத்திரை அழைத்துச் சென்றிருக்கலாம்..

அல்லது, பத்து கட்டளைகளை எழுத மோசே இழைத்து எடுத்த கற்பலகைகளுக்காக வெட்டி எடுக்கப்பட்ட கன்மலைப்பகுதியின் பாறைகளை சிறு துண்டுகளாக்கி தன்னோடிருந்த டூரிஸ்ட்டுகளுக்குக் கொடுத்து அவர்ளை மெய்சிலிர்க்கச் செய்திருக்கலாம்..

அல்லது, மோசே செங்கடலைப் பிரித்த இடத்தைக் காட்டிக்காட்டியே காசு பார்த்திருந்திருக்கலாம்..

அல்லது, அதிரடியாக ஜனங்களின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப, யூதேயா தேசத்தின் மேலிருந்த ரோமப் படையெடுப்பை விளாசியிருக்கலாம்..

அல்லது, ஆலயத்தின் காசுக்காரத் திமிங்கிலங்களை சாடியிருக்கலாம்..

அல்லது, பார்வையற்ற பிச்சைக்காரர்களையும், குஷ்டரோகிகளையும் பராமரிக்கும் நலவாழ்வு இல்லம் ஒன்று நடத்தியிருக்கலாம்..

இவைகளில் எந்தக் காரியத்தைச் செய்திருந்தாலும் அவனது வாழ்நாளும் ஊழியகாலமும் நின்று நீடித்திருந்திருக்கும்.

ஆனால் இவைகளில் ஒன்றையும் அவன் செய்யத் துணியவே இல்லை.மாறாக அவன் நீதியையும் பரிசுத்தத்தையும் இச்சையடக்கத்தையுமே பேசி சமுதாயத்தின் மேல்தட்டு வர்க்கத்தினரை எரிச்சலடையச் செய்து அவர்களது பகையை சம்பாதித்துக் கொண்டான்.

இந்த ஸ்நானகன் சொன்னான்..
"கோடரியானது இப்பொழுதே மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது.நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.." என்று.

இந்த விநோதப்பிறவி தனக்கென்று ஒரு படையை எழுப்பியிருந்தால், அன்றைய ரோம சாம்ராஜ்யத்தின் இரும்புக்கால்களை நசுக்கி, பேராசை கொண்ட பணப்பித்தர்களான ஆசாரியர்களை ஓட ஓட விரட்டியிருக்கலாம்.

ஆனால் யோவானின் குறி, மேலோட்டமாய்க் காணப்பட்ட பாவத்தின் அறிகுறியை அல்ல, அவன் தாக்கியது மூல வேராகிய பாவத்தை முளையோடு கிள்ளி எறிவதையே..

காயப்படுத்திக் கொண்டிருந்த ஜனத்தால் அவன் காயப்படவில்லை..ஆனால் தமது ஆலயம் பாழாக்கப்பட்டு, தமது பரிசுத்த பந்தி எண்ணமற்றுப்போய் பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட்டு, தமது கட்டளைகள் மீறப்பட்டதால் நொந்து நொறுங்கியிருந்த ஆண்டவரின் ஏங்கல் ஒன்றே அவனை இரவுபகலாய் வதைத்துக் கொண்டிருந்தது..

இந்தக் கலக்கமற்ற தீர்க்கதரிசி ஒவ்வொருவரையும் கலக்கி கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தான்..

ஒரு தீர்க்கதரிசியானவன் எப்படி எப்படி இருக்க வேண்டுமென்று அளவிடப்படுகிறானோ அந்த அளவுக்கு அதிகமாகவே யோவானின் வாழ்க்கையும் ஊழியமும் வெற்றி தான்! அநீதியால் ஒடுக்கப்பட்டுக் கிடந்த சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்தின் மனதையும் தொட்டிருந்தான் யோவான்.

நள்ளிரவில் அடுக்குமாடிக் கட்டிடத்தின் உச்சியில் பிடித்த தீ ஜூவாலை போல, இந்தப் பாலைவனக் காட்டுத்தீர்க்கன், அந்நிய தேச இராணுவ வீரர்களையும், ஆயக்காரரையும், மேல்மட்டம் கீழ்மட்டம் வருவோர் போவோர் என்று ஒருவரையும் விடாமல் காந்தமாய் இழுத்தான்.

அவன் பேசின பாஷையும், பேசின விதமும் அவர்கள் முன்பின் கேட்டிராதது.. ஆனாலும் அது அவர்களுக்கு நன்றாகவே புரிந்தது.

அவன் சத்தியத்தைப் பேசினான். அது அவன் காலத்தில் மட்டுமல்ல.. இன்றும் கேட்கக் கிடைக்காத அபூர்வமான ஒன்றே!

யோவான், சமுதாயத்தின் குறைகளையோ, ரோமர்களின் அடக்குமுறைகளையோ சாடவில்லை. அவன் அநீதிக்கும் பாவத்திற்குமே எதிர்த்து நின்றான்.

" பாவிகளே !
என்னை நம்பினால் நம்புங்கள் !
உங்களுக்கு வேண்டிய அனைத்தையும் இதோ வானத்திலிருந்து இப்போதே இறக்குகிறேன்.. !
மலையுச்சியில் உங்களுக்கு ஒரு பெரிய பங்களா !
ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு இதோ இலவச டிக்கட் ! இப்போதே நம்புங்கள் !
இதோ சகலமும் இலவசம் !" என்பது போன்றதல்ல அவனது பிரசங்கம்..

உங்கள் மனம் திரும்புதல் மூலம் உங்கள் இரட்சிப்பின் கனியாகிய அத்தாட்சியை நான் காணட்டும்" என்றே கூவி அழைத்தான் யோவான்.

"உங்கள் கிரியைகளினாலே உங்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்பதே மனந்திரும்பச் சொல்வதற்கு சரியான முறை என்று இன்று சிலர் சொல்கின்றனர்.

அப்படி, கிரியைகளினாலே இரட்சிப்பை அடையலாம் என்றால் யோவானையும் இயேசுவையுமே நீங்கள் தாராளமாய் குற்றம் சாட்டலாம். அல்லது இன்னும் ஒருபடி மேலே போய் பேதுருவும் பவுலும் பிரசங்கித்த முறையே சரியில்லை என்று சொல்லுங்களேன் !

சந்தோஷத்தையும் செழுமையையுமே மையமாகக் கொண்டு பிரசங்கிக்கப்படும் நமது இன்றைய நாட்களின் மாயாஜால சுவிசேஷத்தைக் கேட்டு யோவான் ஸ்நானகனுக்கு மாரடைப்பு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாவ வியாதியால் சாவின் விளிம்பின் நின்று கொண்டிருக்கும் ஒருவனை " பயப்படாதே ! சந்தோஷமாயிரு! எல்லாம் சரியாகிவிடும் !" என்று நாம் மேல்பூச்சு பூசிக்கொண்டிருக்கிறோம்.

மாம்ச இச்சை ரோகங்கள் புற்றெடுத்து புற்று நோயாய்ப் பரவிக் கொண்டிருக்கும் கூட்டத்துக்கு ஆவிக்குரிய அவசரகதி ஆப்ரேஷன் செய்து பாவக்கட்டியை வெட்டி வீசுவதை விட்டு விட்டு அவர்களுக்கு Band-aid கொடுத்து " போட்டுக்கொள்" என்கிறோம்.

நமது பிரசங்கங்கள் இருதயத்துக்கு இதமான சமாதானங்கள்! யோவானோ கேட்டவர்களை குலைநடுங்கப் பண்ணினான் !

யோவானின் பிரசங்கத்தைக் கேட்ட புறஜாதி இராணுவ வீரர்களின் மார்க்கவசத்தையும் மீறி தேவனின் நியாயத்தீர்ப்பின் அம்புகள் அவர்கள் இருதயத்தைத் துளைத்தன.

பரிசுத்த ஆவியானவர் நாம் பிரசங்கிக்கும் சத்தியத்தில் பிரியமின்றி விலகிப் போய்விடும்போது, நாம் கொடுக்கும் ஆல்ட்டர்-கால் அழைப்புகள் எல்லாம் நமது ஊழியத்தின் மாயையான நிறைவை நாமே கண்டு உள்ளூர பெருமிதம் கொண்டு புளங்காகிதம் அடைந்து கொள்ள நமது வசதிக்காக நாமே கண்டுபிடித்துக் கொண்ட நவீன கண்டுபிடிப்புகள் !

தாயின் வயிற்றிலிருந்தே ஆவியினால் நிரப்பப்பட்டிருந்த ஸ்நானகனின் (இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும்) கருக்கான வார்த்தைகள், கேட்கும் இருதயங்களைக் கிழித்துக்கொண்டு கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்திச் சென்று கொண்டிருந்தது

அந்த வார்த்தைகளால் குத்தப்பட்ட போர்ச்சேவகர்கள்," நாங்கள் என்ன செய்ய வேண்டும் ?" என்று ஓடிவர, மனசாட்சியை மழுக்கிப் போட்டிருந்த பொதுஜனம், உள் மனசாட்சியில் குத்துண்டு, “அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் ? ” என்று கெஞ்சினர்..

இன்று 'எழுப்புதலைப்' பிரசங்கிப்பவர்கள் எழுப்புதல் வீரர்கள் அல்ல..வெறும் சுவிசேஷகர்களே !

எழுப்புதல் சுனாமி என்பது, தேசத்தின் வாழ்க்கை முறைகளைக் கீழதுமேலதாக்கி, தாறுமாறாய்ப் புரட்டிப் போட்டு அதின் தலைவிதியையே மாற்றிப்போடும் !

சர்வநாசம் செய்யாத பூகம்பம் உண்டோ ? ஆவியில் பிறந்து வெடித்துச் சிதறும் எந்த எழுப்புதலும், சபையையும் சமுதாயத்தையும் சுக்குநூறாக்கி, தேசத்திலும், தம் ஜனத்தின் மத்தியிலும் தேவன் செய்ய நினைத்ததை முழுவதும் செய்துவிட்டே போகும் என்பதில் என்ன சந்தேகம் உண்டு ?

மனிதனின் பசுமைப் புரட்சியிலும், விவசாய விஞ்ஞான முன்னேற்றத்திலும், இன்றளவும், முட்செடியிலிருந்து அத்திப்பழங்களையோ, நெருஞ்சிச் செடியிலிருந்து திராட்சப் பழங்களையோ பறிக்க முடிவதில்லை.அது போல நாம் எத்தனை பெரிய சுவிசேஷப் படைமுயற்சிக் கூட்டங்களைக் கூட்டினாலும், பரிசுத்த ஆவியின் எழுப்புதலை மட்டும் காணவே முடிவதில்லை.

பிரசவ வேதனையில் தான் பிள்ளைகள் பிறக்கின்றன. விளையாட்டுப் பிள்ளைகள் போன்ற சுவிசேஷகர்களாலோ, வானத்தை வில்லாய் வளைக்கும் வாய்ச் சாலகர்களாலோ வருவது அல்ல எழுப்புதல்!

ஆவிக்குரிய மாவீரர்களால் பிறப்பது அல்லவோ எழுப்புதல் ! யோவான் ஸ்நானகன் போன்ற தீர்க்கர்கள் மூலம் பிறப்பிக்கப்படுவதுவே எழுப்புதல் !

கடந்த 50 வருடங்களைப் போல சுவிசேஷம் அறிவிக்க கோடி கோடியாய் செலவழிக்கப்பட்டது வரலாற்றிலேயே இல்லை.(பெரிதும் வித்தியாசமும் விநோதமுமான சுவிசேஷ வழிமுறைகளைக் கையாளும் மெகா ஸ்டார் ஊழியர்களைக் கொண்டு கூட்டங்கள் நடத்தப்படுவதால், அவர்கள் காணிக்கையாகக் கேட்கும் தொகையும் மகா பெரியதே !)

உண்மையான ஆவிக்குரிய எழுப்புதலுக்கு ஒரு பைசா கூட செலவிட வேண்டியதில்லை.

"அது கர்த்தரால் ஆகும்..அது நமது கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்" - ஆம் ! அது தான் எழுப்புதல் !

தலை தண்ணீரும் கண்கள் கண்ணீர் ஊற்றுமான நொறுங்கிய இருதயமுள்ள எழுப்புதல் வீரர்களே, உடைந்த இருதயத்தோடும் கதறிய கண்களோடும் தங்களை ஒப்புக்கொடுக்கும் பாவிகளை பரிசுத்த தேவனின் பாதத்தில் கொண்டு சேர்க்க முடியும்.

பிரியமான Dr.டோஸர் சொல்வது போல, " உண்மையான எழுப்புதல் " என்பது சமுதாயத்தின் ஒழுக்க நிலைகளின் தட்பவெப்ப நிலையையே மாற்றி, மனிதர்களின் வாழ்க்கை சீர்கேடுகளை ஒன்றுமில்லாமல் புரட்டிப்போட்டுவிடும்.

இப்படிப்பட்ட எழுப்புதல் புரட்சியாளர்களான யோவான் ஸ்நானகனைப் போன்றவர்கள் உலக வரலாற்றின் பக்க ஏடுகளில் தங்கள் பெயர்களை எரியவைத்துப் பொறித்துக் கொண்டவர்கள் !

தேவனுடைய தெளிவான சத்தம் கேட்டு, அவரது சித்தம் மாத்திரமே செய்து, அவரது இருதயத்தோடு முத்திரையாய்ப் பதிந்து போவது என்பது ஒரு மிக ஆழமான ஒன்று மட்டுமல்ல, அதற்கென்று ஒரு மிகப்பெரிய விலைக்கிரயமும் உண்டு.

நம்முடைய இஷ்டத்துக்கும் நேரத்துக்கும் ஏற்ப தேவன் வளைபவரும் அல்ல..
நமது அவசரத்துக்கெல்லாம் அவர் படபடப்பவரும் அல்ல..
நமக்கு வேண்டியபடியெல்லாம் நாம் அவரை ஓட்ட நாம் ஒன்றும் அவரது ஏவல் ஆளும் அல்ல.

வனாந்தரத்தின் பின்புறம் எப்போதுமே ஆள் அரவமற்றதும், கைவிடப்பட்டதும், யாரும் செல்ல விரும்பாததும், நிசப்தமுமாகவே இருக்கும்.ஆனால் அது தான் முட்செடி பற்றி எரிகிற, தேவனது சத்தம் கேட்கப்படுகிற, தேவ தரிசனம் கிடைக்கப் பெறுகிற, தேவனுடைய சித்தத்தோடு இசைந்து இணைகிற இடம்.

சுவிசேகர்கள் குழுவாய் வந்து இறங்குவார்கள். எழுப்புதல் வீரர்களோ எப்போதுமே தனிமை விரும்பிகள் தான். வனாந்திரத்தின் இந்த ஜெபக்கூடங்களிலிருந்து வெளிவரும் இவர்கள், வெளிப்பாடுகளின் உலையிலிருந்து வெளிவருபவர்கள்..

தேவசித்தம் செய்ய வேண்டிய பெலனைத்தவிர வேறு எதையும் நாடாதவர்கள்.தேசங்களை எரிச்சலூட்டி மக்களை விடுதலையாக்கப் புறப்படுபவர்கள் இவர்கள் !

இன்றைய தீர்க்கதரிசன முகாம்களைப் போல அன்றைய தீர்க்கதரிசன வகுப்புகளில் கூட்டம்அலைமோதியதில்லை. அந்த நாட்களின் தீர்க்கதரிசனப் பள்ளிகளுக்கென்று குறிப்பிட்ட பாடத்திட்டங்களும் இருந்ததில்லை. அந்தந்த காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ப தேவனே தீர்க்கனை உருவாக்கி வனைகிறார்.

ஆனால் அவர்கள் எல்லாருக்குள்ளும் ஒரே ஒரு காரியம் பொதுவாயிருந்தது..

அவர்கள்..
தனித்தே திரிபவர்கள் ! தனிமையாக்கப்பட்டவர்கள் !
தாகமுள்ளவர்கள் !
தாக்கம் நிறைந்தவர்கள் !
தாக்கப்பட்டவர்கள் !

இந்த நாள் நெருக்கமும் இடுக்கமும் அனுபவிக்கும் நாள் !
தேசமெங்கும் எதிலும் சீர்குலைவு !
பொருளாதார சீர்குலைவு !
ஒழுக்க சீர்கேடு !
ஆவிக்குரிய சீர்குலைச்சல் !

நாம் எவ்வளவு ஆவிக்குரியவர்கள் என்று நம்மை நாமே பெருமையாய் எண்ணிக் கொண்டிருக்கிறோமோ, அதில் பாதியாவது இருந்தோமானால், இந்நேரம் இரட்டு உடுத்திக் கொண்டு, தகாத நம் தலைகள் மேலே உலையின் சாம்பலை அள்ளிப்போட்டுக் கொண்டு, பரிசுத்த ஸ்தலத்தில் முகங்குப்புற விழுந்து கிடப்போம் !

ஓ ! தேவ சமூகத்தில் தரித்திருந்து, அவரது சத்தம் கேட்டு அவரது வல்லமையில் மூழ்கி எழுந்து, அவரது செய்தியை, நொந்து நோய்பட்டு நசல்கொண்ட சபைக்கும், செத்துக் கொண்டிருக்கும் தேசத்துக்கும் ஆவியின் அதிகாரத்தோடு பறைசாற்ற மனிதர் எவரும் இங்கில்லையோ ?

நமது சுயபெலத்திலேயே எவ்வளவோ காலம் ஊழியம் செய்து விட்டோம் !

உலக ஐசுவரியங்களையே வெற்றியின் அடையாளங்கள் என்றும், பெரிய பெரிய சபைக் கட்டிடங்களையும், ஜெப கோபுரங்களையும், தரிசனத் தோட்டங்களையும், கூட்டமான கூட்டங்களையும் காணிக்கைகளையுமே தேவனின் மனம் கவர் ஊழியங்களின் அடையாளம் என்று சொல்லிச் சொல்லி ஏமாந்து போனோம் ! ஏமாற்றி விட்டோம் !

நாடகக் கூத்தாடிகளோடு நீண்டகாலம் நாட்களைக் கடத்தியது போதும் !ஊழிய வியாபாரிகள் போகட்டும் ! சுவிசேஷம் அறிவிக்கிறோம் என்று சொல்லி நமக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் கையாண்டு பார்த்து விட்டோம். வரவேண்டிய எழுப்புதல் மட்டும் வரக்காணோம் !

இப்போது நமக்குத் தேவை ஆவிக்குரிய மாவீரர்கள் ! இன்றைய நமது அவசரத் தேவை பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகள் !

தேவனே ! மனித வரலாற்றின் இந்த ஆவிக்குரிய இருண்ட காலத்தில், எரிந்து பிரகாசிக்கும் யோவான் ஸ்நானகன்களையும், தன் ஸ்காட்லாந்துக்காக கதறிய ஜாண் நாக்ஸைப் போல " இந்தியாவைத் தாரும், இல்லாவிட்டால் சாகிறேன் "என்று கதறும் ஜெப வீரர்களையும் தருவீராக !

சபைக்கும் உலகத்துக்கும் உண்டாயிருக்கும் இக்கட்டும் இடுக்கமுமான காலமிது !

இப்படிப்பட்ட காலத்தில் இரட்டுடுத்தி,சாம்பலைப் பூசிக்கொண்டு,உபவாசித்துக் கதறாமல் போனால், வரப்போகும் நியாயத்தீர்ப்பின் நாளிலே..

"மேரோசைச் சபியுங்கள்..அதின் குடிகளை சபிக்கவே சபியுங்கள் என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார்..

அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க
வரவில்லை..பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாய் அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லையே..
(நியா 5:23)" என்று மேரோசைப் பார்த்து சொன்னவர்..நம்மையும் பார்த்து அப்படியே சொல்லுவார்..

இப்படிப்பட்ட உபத்திரவ காலத்தை நேருக்கு நேர் எதிர் கொண்டு, முகங்குப்புற விழுந்து, முகத்தைப் புழுதியோடு புழுதியாக்கி..

"கர்த்தருடைய புயமே!
எழும்பு ! எழும்பு ! பெலன் கொள்ள மாட்டாயோ ?"
என்று புலம்பிட மாட்டோமோ ?

இப்படி ஒப்பாரி வைத்துப் புலம்பும் அற்ப சொற்பங்களிலிருந்து, கொழுந்து விட்டு எரியும் ஒரு புது வகைக் கடைசி காலத் தீர்க்கதரிசிகளின் கூட்டம் ஒன்றை தேவன் எழுப்பத்தான் போகிறார்..

அது எழும்பியே தீரும் !
அதில் சந்தேகமேயில்லை!

CHAPTER 4

ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது

ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது

"தேவனுக்கு ஒரு மனிதன் தேவைப்படுகிறான் என்றால், அதற்கு முன்பாக அவர், ஒரு பெண்ணைத் தான் பிடிக்க வேண்டியுள்ளது.." என்றார் ஒருவர்.

"இஸ்ரவேலில் தாயாக எழும்பிய" அன்னாளுக்கு இது அப்படியே பொருந்துகிறது..

"ஒன்றை நான் கேட்டேன்..அதையே நாடுவேன்.."
"ஒன்று நான் செய்கிறேன்.."
"தேவையானது ஒன்றே.." என்ற அந்த ஒன்றே ஒன்றுக்காக தன்னையே ஊற்றிப்போட்ட, விற்றுப் போட்ட ஒரு பெண் அவள் !

தன் சக்களத்தியின் சக்கந்தங்களால் துரத்தப்பட்டு, இயலாமை என்னும் அவமானத்தின் மிலாறுகளால் அடிபட்டு, அறுபட்ட மனக்கிலேசமான ஒரு ஆத்துமா அது !

பெனின்னாளின் பிள்ளைகளின் அழுகுரலோ ஆனந்த சத்தங்களோ அன்னாளின் இருதயத்தில் பட்டயக்குத்துக்கள் போல இறங்கியிருக்க வேண்டும் !

தேவனுடைய வார்த்தை சொல்வது போல, ஒவ்வொரு வருஷமும் தேவனுடைய ஆலயத்துக்குப் போகும்போதெல்லாம் அவளை மனமடிவாக்கிக் கொண்டிருந்த அந்தப் பெனின்னாள் என்ற உடனிருந்த சத்துருவின் ஏளனங்கள் அவளை இன்னும் கூனிக்குறுகிப் போகப் பண்ணிக் கொண்டிருந்தன..

காத்திருந்து காத்திருந்து காலங்கள் போயின அன்னாளுக்கு !
அழுது அழுது ஆண்டுகள் நகர்ந்தன அவளுக்கு !

நிந்தையும் அவமானமுமாய் நீண்டு கொண்டே போயின அவளது வருடங்கள் !

கண்ணீரையே தண்ணீராய்க் குடித்துக் கொண்டே இருந்தாள் - "எது வரைக்கும் கர்த்தாவே ?" என்ற ஏக்கத்தோடு !

ஜெபம் என்ற வார்த்தைக்கு விளக்கங்கள் தான் எத்தனை எத்தனை நம் நாட்களில் !

நம்மில் பலருக்கு ஜெபம் என்பது நமது மனவிருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு குறுக்கு வழி..

ஆனாலும் கர்த்தர் ஒரு காரியத்தைத் தாமதிப்பாரானால், ஜெபத்தின் பதிலுக்கும் நாம் காத்திருந்து தான் ஆக வேண்டும்.

"தனக்குப் பிள்ளை வேண்டும் என்ற தனது ஜெபத்துக்கு, தானே ஒரு குறிப்பிட்ட காலத்தையும் வரைமுறையையும் வைத்துக் கொண்டு, தன் ஜெபத்துக்கு, தான் எதிர்பார்த்தபடியே எதிர்பார்த்த காலவரைக்குள் அவள் நினைத்தபடியே அவளுக்குப் பதில் கொடுக்கப்பட்டிருக்குமானால், சாமுவேல் என்ற மனிதனில் ஒரு மாபெரும் தீர்க்கதரிசியை தேசம் பெற்றிருக்காது.." என்றார் W.F.Widerwolf.

அன்னாளின் ஜெபம் அற்புதமானது. ஏனென்றால் ஒரு மன்றாட்டு ஜெபத்தில் இருக்க வேண்டிய அத்தனை உட்கூறுகளும் அதில் அதிகமாகவே இருந்தன.

பல சபைகளில் ஜெப வீரர்கள் கூடுகின்றனர் - கூடி விசுவாசத்துக்காக நல்ல போராட்டம் போராடுகின்றனர் - சிலரோ வழக்கமாக ஜெபித்துவிட்டுப் போகின்றனர்..

ஆனால் உண்மையான ஆவிக்குரிய மன்றாட்டு ஜெப வீரர்கள் தங்கள் ஜெபத்துக்கு பதில் கிடைக்கும் வரை "உம்மை விடுவதில்லை என்று உம்முயை ஜீவனைக் கொண்டு சொல்லுகிறோம் " என்று திறப்பிலே தங்கள் நிலையிலே நிற்கின்றனர்..

அன்னாள் தன் குடும்பத்தில் பங்கு கொடுத்தாள் - தன் புருஷனைக்கூட பங்கிட்டுக் கொள்ளக் கொடுத்தாள் - ஆனால் அவளால் பிள்ளைகளில் பங்கு கொள்ள முடியவில்லை - காரணம் அவளோ பிள்ளை இல்லாதிருந்தாள் !

அங்கே தான் அவளது வெட்கம் அவமானமாய்த் தொங்கிக் கொண்டிருந்தது !

அன்னாளின் அழுகையின் ஜெபத்தை சற்று அடுக்கடுக்காய்ப் பாருங்கள் !

"அவள் விண்ணப்பம் பண்ணி..(1 சாமு 1:10), "வெகு நேரம் விண்ணப்பம் பண்ணி.."(1:12),
"தன் இருதயத்தை ஊற்றி விட்டாள்.."(1:15)

“அவள் அழுதாள்..(1:8)" "மிகவும் அழுதாள்..(1:10)

பிள்ளையற்ற "மலடி" என்ற அவப்பெயர் மட்டுமல்ல,பிள்ளை கொடுக்க இயலாத தனது இயலாமை அவளை சஞ்சலப்படுத்தி (1:8), மனக்கிலேசமடையச் செய்து (1:15), மனதைக் கசந்து போக வைத்து (1:10), மிகுதியான விசாரத்தினால் மனதைக் கசப்பாக்கி (1:10), அவளது மனதை மடிந்து போகப்பண்ணிற்று (1:7)..

கடைசியாக புசிப்பையும் குடிப்பையும் மறந்த அவள் ஒரு பொருத்தனை பண்ணினாள்..

"சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்...அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை.. என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்.." (1 சாமு 1:11)

தன் நிந்தையின் நிர்ப்பந்தத்திலிருந்து மீண்டு எழப் போராடித் துடிக்கும் ஒரு பெண் மாத்திரமே அறிந்து உணரக்கூடிய ஒரு பெண்ணின் கதறுதல் இது !

" ஏதாவது ஒரு குழந்தை கொடும்" என்று அன்னாள் ஜெபித்திருக்கலாம். பிள்ளை இல்லாதவளுக்கு ஏதோ ஒரு பிள்ளை கிடைத்ததே என்ற பிள்ளை இல்லா குறை நீங்கியிருந்திருக்கும்.

ஆனால் அவளோ விடுவதாயில்லை.விடாப்பிடியாய் விடாத அவளோ கேட்டது.."சமூகத்தில் மேலாக எண்ணப்பட்ட ஒன்றை..அரிதான ஒன்றை..குறிப்பான ஒன்றை.."

"உம்முடைய அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைத் தந்தருளி.." - அவள் கேட்ட ஆண்பிள்ளை கர்த்தருக்குள் "அவளது கொம்பை உயர்த்தும் " கனத்தின் மேன்மையாய் அவளுக்கு இருந்தது..

குழந்தை பாக்கியம் அவளது வெட்கத்தைக் களைந்திருக்கும். ஆனால் ஆண் பிள்ளையோ அவளுக்கு கனத்தையும் மகிமையையும் கொடுத்தது.

ஆனால் இவை இரண்டிற்கும் மேலே ஆண்டவருக்கோ, ஒரு ஆண் மகவையும் தாண்டி, தன் ஜனத்தின் மேல் ஆளுகை செய்யும் ஒரு தீர்க்கதரிசி, ஒரு இரட்சகன் அவருக்கு வேண்டியிருந்தது..

அவள் நினைத்ததற்கும் வேண்டிக்கொண்டதற்கும் மேலாகவே ஆண்டவர் அன்னாளுக்குச் செய்தருளினார். அவளது பிரச்சனையைத் தீர்த்து வைத்ததின் மூலம் தமது நீண்டகால பிரச்சனைக்கும் அதின் மூலம் தீர்வு செய்து கொண்டார் அவர்..

அவள் கேட்ட ஆண்பிள்ளையை சாமுவேலில் அவர் கொடுக்க..அவளோ அவனைத் தன் பொருத்தனையின் புத்திரனாக அவருக்கே திருப்பிக் கொடுத்தாள்..

இப்படி, இஸ்ரவேலிலே "திறப்பிலே நிற்கும் ஒருவனை" அவர் பிற்காலத்தில் தேடி அலைந்த போது, இந்த சாமுவேலிலே அவர் தேடிய ஒரு தீர்க்கதரிசி அவருக்கு அகப்பட்டான்..

இந்தப் பழைய ஏற்பாட்டுக் கதையிலே இன்னும் பல ஆழங்கள் பொதிந்து கிடக்கவே செய்கின்றன !

தேவனின் விடுதலைக்கு தன்னையே ஒரு வாய்க்காலாக அர்ப்பணித்தாள் அன்னாள்..அவள் கேட்டது ஒரு ஆண்பிள்ளை மட்டுமல்ல.. அதற்கும் மேலாக அவளுக்குள் ஓடிக்கொண்டிருந்தது இஸ்ரவேலின் இரட்சிப்பு..

அவளது ஜெபத்தின் மூலமாக அவளுக்குக் கிடைத்த ஆண்பிள்ளையோடு கூட ..கிடைத்தது அவளது ஆழ்மனதின் அங்கலாய்ப்புக்கு பதில் !

அவளது சொந்த சரீரத்தையும் இரத்தத்தையுமே எடுத்து, அதின் மூலமாகவே, அவள் அவருக்காகக் கேட்டதை அவளுக்கு அருளிச் செய்தார் அவர்..

கர்த்தருக்காகக் கேட்கப்பட்ட பிள்ளை அவளுக்குக் கொடுக்கப்படும்படி, அவளுக்குள்ளிருந்த அனைத்தும் உயிர்பெற்று சிலிர்த்தெழுந்தன !

தான் கர்ப்பமான ஆரம்ப நாட்களில் கர்ப்பம் உண்டானதற்கான அறிகுறிகளை அவளது உடலின் சில பகுதிகளே அறிந்தன..ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, இயற்கையின் பாதையானாலும், அவளது முழு சரீரமும் அதின் பளுவை மட்டுமல்ல, உள் மாற்றத்தோடு உருமாற்றத்தையும் (வெளி சரீர மாற்றம்) காண ஆரம்பித்தது..

குழந்தை பிறப்பின் கடைசி மாதங்கள் அவளது வழக்கமான அன்றாட வாழ்க்கையை மாற்றிவிட்டது. தூக்கம் தூரம் போய் புரண்டு புரள ஆரம்பித்தாள். வெளியே தலைகாட்டாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கினாள்..ஆகார ஆசை அற்றுப்போனது..

அருகிலிருந்த அனைவரும் தூங்கினாலும் அவளோ நெடுங்காலமாய்க் காத்திருந்த பிள்ளைக்காய், இப்போதோ அப்போதோ என்று தூக்கமின்றி விழித்தே கிடந்தாள்.. வயிற்றில் பிள்ளை இல்லாதிருந்தால் இப்படித் தவிப்பாளோ ?

இந்த எல்லா அனுபவங்களையும் எழுப்புதலுக்கான ஜெபத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள் !

நமது ஆவிக்குரிய மலட்டுத்தன்மையின் நிந்தையை எழுப்புதல் என்ற அற்புதம் என்றென்றைக்குமாய் நீக்கிப்போடும் அளவுக்கு நம் நாட்களில் நாம் ஜெபத்தில் கதற வேண்டிய அளவு கதறவில்லை என்றே நான் சொல்லுவேன்..

ஏற்கனவே நான் சொன்னதைத் திரும்பச் சொல்கிறேன்..
"ஜெபம் சகல காரியங்களையும் மாற்ற வல்லது மாத்திரமல்ல..அது எப்படிப்பட்ட மனிதரையுமே மாற்ற வல்லமையுள்ளது !

ஜெபம் அன்னாளை மாற்றியது !

மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள் ! (1 சாமு 2:5)
கர்ப்பமற்ற அவள் கனி நிறைந்தவளானாள் !
உபயோகமற்ற அவள் உபயோகிக்கப்பட்டாள் !
மனக்கிலேசமுற்ற அவள் மனமகிழ்ந்து ஆர்ப்பரித்தாள் !

எழுப்புதலின் நாளிலும் நம் அனைவருக்கும் நடக்கப்போவது இது தான் !

" ஓ ! எழுப்புதல் வந்து விட்டால் நம்ம சபையெல்லாம் நிரம்பி வழியப்போகுது.." என்ற நினைப்பையெல்லாம் மறந்து விடுங்கள் !

எழுப்புதல் என்பது நமது இந்தக் கணக்குகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது!

இந்த இடத்தில் நமக்கு வேண்டியதெல்லாம் அவசியத்திலும் அத்தியாவசியமான, அவசரத்திலும் அதி அவசரமான தேவ வைராக்கியமான ஒரு வைராக்கியமே !

அவளுக்கு சத்துருவாய் நின்ற அவளது புருஷனின் மறுமனையாட்டி அவளை வருஷா வருஷம் படுத்திய பாடு, அவளை விசனப்படுத்தி, துக்கப்படுத்தி, கிலேசப்படுத்தி, கசப்பாக்கி, கடைசியாக விரக்தியின் விளிம்புக்கே கொண்டு வந்து நிறுத்தியிருந்தது !

ஆனால் " அன்னாளோ எழுந்திருந்தாள் " (1 சாமு 1:9) - ஒரு முடிவோடு !

"அன்னாள் எழுந்திருந்தாள் "
(1 சாமு 1:9) - ஒரு முடிவோடு !

இதே போன்ற காட்சியை ஆதியாகமம் 30ம் அதிகாரம் நமக்குத் தருகிறது..

" ராகேல், தான் யாக்கோபுக்குப் பிள்ளை பெறாததைக் கண்டு, தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி : எனக்குப் பிள்ளை கொடும்..இல்லாவிட்டால் நான் சாகிறேன்.." என்றாள்.

இது தான் வேதனை.. ரண வேதனை..

14 வருஷம் ஒரு பெண்ணுக்காக ஆடு மேய்த்து, ஒரு பெண்ணுக்காக ஊழியஞ்செய்து, பகலிலே வெயிலும், இரவிலே பனியும் பட்சிக்க, நித்திரை தூரம் போய், ராகேலை மனைவியாக்க அவன் பட்ட பாடு எதுவுமே அவளை திருப்திப்படுத்தி ஆறுதல்படுத்துவதாக இல்லை..

சொந்த சகோதரியே ஆனாலும், இப்போது தனக்கு சத்துருவாகிவிட்ட லேயாளை விட யாக்கோபு தன்னையே அதிகமாய் நேசிப்பது கூட அவளைத் தேற்றி ஆற்ற முடியவில்லை..

ராகேல் பிள்ளையற்ற மலடியாயிருந்தாள் - அது ஒரு நிர்த்தாட்சண்யமான நிஜம் என்பது அவளுக்கும் தெரியும் - மற்றவர்களைப் போல அவள் இல்லை என்பது மற்றவர்களுக்கும் தெரியும்..

பிள்ளையற்ற தன்மை என்ற சகிக்க முடியாத வெட்கம், நிமிர முடியாத பாரமாய், தாங்கவே முடியாத அவமானமாய் அவளைத் தரையோடு தரையாய் நசுக்க, தன் புருஷனின் கால்களைப் பிடித்துக் கதறினாள்..

" எனக்குப் பிள்ளை கொடும்..இல்லாவிட்டால் நான் சாகிறேன்.."

நமது ஆவிக்குரிய வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, நமது ஜெபவாழ்வு என்ற கடுவெளி களித்து புஷ்பத்தைப் போல பூத்து லெபனோனைப் போல செழிக்க வேண்டுமென்றால், இப்படி ஒரு வெட்கமும் அவமானமும் நம் மேல் வந்து விழுந்து நம்மை மூட வேண்டும் !

கர்த்தர் தமது வல்லமையோடு நம் மேல் இறங்குமுன், நம்முடைய பாரம்பரியங்கள் வெட்டுண்டு, பழமைவாதங்கள் கட்டோடு ஒழிந்து, நம்முடைய கல்மனங்கள் கரைந்து காணாமல் போக வேண்டும் !

முதலாவது சபையின் ஒரு சிறு கூட்டத்தின் மேல் மட்டுமே பரிசுத்த ஆவி வரும் ! உன்னதமானவரின் பலம் அதின் மேல் மட்டுமே நிழலிட்டு, அது எழுப்புதல் என்ற பரிசுத்தத்தை கர்ப்பம் தரிக்கும்..அதின் பின்னரே சரீரமாகிய முழு சபையும் எழுப்புதலின் பிறப்பைக் காணும் !

அதற்கு முன் அங்கலாய்ப்பின் ஜெபத்தில் தூக்கமில்லா இரவுகள்..புசிப்பும் குடிப்புமில்லா உபவாசங்கள்..

காரிருளும், மரண அந்தகாரமுமான இருண்ட தேசமும், இருள் சூழ்ந்த ஒழுங்கில்லாத மரண அந்தகாரமுமுள்ள தேசமும், ஒளியும் இருளாகும் தேசமுமாகிய போனால் திரும்பி வராத தேசத்தில், அந்த அடியே இல்லாத அதல பாதாளத்தில் கொத்துக் கொத்தாய் கூட்டம் கூட்டமாய் விழுந்து நித்திய நித்தியமாய் அழியும் கோடி கோடியான ஆத்துமாக்களுக்காக நொறுங்கி அழும் இரவு பகல்கள் ! [யோபு 10:21]

இது மட்டும் உண்மை : தான் கர்ப்பம் தரித்த நாள் முதல் பிரசவிக்கும் நேரம் மட்டும் அன்னாள், தான் ஏங்கித் தவித்த பாரத்தைத் தன்னோடு சுமந்தே திரிந்தாள் !

ஆனால் ஐயோ ! இதுவோ ஒரு அவசரகதி யுகம் ! விட்டால் ஆண்டவரைக் கூட வேகமாய் ஓட்டினாலும் ஓட்டுவோம் ! நமக்கு சுலப தவணையில் பெருத்த ஆசீர்வாதம் வேண்டும் ! எழுப்புதல் பிறக்க வேண்டும்..
ஆனால் பிரசவ வேதனையெல்லாம் வேண்டாம் !

இது போன்ற காரியங்களையும் சபைகளையும் பார்த்துப் பார்த்து சலித்துப் போய், நமது ஆவிக்குரிய மலட்டுத் தரித்திரத்தையும் பிள்ளை கொடுக்க முடியாத கையாலாகாத வறட்சியையும் கண்டு ஆவியில் கோபமும் வைராக்கியமும் கொண்டு சொல்கிறேன்..

ஏன் எக்காளம் ஊதி, சபையைக் கூட்டி பரிசுத்தப்படுத்தி, உபவாசத்தை நியமித்து, சிறியோரையும் பெரியோரையும் கூட்டி, மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது, ஆண்டவரது முகத்தைத் தேடிப் புலம்பக்கூடாது ?

திரும்பவும் அன்னாள் செய்ததைப் படித்துப் பாருங்கள் !

அழுது சஞ்சலித்து மனம் கசந்து போன அவள் ஆகாரத்தையும் மறந்தாள்..

அவளது புருஷன் எல்க்கானா கேட்டான்..
"அன்னாளே, ஏன் அழுகிறாய் ? ஏன் சாப்பிடாதிருக்கிறாய் ?”

மோசே, மலையில் ஒரு 40 நாள் சாப்பிடாமலிருந்து, மறுபடியும் இஸ்ரவேலரின் அக்கிரமத்தைக் கண்டு மலை மேல் ஏறி இன்னொரு 40 நாட்கள் சாப்பிடாமல் கிடக்க அவனுக்கு என்ன வந்தது ? நாம் என்ன அந்த மோசேயை விட உசத்தியோ ?

தேவ குமாரனுக்கு வனாந்திரத்தில் 40 நாட்கள் உபவாசிக்க வேண்டிய கட்டாயம் என்ன ? நாம் என்ன அவரை விட மேலோ ?

"அநேக முறை பாடுகளிலும் கட்டுகளிலும் உபவாசங்களிலும்" - என்றானே பவுல் ? அதற்கு அவனுக்கு அவசியம் என்ன ? நாம் என்ன பவுலை விட இன்னும் பத்தாம் வானம் வரை எடுக்கப்பட்டு பரதீசின் பாஷைகளைக் கேட்டு விட்டோமோ ?

பவுல் இன்று நம்மைக் கண்டால் - "பெருவயிற்றுச் சோம்பேறிகள் ! இவர்கள் தேவன் வயிறு !" - என்று நம்மைக் கொஞ்சம் அருவருப்போடு தான் பார்ப்பான் !

தன் மனபாரத்துக்கும் சஞ்சலத்துக்கும் மத்தியில் அன்னாள் ஜீரணிக்க வேண்டிய இன்னொரு கடினமான காரியம், தேவனது ஆசாரியனான ஏலி அவளை முழுவதும் தவறாகவே புரிந்து கொண்டிருந்தது..

அதைக் கேளுங்கள்..
"அவளுடைய உதடுகள் மட்டும் அசைந்தது. அவளுடைய சத்தமோ கேட்கப்படவில்லை.."
(ஜெபத்தின் உச்ச நிலையில் வார்த்தைகள் வெளிவருவதில்லை)

அன்னாளின் உச்சநிலை சத்தமில்லா ஜெபம் ஏலியை, "அவள் வெறித்திருக்கிறாள் " என்று நினைக்கச் செய்தது.

எழுப்புதலைப் பற்றியே நீங்கள் நினைத்து நினைத்து அன்ன ஆகாரமின்றி ஒரு வகையில் ஆவியில் ஆழ்ந்து போயிருந்தால், உங்களை ஏளனம் செய்ய எப்போதும் ஒரு கூட்டம் காத்திருக்கவே செய்யும் !

அன்னாள் ஒரு குமாரனைப் பெற்று அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள் - பிள்ளை பால் மறந்த போது, அவள் அவனைக் கர்த்தருடைய சமூகத்தில் கொண்டு போய் விட்டு விட்டாள்.

கர்த்தருக்கென்று கேட்கப்பட்ட அவனை, கர்த்தருக்கே சொந்தமாகும்படி கொடுத்துவிட்ட அவள், வருஷாவருஷம் ஆலயத்துக்கு வரும் போதெல்லாம் அவனைக் காணும் அந்த இனிய எபிரேய ஸ்திரீயின் முகம் எப்படி இருக்கும் என்று என்னால் காண முடிகிறது..

அவனைக் காணும்போதெல்லாம் " என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.." என்றே அவள் சொல்லியிருப்பாள்..

இதற்குப்பின் பல ஆண்டுகள் கடந்து, இஸ்ரவேல் மற்ற தேசங்களைப் போலவே தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டபோது, இந்த அன்னாளின் குமாரனின் சத்தத்தைக் கேளுங்கள் - தேசத்தின் தேவைக்காகவே பிறந்தவன் - தேசத்தின் பாரத்தை சுமந்து திரிந்தவன் - இப்போது அநேக ஆண்டுகள் ஆண்டவரின் சேவைக்குப் பிறகு இந்த வார்த்தைகளோடு தன் பொறுப்புகளை இறக்கி வைக்கிறான்...பாரத்தை அல்ல..

"நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவனாயிருப்பேன்.."

சாமுவேல் ஒரு ஜெபிக்கும் தாய்க்குப் பிறந்தவன் - உண்மையிலே ஜெபத்தில் மேன்மையான ஒரு பெண் !

ஒரு சகோதரர் சொன்னார்.." பிரதர் லென், புதிய ஏற்பாட்டு முறையைப் பின்பற்றினால் புதிய ஏற்பாட்டு எழுப்புதலை நாம் பெற முடியுமா ?" என்று. அவர் நினைப்பது உண்மை..

மேலும் நான் சொல்வேன்..எங்கேயும் ஒருக்காலும் ஒரு சபையும், வெறும் வாரம் ஒரு நாள் நடத்தப்படும் ஜெபத்தினால், வானம் திறந்து பிறக்கும் ஆவியின் எழுப்புதலை ஒருபோதும் அடையப் போவதே இல்லை..

"பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்த போது.." என்ற அந்த நாள் வருமுன்னிருந்தே சீஷர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தனர்.அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்த போதே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வந்து இறங்கினார்..

பெந்தெகொஸ்தேக்கு முன்னும் பின்னும் வரும் 28 அதிகாரங்கள் முழுவதிலும் அவர்கள் ஜெபித்த ஜெபங்கள் குறிப்பிடப்பட்டு, "அவர்கள் ஜெபத்தில் தரித்திருந்தார்கள்" என்றே அப்போஸ்தல நடபடி பதிவுகள் முழுவதும் சொல்கின்றன.

ஜெயம் கொள்ள மாத்திரமே அல்ல ஜெபம்.. அந்த ஜெயத்தை நீடித்துத் தக்க வைத்துக் கொள்ளவும் நமக்கு ஜெபம் அத்தியாவசியம்..

நமது ஜெபத்துக்காகவே நாம் ஜெபித்தாக வேண்டும்..மட்டுமல்ல மற்றவர்கள் ஜெபிக்கும் போது அவர்கள் மேல் அபிஷேகம் ஊற்றப்படுவதற்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும்.

நாம் தனிமையிலும் ஜெபிக்க வேண்டும் -
சேர்ந்தும் ஜெபிக்க வேண்டும் !
நாம் இரவிலும் ஜெபிக்க வேண்டும் -
பகலிலும் ஜெபித்தாக வேண்டும் !
"ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத் தாரும் !"

THE WORD AND SPIRIT IN ACTION



MARY GARNETT

CHAPTER 5

வில்லியம் டூமாஸ்

வில்லியம் டுமாஸ்
(தேவனது கைகளால் பொன்னாடை போர்த்தப்பட்ட கறுப்பு வைரம்)

இது Rev.லியோனார்ட் ரேவன்ஹில்லின் ஆன்மீக வழிகாட்டி Dr.A.W.Tozer, அவருக்குச் சொன்ன ஒரு சம்பவம்..

லியோனார்ட் சொல்கிறார்..

ஒரு நாள் நான் Dr.Tozerன் ஜெப அறைக்குச் சென்றிருந்தேன்..அதுவே அவரது நூலகமும் வாசிப்பு அறையும் கூட..

அவர் தன் கையில் ஒரு துண்டு பேப்பரை (கடிதத்தை) வைத்துக் கொண்டு அதில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்..

என்னைப் பார்த்ததும் சொன்னார்.."லென்..
அமெரிக்க ஜனாதிபதியின் கடிதத்தை விட இந்தச் சின்னத் துண்டுப் பேப்பரை நான் அதிகமாய் மதிக்கிறேன்.."

"ஏன் " என்று கேட்டேன்..

அவர் சொன்னார்..
" ஆப்பிரிக்காவிலிருந்து
'டுமாஸ்' என்ற ஒரு எளிமையான மனிதன் எனக்கு எழுதிய கடிதம் இது..."

டு-மா-ஸ்..
இந்த ஆளைப்பற்றி சொல்கிறேன்..
"இவன் ஒரு நாள் ஒரு Baptist சர்ச்சுக்குப் போயிருந்தான்..

அன்று தேவ ஆவியானவர் அவனுக்குள் வல்லமையாய்க் கிரியை செய்ய..அவன் அன்று ஒரு புது மனிதனானான்..

மீட்டிங் முடிந்ததும் சபையின் பாஸ்டர் சொன்னார்..
"உன்னை சந்தித்ததில் சந்தோஷம்..மீண்டும் வா"என்றார்..

டுமாஸ் சொன்னான்..
"ஐயா,இந்த மனந்திரும்புதலுக்காகவும் மாற்றத்துக்காகவும் தான் நான் காத்திருந்தேன்...
என் பாரமெல்லாம் நீங்கி தேவன் என்னைப் பரிசுத்தமாக்கி விட்டார்...

கர்த்தருக்காக ஏதாவது செய்யாமல் என்னால் இருக்கவே முடியாது..கர்த்தர் என்னைத் தமது ஊழியத்துக்கு அழைப்பதை என்னால் நிச்சயமாய் உணரமுடிகிறது..
என் அனுபவத்தைச் சொல்லவும் ஊழியம் செய்யவும் எனக்கு ஒரு சபை தருவீர்களா? "
என்று கேட்டான்..

பாஸ்டர் கேட்டார்..
"நீ படித்திருக்கிறாயா?"
“இல்லை.."
"பைபிள் காலேஜ் போனதுண்டா?"
“இல்லை.."
“ஐயோ..நீ படித்திருந்தால் நன்றாயிருக்குமே?"

பாஸ்டர் சொன்னார்..
“சரி..நீ ஒழுங்காக சபைக்கு வந்து கொண்டே இரு.."

அவன் சொன்னான்..
"ஐயா எனக்கு வேறு எந்த ஆசையும் இல்ல..
எனக்கு கர்த்தர் வேணும்..
கர்த்தர் வேணும்..அவர் ஒருத்தர் தான் எனக்கு வேணும்..
நான் எப்படியாவது நாலு பேருக்கு அவரப்பத்தி சொல்லணும்.."

Baptist பாஸ்டர் சொன்னார்..
"இதோ பாரு, நானும் ஒரு காலத்தில உன்னை மாதிரி தான் இருந்தேன்..

நீ இரட்சிக்கப்பட்டதெல்லாம் உண்மை தான்..ஆனா இதெல்லாம் ரொம்ப நாளைக்கு இல்லப்பா..
நீ போயிட்டு வா.." என்று அனுப்பி விட்டார்..

போன டுமாஸ், ஒரு மாதம் கழித்துத் திரும்ப அதே சபைக்கு வந்தான்..

வந்தவன் திரும்பவும் பாஸ்டரிடம் கேட்டான்..
"பாஸ்டர் எனக்கு சபை தருவீங்களா?"

பாஸ்டருக்கு கோபம் வந்து விட்டது..
" நீ வந்ததே இரண்டு தடவை தான்.. இதுல வேற ஒனக்கு சபை வேற வேணுமா ?
நான் என்ன வர்றவன் போறவனுக்கெல்லாம் சபை குடுக்க சபையை சட்டை பாக்கட்லயா வச்சிருக்கேன்?" என்று கடுப்பாகி விட்டார்..

டுமாஸ் சொன்னான்..
"ஐயா, போன தடவை உங்க கிட்ட வந்திட்டு வெளியே போன நான்..
நேரா இந்த ஊரை விட்டு வெளியே இருக்கிற காட்டுக்குப் போனேன்..

அங்கே ஒரு வழி தெரிஞ்சுது..
நேரா போனேன்..
ஒரு ஓடை..
ஒரு சின்ன குகை..

என் பைபிளை மட்டும் வைத்துக் கொண்டு இரவும் பகலும் ஒன்றும் சாப்பிடாமல் யாரையும் சந்திக்காமல் அந்த ஓடைத் தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டு 21 நாள்..

நானும் கர்த்தரும் மட்டும் தான்..கதறினேன்..
" தகப்பனே..நீங்க என்னை உங்க ஊழியத்துக்கு அழைச்சீங்களா இல்லையா சொல்லுங்க..
அப்படீன்னா என்னை நிரப்புங்க..

ஒரு நாள் இரண்டு நாளல்ல 21 நாட்கள்..

அந்த நாட்களின் கடைசி நாளுக்கு முந்தின நாள்.. விடிபகலுக்கு முந்திய நேரம் மூன்று மணி இருக்கும்.. அந்த இருட்டு குகையில் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது என்னைச் சூழ ஒரு வெளிச்சம்..விடிந்து விட்டதோ என்று பார்த்தேன்..

அந்தக் கானகம் எங்கும் இருள்..அப்போது அந்த வெளிச்சத்தை உற்று கவனித்த போது தான் தெரிந்தது..தங்கத் துகள்களால் ஆன மெல்லிய பொற்சால்வை ஒன்று என்னை மூடியிருந்தது. அப்போது தேவன் என்னைத் தம் ஆவியால் அளவில்லாமல் நிரப்பினார்..

ஆவியானவர் தெளிவாய்ப் பேசினார்..
"நான் உன்னை என் ஊழியத்துக்கென்று பிரித்தெடுத்தேன்..

நீ போ..உன் வாயில் நான் போடும் என் வார்த்தைகளைச் சொல்..நீ எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தர் மேல் கை வைத்தாலும் நான் அவர்களை சுகமாக்குவேன்..

தைரியமாய்ப் போ..
உன் ஊழியத்தை நிறைவேற்று.."

டுமாஸ் தன் அனுபவத்தை சொல்லிவிட்டுக் கேட்டான்..
"ஐயா, நான் மறுபடியும் உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்..
எனக்கு ஒரு சபை தருவீர்களா?"

"சரி..வர்ற புதன் கிழமை வா..மூப்பர் கூட்டம் இருக்குது..டிஸ்கஸ் பண்ணிவிட்டு சொல்றேன்.." என்றார்..

மூப்பர்கள் சொன்னார்கள்..
" பாஸ்டர், இவன் ஒரு லூசு..நம்ம பின்னாலே இருப்பான்..
படிக்கவும் தெரியாது, பிரசங்கம் பண்ணவும் தெரியாது..

ஒண்ணு செய்வோம்..
ஊருக்கு வெளியே தகர ஷெட் போட்ட ஒரு பழைய கொட்டகை சர்ச் இருக்குது நமக்கு..அங்க மொத்த விசுவாசிகளே அஞ்சு பேரு தான்..
பேசாம அதைக் குடுத்துருவோம்..

இந்தப் பய அஞ்சு வாரம் கூட தாக்குப்பிடிக்க மாட்டான்.."

இந்த சம்பவத்தைச் சொல்லிவிட்டு Dr.Tozer அந்தக் கடிதத்தை முத்தமிட்டவராய் சொன்னார்..

" லென்..ஒன்று சொல்லட்டுமா? ஒரே வருஷத்தில் இந்த டுமாஸ் சபையில் 1500 பேர் சேர்ந்தார்கள்..அந்த ஊர்ல அதைப் போல ஒரு ஆவிக்குரிய சபையே கிடையாது.."

அந்த 21 நாட்களையும், பரிசுத்த ஆவியானவர் அவனை அளவில்லாமல் நிரப்பின அந்த அனுபவத்தையும் அவன் மறக்கவே இல்லை..

அவன் அந்தக் குகைக்குப் போய் வந்த நவம்பர் 17 ம் தேதியை ஞாபகம் வைத்து தொடர்ந்து ஒவ்வொரு வருஷமும் 21 நாள் தனியே சென்று கர்த்தரோடு உட்கார்ந்து விடுவான்..

கடந்த 15 வருடமாய் இதைத் தொடர்ந்து செய்து வருகிறான் இந்த டுமாஸ்..

ஒவ்வொரு முறையும் புதிய அபிஷேகத்தையும் புதிய வழிநடத்துதல்களையும் புதிய தரிசனத்தையும் பெற்றுக் கொள்வதற்காக வருடாவருடம் தன் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டுப் போய் விடுவான்..

"ஒன்று சொல்லட்டுமா லென்.. ?"

அபிஷேகம் என்பது ஏதோ ஒரு நாள் பெற்று விட்டுப் போய் விடுவது அல்ல..

அல்லது ஒரே நாள் பெற்ற அபிஷேகத்திலே பரலோகம் போய் சேரும் வரை காலம் தள்ளிவிடலாம் என்று அர்த்தமும் அல்ல.. நான் அதை நம்புவதில்லை..

திரும்பத் திரும்ப அபிஷேகிக்கப்படுதல்..
நிரப்பப்படுதல்..மிக மிக அவசியம்..

சில நேரங்களில் கர்த்தர் முழுவதும் நம்மைக் கைவிட்டு விட்டுப் போய் விட்டதைப் போலிருக்கும்..

ஏனென்றால்..
" இவன் தன் சுய பெலத்திலும் பேச்சுத் திறமையிலும் எப்போதோ பெற்ற அபிஷேகத்திலும் சார்ந்திருக்கிறானா அல்லது என் அபிஷேகம் இல்லாமல் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று என் கிருபைக்காகவும் வல்லமைக்காகவும்
" உம்மை விடுவதில்லை”
என்று கதறுகிறானா பார்க்கிறேன் என்று அவர் நம்மை சோதிக்கும்படி சில நேரம் தம்மையே மறைத்துக் கொள்ளுவார்.."

ஏனென்றால்..
"உன் தேவனாகிய கர்த்தர் வைராக்கிய வாஞ்சை உள்ளவர் மட்டுமல்ல..
அவர் எரிச்சலுள்ள தேவனும் அல்லவா?

தமது மகிமையை அவர் வேறு எதற்காகவும் ஒருபோதும் விட்டுக்கொடுப்பதே இல்லை!! "

கரிஸ்மேட்டிக் மூவ்மன்ட் அதிகம் பிரபலமாகாத அந்தக் காலம் ...

ஆப்பிரிக்காவின் ஜூலு ஆதிவாசிகள் நடுவில் தேவன் தெரிந்துகொண்ட, தேவனோடு நடந்த,தேவனால் அபிஷேகம் பெற்று வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட ஒரு விலையேறப்பெற்ற பாத்திரம்...

வில்லியம் டுமாஸ்

அவர் கை வைத்தால் வியாதியஸ்தர் சுகமாகிறார்கள்..

அவர் ஆஸ்பத்திரிக்குப் போனால் டாக்டர்கள் கைவிட்ட கேஸ்கள் எழுந்து நடக்கின்றன..

அவர் கட்டளையிட..செத்த பிரேதங்கள் எழுந்து நிற்கின்றன..

அவர் போகிற இடமெல்லாம் இயேசுவின் நாமத்தில் ஜனங்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்..

இவைகளில் ஒன்றை நேரடியாக அனுபவித்த ஒருவரை Rev.லியோனார்ட் ரேவன்ஹில் சந்திக்கிறார்..

அவரோடு நடந்த தமது உரையாடலை இங்கு பதிவு செய்கிறார் ரேவன்ஹில்..

கடந்த வருடம் ஒரு நாள் யாரோ ஒருவர் என் வீட்டுக் தவைத் தட்டினார்..
கதவைத் திறந்த நான்,
" ஹலோ! வாங்க வாங்க..
ரொம்ப சந்தோஷம் உங்களைப் பார்த்தது.." என்றேன்.

"என் பேர் ரோஜர் வோக் "
என்றார் வந்தவர்..

"ஆமாமா எனக்கு ஞாபகம் இருக்குது..
ஆப்பிரிக்காவிலுள்ள ரோஜர் தானே ?”

"யெஸ் யெஸ்.."

"சரி, டுமாஸ்னு ஒரு ஆளைத் தெரியுமா உங்களுக்கு ?" என்றேன்.

"வில்லியம் டுமாவா ?”

" ஆமாமா.."

" ஓ நல்லாவே தெரியுமே !”

"சரி, அவர் செத்தவங்களைக்கூட உயிரோடு எழுப்புறாராமே உண்மை தானா ?”

"லென், நான் உங்களுக்கு ஒரு டாக்டர் பேரைத் தர்றேன்..
கடவுளே இல்லனு சொல்ற ஆளு..
அவரோட ஆஸ்பத்திரியில ஒரு கேஸ்..

ஒரு குழந்தை இறந்திருக்குது..இந்த டுமாஸை கூப்பிட்டாங்க..
இயேசுவின் நாமத்தினால அந்த பிரேதத்தைப் பார்த்து ஜெபம் பண்ணினாரு..
அது உயிரோட வந்தது..

அந்த ஆஸ்பத்திரி பேரைச் சொல்றேன்..
டாக்டர் பேரைச் சொல்றேன்..
வேணும்னா செத்து உயிரோட எழுந்த குழந்தையின் பேரைக்கூட சொல்லுவேன்..

“ ஆனா டுமாஸ் அதுக்கும் மேல பல காரியங்களைச் செய்தார்..”

" உண்மையாவா ? செத்தவங்களை உயிரோட எழுப்புறதை விட பெருசா என்ன இருக்கும்னு சொல்றீங்க ரோஜர் ?”

"சொல்றேன் கேளுங்க பிரதர் ரேவன்ஹில்.. !

எனக்கு ஒரே ஒரு மகள்..
அவளுக்கு மூளையில் ஆப்ரேஷன்..மூளையில் மூன்றில் ஒரு பகுதியை வெட்டி எடுத்துட்டாங்க..

என்ன வேணும்னாலும் செஞ்சுக்குங்க..என் மகளை மட்டும் உயிரோட திருப்பிக் கொடுங்கன்னு கையெழுத்து போட்டு கொடுத்திட்டேன்.."

லண்டன்,
அமெரிக்காவிலிருந்து டாக்டர் வந்தாங்க..
ஒண்ணும் செய்ய முடியல..தன் சொந்த உதடுகளையோ நாக்கையோ கூட அசைக்க முடியாமல் கட்டையைப் போல கிடந்தாள்..எல்லா நம்பிக்கையும் போய்விட்டது.."

" சரி, அப்புறம் என்னாச்சு ரோஜர் ?" என்று ஆர்வம் தாங்காமல் கேட்டேன்..

" திடீரென்று ஒரு நாள் என் வீட்டு கதவு தட்டப்பட..திறந்தால் வில்லியம் டுமாஸ் நின்று கொண்டிருந்தார்..

தானே செலவு பண்ணி,
2 நாள் இரவு பகல் ட்ரெயின்ல ட்ராவல் பண்ணி வந்திருந்தார்..

"என்ன விஷயமா வந்தீங்க டூமா ?" என்றேன்..கொஞ்ச நேரம் ஒண்ணும் பேசல..பிறகு சொன்னார்..

"உங்க மகளுக்கு உடம்பு சரியில்லனு கேள்விப்பட்டு ஜெபிக்க வந்தேன்னு" சொன்னார்..

"சுக்கு நூறா உடைஞ்சிட்டேன்.."

என் மகள் இருந்த ரூமுக்கு வந்தார்..
பிள்ளை தரையில் பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தது..

அவர் ஜெபம் பண்ணினவுடனே பிள்ளை துள்ளிக் குதிச்சு எழுந்திருவான்னு நினைச்சேன்..

அவர் ஜெபம் பண்ணினார்..
ஒண்ணும் நடக்கல..
திரும்பவும் ஜெபம் பண்ணினார்..எந்த மாற்றமும் இல்ல..

எலியாவைப் போல மூன்றாவது தடவையும் ஜெபித்தார்..

"அப்புறம் என்னாச்சு ரோஜர் ?" என்று படபடத்தேன்..

மூன்று தடவை ஜெபித்தும் எதுவும் ஆகவில்லை என்று பார்த்த டுமாஸ்..
" சரி நான் போய்ட்டு சீக்கிரம் திரும்பி வருவேன் " என்று சொல்லிவிட்டுப் போனார்.

(இதற்கு பல வருடங்கள் முன்பு வில்லியம் டுமாஸுக்கு ஒரு விசேஷித்த அனுபவம் இருந்தது..21 நாட்கள் தனியே ஜெபிக்க ஒரு குகைக்குள் போய்விட்டார்.

ரோஜர் வோக் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்..

"லென், போய்ட்டு வர்றேன்னு அவர் சொல்லிட்டு போனது மறுபடியும் அந்தக் குகையை நோக்கி..தன் அபிஷேகத்தைப் புதுப்பித்துக் கொள்ள.."

"சில நாட்களில் திரும்பி வந்த டுமாஸிடம் கேட்டேன்..எங்க போனீங்க டுமாஸ் ?"

" என் பிதாவை சந்திக்க கதீட்ரலுக்கு போய்ட்டு வந்தேன்.."
“அப்படியா ? அது எங்க இருக்குது ?”

“அதோ.. அந்தக் காட்டில் உள்ள மலை மேட்டில் உள்ள குகையில்.."

"சரி, வாங்க உங்க மகளுக்காக ஜெபம்பண்ணலாம்.."
என்றார் டுமாஸ்..

"உள்ளே போனோம்..

டாக்டர்கள் ஏற்கனவே சொல்லிட்டடங்க..
மூளைல மூன்றில் ஒரு பங்கை வெட்டி எடுத்தாச்சு..
உங்க பொண்ணு இப்படியே கோமால தான் இருக்கும்..
உலகத்தில எந்த சக்தியும் மெடிக்கல் சைன்ஸும் எதுவும் செய்ய வாய்ப்பில்லை..மறந்து விடுங்கள் என்று..”

டுமாஸ் ரொம்ப குள்ளமான ஆள் தான்..
பார்க்க சின்னதா இருப்பார்..

அந்த நீக்ரோ மனிதர் என் மகளின் அசைவற்ற சரீரத்தைப் பார்த்து..
“டார்லிங்..இயேசப்பா உன்ன ரொம்ப நேசிக்கிறார்மா..
நீ அவருக்குச் சொந்தம்..
இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால முழுதும் சுகமாகி எழுந்திரு..."

சொன்னது தான் தாமதம்..

என் மகள் எழுந்து நின்று சிரிக்க ஆரம்பித்தாள்..
எதுவுமே நடக்காத மாதிரி பேச ஆரம்பித்தாள்.."

" உண்மையாவா ரோஜர்?"
என்று வியந்து கேட்டேன்..

"அதோட முடியல லென்..அதைவிட விசேஷித்த அற்புதம் ஒன்றை தேவன் செய்தார்.." என்றார்

நான் கேட்டேன்.."என்ன சொல்றீங்க ரோஜர் ?"

" பிரதர் ரேவன்ஹில்.. நான் இப்ப சவுத் ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு மாதம் முன்னால தான் வந்தேன்..

கொஞ்ச காலத்துக்கு முன்னால செத்த பிணம் போலகிடந்த என் மகளுக்கு கல்யாணம் ஆகி, நான் புறப்படும் ஒரு மாதம் முன்பு தான் இப்ப ஒரு குழந்தை பிறந்திருக்குது..

தேவன் செய்தார் லென்..
டுமாஸைப் பற்றி நீங்க கேள்விப்பட்ட எல்லாமே
உண்மைதான்..நானே அதுக்கு சாட்சி.."

தனது பிரசங்க பீடத்தில் டுமாஸ் அடிக்கடி
சொல்லும் ஒரு வார்த்தை இது தான்..
" தேவனே உமது மகிமையை நீரே எடுத்துக் கொள்ளும்..
நீரே அதை எடுத்துக் கொள்ளும்..

Take Your Glory Lord..


JUDGEMENT
DAY

CHAPTER 6

பரலோக நீதிமன்றத்தில் நீ நிற்கப்போகும் நாள்!

பரலோக நீதிமன்றத்தில் நீ நிற்கப்போகும் நாள் !

நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிற்போமே.. [ரோமர் 14:10]

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஊழியம் செய்த மிகப்பெரிய ஆவிக்குரிய ஊழியர்களில் ஒருவருடைய வாழ்க்கை வரலாறு, அவரிடத்தில் காணப்பட்ட ஒரு விநோதமான பழக்கத்தைத் தவறாமல் பதிவு செய்துள்ளது.

அவர் தமது கோட் பாக்கெட்டில் விலையுயர்ந்த கற்கள் சிலவற்றைப் போட்டு வைத்திருப்பாராம். தமது வழக்கத்தின்படியே, எங்கோ ஒரு பார்க்கிலோ, புல்வெளியிலோ நடந்து சென்று கொண்டிருக்கும் போது, அந்தக் கற்களில் ஒன்றை எடுத்து சூரிய வெளிச்சத்துக்கு நேரே உயர்த்தி, அதிலிருந்து வெளிப்படும் விதவிதமான ஒளிக்கற்றைகளைக் கண்டு ரசித்து ஆண்டவரைத் துதிப்பாராம். அப்போது ஆங்காங்கே செல்லும் மனிதர்களும் குழந்தைகளும் அவர் செய்வதை விநோதமாய் பார்ப்பார்களாம்..

நான் இங்கே சொல்லும் மனிதர் வேறு யாருமல்ல..1700களில் அமெரிக்காவின் மிகப்புகழ் பெற்ற யோனத்தான் எட்வர்ட்ஸ் தான்.

அந்த நாட்களில் அவர் செய்த மிகப்பிரபலமான "பட்சிக்கிற தேவனின் கரங்களில் பாவிகள்" (Sinners in the hands of angry God) என்ற பிரசங்கத்தினால் உண்டான தாக்கம் கொஞ்சநஞ்சமல்ல..

அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர், தங்கள் இருக்கைகளிலிருந்து முகங்குப்புற விழுந்து கதற, சிலர் தூண்களைப் பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்க, மேடையில் உட்கார்ந்திருந்த சிலரோ, யோனத்தான் எட்வர்ட்ஸின் முழுநீள அங்கியையே பிடித்துக் கொண்டு, " ஐயோ ! இந்தப் பட்சிக்கிற தேவனின் கரங்களிலிருந்து தப்பிக்க எனக்கு வழியே இல்லையா ?" என்று கூக்குரலிட்ட காட்சியை வரலாறு மிகத்தெளிவாகப் பதிவு செய்திருக்கிறது.

ஆனால் அதைக் கண்ட அவர்,"ஐயோ என் நண்பர்களே, இப்படி எல்லாம் உங்களை துக்கப்படுத்தி வருத்தப்படுத்துவது என் நோக்கமில்லையே ! இப்படி விழுந்து அழுவீர்கள் என்று நான் நினைக்கவே இல்லையே !" என்றெல்லாம் சொல்லி அவர்களை ஆற்றித் தேற்றிக் கொண்டிருக்கவில்லை.

அந்த நாளில் அவர் மேலிருந்த வல்லமைக்கும் அபிஷேகத்துக்கும் ஒரு காரணம் இருக்கவே செய்தது.

அந்த உலகப்புகழ் பெற்ற பிரசங்கத்தை அவர் செய்யுமுன் திரும்பத்திரும்ப, திரும்பத்திரும்ப, அவர் செய்த ஜெபம் ஒன்றே ஒன்று தான்..
"ஆண்டவரே ! என் கண்ணின் கருவிழிகளில் "நித்தியம்" என்ற வார்த்தை ஒன்றை முத்திரையாய்ப் பதித்துவிடும்" என்பதே..

இப்படி ஒரு ஜெபத்தை வேறு யாரும் ஒருபோதும் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. தேவன் நம் கருவிழிகளில் முடிவில்லா நித்தியத்தையோ, நித்திய நியாயத்தீர்ப்பையோ அழியாத முத்திரையாய்ப் பதித்திருப்பாரானால், நாம் இன்று காணப்படும் நாமாக அல்ல, மிக மிக வித்தியாசமான ஒரு ஜாதியின் வார்ப்பாகவும் பரலோக சந்ததியின் புதுப் பதிப்பாகவுமே இருப்போம் என்பதே என் வாதம் !

மாமேதையான டேனியேல் வெப்ஸ்டரிடம் ஒரு முறை ஒருவர் கேட்டார்..
"ஐயா உங்கள் அளவிட முடியாத அறிவாற்றலிலும் உங்கள் சிந்தனைகளிலும் வந்து போன எண்ணங்களிலேயே மிகச் சிறந்ததாக எதை எண்ணுகிறீர்கள் ?"

அவர் சொன்னார்.." நான் அநேக காரியங்களைக் குறித்து சிந்தித்திருக்கிறேன்..ஆனால் அவைகளில் எல்லாம், மிக பயங்கரமானதும், என்னைக் கலங்கடிப்பதும், என்னை நடுநடுங்கச் செய்வதுமான எண்ணம் ஒன்று உண்டானால், அது.."தேவனுக்கு முன்பாக ஒரு நாள் என் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து நான் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமே !" என்ற எண்ணமும் பயமும் தான்..

ஏறக்குறைய ஏழரை லட்சம் வார்த்தைகளைத் தன்னகத்தே கொண்ட பரிசுத்த வேதம், ஒரு கிறிஸ்தவ பாடலாசிரியர் சொல்வது போல, 'ஜீவனுள்ள சத்தியத்தின் இரத்தினக் கற்கள் நிறைந்த பொற்கூடை ' என்பது உண்மை.

யோனத்தான் எட்வர்ட்ஸ், தன் பாக்கெட்டிலிருந்த விலையேறப்பெற்ற கற்களில் ஒன்றை சூரியனுக்கு நேரே உயர்த்திப் பார்த்தது போல, வேதமாகிய இந்தத் தங்கக் கூடையிலுள்ள லட்சக்கணக்கான வார்த்தைகளில் ஒரே ஒரு வார்த்தையை மாத்திரம் எடுத்து, நித்தியத்தின் வெளிச்சத்தில் தூக்கிப் பார்க்கச் சொல்லப்படுவோமானால், என் கணிப்பில் அந்த ஒரு வார்த்தை "நியாயத்தீர்ப்பு" என்ற ஒரே ஒரு வார்த்தையாக மாத்திரமே இருக்க வேண்டும் என்று நான் சொல்லுவேன்.

"இதைப்பற்றி இவர் என்ன சொல்லப்போகிறார்?, இதில் எனக்கு என்ன வைத்திருக்கிறீர் ஆண்டவரே ?" என்று நீ சொல்லலாம்.

ஆனால், "ஆண்டவரே, நியாயத்தீர்ப்பு என்ற மகா பயங்கரமான உண்மையைப்பற்றிய ஒரு சிறிய வெளிச்சத்தையாவது தயவுசெய்து எனக்குத் தருவீரோ ?" என்று நீ கேட்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்திலிருந்து படிக்க நான் விரும்புகிறேன். பிரசங்கிக்கிறவர்கள் இதை யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அப்படி அல்ல.. அது இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தின விசேஷம்.

வெளிப்படுத்தல் என்பதற்கு, மூடியிருப்பதைத் திறப்பது அல்லது திரையை விலக்குவது என்பதே அர்த்தம். ஆடி அழிந்து போகும் மனிதர்களின் கடைசிக் கட்டத்தைக் காட்டும் புத்தகமாக இது இருப்பதால், வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகத்தை ஒரு இரகசியங்களின் புத்தகமாக, ஒரு பிரம்மாண்டமான காட்சியைத் தன்னகத்தே கொண்ட ஒரு புத்தகமாக, ஒரு வேதனையின், புலம்பலின் புத்தகமாகவே நான் காண்கிறேன்.

என்றென்றைக்குமாக அவர்கள், தேவனை விட்டு நிரந்தரமாக நிராதரவாகப் பிரிந்து போவதை அது எனக்குக் காட்டுகிறது.

நரகத்தை நோக்கிச் செல்ல லட்சோபலட்சம் சாலைகள் போகுமானால் அதிலிருந்து வெளியேற ஒன்று கூட இல்லை என்பதே உண்மை. பரலோகத்தில் பரிசுத்தவான்கள் "ஆட்டுக்குட்டியானவர் கனத்துக்கும் மகிமைக்கும் பாத்திரர்" என்று இடைவிடாமல் பாடிக் கொண்டிருப்பார்களானால்..

நரகத்திலோ, "அறுப்புக்காலம் சென்றது.. கோடைக்காலமும் முடிந்தது.. நாமோ இன்னும் இரட்சிக்கப்படவில்லை.." (எரே 8:20) என்ற அங்கலாய்ப்பே புலம்பலாய், ஓலமாய் ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வெளிப்படுத்தலின் 17, 18, 19 அதிகாரங்களை வாசிக்கும்படி உங்களை வலியுறுத்துகிறேன். " இதை வாசிக்கிறவனும் இதைக் கேட்கிறவனும் பாக்கியவான்..(வெளி 1:3) " என்று எழுதியிருப்பதால் வேதத்தின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத எழுத்துக்கள் இதில் பதிக்கப்பட்டிருக்கிறது. வாசிக்கிறவர்கள் அநேகர், ஆனால் கேட்கிறவர்களும் செவிகொடுக்கிறவர்களும் எத்தனை பேர் ?

வெளிப்படுத்தல் 20: 11,12, 14,15 சொல்கிறது.. " பின்பு நான் பெரிய வெள்ளை சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்......

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்.
அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன...அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்...

சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன...

பாவிகளின் நியாயத்தீர்ப்பு

மேலே சொன்ன பகுதி, பாவிகளின் நித்திய நியாயத்தீர்ப்பைப் பற்றியது என்பது அறிந்ததே..

"பெரிய வெள்ளை சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்" என்று சொல்லப்படுவது சந்தேகத்துக்கே இடமின்றி பரிசுத்தரையும் அவரது தூய்மையையுமே குறிக்கிறது.

இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே,
பின்வரும் பயங்கரமான வார்த்தையைக் கவனியுங்கள்..

" அவரது சமூகத்தினின்று வானமும் பூமியும் அகன்றன.அவைகளுக்கு இடமும் காணப்படவில்லை. சிங்காசனத்துக்கு முன்பாக மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன."

இந்த வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு நாளுக்கு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

"மிகப்பெரிய நாள்"
என்று ஜாண் வெஸ்லி சொல்லுவார்..
"கூலி கொடுக்கப்படும் ஞாயிறு.." என்று பில்லி சண்டே சொல்லுவார்.
"கடைசி ரவுண்ட் அப்" என்று காமெடி பிரசங்கி ஒருவர் சொல்லுவார்.

" முடிவை சந்திக்கும் நன்னாள்" என்று நீங்கள் சொல்வதானால் சொல்லிக் கொள்ளலாம். நானோ "பரலோக நீதிமன்றத்தில் நீ நிற்கப்போகும் நாள்" என்று சொல்லுவேன்.

2000 வருஷங்களுக்கு முன்பாகவே " சீக்கிரம் சம்பவிக்கப் போகும் இவைகள்" என்று வெளிப்படுத்தல் புத்தகம் ஆரம்பிக்கிறது. அப்படிப் பார்த்தால், நாம் முடியும் தருவாயில் நிற்கிறோமே..

வேதமும், நமக்கு முன் வாழ்ந்த தேவ ஊழியர்களும் இப்படி பல பெயர்கள் கொடுத்திருந்தாலும், அதைப் பற்றி மிக விலாவாரியாகப் பேசியிருந்தாலும் நாமோ முழுவதும் பூமிக்குரியவர்களாகவே தான் இன்னும் இருக்கிறோம்.

இரட்சிக்கப்படாத இந்த உலகத்து மனிதர்களின் பார்வையைப் போலவே நமது பார்வையும் இருக்கிறது. அவர்கள் நினைப்பது போலவே நாமும் நினைக்கிறோம். உலகமும் அதின் மனிதரும் தங்கள் நேரத்தைத் தங்கள் உலகக் காரியங்களில் முதலீடு செய்வது போலவே நாமும் இவ்வுலகக் காரியங்களிலேயே மூழ்கிக் கிடக்கிறோம்.

ஆனால் நித்தியம் ஒரு நிதர்சனமான உண்மை என்று நடுக்கத்தோடு நமக்கென்று அதை எடுத்துக் கொண்டோமானால் நாம் இப்போது இருக்கும் நாமாக இல்லாமல் வேறு மனுஷராய் இருப்போம் என்பதில் எனக்கு எந்த மாற்றுக் கருத்துமில்லை.

மரித்தோர் அனைவரும் உயிரோடு எழுப்பப்படும் போது..

மரித்த லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினது, கடைசி நாளில் மரித்தோர் எழுப்பப்படப் போவதற்கு ஒரு முன்னோட்டமே !

யோவான் 5: 28, 29ல் இயேசு சொன்னார்.." பிரேதக்குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்.. அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.."

உங்களுக்குப் புரிகிறதா ? அவர் சொல்கிறார்.." மரித்தோர் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்.."

அது ஆதாமாய் இருந்தாலும் சரி, ஆகாபாய் இருந்தாலும் சரி, அவன் எங்கிருந்தாலும் சரி, அது பூமியிலோ புழுதியிலோ - பிரேதக் குழியிலிருக்கிறவர்கள் யாரானாலும் தேவ குமாரனின் சத்தத்தைக் கேட்பார்கள்.

அட்லாண்ட்டிக் மகா சமுத்திரத்தை ஏறக்குறைய 18 முறை பல கப்பல்களில் நான் கடந்திருக்கிறேன். கிட்டத்தட்ட ஒவ்வொரு முறையும் கப்பலின் மேல் தளத்தில் நின்று அந்த மகா சமுத்திரத்தைப் பார்த்து நான் சொல்லியிருக்கிறேன்..

" ஓ ! இந்த அட்லாண்ட்டிக்கில் மூழ்கி மரித்தவர்களே ! ஒரு நாள் நீங்கள் இதின் ஆழங்களிலிருந்து உயிரோடு எழும்பி வருவீர்கள் !

ஓ ! ஸ்பானிஷ் மெயின் கப்பலோடு மூழ்கியவர்களே ! லுசித்தானியா மற்றும் டைட்டானிக் கப்பல்களோடு உயிரோடு ஜலசமாதி ஆனவர்களே ! உலக மகா யுத்தங்களில் போர்க்கப்பல்களிலும், நீர்மூழ்கிக் கப்பல்களிலும் தாழ்ந்து அமிழ்ந்து மகா ஆழங்களில் மடிந்து போனவர்களே ! தேவ குமாரனின் சத்தம் கேட்டு நீங்கள் ஒவ்வொருவரும் உயிரோடு மேலெழும்பி வருவீர்கள்!

ஓ ! கோடி கோடியாய்.. ! லட்சோப லட்சங்களாய்.. !
கூட்டம் கூட்டமாய்.. !

அவர்கள் யாவரும் சாரை சாரையாய் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வந்து நிற்பார்கள். யார் அந்தக் காட்சியை விவரிக்க முடியும் ?

அது எங்கே நடக்கும் ? நான் அறியேன்.வேதம் திட்டமாகச் சொல்வதால், அது நடந்தே தீரும் என்று திட்டமாய் நம்புகிறேன்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகம் வேதத்தின் கடைசி புத்தகம் மட்டுமல்ல, கடைசி நாட்களின் நிகழ்வுகளை தன்னகத்தே கொண்ட புத்தகம் மட்டுமல்ல, கடைசி நாட்களுக்குப் பிறகும் நடக்கப் போகும் காரியங்களையும் நுணுக்கமாய் விவரிக்கும் புத்தகம் அது..

ஒரு நிமிடம் அதின் ஆறாம் அதிகாரம் 12 முதல் 17 வரை உள்ள பகுதியைப் பாருங்கள்..

இயேசு எப்படி காணப்படுவார்?

மேலே (முந்தின பகுதியிலே) சொல்லப்பட்ட காட்சிக்கு எதிர்மறையாக இப்புத்தகத்தின் கடைசி பகுதி சொல்கிறது.. "அவரால் மீட்கப்பட்டு அவரது முகதரிசனத்தைக் காண ஏங்கித் தவித்தவர்கள் அவரைத் தரிசிப்பார்கள்.."

அமெரிக்க வரலாற்றிலேயே முதல்முறையாக காங்கிரஸ் ஐக்கிய மாநாட்டில் பேசிய முதல் பெண்மணி Fanny Crosby(எட்டாயிரத்துக்கும் மேலான ஆவிக்குரிய பாடல்கள் எழுதியவர்) அவர்கள் 84 வருடமாக கண்பார்வை அற்றிருந்தவர்கள்.

அவரிடம் யாரோ ஒருவர் ஒரு முறை, உங்களைப் போன்ற ஒரு பேர்பெற்ற கிறிஸ்தவர், சூரிய உதயத்தையோ அஸ்தமனத்தையோ, அழகிய மலர்களையோ, பனிமலைகளையோ, கடலின் அழகையோ, உலகத்தின் வனப்புகளையோ காணக்கூடாமல் குருடாய் இருப்பது வேதனையும் வெட்கமுமானதல்லவா ?" என்றாராம்.

அப்போது அந்த அம்மா சொன்னார்.." ஓ! இல்லவே இல்லை.. உங்களை விட நான் அதிர்ஷ்டசாலி என்பேன் ! நான் முதன்முதலாய் பார்க்கப் போவதே இயேசுவின் திருவதனம் தான் ! அந்த முகத்தை முகமுகமாய் பார்ப்பேன்! Fanny Crosby அவர்கள் தன் நேசர் இயேசுவின் முகத்தைப் பற்றி எழுதின ஆச்சரியமான பாடல்கள் தான் எத்தனை எத்தனை !

இந்த உலகத்தின் ஓவியர்கள் இயேசுவின் முகத்தைத் தங்கள் தங்கள் கற்பனையின்படி எப்படி எப்படியோ வரைகின்றனர். ஆனால் நான் சொல்வேன் - இவர்கள் எல்லாரும் சேர்ந்து வரைந்ததை விட முழுவதும் வித்தியாசமான இயேசுவின் தத்ரூபமான முகரூபம் ஒன்றை கர்த்தருடைய வார்த்தை வரைகின்றது.

தன் கரங்களில் ஆட்டுக்குட்டி ஏந்தினவராக அல்ல, அல்லது கதவைத் தட்டிக் கொண்டு நிற்கும் பரிதாபமான மனிதராக அல்ல.. 1 தீமோத்தேயு 1:17 ல் இயேசுவை, நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜாதி ராஜாவாக வரைகிறார் பவுல் அப்போஸ்தலன்.

ஆகவே அவரை, உயர்நீதி மன்றங்களுக்கெல்லாம் மாமன்றமான நித்திய நீதிமன்றத்திலே நீதிபதிகளுக்கெல்லாம் நியாயாதிபதியாக, மன்னாதி மன்னராக சந்திக்கப் போகிறோம். அதற்கு மேலான எந்த வழக்காடுமன்றமும் இல்லை.. நீதிமன்றமும் இல்லை..நியாய சங்கமும் இல்லை ! அதோடு முடிந்தது எல்லாம் !

"காற்றையும் கடலையும் அதட்டினவரின் கரங்களோடு கைகோர்த்து ஆடுங்கள் !"
என்றோ, " இயேசுவோடு கைகுலுக்கிடுவோம் வாருங்கள் !" என்றோ இங்கே நீங்கள் விவரம் புரியாமல் பாடிக்கொண்டிருக்கிறீர்கள் ! ஆனால் அப்படி ஒன்றை நினைத்துக் கூட பார்த்துவிட வேண்டாம்!

இயேசுவை சந்திக்கும் அந்த நாளிலே உங்களில் யாரோ அவரோடு கை குலுக்கி, " ஓ! நீர் எனக்காய் மரித்ததற்காய் ரொம்ப சந்தோஷம்.. thanks Lord !" என்று மெய்மறந்து சொல்வீர்கள் என்று நினைக்கிறீர்களோ ?

நீங்கள் மறுரூபமாகி மகிமையான சரீரமும் மகிமையான மனமும் உடையவர்களாய் அவர் சமூகத்தில் நில்லாத பட்சத்தில், அவரைக் கண்ட மாத்திரத்தில் நடுங்கி உறைந்து பக்கவாதமாகிப் போவீர்கள் !

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் வெளிப்படுத்தப்பட்ட போது அவன் 'பேய்த்தீவு' என்று அழைக்கப்பட்ட பத்மு தீவிலே கைதியாய் இருந்தான் - ஆனால் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அந்த வெளிப்பாடு கிடைத்த போது அவன் ஆவிக்குள்ளாகிப் போயிருந்தான்.

வேதம் அவரை இவ்விதமாய் வர்ணிக்கிறது..

" அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாய் இருந்தது; அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தது ;

அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது..

அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.." (வெளி 1:14-16)

யோவான்..இயேசுவின் மார்பில் சாய்ந்து, திவ்ய வாசகனாய் அவரது திரு இருதயத் துடிப்பை தன் செவிகளால் கேட்டிருந்த அதே யோவான்...

மற்ற எல்லா சீஷர்களையும் விட இயேசுவை மிக அந்நியோந்நியமாய் அறிந்திருந்த அதே யோவான்..

இயேசுவோடு மூன்றரை வருடங்கள் உண்டு உறங்கி அவரது வார்த்தைகளைக் கேட்டு, அவரோடு நடந்து, அவரைத் தொட்டு உணர்ந்து, சிலுவை வரை சென்று நின்ற அதே யோவான்.. எழுதுகிறார்..

"நான் அவரைக் கண்ட போது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்.."

அப்படிப்பட்ட யோவானுக்கே அந்த நிலை என்றால் நீங்களும் நானும் என்ன கதியாவோம் என்று நினைக்கிறீர்கள் !

நல்லது..
'தீர்ப்பு' என்று ஒன்று உண்டானால், தீர்ப்பை எழுதும் நீதிபதி ஒருவர் உண்டே !

இன்று இயேசு கிறிஸ்துவின் சபைக்கு அவரை மாட்சிமையின் தேவனாகக் காணும் கண்களும் வெளிப்பாடும் இருந்தேயாக வேண்டும் !

இவரே இராஜாதி ராஜா ! நீதிபதிகளுக்கெல்லாம் நியாயாதிபதி ! இதுவே நீதிமன்றங்களுக்கெல்லாம் மாமன்றமான மன்றம் ! இதற்கு மேல், மேல்முறையீடு செய்ய எந்தக் கோர்ட்டும் இல்லை ! வழக்காடும் வக்கீலும் இல்லை! இதின் தீர்ப்பே தீர்ப்புகளுக்கெல்லாம் முடிவான இறுதித் தீர்ப்பு ! இதற்கு மேல் எதுவும் செல்லாது !

"உலகத்தில் நியாயமே இல்லை.." என்று சிலர் என்னிடம் சொல்லுவார்கள்..உண்மை தான்..ஆனால் " சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாமல் இருப்பாரோ ?" (லூக் 18:25) என்ற தேவனுடைய வார்த்தையையே நான் பிடித்துக் கொள்கிறேன்.

பாவத்திலேயே வாழ்ந்து மரித்தவர்களின் பரிதாப நிலை

பூமியிலே மரித்துப் போன பெரியவர்களும் பேர்பெற்றவர்களும் சிறியவர்களும் வறியவர்களும் பாவத்திலே உழன்று வாழ்ந்தவர்களும், சிங்காசனத்தில் மகிமையும் மாட்சியும் பொருந்திய நீதியுள்ள நியாயாதிபதியாய் சர்வ வல்லமையோடு வீற்றிருப்பவரைக் காணும்போது அவர்களது பேயறைந்த முகம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள் ?

அவர்களும் அவரைத் தாழ விழுந்து ஆராதிப்பார்கள் என்று நினைக்கிறீர்களோ ? இல்லவே இல்லை. அவர்கள் அந்தக் காட்சியைக் கண்டு நடுநடுங்கிப் போய் நிற்பார்கள். கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக சகலமும் வெட்டவெளிச்சமாய், வெளியரங்கமாய் காட்டப்படப் போகிறது!

பரலோக நீதிமன்றம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து இங்கே நம் ஆட்கள் படம் எடுக்கிறார்கள். ஆனால் எந்த மனுஷனுடைய கற்பனைக்கும் எட்டாத மகா பயங்கரமான காட்சியாய் அது இருக்கப் போகிறது என்பது மட்டுமே நிச்சயம்.

ஒவ்வொரு தனி மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் நுணுக்கமான செயல்களும் நுட்பமான எண்ணங்களும் எல்லாருக்கும் முன்பாக வாசிக்கப்படப் போவது மட்டுமல்லாது, திரையிடப்பட்டுக் காட்டப்படவும் போகிறது!

அந்த நேரம் ஆயிரம் ஆயிரமான, இலட்சோப இலட்சமான, கோடி கோடியான ஜனக்கூட்டத்துக்கு மத்தியில், நீங்கள் ஆதரவாய் சாய்ந்து கொள்ள உங்கள் அருகில் உங்கள் மனைவியோ, கணவனோ, பாஸ்டரோ, நண்பர்களோ இல்லாத நிராதரவான நிலையில் தன்னந்தனியே அந்த நியாயாசனத்துக்கு முன்பாக நீங்கள் நிற்பீர்கள் !

உதவிக்கு உங்கள் வக்கீலை நீங்கள் அங்கே அழைக்க முடியாது. உங்களுக்குப் பதிலாக உங்கள் இடத்தில் வேறு ஒரு பிரதிநிதியை அனுப்பி வைக்கவும் முடியாது.

ரோமர் 14ல் பவுல் சொல்கிறார்.."நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிற்க வேண்டும்.." யாரும் இதற்கு விதிவிலக்கே இல்லை.

மில்லியன் மில்லியன்களாய் அங்கே நிற்கதியாய் நிராதரவாய் நிர்ப்பாக்கியமாய் நிற்கும் பாவத்தில் மாண்டு போன மனிதர்களைக் காண்கிறீர்களா ?

இது வரை உலகத்தில் வாழ்ந்த உயர்தரக் கிரிமினல்கள் !

தங்கள் விபச்சாரத்திலேயே ஊறி நாறி செத்துப் போன வேசிகள், வேசிக்கள்ளர்கள் !

போர்னோக்ராஃபி என்ற முழு நிர்வாண நீலப்படங்கள் மூலம் கோடி கோடியாய் கொட்டி சம்பாதித்த நீசப்பாவிகள், நீலம் கோர்த்த முகத்தோடு நின்று கொண்டிருப்பார்கள் !

உலகத்தின் மாநகரங்களிலே பாவமறியாத சிறுமிகளை விபச்சார விடுதிகளில் தள்ளிவிட்டு லட்சலட்சமாய் பணம் பார்த்த இடைத்தரக அரக்கிகளை அங்கே நிற்கக் காண்பீர்கள் - தங்கள் முகத்தை மூட வழியின்றி !

இங்கே கலர் கலராய் ரெயின்போ வண்ணங்களில் கொடி பிடித்து ஊர்வலம் வந்த Gay என்ற ஆண்புணர்ச்சிக்காரர்களையும் lesbian என்ற பெண் புணர்ச்சிக்காரர்களையும், இவர்களைத் தங்கள் ஆலய ஆல்ட்டரிலேயே திருமணம் என்ற பெயரில் சேர்த்து வைத்த பாதகப் போதகர்களையும் பிஷப்புகளையும், லிவ்-இன்-பார்ட்னர்ஸ் என்ற அருவருப்பாளர்களையும் வெட்கத்தால் கூசி, கூனிக்குறுகி அங்கே நிற்கக் காண்பீர்கள் !

மனித வரலாறுகளின் சரித்திரத்தால் நிறைந்த வரலாற்றுப் பெட்டியை தலைகீழாய்க் கொட்டிக் கவிழ்த்துப் போட்டு காலி செய்து, ஒவ்வொருவரின் சொல்லப்படாத கதைகளையும் ஒவ்வொன்றாகக் கர்த்தர் தம் கையில் எடுத்துப் பிரிக்க ஆரம்பிக்கும் போது எப்படி இருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள் !

பாவத்தைப் பச்சைத் தண்ணீராய்க் குடித்த பழங்கால பாபிலோனின் தெருக்களில் கும்மாளம் போட்டவர்களும், அறிவு ஜீவிகள் அசுத்தமாய் ஜீவித்த கொரிந்துப் பட்டணத்தாரும் அங்கே கணக்குக் கொடுத்தே ஆக வேண்டும் !

நேற்று இரவில் லாஸ் வெகாஸில் நடந்த அக்கிரமங்களும் மும்பையில் நடந்த அசிங்கங்களும் அங்கே நித்தியத்திலே வெட்டவெளி மைதானத்திலே திரையிடப்படும் !

காலாகாலமாக இங்கிலாந்தை அரசாண்ட மாமன்னர்களும், பிரிட்டிஷார் ஆளும் தேசங்களிலே சூரியன் அஸ்தமிப்பதில்லை என்று மார்தட்டி உலகம் முழுவதும் கோலோச்சிக் கொண்டிருந்த மகாராணிகளும், பாக்தாத்தின் காலிபாக்களும், இந்தியாவின் ராஜா மகா ராஜா பாதுஷாக்களும் - மல்ட்டி மில்லியனர் பில்லினர்களும், சாஃப்ட்வேர் உலகின் முடிசூடா மன்னர்களும், ஹாலிவுட் ஹீரோ ஹீரோயின்களும் அணி அணியாய் வரிசையில் வந்து நிற்கப் போகும் அந்தக் காட்சியை கற்பனை செய்து பார்ப்பீர்களோ ?

இந்த உலகத்தில் இருந்த நாட்களில் அவர்கள் ஆடிய ஆட்டத்துக்கெல்லாம் கணக்குக் கொடுக்க வரிசையில் வந்து நிற்பார்கள் அவர்கள் !

உயர்நீதி மன்றங்களிலே கெம்பீரமாய் அமர்ந்து தீர்ப்பளிக்கும் நீதிபதிகள், தங்களுக்கும் எதிராகத் தீர்ப்பு எழுதப்போகும் சர்வலோக நியாயாதிபதிக்கு முன்பாக கைகட்டி வாய் பொத்தி நிற்கும் அந்த நாளை யார் சகிப்பது ?

இங்கே வாய்தா மேல் வாய்தா போட்டு கேஸ்களை இழுத்தடிக்கும் நீதிபதிகளின் நியாயத்தீர்ப்பு அங்கே எவ்வளவு நீண்ட நெடுங்காலம் இழுக்கும் என்று எனக்குத் தெரியாது. அதைப்பற்றி எனக்குக் கவலையுமில்லை.

ஏனென்றால் "பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது..ஏற்ற காலத்திலே அவர்களுடைய கால் தள்ளாடும்" (உபா 32:35) என்ற வார்த்தை, இந்த உலகில் தேவ பயமற்று வாழ்ந்து செத்த பாவிகள் மேல் நிறைவேறப் போகும் அந்த ஏற்ற காலத்தின் நியாயத்தீர்ப்பு நாளை, மீட்கப்பட்டவர்கள் தங்கள் கண்களால் காணப்போவது தான் நித்தியத்தின் சிறப்பம்சம்.

ஆனால் பரிசுத்தவான்கள் நியாயம் தீர்க்கப்படும் நியாய சங்கத்திலே பாவிகள் வந்து நிற்கப்போவதில்லை.

" மகனே... அதை
நினைத்துக் கொள் "
லூக்கா 16:25

நித்திய நித்தியமாய் மறக்கவே முடியாத நமது நினைவுகள்

நாம் இந்த உலகத்தை விட்டு மறுமைக்குள் கடந்து செல்லுகையில் இந்த உலகத்தில் நமக்குள்ள நினைவுகள் அனைத்தும் நித்தியத்திலும் நம்மைத் தொடர்ந்து வருகின்றது என்பதை பரிசுத்த வேதாகமம் மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறது.

" மகனே..அதை நினைத்துக்கொள் !" என்று தேவன் சொல்லும்போது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதை நாம் நினைவுகூர்ந்தே ஆகவேண்டும்.

நாம் இந்த உலகில் சிறிதும் பெரிதுமான எவ்வளவோ காரியங்களைச் செய்கின்றோம். ஆனால் அவற்றின் பெரும்பாலானவற்றை நாம் வேண்டுமென்றே மறந்து விடுகிறோம். அவை அனைத்தும் நித்தியமாக நமது நினைவிலிருந்தே அழிந்து போயிற்று என்று கூட நாம் நினைத்துக் கொள்ளுகின்றோம்.

ஜாண் காஃப் என்பவர் தனது தாயைப் படுத்தின கொடுமைகளைக் குறித்துப் பேசுகையில்,
"என்னை உயிரோடு கொல்லும் அந்த நினைவுகள் என்னை விட்டுப் போகக்கூடுமானால் எனது வலது கையையே அதற்காக விலைக்கிரயமாக அளிக்கத் தயார்.." என்று சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

ஒருவனுடைய நினைவுகள் அவனது கல்லறை வரை அவனைத் தொடர்ந்து செல்லும்.

இந்த உலகத்தில் நாம் செய்த அநேக செயல்கள் நம்மால் மறக்கப்பட்டுப் போய்விட்ட போதிலும் அவைகள் யாவும் நம் நினைவின் ஆழத்தில் தான் இன்னும் புதையுண்டு கிடக்கின்றன.

அவை யாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக தேவன் நம் நினைவுக்குக் கொண்டு வருகையில் அவை யாவும் திரும்பவுமாக நம் நெஞ்சில் பசுமையாகத் துளிர்விட்டுத் தோன்றும்.

"மகனே..அதை நினைத்துக்கொள்.." என்று கர்த்தர் சொல்லுகையில் நமது நினைவுகளின் இரகசிய நரம்பை அவர் தொடுவார். உடனேயே மறைந்து கிடக்கும் அத்தனை நினைவுகளும் பொங்கிவரும் நீரூற்றைப் போல கொப்பளித்துக் கொண்டு வெளிவரும்.

நாம் அவற்றை ஒருக்காலும் மறக்க முடியாது.மாறாக, நாம் நினைவு கூர்ந்தே தீர வேண்டும்.

பைத்தியக்காரர்களைப் பராமரிக்கும் விடுதி ஒன்றிலுள்ள ஒரு மனிதனைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறேன்.

அவன் எப்பொழுதும்
"ஐயோ நான் மட்டும் கீழ்ப்படிந்திருந்தால்..!"

“ஐயோ நான் மட்டும் கீழ்ப்படிந்திருந்தால்..!" என்று சதா அழுது கூக்குரலிட்டுக் கொண்டேயிருப்பானாம்.நாள் முழுவதும் அவனது கதறல் இது ஒன்று தானாம்.

அதைப் பற்றிய சம்பவம் இது தான்..அந்த மனிதன் இரயில்வேயில் நதியின் குறுக்காகக் கட்டப்பட்டிருந்த ஒரு தொங்கு பாலத்தைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான்.ஒரு முறை ஒரு ரயில் குறிப்பிட்ட நேரத்தில் மிக வேகமாக அந்த தொங்கு பாலத்தைக் கடந்து செல்ல இருப்பதாக அவனுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாலத்தைக் கண்காணித்து வந்த அவன், நதியில் படகுகளை செலுத்தும் சில படகோட்டிகளின் விடாப்பிடியான பிடிவாதத்துக்கு இணங்கி அந்தத் தொங்கு பாலத்தை படகுகள் செலுத்த வசதியாக சற்று உயர்த்திக் கொடுத்தான்.

அவ்வளவு தான்.. என்ன பயங்கரம் ! சில விநாடிகளுக்குள்ளாக அந்த எக்ஸ்பிரஸ் இரயில் வேகமாக வந்து நதியில் மூழ்கிற்று.
அநேகர் மடிந்தனர்.
இதனைக் கண்ட அந்த மனிதன் அழுதான்,
அங்கலாய்த்தான், கடைசியில் துக்கம் தாங்காமல்
பைத்தியக்காரனாகிப் போனான்.

" ஐயோ நான் மட்டும் என் இரயில்வே அதிகாரிகளின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து பாலத்தை உயர்த்தாமல் காத்திருந்தால் இத்தனை உயிர் நஷ்டம் ஏற்பட்டிருக்காதே !" என்ற வார்த்தைகளே இரவு பகலாக அவனது கூக்குரலாயிருந்தது.

நித்திய அக்கினிச் சூளையாகிய நரகத்தின் சிறையிலிருந்து அநேகர் "அந்தோ ! நான் சுவிசேஷத்தின் அழைப்புக்கு மட்டும் கீழ்ப்படிந்திருந்தால்!!" " இரட்சிப்பு எனக்கு அளிக்கப்பட்ட சமயம் நான் அதை ஏற்றுக் கொண்டிருந்திருப்பேனானால்..!!"

"ஐயோ ! என் ஊழியக்காரரின் எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு நான் மாத்திரம் செவிகொடுத்திருந்தால் !" "இயேசு என் இதயக் கதவை அன்புடன் தட்டி நிற்கையில் நான் மட்டும் உடனே எழுந்து என் இதயக்கதவைத் திறந்திருந்தால்..!" என்று அலறிக் கதறித் தங்கள் பற்களைக் கடிக்கும் எண்ணற்ற ஓலங்களை நரகத்தில் கேட்கலாம் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

நான் சில காலத்திற்கு முன்னர் ஒரு மனிதனைக் குறித்து இவ்விதமாக வாசித்தேன். ஒரு ஆடம்பர ஹோட்டலின் முன்னால் அவன் நின்று தன் குதிரையில் ஏறிக் கொண்டிருந்தான்.

அந்த சமயம் அந்த ஊரிலுள்ள தேவாலயத்தின் உதவிப் போதகர் அவ்வழியே அவனைக் கடந்து சென்று கொண்டிருந்தார்.அவன் அவரைப் பார்த்து மிகவும் ஏளனமாக,"நரகத்திற்கு இங்கிருந்து எத்தனை கிலோமீட்டர் தூரம் என்று சொல்லமுடியுமா ?" என்று கேட்டான். அந்தப் பரியாசக்காரனுக்கு பதில் கூறாமல் அந்தப் போதகர், தம் பாதையில் வேகமாக சென்று கொண்டிருந்தார்.

அவர் சென்று கொண்டிருந்த தெருவின் ஒரு முனைக்கு அவர் வந்து சேரும்போது ஒரு கூட்டம் மக்கள் அங்கே கூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தின் மத்தியில் ஒரு வாலிபன் விழுந்து கிடந்தான்.

அவன் ஏறி சவாரி செய்த அவனது குதிரை அவனைத் தூக்கி வீசவே அவன் பிடரி முறிந்து அங்கே செத்துக் கிடந்தான்.போதகரிடம் நரகத்துக்குத் தூரம் கேட்ட அந்த நாஸ்திகன் தான் அந்த வாலிபன். ஒரு தெருவைக் கடந்து செல்லும் நேரத்துக்கு முன்பாகவே சடுதியான அகால மரணத்தின் மூலம் நித்திய எரிநரகத்திற்கு கடந்து சென்று விட்டான் அவன்.

இன்று அநேக மக்கள் நித்தியத்திற்கடுத்த காரியங்களோடு விளையாடி வருகின்றனர்.அவற்றைக் குறித்து அவர்கள் கேலியும் பரியாசமும் செய்து வருகின்றனர்.

வருகிற ஞாயிறு இரவு நீ ஒருவேளை முடிவில்லாத நித்தியத்தினுள் இருக்கக்கூடும்.அப்பொழுது உன் நினைவுகள் உன்னைத் தொடரும். நான் செய்யும் இப்பிரசங்கத்தின் மூல வாக்கியத்தை நீ ஒருவேளை மறந்துவிடக்கூடும்.

ஆனால் அன்று தேவன்.." மகனே அதை நினைத்துக் கொள் !" என்று உன்னைப் பார்த்துக் கூறும் சமயம், எனது பிரசங்கத்தின் மூலவாக்கியம் மாத்திரமல்ல, இந்தப் பிரங்கத்தின் முழு செய்தியும் தானாக உன் நினைவுக்கு ஓடிவரும்.

தனது உயிர்ப்பிச்சைக்காகத் தனது சகோதரனாகிய காயீனிடம் கதறி மன்றாடிய தன் சகோதரன் ஆபேலின் கதறலின் சத்தத்தைக் காயீன் பின் நாட்களில் மறந்து சமாதானத்துடன் இருந்திருப்பான் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா ?

ஆபேலின் கதறலும் அவனது இரத்தமும் அவனது ஜீவனற்ற சடலத்தின் காட்சியும் இந்த ஆறாயிரம் ஆண்டு காலங்களாகக் காயீனைத் தொடராமல் விட்டிருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ?

அருமை இரட்சகரைத் தனது முத்தத்தினால் காட்டிக் கொடுத்த யூதாஸ் தான் கொடுத்த முத்தத்தையும், "சிநேகிதனே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய் ?" என்ற ஆண்டவரின் அன்பு கனிந்த வார்த்தைகளையும் மறந்திருப்பான் என்று நினைக்கின்றீர்களா ?

ஜலப்பிரளயத்திற்கு முன்னான மனிதர்கள் தங்கள் பாவ வழிகளை விட்டு மனந்திரும்பும்படி மன்றாடிய நோவாவின் கெஞ்சல்களை அவ்வளவு எளிதாக மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா ? இல்லவே இல்லை.
மறுமை உலகுக்கும் தங்கள் நினைவுகளை அவர்கள் நிச்சயமாக எடுத்துச் சென்றிருப்பார்கள்.

நீங்கள் மரித்து சில ஆண்டுகளில் புழுக்கள் உங்கள் உடலை தின்று தீர்த்து விடலாம்.ஆனால் அந்த சரீரத்தால் செய்யப்பட்ட செயல்கள் நித்திய காலமாக நினைவுகூரப்படும்.

ஒரு நாள் வருகிறது.
அப்பொழுது நீங்கள் கேலி செய்த விசேஷித்த சுவிசேஷக் கூட்டங்கள் எதுவும் இருக்காது.
ஜெபிக்கும் உங்கள் தாய்மார்களை நீங்கள் இப்போது துச்சமாக மதிக்கலாம். ஆனால் முடிவற்ற நித்தியத்தில் உங்களுக்காக ஜெபிக்கவும், உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பரிந்து மன்றாடவும் பக்தியுள்ள தாய்மார்கள் அங்கே இருக்கப்போவதில்லை என்பதை நீங்கள் மறக்க வேண்டாம்.

பரிசுத்த வேதாகமத்தை இன்று நீங்கள் அற்பமாய் நினைக்கலாம்.ஆனால் நீங்கள் கிண்டல் பேசித் தூற்றித்திரிய வேதாகமங்கள் எதுவும் அங்கே இருக்காது என்று மறந்து போகாதீர்கள்.

இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும்படி உங்களைத் தூண்டி ஏவ ஜெபிக்கும் மனைவிகளோ, உங்களுக்காகக் கண்ணீரோடு ஜெபிக்கும் பிள்ளைகளோ அங்கிருக்கப் போவதில்லை என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மரித்த பெரியோரும் சிறியோரும்

வேதம் சொல்கிறபடி, மரித்த பெரியோரும் சிறியோரும் அங்கே நிற்பார்கள்.

என்னிடம் இருக்கும் பிரிட்டானிக்கா என்சைக்ளோபீடியாவை சில நேரங்களில் நான் பார்க்கும் போது, மனித வரலாற்றுப் பக்கங்கள் நித்தியத்திலே ஒவ்வொன்றாகப் புரட்டப்படப் போவது என் கண்முன்னே வந்து போகின்றது.

ரோம, கிரேக்க சாம்ராஜ்யங்களின் ஜூலியஸ் சீசரையும் திபேரியஸ் சீசரையும் அங்கே நிர்க்கதியாய் நிற்கக் காண்கிறேன்.

இராஜாதி ராஜாவாய் வீற்றிருக்கும் இயேசு கிறிஸ்துவுக்கு முன் பொந்தியு பிலாத்து நிற்கும் காட்சி என்னை மிகவும் கவர்கிறது. ஒரு காலத்தில் அவனுக்கு முன்பாக என் ஆண்டவர் இரத்தம் சொட்டச் சொட்ட நின்ற போது, அன்று அவருக்குள் ஓடிய உணர்வுகளை விட, இன்று அவருக்கு முன்பாக அதே பிலாத்து, தர்மசங்கடத்தோடு அல்ல..பயத்தில் இரத்தம் உறைந்து போய் நிற்பான் என்றே நினைக்கிறேன்.

உலகத்தில் தோன்றிய எல்லா சாத்தானிய இயக்கங்களும், கள்ள உபதேச கல்ட் க்ரூப்களின் தலைவர்களும் அங்கே தலைகுனிந்து நிற்கிறதைக் காண்கிறேன்.

எத்தனை எத்தனை இராஜ்யங்கள் மேல் அரசாண்டவனானாலும் சரி, எத்தனை பெரிய வர்த்தக சாம்ராஜ்யத்தின் மேல் கொடி கட்டிப் பறந்த icon ஆனாலும் சரி.. தன் சொந்த ஆடம்பர ஹெலிகாப்டரிலேயே உலகம் முழுவதையும் சுற்றி வந்து உலகத்தையே வளைத்து விலைக்கு வாங்கத் துடித்துக் கொண்டிருந்தவனானாலும் சரி..எனக்குக் கவலையில்லை.

பூமியின் பேர் போனவனும் ஒன்றுமில்லாத ஓட்டாண்டியும் ஒருவர் விடாமல், புழு சாகாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும் அந்த நித்தியத்திலே என்றென்றைக்குமாகத் தன் காலத்தைக் கழித்தாக வேண்டும்.

"இந்தக் கடவுள் சமாச்சாரமெல்லாம் நமக்கு வேணாம்..நமக்கு புடிக்கல இதெல்லாம்.." என்று நீ கை கழுவி நழுவலாம். ஆனால் என் நண்பனே, நான் உனக்கு அன்போடு சொல்லுவேன்.." குடித்து வெறிக்க விரும்புகிறாயா ? சந்தோஷமாக அனுபவி ! சின்றின்பத்திலேயே மூழ்கித் திளைக்க விருப்பமா ? விபச்சாரிகளோடே உல்லாசமாய் இரு !"

உனக்கு ஒன்று சொல்கிறேன்..நரகத்திலே நீ இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவாய்.ஆனால் உன்னைத் திருப்தி செய்யும் இராணிகள் அங்கே உனக்குக் கிடைக்க மாட்டார்கள் !

"நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்போது விழிப்பேன்" என்று நாள் முழுவதும் உன் குடி போதையிலேயே மிதந்தாயே ! (நீதி 23:35)
நீ அந்த நித்திய நரகத்திலே கண் விழித்துப் பார்ப்பாய்..
தேடுவாய்..ஓடுவாய்..
ஆனால் ஒரு சொட்டுத் தண்ணீருக்காக உன் ராஜ்யத்தையே நீ கொடுக்க ஆயத்தமானாலும் அந்தச் சொட்டு தண்ணீர் கூட கிடைக்காத அந்த இடத்திலே, உனக்கு 'தண்ணி அடிக்க மட்டும் அந்தத் தண்ணி' கிடைக்குமோ ?தவியாய்த் தவிக்கப் போகிறாய் நண்பனே !

என்றென்றைக்குமாக எடுத்துப் போடப்பட்டுப் போகும் 'இரக்கம்'

நித்தியத்தில் போய் சேர்ந்ததும் எல்லாம் மாறி விடும் என்று சாதாரணமாய் சொல்கிறார்கள்.

வெளிப்படுத்தல் ஆறாம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.."பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள் மேல் விழுந்து சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும்..கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்..அவருடைய கோபாக்கினையின் நாள் வந்துவிட்டது, யார் நிலை நிற்கக்கூடும்" என்றார்கள்.

9:6 சொல்கிறது..
"அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாக வேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்.."

நான் நினைக்கிறேன், அந்த நாளில் ஒருவன் தன்னைத் தான் சுட்டு சாகடித்துக் கொள்ள துப்பாக்கியை அழுத்தினாலும், அதிலிருந்து குண்டு பாய்ந்தும் தன் தலை வெடித்துச் சிதறாமல் தான் இன்னும் நின்று கொண்டிருக்கிறதைக் கண்டு ஒன்றும் புரியாமல் திகைப்பான்.

"செத்துத் தொலைவோம்" என்று 127 மாடி உயர பில்டிங்கிலிருந்து தலைகீழ குதிப்பான்.
ஆனால் ஒரு சிராய்ப்பு கூட இல்லாமல், தனக்கு சாவு வராமல் போனதைக் கண்டு தன்னோடு கூட தேவனையும் சேர்த்து சபிப்பான்.

ஆசை ஆவலாய் சாவைத் தேடியும் அது அவர்களை விட்டு ஓடிப்போவது அன்றைய நாளின்அதிசயக்காட்சிகளில் ஒன்றாய் இருக்கும்.

தங்கள் ஆவி ஆத்துமா சரீரத்துக்கு விரோதமாய் உலகத்தில் செய்த ஒவ்வொரு பாவமும் நித்தியத்தில் அவனை விடாமல் துரத்தும்..துரத்திக் கொண்டே இருக்கும்.
ஐயோ ! ஐயோ ! ஐயோ ! என்ற ஓலம் மட்டுமே இரவும் பகலும் ஒலித்து எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

அங்கே வெளிப்படுத்தல் 4ல் காண்பது போல, இங்கே கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக இரக்கத்தைக் குறிக்கும் வானவில் இல்லை..அவருக்கு முன்பாகக் கண்ணாடிக்கடல் இல்லை..அரசாளும் 24 மூப்பர்களும் இல்லை..

கிறிஸ்து மாத்திரமே நியாயம் விசாரிக்கிறவராய், தமது சர்வ மகிமையிலே வீற்றிருக்கிறார். இரக்கத்தின் வானவில் அகற்றப்பட்டு, என்றென்றைக்குமாய் 'இரக்கம்' என்ற சொல்லுக்கே இடம் காணப்படாமல் போய்விடும்.

நீதிக்கு முன் இரக்கம்

நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும் (யாக் 2:13)

இந்த நிமிஷத்தில் உன் வாழ்க்கை எத்தனை தான் தாறுமாறானதாகவும், குப்பை கூளம் நிறைந்ததாகவும் எவ்வளவு தான் சிக்கலும் கோணல்மாணலுமானதாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை.

மன்னிப்பு பெற முடியாத அளவு இன்னும் பிந்திப் போய்விடவில்லை. இப்போதும் அவருடைய இரக்கத்துக்காகக் கெஞ்சி, அவருடைய மன்னிப்புக்காகவும், சுத்திகரிக்கும் இரத்தத்துக்காகவும் இரந்து மன்றாடுவாயானால் அவர் உன்னை மன்னிக்கவும், உன் எல்லா அநியாயத்தையும் நீக்கி சுத்திகரிக்கவும் இரக்கமும் கிருபையும் உள்ளவராகவே இருக்கிறார்.

இப்போதும் ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. அவரது இரக்கத்துக்காகக் கெஞ்சி மன்றாடு ! நீ ஒருவேளை கேட்கலாம்,"என் வாழ்க்கையின் எல்லா அசுத்த அருவருப்புகளையும் அலங்கோலங்களையும் அழுகிய நாற்றங்களையும் உண்மையிலே கர்த்தர் மன்னிப்பாரா ?" நிச்சயமாக !

ஏன் சொல்கிறேன்? இன்றும் அவர் இரக்கத்தின் கிருபாசனத்தின் மீதே அமர்ந்திருக்கிறார். கிருபையும் சகாயமும் பெற்றுக் கொள்ள இப்போதும் உனக்கு தருணம் உண்டு.

ஆனால் அவர் நியாயம் தீர்க்கும் நியாயாசனத்தில் அமர்ந்த பின் இரக்கத்தின் கிருபாசனம் என்றென்றைக்குமாக அகற்றப்பட்டுவிடும்.

பூமியில் முதலாவது கிறிஸ்து இருந்த நாட்களில் சிறுபிள்ளைகளை அன்புடன் அணைத்து ஆசீர்வதிக்கும் தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார்.ஆனால் அதே ஆட்டுக்குட்டி, கோபாக்கினையின் ஆட்டுக்குட்டியானவராய் தோன்றும் நாள் ஒன்றும் வருகிறது.(வெளி 6:16)

தேவ ஆட்டுக்குட்டியின் மென்மையைப் போல அழகானதும் இல்லை..ஆட்டுக்குட்டியானவரின் கோபத்தைவிட பயங்கரமானதும் வேறில்லை. தேவனின் இரக்கத்துக்கும் மனதுருக்கத்துக்கும் இடமே இன்றி, ஆட்டுக்குட்டியானவரின் கோபாக்கினையின் நாள் வெளிப்படும்.

நியாயம் தீர்க்கப்படப் போகும் ஒவ்வொரு ஜாதியையும் கோத்திரத்தையும் யோசித்துப் பாருங்கள் ! தங்கள் தங்கள் கிரியைகளுக்காகக் கணக்குக் கொடுக்க அங்கே நின்று கொண்டிருக்கும் பார்வோனையும் ஏரோதையும் நினைத்துப் பாருங்கள் !

ஆப்கானிஸ்தானிலும், வியட்நாமிலும், ரஷ்யாவிலும் கிறிஸ்துவுக்காகவும் சுவிசேஷத்துக்காகவும் பாடுபட்டவர்களையும் உபத்திரவப்பட்டவர்களையும் சித்திரவதை செய்யப்பட்டவர்களையும் தங்கள் தலை வெட்டப்படத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்களையும் நினைப்பீர்களோ ?

ரஷ்ய சிறைச்சாலைகளிலும் கான்ஸென்ட்ரேஷன் கேம்ப் எனப்படும் கொலைக்கூடங்களிலும் கணக்கே இல்லாத அட்டூழியங்களுக்கும் கொடூரங்களுக்கும், தான் தண்ணீராய்ச் சிந்திய குற்றமற்ற இரத்தத்தின் ஒவ்வொரு துளிக்கும் ஒரு நாள் கணக்குக் கொடுத்தே ஆக வேண்டும் என்று என்றாவது ஒரு நாள் கனவிலும் கூட ஸ்டாலின் நினைத்துப் பார்த்திருப்பானோ ?

தேவ பிள்ளைகள் உடைந்த இருதயத்தோடும் ஆத்தும பாரத்தோடும் சிந்திய ஒரு துளி கண்ணீராவது தரையில் விழுந்து விடாமல் அவைகளைத் தமது துருத்தியிலே பத்திரமாய் சேர்த்து வைத்திருக்கும் நல்ல ஆண்டவரல்லவா ?

"ஆண்டவரே, எங்களுக்குச் செய்த விவரிக்க முடியாத கொடூரங்களுக்காக ஹிட்லரை வதையாய் வதைப்பீராக ! நரக அக்கினியின் சூளையை ஏழேழு மடங்கு சூடாக்குவீராக !" என்று யூதர்கள் அவரை நோக்கி அழுது, தாங்கள் பட்ட வேதனையை அவருக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை.

தன் இச்சையிலும் பாவத்திலும் அழியும் ஒருவனே - யுகா யுகமான தீர்ப்பினால் தீர்க்கப்படும் போது - அறுபது இலட்சம் ஜனங்களை ஆடுமாடுகளைப் போல விஷவாயுக் கூடங்களில் அடைத்துக் கொன்று போட்டு, ஜில்லட்டின் மிஷின்களால் கண்டதுண்டமாக்கி, விலங்குகளுக்கு ஊசி போட்டு ஆய்வு செய்யும் ஆய்வுக்கூடங்களின் ஆய்வுகளுக்குள் மிருகங்களுக்குப் பதிலாக மனிதர்களை உட்படுத்தி, வார்த்தையால் விவரிக்க இயலாத வாதைகளால் அவர்களை சித்திரவதைப்படுத்திக் கொன்று குவித்த கொடும் பாதகன் ஹிட்லரையும், அவனது வலதுகரமான ஹிம்லரையும் அவ்வளவு எளிதில் தப்பவிடுவாரோ ?

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்தியே தீருவார் ! எவனும் தப்பப் போவதில்லை !

தேவனுடைய தயவும் கண்டிப்பும் (ரோ 11:22)

சுவிசேஷத்தின் ஒரு பகுதியை மட்டுமே மிகைப்படுத்தி வெளிச்சமிட்டுக் காட்டுவதைக் குறித்து ஜாக்கிரதையாய் இருப்போம். தேவன் அன்புள்ளவராகவே இருக்கிறார் - ஆம். அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவரது தயவை மட்டுமே அல்ல, அவரது மறுபக்கமான கண்டிப்பையும், உன்னைக் கேட்கும் ஜனங்களுக்கு நீ உணர்த்த மறவாதிருப்பாயோ ?

இயேசு கிறிஸ்துவின் கதை இத்தோடு முடிந்தது என்று உலகம் எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவரோடு கூட இவர்களது கணக்கு இன்னும் ஆரம்பிக்கப்படவே இல்லை என்று யாருக்குத் தெரியும் ?

பணக்காரனோ ஏழையோ, அடிமையோ சுயாதீனனோ, கறுப்போ வெளுப்போ - ஒவ்வொருவனுக்கும் கணக்குத் தீர்க்க இதோ நியாயாதிபதி வாசலண்டையிலே நிற்கிறார்.

ஒரு நாள் 'இரக்கம்' என்ற சொல்லே அடியோடு அகற்றப்பட்டுப் போகும் என்ற நிதர்சனமான உண்மையை பயப்படாமல் துணிந்து எடுத்துக் கூறுவாயோ ?

நரகத்திலும் கதறி ஜெபிப்பாருண்டு - ஆனால் அவர்களைக் கண்ணோக்கிப் பார்க்கத்தான் யாரும் இருக்கப்போவதில்லை என்பதை அழுத்தமாய் திருத்தமாய் ஆழமாய் சொல்ல எழும்பி நிற்பாயோ ?

"அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது; நாங்களோ இன்னும் இரட்சிக்கப்படவில்லை" (எரே 8:20) என்று கூட்டம் கூட்டமாய் கதறக் கதற அவர்கள் ஓலமிடுமுன், "இன்னும் உங்களுக்காகத் தமது கிருபையின் ஆசனத்தில் தேவன் இரக்கமளிக்கக் காத்திருக்கிறார்.." என்று கெஞ்சிக் கெஞ்சி அவரது இரக்கத்துக்காக மன்றாட அவர்களை வருந்தி அழைப்பாயோ ?

காலம் கடந்து காட்சிகள் மாறுமுன், ஞானமாய் மனம் திரும்பி சுவிசேஷத்தை விசுவாசித்து கிருபையைப் பற்றிக்கொள் !

இதை உனக்குச் சொல்லி எச்சரிப்பது அறிவிப்பது என் மேல் விழுந்த கடமை ! உனக்குச் சொல்லாவிட்டால் எனக்கு ஐயோ !



CHAPTER 07

ஓர் உண்மைத் தீர்க்கதரிசியின் நிஜ முகம்

ஒரு உண்மைத் தீர்க்கதரிசியின் நிஜ முகம்

ஒரு உண்மைத் தீர்க்கதரிசி தன் காலத்தில் தேவனால் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டவன்....மனுஷரால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டவன்....

பல வருடங்களுக்கு முன்பு டாக்டர். கிரகோரி மேண்ட்டில் சரியாய்ச் சொன்னார்."ஒரு மனிதன் முழுவதும் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படாதவரை அவன் முற்றிலும் அங்கீகரிக்கப்படவும் மாட்டான்.... "

கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவன் இந்த அனுபவங்களை நன்றாகவே அறிந்திருப்பான்..

அப்படித்தான் ஜனங்களும் அவனை பட்டங்கட்டியிருப்பார்கள்..

தங்களைத் தாங்களே மெச்சிக் கொண்டு, உலகத்தின் வெதுவெதுப்பில் திளைத்துக்கொண்டிருக்கும், அவனால் எச்சரிக்கப்படும் கூட்டம் ஒரு நாளும் அவனை "வருடத்தின் மிகச்சிறந்த மனிதர் " என்று தெரிந்தெடுக்கப் போவதில்லை. அவனோ அவர்களை "சாத்தானின் கூட்டம்" என்று தான் கணக்கில் கொள்கிறான்.

சின்னா பின்னமாய் சிதறிக் கிடப்பவைகளைச் சீர்ப்படுத்தி சரிப்படுத்த வருகிறவன் இவன்..

வழிவிலகினவர்களை வழிக்கு கொண்டு வருவதே இவனது வேலை..

மாம்சத்திலும் ஆவியிலும் ஒழுக்கம் கெட்டுபோன "பிரபலமானவனை" ஆவியில் எதிர்த்து நிற்பதால் தன் பெயரைக் கெடுத்துக் கொண்டவன் இவன்..

கேடுகெட்டுப்போன அரசியல்வாதிகளும், தங்களை விற்றுப்போட்ட பிரசங்கிகளும் நிறைந்த இந்த நாளில் "தேவனே எங்களுக்கு ஒரு தீர்க்கனை அனுப்பமாட்டீரோ" என்று கதறுதலைவிட இன்றைய அவசரத் தேவை நாட்டில் வேறெதுவுமில்லை..

Austin spars சொல்லியபடி ஒரு தீர்க்கதரிசியின் முழு நேர வேலையே "எழுப்புவதும்" "திருப்புவதும் தான்...(ஏசா 49:6)

தேவனின் காணாமல் போன பொக்கிஷத்தைக் தேடிக் கண்டுபிடிக்கும் "தேவனின் துப்பறியும் ஏஜண்ட்" - ஒரு தீர்க்கதரிசி...

அவனது செயலின் தீவிரம் அவன் மறைந்திருப்பதின் அளவையும் இரகசியத்தையும் பொறுத்தது...

சமரசம் என்பது அவனது அகராதியிலே இருக்காது. அவன் எதற்கும் விலை போகாதவன்.. அவன் ஒரு மவுசு இல்லாதவன்..

அவன் முற்றிலும் வேறு உலகத்தைச் சேர்ந்தவன்.
இந்த உலகத்தில் வாழ்வதற்கே தகுதியில்லாதவன்..

அவன் சந்தேகமே இல்லாமல் சர்ச்சையில் சிக்கியவனும், மன்னிக்கவே முடியாதபடி கரடு முரடும் கடினமுமானவன்..

தேவனுடைய தாளத்துக்கு தப்பாமல் நடப்பவன் அவன்..

உத்வேகத்தின் காற்றை உட்கொள்ளும் அரிதான கேரக்டர் அவன்..

குருடரை வழிகாட்ட வந்த "கண் திறக்கப்பட்டவன்" அவன்..

மலை உச்சியிலே "தேவனுக்கு முன்பாக" நிற்கிற அவன்...மனிதருக்கு முன்பாக சமபூமிக்கு வந்து "கர்த்தர் சொல்லுகிறார்" என்று அதிரடியாக அதிரப்பண்ணுபவன்...

தேவனைக் குறித்த காரியங்களில் சிலவற்றை வெளிப்படுத்துகிற இவன், வரப்போகிற நியாயத்தீர்ப்பை நன்றாகவே அறிந்து வைத்திருப்பவன்...

இவன் ஒரு தனிமைவாசி, தனிமை விரும்பி...
முகத்தாட்சண்யமோ முகஸ்துதியோ அறியாத இவன், முகத்துக்கு நேரே பேச அஞ்சாதவன்...

"மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாகு அல்லது நீ தொலைந்தாய் ! " என்பதே அவனது செய்தி....

அவனது தீர்க்கதரிசனமெல்லாம் " வெட்டு ஒன்று துண்டு ரெண்டு " என்ற ரகம் தான்..

அவன் சத்தம் கூச்சல் அல்ல..அது தலையைப் பிளக்கும் சத்தியம்..
அவன் இன்றைய வில்லன்.. நாளைய ஹீரோ..

அவன் உயிரோடிருக்கையில் உதைத்துத் தள்ளப்படுபவன்..செத்த பிறகோ தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடப்படுபவன்..

அவன் தன் காலத்தில் பட்டப்பெயரிட்டு எள்ளி நகையாடப்படுவான்..கல்லறையில் வைக்கப்பட்ட பின்போ கல்வெட்டில் பொறிக்கப்படுவான்..

அவன் நம்மைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் ஆசான்..ஆனால் அவனது வகுப்பில் "பாஸ்" ஆகிறவர்கள் வெகு சிலரே..

வாழும் போது அவனுக்கு நண்பர்கள் யாரும் இருப்பதில்லை.. இறந்த பின்போ அவனைப் போல ஃபேமஸ் யாரும் இருப்பதுமில்லை..

இவன் எந்த ஸ்தாபனக் கட்டுக்களுக்கும் எதிரி..ஆனால் பின் சந்ததியோ இவன் காலத்துக்குப் பின் இவனைப் புனிதர்கள் வரிசையில் வைத்துப் பூஜிக்கும்..

தன் ஊழிய காலத்தில் இவன் உண்பதோ "இடுக்கத்தின் அப்பம்"ஆனால் தன் வார்த்தையைக் கேட்பவர்களுக்கு இவன் தருவதோ "ஜீவ அப்பம்.."

மனிதர் முன்பாக இவன் காணப்படுவது மிகக்குறுகிய காலம்..ஆனால் அதற்கு முன் தேவனோடு பல வருட காலம் சஞ்சரித்துக் கொண்டிருந்தவன் இவன்..

தேசத்தால் சவுக்கடி படுமுன் தேசத்துக்கே சவுக்கடியாய் விளங்கியவன் இவன்..

இவன் பகிரங்கமாக அறிவிப்பான்..பகிரங்கமாகக் கண்டிப்பான்.. பகிரங்கமாகக் கண்டனம் பண்ணுவான்..

இவன் இருதயம் எரிமலை..வார்த்தைகளோ அக்கினிக் குழம்பு..

தேவனைப் பற்றி மனிதர்களிடம் பேசுவான்.. மனிதர்களுக்காக தேவனிடம் மன்றாடுவான்..

தேவன் இல்லை என்று சொல்லும் மதிகேடரிடமும் சத்திய ஒளியை சுமந்து செல்லும் இவன், மனிதரால் எப்போதுமே காறித் துப்பப்படுபவன்..

மனிதரைச் சந்திக்குமுன் தேவனைச் சந்தித்துவிடும் இவன் சுயமரியாதையைப் பற்றிக் கவலைப்படாதவன்..

மறைவிடத்தில் தன்னைத் தேவனோடு மறைத்துக் கொள்ளும் இவன்..பொது இடத்தில் ஒன்றையும் மறைக்காமல் வெளியரங்கமாக்குபவன்..

இயற்கையாகவே ஆவியில் கூர்மையான இவன், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரியவன்..

அவனுக்கு பாரம் உண்டு..பாடு உண்டு..பலம் உண்டு..

அவன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்..மனிதனால் கழித்துக் கட்டப்பட்டவன்..

நம் தேசத்தின் இன்றைய தேவை..

சரிந்த பங்குச்சந்தையைத் தூக்கி நிறுத்தும் ஒரு பொருளாதார வல்லுநன் அல்ல..

ஊழலை அடியோடு துடைத்துப் போடும் ஆம் ஆத்மியும் அல்ல..அல்லது மாறி வரும் global warming ஐ கட்டுப்படுத்தும் விஞ்ஞானிகளும் அல்ல..

“ நமது இன்றைய அத்தியாவசியத் தேவை தேவனால்-அனுப்பப்படும் ஒரு தீர்க்கதரிசி !! “

தேசத்தின் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, எரிபொருள், மின்சாரம் ,இவைகளில் ஏற்படப் போகும் தட்டுப்பாடு பற்றி அடிக்கடி எனக்கு கடிதங்களும், அழைப்புகளும் வந்து கொண்டே இருக்கின்றன..

இப்படிப்பட்டவர்கள் சொல்வதெல்லாம் செழிப்புள்ள ஏழு வருடங்கள் முடிந்து நம் நாட்டில் 7 வருட பஞ்ச காலம் துவங்கி விட்டது...

ஆனால் எல்லாப் பஞ்ச காலத்தைக் காட்டிலும் வசனம் கிடையாத கடுமையான பஞ்சக் காலம் இந்த உலகத்தில் தொடங்கிவிட்டது..

கடந்த பல வருடங்களில் பல கோடிக்கணக்கான பணம் சுவிசேஷம் அறிவிக்க செலவிடப் பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான சுவிசேஷ செய்திகள் டிவி மூலமாகவும், இன்டெர்நெட் முலமாகவும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன..

பெரிய பெரிய சுவிசேஷக் கூட்டங்களுக்கும் சுகமளிக்கும்கூட்டங்களுக்கும் குறைவில்லை..

கூட்டத்தில் கை தூக்கினவர்கள் கூட்டம் முடிந்து வெளியே வந்து வழக்கம் போல் செட்டிலாகி விட்டனர்..

ஆனால் தேசத்தை உலுக்கும் எழுப்புதலோ ஒருபுறமும் காணக் கிடைப்பதில்லை...

நம்மிடம் கூட்ட ஒழுங்கு செய்பவர்கள் உண்டு. சாதுரியப் பிரசங்கிகள் உண்டு.. கோடிக் கணக்கில் பணம் புழங்கும் கிறிஸ்தவ நிறுவனங்கள் உண்டு..

ஆனால் ....எங்கே ? ஓ! தீர்க்கதரிசிகள் எங்கே? பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அக்கினி பிழம்பாய் எழுந்து வரும் எலியாக்கள் எங்கே?

சீர்கெட்டுப்போன ஒழுக்கக்கேடுகளுக்காகவும்.. செத்துப்போன சபைகளுக்காகவும்.. சீர்குலைந்து போன தேசத்துக்காகவும்.. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடைய கிருபாசனத்துக்கு முன்பாகப் புசியாமலும் குடியாமலும் விழுந்து கிடந்து மன்றாடும் மோசேக்கள் எங்கே?

தங்களைக் காண்பிக்கும் நாள்வரை தேவ மனிதர்கள் தேவனோடு தங்களை ஒளித்துக் கொண்டிருக்கின்றனர்...அவர்கள் வெளிவருவார்கள்...

தன் ஊழிய நாட்களில் தீர்க்கதரிசி "மீறினவன்" என்று பெயர் வாங்குவான்...பின் வரும் வரலாற்றிலோ "விடுதலையோடு ஊழியம் செய்தார்" என்று புகழ் பெறுவான்..

சுவிசேஷ வட்டாரத்தில் இன்று ஒரு மிகப் பெரிய வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. டாக்டர்கள், ரெவரண்டுகள் மத்தியில் "கர்த்தருடைய தீர்க்கதரிசி" என்ற ஒருவனை மட்டும் காணோம்..

இவன் நேர்மையிலும் உண்மையிலும் பயங்கரமானவன்...ஒரு வகையில் இந்த உலகத்தில் வாழத் தெரியாதவன்..

மனிதரால்.. ஏன், நல்ல மனிதர்களால் கூட இவன் புறக்கணிக்கப்படுவான்..

ஏனென்றால் அவர்களைப் பொறுத்த மட்டில் அவன் ஒரு "ஆள் அண்டாப் பிறவி!!" அவன் ஒரு "ஓவர் பிரதிஷ்டை அதிகப் பிரசங்கி!!"

அப்படிப்பட்டவன் யோவான் ஸ்நானகனைப் போல நேருக்கு நேர் முகத்துக்கு அஞ்சாமல் நிற்கக்கடவன்..

அப்படிப்பட்டவன் இன்றைய நவயுக இறையியல் வனாந்திரத்தில் "கூப்பிடுகிறவனுடைய சத்தமாகவும்.." தேங்கி நிற்கும் சபையுகத்தில் எழுப்புகிறவனாகவும் திருப்புகிறவனாகவும் எழும்பி வரக்கடவன்...

அவன் பவுலைப் போல சுயத்துக்கு செத்தவனாய் "ஒன்னு நான் செய்கிறேன்" என்று சொல்பவனாகவும் செய்பவனாகவும் இருக்கக் கடவன்..

அவன் பிரசங்கிகளுக்கே உரிய எந்த உபகாரங்களையும் பெறாதிருக்கடவன்...

அவன் ஒரு சுயம் நாடாதவனாய்..சுய நீதி அற்றவனாய்..சுய பெருமைக்குச் செத்தவனாய் ... சுய தம்பட்டம் அடிக்காதவனாய்.. தன்னையே முன் நிறுத்தாதவனாய் இருக்கக்கடவன்..

அவன் மனிதரைத் தன் வசப்படுத்தாதவனாய் அவர்களைத் தேவனோடு ஒன்றிணைக்கப் படாதபாடு படக்கடவன்..

அவன் அனுதினம் பரிசுத்த தேவனின் மகிமையின் சிங்காசன மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அன்றைய நாளின் கட்டளையை அந்த இடத்திலிருந்து கொண்டு வருகிறவனாய் வெளிப்படக்கடவன்..

செழுமையின் ஆசீர்வாத உபதேசங்களில் செவிடாகிப்போனவர்களின் செவிகளைத் திறக்கும் தேவனின் "எப்பத்தா" வாக ஒலிக்கக்கடவன்..

இந்த நூற்றாண்டில் ஒருவனும் கண்டிராத தரிசனம் கண்டவனாய், இந்த நூற்றாண்டு கேட்டிராத சிம்மக் குரலோடு கெர்ஜிக்கிறவனாய் எழும்பி வரக்கடவன்...

தேவனே இரங்க மாட்டீரோ?
உமது உண்மைத் தீர்க்கதரிசிகளைத் திரும்ப எங்களுக்கு அனுப்ப மாட்டீரோ?...


SODOM HAD NO
BIBLE

CHAPTER 08

சோதோமில் வேதம் இருந்ததில்லை

சோதோமிலே வேதம் இருந்ததில்லை

மாபெரும் எழுப்புதல் வீரர் யோனத்தான் எட்வர்ட்ஸ் எழுதிய ஒரு வரி எப்போதும் என் தொண்டையைக் கவ்விப் பிடிக்கிறது..

நியாயாதிபதியாகிய தேவனுடைய நியாயத்தீர்ப்பை நம் இருதயத்தைக் கிழிக்கும் அம்பாய் விவரிக்கும் எட்வர்ட்ஸ் சொல்கிறார்..

"பட்சிக்கிற அக்கினியாய் நமது தேவன் நியாயம் விசாரிக்க அமர்ந்த பின், அங்கே நம்மோடு சமரசமோ சமாதானமோ செய்து கொள்ள அவர் நமக்கு எந்த விதத்திலும் கடமைப்பட்டவர் அல்லவே அல்லர் !"

இந்த வார்த்தை தான் என்னை உறுத்துகிறது! இதை என்னால் ஒதுக்கித் தள்ளவோ, உதறித் தள்ளவோ, துடைத்துத் தள்ளவோ முடியவே இல்லை..

அப்படி உள்ளும் புறம்பும் என்னை முள்ளாய்த் தைக்கும் எட்வர்ட்ஸின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை !

நமது முழு தேசம் மற்றும் சபையின் ஒரு நாளின் சராசரி பாவத்தைக் கணக்கிடும் போது, அது சோதோமும் அவளது சகோதரி கொமோராவின் ஒரு முழு வருடத்தின் பாவத்தை விட மிக அதிகமாய்க் காணப்படும்போது, நம்மைப் போன்றவர்களுக்கு, நமது தேவன் எந்த விதத்தில் கடமைப்பட்டுள்ளார் என்று நான் கேட்கிறேன் !

சோதோமுக்குக் கிடைத்திராத சுவிசேஷம் மட்டுமின்றி இன்னும் எத்தனையோ சிலாக்கியங்களைப் பெற்றுள்ள இன்றைய சபையின் உண்மையை சற்று அலசத்தான் வேண்டியுள்ளது !

சோதோம் நகரில் சபைகள் இருந்ததில்லை..
இங்கோ ஆயிரக்கணக்கில்...

சோதோமில் பிரசங்கிக்கிற ஊழியர்கள் இருந்ததில்லை..
இங்கோ ஊழியர்களுக்குப் பஞ்சமே இல்லை...

சோதோம் கொமோராவில் பைபிள் காலேஜ்கள் இருந்ததில்லை..
இங்கோ காலை மாலை காலேஜ்களுக்கும் கணக்குண்டோ ?

சோதோமில் கிறிஸ்தவ சேனல்கள் இருந்ததில்லை..
இங்கோ 24 மணி நேரமும் சேனல்கள் மயம் தான்..

இன்றைக்கு விரல் நுனியில் சகல ஆவிக்குரிய தகவல்களையும், அரிய ஆவிக்குரிய புத்தகங்களின் பதிவிறக்கங்களையும் முற்றிலும் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளும் எந்த நவீன இன்ட்டர்நெட் வசதிகளும் சோதோமில் இருந்ததில்லை.. இங்கே நமக்கோ உள்ளங்கையிலே சகலமும் அடக்கம் !

சோதோமுக்கு தேவ கோபாக்கினையின் வரலாறு இல்லை..
இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் அறியாதது என்ன உண்டு ?

கடைசியாக..

சோதோமில் பைபிள் இருந்ததில்லை..
நம்மிடமோ எத்தனை எத்தனை மொழிகளில்.. எத்தனை எத்தனை மொழியாக்கங்களில்..
கடல் போன்று கணக்கற்ற புத்தகங்களும், விளக்க நூல்களும், CD, DVDக்களும்.. !

ஆகவே போக்குச் சொல்ல நமக்கு இடமே இல்லை..

["சோதோமிலே வேதம் இருந்ததில்லை.." என்ற இந்தச் செய்தியை தமது குடியேறிய நாடாகிய அமெரிக்காவைக் குறித்தும் அதின் விழுந்து போன நிலையை மனதில் வைத்துமே எழுதினார் ரேவன்ஹில்..

ஆனால் அவர் 50 வருடங்களுக்கு முன்பாகக் குறிப்பிட்ட அமெரிக்க நிலை மட்டுமல்ல, அமெரிக்க சபைகளின் நிலை மட்டுமல்ல.. பரவலாக இன்றைய சராசரி சபைகளின் நிலையையும் நன்றாகவே தீர்க்கதரிசனமாய்க் கண்டு எழுதினார் என்பதால் உலகளாவிய சபை மட்டுமல்ல, நமது இந்திய சபைகளுக்கும் ஏற்ப சில சிறு மாற்றங்கள் செய்து இந்தச் செய்தி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது..]

மேலே தொடர்கிறார் ரேவன்ஹில்..

அமெரிக்கா இன்று ஜீவிப்பதே தேவனது இரக்கத்தினால் தான். அதே போல அநேக சபைகள் ஜீவிப்பதும் இரக்கத்தினாலேயே...

பரிசுத்த தேவனின் பட்சிக்கிற அக்கினியில், நாம் புகையாய்ப் புகைந்து போகாமல் இருப்பதின் ஒரே காரணம்.. இ-ர-க்-க-ம் ! மிக மிக நீண்டகால இரக்கம் !

சோதோமின் மேல் காணப்படாத எச்சரிப்புப் பலகைகள், ஏற்கனவே அமெரிக்கா மீதெங்கிலும் பிரிட்டனிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன..

யாரோ ஒருவர் சொன்னது போல
"அவர் இங்கே இல்லை" (மத் 28:6) என்ற போர்டு அநேக சபை வாசல்களில் தொங்கவிடப்பட வேண்டிய நிலை !

1.ஞாயிற்றுக்கிழமைகளில் வெறும் 2 மணி நேரம் சபையில் உட்கார்ந்து விட்டு, மீதி நாள் முழுவதும் மால்களிலும், நண்பர்களுடனும், beach லும், பார்க்கிலும், ரெஸ்ட்டாரன்ட்டுகளிலும், இன்ட்டர்நெட்டிலும், உலகத்தாரோடு சேட்டிங்கிலும் டேட்டிங்கிலும் பொழுதுபோக்கும், விசுவாசி என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்களை விட்டு விலகாமலும் அவர்களைக் கைவிடாமலும் இருந்து அவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்க, ஒரு பரிசுத்த தேவன், அவர்களுக்குக் கடமைப்பட்டு கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

2. தங்கள் சிஸ்டம் முழுவதிலும், லேப்டாப்பிலும் செல் போனிலும் கண்ட கண்ட இமேஜ்களையும் ஸ்டேட்டஸ்களையும் போட்டு, அவைகளை அரை நிர்வாண, முழு நிர்வாணப் படங்களால் நிறைத்து வைத்துக் கொண்டு, யூ-ட்யூபிலும் ட்விட்டரிலும் facebook லும் வாட்ஸப்பிலுமே வாழ்ந்து கொண்டு,"எங்கள் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நாங்கள் தடைசெய்யவில்லை" என்று தங்களை Gen -next பிலீவர்ஸ் என்று அழைத்துக் கொள்ளும் இன்றைய இளைய தலைமுறை இளவட்டங்கள் கேட்பதை எல்லாம் அள்ளிக் கொடுத்துக் கொடுத்து அவர்களுக்காக யாவையும் செய்து முடிக்க, ஒரு வைராக்கியமுள்ள மகா பரிசுத்த தேவன், அவர்களுக்குக் கடமைப்பட்டு கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

3. ஆராதனை என்ற பெயரில் போடும் ஆட்டபாட்ட குத்தாட்டக் குதியாட்டக் கும்மாளங்களைக் கண்டும் காணாதவர் போலிருந்து, தீர்க்கதரிசனம் என்ற பெயரில் தன் ஜனத்தை வஞ்சித்துத், தங்கள் வயிறு வளர்த்து, சபையாகிய ஆசரிப்புக்கூடார வாசலிலேயே சகல அக்கிரமங்களையும் சகஜமாய் நடப்பிக்கும் ஆசாரிய போதகர்களின் மக்களாகிய நவீன ஓப்னி பினெகாஸ்களை, இன்னும் அவர்களது ஊழியங்களிலே உயர்த்தி உயர்த்தி ஆசீர்வதித்துப் பெருக்கிக் கொண்டே போக, தமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் சபையை சம்பாதித்த அந்த இரட்சகர், இப்படிப்பட்டவர்களுக்குக் கடமைப்பட்டு கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

4. ஆசீர்வாதம், அரவணைப்பு, பாதுகாப்பு பரிபூரணம், செழிப்பு கொழிப்பு, வாக்குத்தத்தம் வல்லமை என்று ஆனந்த மழையிலும் அபிஷேக அருவியிலுமே மக்களைக் குளிப்பாட்டி திக்குமுக்காடச் செய்து, தேவனது சித்தத்தை அறிவதிலும், நித்தியத்தின் கண்ணோட்டத்திலுமே வாழ்ந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்பட்டு வாழும் வாழ்விலிருந்து வழி தப்பப் பண்ணி, ஜனங்களை ஆவிக்குரிய இருளிலும், குருட்டாட்டத்திலுமே வைத்திருக்கும் இன்றைய நூதன அப்போஸ்தலர் கூட்டத்தோடு, கூட இருந்து கிரியை நடப்பித்து, தமது வல்லமையுள்ள வசனத்தை உறுதிப்படுத்துவதற்கு, ஜீவனுள்ள தேவன், அவர்களுக்குக் கடமைப்பட்டு கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

5. எளிய பாமர மக்கள் கொடுக்கும் காணிக்கைகளையும், அனாதைகளையும் விதவைகளையும் பராமரிக்க வெளிநாடுகளில் உள்ளவர்கள் தாங்கள் உபவாசம் செய்து மிச்சம் பண்ணி சேர்த்து வைத்து அனுப்பும் டாலர்களையும், பைபிள் காலேஜ் நடத்தவும் ஆலயங்கள் கட்டவும் கொடுக்கப்பட்ட நன்கொடைகளை வைத்துத் தங்களுக்கு நிலபுலன்களை வாங்கவும், வீடுவாசல்களைக் கட்டிக் கொள்ளவும், வசதியாய் வாழவும், தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்க வைக்கவும், கோடிக்கணக்கான செலவில் அவர்களுக்குத் திருமண வைபவங்கள் நடத்தி அழகு பார்க்கும் இன்றைய சுவிசேஷகர்களோடும் பாஸ்டர்களோடும் உடன் இருந்து, அவர்கள் வாஞ்சித்த காரியங்களை எல்லாம் தப்பாமல் வாய்க்கப்பண்ண, தான் ஐசுவரிய சம்பன்னராயிருந்தும், தன்னையே தரித்திரர் ஆக்கிக் கொண்ட அந்த தயாபர தேவன், அவர்களுக்குக் கடமைப்பட்டு கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

ரேவன்ஹில் தொடர்கிறார்..

என்னுடைய கணிப்பின்படி, ஒரு தேசமோ, தேசங்களோ, சபையோ, கர்த்தரை விட்டு சோரம் போய், தூரம் போய் நிற்கும் தூரத்தைக் காணும் போது, ஒன்றே ஒன்றுக்கு தான் நாம் முற்றிலும் தகுதியாய் இருக்கிறோம் - அது அவரது தண்டனையின் பிரம்பு !

ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்தஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்தும், அவரை மறந்து, மறுத்து மறுதலித்துப் போன நாம், தேவனுடைய குமாரனை நாமே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தினாலும், நாம் ஒரு காலத்தில் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசங்களை மறவாதவர் மட்டுமல்ல..

தாம் நேசிக்கிற எவனையும் சிட்சிக்கிற அந்த நல்ல தேவன், நம்மை இன்னும் நேசிக்கிறதினாலே, ஒரு மகா பெரிய அழிவுக்கு முன்னாக, சீக்கிரமே தமது சிட்சையின் பிரம்பைக் கையாடி - தமது பக்கமாய் நம்மைத் திருப்பிக் கொள்வாராக !

கொஞ்சம்கூட வெட்கமோ, பயமோ நடுக்கமோ இன்றி, நமக்கு அவர் தமது சொந்தக் கைகளாலே எழுதிக் கொடுத்த பத்து கற்பனையின் கற்பலகைகளை உடைத்தெறிந்து, ஒழுக்கக் கேடுகளின் விளிம்புக்கே வந்து நிற்கிறோம் - எப்போது முகங்குப்புற விழுந்து சாவோம் என்ற நிலையில் !

தங்கள் தலைமேலும் தங்கள் குடும்பத்தின் மேலுமே பணத்தைத் தண்ணீராய் வார்த்து செலவழித்துக் கொள்ளும் ஒரு கூட்டம் - எப்போது பாப்பராய்ப் போய்த் தீருவோம் என்று வாரி வாரி இறைக்கிறது !

பெருமையோடு பாவத்தைப் பச்சைத் தண்ணீராய்க் குடிக்கும் இந்த செல்வச் சீமான்களையும், செருக்குச் செல்விகளையும், அவரது அணுகுண்டு மழையிலிருந்து எந்தப் பாதாளப் பதுங்கு குழிகளும் பாதுகாப்பு பங்களாக்களும் தப்புவிக்க போதுமானதாய் இருக்கப் போவதில்லை !

நாம் இன்னும் நாறி நாசமாய்ப் போவதிலிருந்து இந்தக் கடைசி நொடியில் நம்மைத் தப்புவிக்க ஒன்றே ஒன்று - ஒன்றே ஒன்று உண்டானால், அது சபை - அதுவும், அவரது இரத்தத்தால் கழுவி சம்பாதித்து அவருக்கென்று மீதியாய் வைக்கப்பட்ட உண்மையான சபை ஒன்றே !

சோதோமுக்காக தேவன் முன் மன்றாடி நின்ற ஆபிரகாம் கண்ணீரோடு நகர்ந்த பின்னோ, அல்லது அவனோடு பேசி முடித்த தேவன் போன பின்போ தான் சோதோம் வெந்து அழிந்தது !

ஆபிரகாம் "இன்னும் தேவனுக்கு முன் நின்று கொண்டிருந்த போது.." சோதோமின் ஜனத்துக்காக தேவனுக்கு முன் நிற்கும் ஒரு பிரதிநிதி இருக்கத்தான் செய்தான் !

பின்வாங்கிப் போனவனானாலும், லோத்து சோதோமிலே இருந்தவரை, தமக்கு முன் ஏதோ ஒரு பிரதிநிதியை அந்த ஜனத்துக்காக, அவனில் காணவே செய்தார் தேவன் !

அவர்கள் அவருக்கு முன்பாகத் தாங்கள் நின்ற வரையில் தேவன் சோதோமின் மேல் கை வைக்கவுமில்லை..
கொமோராவை அவர் தொடவுமில்லை !

பத்து நீதிமான்களுக்காகக் கடைசி வரை கெஞ்சி, அந்தப் பத்து கூட இல்லாத பரிதாப நிலையில், ஆபிரகாமை விட்டு - தேவன் போய் விட்ட பின்பே - அக்கினி மழை, மாரியாய்ப் பொழிந்தது !

லோத்து சோதோமை விட்டு வெளியேறிய பின்பே - தேவனின் அக்கினி கந்தகமாய்க் கொட்டித் தீர்த்தது !

கர்த்தருக்காக மீதியான ஒரு சிறு கூட்டம் சோதோமிலே இல்லாததினாலேயே அது முழுவதும் வெந்து அழிந்தது.

சகோதரரே, ஜெபியுங்கள் !
சங்கீதக்காரனைப் போல, " யோசேப்பை ஆட்டுமந்தையைப் போல
நடத்துகிறவரே, செவிகொடும்..
எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும்..
உமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும்..
அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்..
என்று ஜெபியுங்கள் (சங் 80:1,3)..

ஆனால் அமெரிக்காவிலோ, அகில உலகிலோ மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பேராசை என்னும் பாகால்களுக்கு முடங்காத முழங்கால்களையும் அவனை முத்தமிடாத வாயையுமுடைய ஒரு சிறு கூட்டத்தை தேவன் தமக்கென்று இன்னும் மீதியாக வைத்தே வைத்திருக்கத்தான் செய்கிறார் !

துக்கத்தோடு சொல்வேன்..
"இந்தத் தலைமுறையினராகிய நமது பாவத்தின் ஏந்திரக்கல்லை நமது கழுத்திலேயே கட்டி, நம்மை நரக பாதாளங்களின் அடியில்லா ஆழங்களில் தேவன் அமிழ்த்திப் போடுவாரானால், அதைவிட ஆக்கினை என்ன உண்டு ?

பாவத்தில் ஊறினவன் இந்த உண்மையை அறிவதுமில்லை..
இந்த பயங்கரத்தின் நிலையை உணர்வதுமில்லை..
சொன்னால் நம்புவதுமில்லை..
ஏற்றுக்கொள்வதுமில்லை !

இந்தக் கடைசி நாட்களின் கடைசி நாழிகையிலே அமெரிக்காவையும் அகில உலகையும் காக்கும் ஒன்றே ஒன்று உண்டானால், அது உலகத்துக்கு உப்பாகிய அவரது சபை ஒன்றே !

விசுவாசியே ! ஊழியனே ! இது உன் நாள் ! உன் நாழிகை !

தேவ ஜனமே ! விழித்திருக்க விழித்தெழும்புவாயோ ?

திறப்பிலே நிற்க திரும்பி வருவாயோ ?

இராக்காலம் வருமுன் கிரியை செய்ய முன்
வருவாயோ ?

யுத்தத்தில் நிற்க சேனையாய் எழும்புவாயோ ?

சோதோமிலே வேத புத்தகம் இருந்ததில்லை !

சோதோமிலே வேத கலாசாலை இருந்ததில்லை !

சோதோமிலே வேத பிரசங்கி இருந்ததில்லை !

சோதோமிலே வேதக் கோயில் இருந்ததில்லை !

சோதோமிலே வேதத்தின் தேவனும் இருந்ததில்லை !

ஆகவே போக்குச் சொல்ல நமக்கு இங்கே இடமும்
இல்லை !
தப்பிச்செல்ல வேறு வழியும் இல்லை !

Sodom Had No Bible..
So have we No Excuse !

CHAPTER 09

நான் கொடுக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணுவாயோ ?

நான் கொடுக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணுவாயோ ?

லூக்கா 12 : 49,50

“பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன்..அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்..

ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு..அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.."

கடந்த 70 வருஷங்களாக உலகம் முழுவதிலும் ஏறக்குறைய எல்லா சபைகளின் மாநாடுகளிலும் நான் கலந்து கொண்டிருக்கிறேன்..

அவைகளில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பற்றிய 50 வித்தியாச வித்தியாசமான செய்திகளைக் கேட்டிருக்கிறேன்..

ஆனால் இந்த 70 வருடங்களில் ஒரு முறையாவது "இயேசு கிறிஸ்து அக்கினியைப் போடுமுன் தான் முழுகி எழுந்திருக்க வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு " என்ற வார்த்தையை மையமாகக் கொண்டு ஒருவராவது பிரசங்கித்து நான் கேட்டதே இல்லை..

இங்கே இயேசு சீஷர்களிடம் சொல்கிறார்,
"நான் பூமியில் அக்கினியைப் போட வந்தேன்..

நான் சொல்வேன்..
சபையின் சின்னமே அக்கினி தான்.

நம் தேவன் பட்சிக்கிற அக்கினி..

பொதுவாக எது ஒன்றும் பரவும் போது பலவீனப்படும்..ஆனால் சபை உண்மையிலே விரிவடைந்து நாலாபக்கமும் பெருகும் போது பெலத்தின் மேல் பெலனடைகிறது.

நாம் தோல்வியடைந்து தொய்ந்து போவது ஒரு போதும் தேவ திட்டம் அல்ல..

பாருங்கள்..இயேசு சொல்கிறார்..
"அது முடியுமளவும் நான் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.."

மத்தேயு 20:17-22 ல் இயேசு யாக்கோபு யோவான் இருவரின் தாயைப் பார்த்துக் கேட்கிறார்..

"நீங்கள் கேட்டுக் கொள்வது இன்னதென்று உங்களுக்குத் தெரியவில்லை..

நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும் நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமோ ?”

அதையே லூக்காவில் சொல்கிறார்..
" பூமியில் அக்கினியைப் போட வந்தேன்.."

நான் கேட்கிறேன்..
அந்த நேரத்தில் அக்கினியை அனுப்ப அவருக்குத் தடையாய் இருந்தது என்ன?

ஒரு முழுக்கு.. ஒரு ஸ்நானம்..
(ஆங்கிலத்தில் Baptism என்றே போடப்பட்டுள்ளது)

ஒரு துக்கத்தின் ஸ்நானம்..
ஒரு வேதனையின் ஸ்நானம்..
ஒரு பாடுகளின் ஸ்நானம்..
ஒரு கண்ணீரின் ஸ்நானம்..

கெத்சமெனே என்னும் ஆலையில் பிழிந்தெடுக்கப்பட்ட இரத்தத்தின் ஸ்நானம்..

நீங்கள் பாருங்கள்..
உலகத்தில் எங்குமே சிலுவைக்கு முன்னாக மேலறை அனுபவம் கிடையாது..

மேலறையின் பெந்தேகோஸ்தே அனுபவத்துக்கு முன்னானது எப்போதும் சிலுவையே..

ஆனால் இதை நாம் மாற்ற முயற்சிக்கிறோம்..

சிலுவையின் கீழ்த் தன் பாவத்துக்காகக் கதறாதவனைக் கூட
" பரிசுத்த ஆவியின் அபிஷேகம் உனக்கே!"
என்று கூவி அழைத்து, சிலுவையை லாவகமாக மறைத்து விடுகிறோம்..

மக்கள் நினைக்கிறார்கள்..
" ஆ ! நம்ம ஆண்டவர் தானே! எப்போ கூப்பிட்டாலும் வருவார்.. என்ன கேட்டாலும் தருவார்..என்ன பிரச்சனையானாலும் தீர்ப்பார்.." என்று தேவனைத் தங்கள் வட்டத்துக்குள் வளைக்க நினைக்கும் கூட்டம்..

மகிமையினாலும் மகத்துவத்தினாலும் நிறைந்த அவர் முன் தாழ விழுந்து அவரை ஆராதிக்கத்தகும் ஆண்டவராக அல்ல.. மாறாகத் தாங்கள் கை தட்டினால் தங்கள் தேவைக்கு வந்து நிற்கும் மனிதராகவே பார்க்கும் ஒரு ஜனம்..

இயேசு கேட்டார்..
"நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்களோ?"

"ஆம் ஆண்டவரே.." என்றார்கள்.
அந்தத் தாய் உணர்ந்து சொன்னாளோ உணராமல் சொன்னாளோ தெரியாது..

ஆனால் இயேசு வரப்போவதை உணர்ந்தே கேட்டார்..

இயேசுவின் மரணத்துக்குப்பின் மிக சீக்கிரத்திலேயே யோவானின் சகோதரன் யாக்கோபு ஏரோது அகிரிப்பாவால் பட்டயத்தால் கொல்லப்பட்டான்..

அதைப் பார்க்க அவனது தாய் உயிரோடு இருந்தாளோ இல்லையோ அறியோம்..

தனக்குப்பின் நடக்கப்போகும் காரியங்களை முன் வைத்தே தான் இயேசு சொன்னார்..

"அக்கினியை அனுப்புவேன்..
ஆனால் அதற்கு முன் நான் முழுகி எழுந்திருக்க வேண்டிய ஒரு அமில ஸ்நானம் உண்டு..
ஒரு இரத்த ஸ்நானம் உண்டு.."

ஜெனரல் வில்லியம் பூத்தின் யுத்த சத்தப் பாடல் ஒன்று உண்டு..இன்றைய சபைக்கு அறிமுகமில்லாத ஒரு பாடல்..

" ஓ கிறிஸ்துவே ! சுட்டெரிக்கும் அக்கினி அனுப்புமே !

அனுப்புமே உம் ஆவியை!
இரத்தக்கிரயம் தந்து பெற்ற அக்கினியை!

என்ன விலையானாலும் எங்களுக்கு இன்று
வேண்டுமே!இன்னொரு பெந்தேகோஸ்தே!"

உங்களுக்குத் தெரியுமோ?இரட்சண்ய சேனை ஒரு நயா பைசா இல்லாமல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சேனை..

ஆனால் வெடித்துப் பரவியது..90 ஆண்டுகளுக்குள் 70 நாடுகளில்..70 நகரங்களில் அல்ல 70 நாடுகளில்..

தங்கள் பெரிய பெரிய வேலைகளையும் பட்டம் பதவிகளையும், மாட மாளிகைகளையும் உதறித் தள்ளிவிட்டுத் தங்களை சேனையில் இணைத்துக் கொண்டோர் ஏராளம்..

காரணம் அங்கே அக்கினி பற்றி எரிந்து கொண்டிருந்தது..இஸ்ரவேலரின் கண்முன் அக்கினி ஸ்தம்பம் பிரத்தியட்சமாய் இருந்தது போல இவர்கள் தங்கள் மத்தியில் பற்றி எரிந்த பரிசுத்த ஆவியின் அக்கினியைக் கண்கூடாகக் கண்டார்கள்..

தன் ஜனங்கள் தெருத் தெருவாய் ஜெய கெம்பீரத்தோடு சேனையின் இராணுவ முழக்கத்தோடு இந்தப் பாடலைப் பாடிக் கொண்டு சுவிசேஷம் பறைசாற்றுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார் ஜெனரல் பூத்..

இந்த அக்கினி..இதுவே இன்றைய சபையின் அத்தியாவசியத் தேவை..

ஆனால் நாம் இன்றிருக்கும் நிலைக்கும் இந்த அக்கினி ஸ்நானத்துக்கும் நடுவே நிற்பது அவர் கையால் நாம் குடிக்க வேண்டிய ஒரு "பாத்திரம்".

அந்தப் பாத்திரம் என்ன ?
மத்தேயு 26 க்கு வாருங்கள்..
இங்கே உங்களுக்கு ஒரு பாத்திரம் உண்டு..

அப்பொழுது அவர் சற்று அப்புறம் போய், முகங்குப்புற விழுந்து:
"பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால்
நீங்கும்படி செய்யும்.." என்று ஜெபம் பண்ணினார்..

அது என்ன பாத்திரம்?

அது துரோகத்தால் நிறைந்த பாத்திரம்..
அது உள்ளான வேதனையால் நிறைந்த பாத்திரம்..

அது ஆவி கலங்கிய பாத்திரம்..
அது கண்ணீர் நிறை பானபாத்திரம்..

நீ இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணுவாயோ ?

இயேசு சொன்னார்..
" நான் இதில் பானம் பண்ணுமட்டும் எவ்வளவோ
நெருக்கப்படுகிறேன்..

ஆனால் நான் இந்த ஸ்நானத்தின் ஊடாகக் கடந்து சென்றே ஆக
வேண்டும்.."

" நான் மேலே பிதாவினிடத்தில் போனாலொழிய பரிசுத்த
ஆவியானவர் ஊற்றப்படப் போவதில்லை..

பிதா எனக்குத் தந்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாத வரை
நான் எடுத்துக் கொள்ளப்படப் போவதுமில்லை..

ஆகவே நான் இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணினாலொழிய
அக்கினி இறங்கப் போவதில்லை.."

ஆகவே தான் அவர் கெத்சமனியின் கஸ்தியின் வழியே கடந்து
சென்றார்..
அவர் அந்தத் தனிமையின் குகையின் வழியே கடந்து சென்றார்..

நீ அதில் பானம் பண்ணுவாயோ ?

உனக்குள்ளே நொறுங்கிக் கலங்கிப் பிழியப்பட நீ ஆயத்தமா?

இன்று ஜனங்கள் விரும்புவதெல்லாம் வலியில்லா
பெந்தேகோஸ்தே..
அப்படி ஒன்று இல்லவே இல்லை..

பெந்தேகோஸ்தே அனுபவத்துக்குப் பின் நடந்தது என்ன ?
சொல்லுங்கள்!

அவர்கள் சென்றது ஜெயிலுக்கு!

அது கொழுமை அல்ல..
கொடுமை ! அது வளமை அல்ல..வலி !

அது தனிமை ! வெறுமை ! வறுமை !

அவருக்குப் பின் செல்வது என்பது விளையாட்டு அல்ல..சில காலம்
பின் செல்வதும் பின் வாங்குவதும் பிறகு அவரை
எட்டிப்பார்ப்பதும்..இது அல்ல பின் செல்வது..

என் வாலிப நாட்கள்அவை..ஒரு நாள் இங்கிலாந்தின்
மான்ச்செஸ்டரிலிருந்து 9 மைல் தூரத்திலுள்ள ஓல்டாம் என்ற
இடத்தில் தெருவில் நடந்து கொண்டிருந்தேன்..

அந்நாட்களில் அங்கிருந்த ஒரு பெரிய சபையில் நான் பாஸ்டராக
இருந்தேன்..தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்த போது ஒரு
வீட்டிலிருந்து ஒரு பெண் என்னை சத்தமாய்க் கூப்பிட்டாள்..

"பாஸ்டர்..நீங்க தானே அந்த சபையில் பாஸ்டரா இருக்கீங்க..
நான்அடிக்கடி அந்த சபைக்கு வருவேன்..பின்னால உட்காருவேன்
நான் ரொம்ப ஏழை..

என் கிட்ட உங்களுக்கு கொடுக்க எதுவுமில்லை கொஞ்சம் என்
வீட்டுக்குள் வந்து ஒரு கப் டீ குடிப்பீங்களா பாஸ்டர்?"

சரி என்று அவளது வீட்டுக்குள் போனேன்..

வீடு ஒரே நாற்றக்காடு..அவளைப் பார்த்தால் குளித்தே பல நாட்கள்
ஆகியிருக்கும்..நகமெல்லாம் அழுக்கு..

கிச்சன் மூலையில் பாத்திரங்கள் கழுவாமல் குவிந்து
கிடந்தது..அதிலிருந்து ஒரு கப்பை எடுத்தாள்.

ஏற்கனவே குடித்த டீ காய்ந்து அதற்கு மேல் கரப்பான் பூச்சிகள் ஒட்டிக்கொண்டு..ஐயோ !

ஒரு கப்பை எடுத்து டீயை ஊற்றினாள்.. "பாஸ்டர் பால் இல்லை கறுப்பு டீ குடிப்பீங்களா" "சரி" என்றேன்.

அதுவும் சில்லென்று குளிர்ந்து போயிருந்தது..அழுக்குக் கைகள் நடுநடுங்க எடுத்துக்கொடுத்தாள்..

வாங்கிக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன்."என்ன பார்க்கிறீங்க குடிங்க பாஸ்டர்" என்றாள்..

அந்த டீ கப்பைக் கையில் வாங்கியதும் என் சிந்தனை அங்கே 2000 மைல்களுக்கப்பால் கெத்சமனி என்ற இடம் நோக்கி 2000 வருடங்களுக்குப் பின்னே சென்றது..

பிதா,அழுக்கும் அசுத்தமும் பாவமும் நிறைந்த ஒரு பாத்திரத்தைத் தன் மகனுக்குக் குடிக்கக் கொடுக்கிறார்..

அந்த கெத்சமனே தோட்டத்தில், துரோகம் நிறைந்த பாத்திரம்.. அக்கிரமமும் மீறுதலும் காட்டிக் கொடுத்தலும் தனிமையும் நொறுங்குதலும் நிறைந்த பாத்திரம் ஒன்று கொடுக்கப் படுகிறது..

இதைச் சொல்லும் போதே நான் டேவிட் லிவிங்ஸ்டனை நினைக்கிறேன்..

ஸ்காட்லாந்திலே க்ளாஸ்கோவுக்கு 9 மைல் தூரத்தில் டேவிட் லிவிங்ஸ்டனுக்கு ஒரு பெரிய ஞாபகார்த்த மண்டபம் உள்ளது..

அதிலே அந்த தேவ மனிதன் ஆப்பிரிக்காவில் தங்கியிருந்து வருஷக்கணக்காக ஜெபித்து ஊழியம் செய்து வந்த அவரது வீட்டு மாடல் ஒன்று இருக்கிறது..

அதைப் பார்த்தால் இந்தியாவில் கூரை வேய்ந்த சிறு குடிசை மாதிரி ஒரு சிறிய வீடு..

அதிலே ஒரு சிறிய கட்டில்.அது கட்டில் கூட அல்ல..இரண்டு மூங்கில் கம்புகளுக்கு நடுவில் இலைகளை வைத்து தைத்த ஒரு படுக்கை..பக்கத்தில் ஒரு மெழுகுவர்த்தி எரிகிறது..

அதின் அருகில் டேவிட் லிவிங்ஸ்டன் முழங்காலில் ஜெபிக்கிற ஒரு மாதிரியை செய்து வைத்திருக்கின்றனர்..

அந்தக் குடிசையில் ஒவ்வொரு இரவும் தன் கைகளை உயர்த்தி.."தேவனே இந்த உலகத்தின் பாவத்தின் ரணங்கள் குணமாகாதோ??" என்று கதறி ஜெபித்தார் அந்த தேவ மனிதர்...

ஆப்பிரிக்காவில் அடிமை வியாபாரம் கொடிகட்டிப் பறந்த அந்த நாட்களில் போர்ச்சுக்கீசியருக்கு எதிருக்கு எதிர் சமர் நின்றார் லிவிங்ஸ்டன்..

இன்னும் அந்த மனிதர் பட்ட பிரயாசங்களும் அலைச்சல்களும் வனவிலங்குகளிடம் பட்ட காயத்தின் தழும்புகளும் தேவனின் ஞாபகப்புத்தகத்தில் அல்லவோ இருக்கிறது!!

ஒரு முறை காட்டில் சிங்கம் தாக்கி அவரது முகத்தாடையின் ஒரு பக்கமே சேதமானது..

ஏன் இதெல்லாம்?

அவரும் ஒரு கெத்சமெனியின் அனுபவத்தில் கடந்து சென்றார்..தனக்கென்று கொடுக்கப்பட்ட கசப்பான பாத்திரத்தில் நிச்சயமாகவே பானம் பண்ணினார் லிவிங்ஸ்டன்..

இறந்த தன் அன்பின் மனைவியைத் தன் கையாலே காட்டில் அடக்கம் பண்ணினார்..

அவர் பெற்ற பிள்ளை இறந்தது..அதின் தாயின் அருகில் அதையும் கிடத்தினார்..இன்னொரு பிள்ளை இறந்தது..அதையும் தன் கைகளினாலே அடக்கம் பண்ணினார்..

ஆனால் அந்தத் துக்கத்தின் திரளான வெள்ளம் அவருக்குள் இருந்த நேச அக்கினியை அவித்துப் போட முடியவில்லை..

மாறாக அந்த துக்கம் அவருக்குள் இருந்த அக்கினியைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யும் எரிபொருளாகவே மாறியது..

பிசாசு அவரது வேலையை தடை செய்யச் செய்யத் தன் ஜெபத்தைக் கூட்டினார் லிவிங்ஸ்டன்..

இரவெல்லாம் அவரது ஜெபத்தின் கதறுதல் அந்த ஆப்பிரிக்க் காடுகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது..

" தேவனே,இந்த உலகத்தின் பாவத்தின் இரணத்தைக் குணமாக்க மாட்டீரோ ?"

திரும்பவும் சொல்கிறேன்..
எழுப்புதல் நமக்கு இல்லாததற்கு இரண்டு காரணங்கள்

ஒன்று..
அது இல்லாமலே நாம் வாழப் பழகிக் கொண்டோம்.அது இல்லையென்றாலும் நமக்கு எந்த ஒரு வித்தியாசமும் இல்லை..

இரண்டாவது..அதின் விலை நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று..

நமது வழக்கமான அன்றாட வசதி வாழ்க்கையில் கர்த்தர் கை வைப்பதையோ தொடுவதையோ, அதில் மாறுதல் எதுவும் வருவதையோ நாம் ஒருபோதும் விரும்புவதில்லை..

கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரே ஒரு வழியில் தான் வாழ முடியும்..அது தேவன் விரும்புகிற வழியில் மட்டுமே..

தேவனுடைய வழி என்ன?

எல்லாம் உனக்கு சந்தோஷமாய்ப் போய்க் கொண்டிருக்கும் போது எப்போது வேண்டுமானாலும் அதில் ஒரு கசப்பைக் கலக்குவார்..

அது உன்னால் தாங்க முடியாத ஒரு கசப்பாய் இருக்கும்..ஆம் அது தான் தேவனின் வழி..

இப்போது சொல்லுங்கள்
அவர் தரும் பாத்திரத்தில் பானம் பண்ண ஆயத்தமா?

திரும்பவும் பாருங்கள்..
அதின் விலைக்கிரயம் கணிக்க முடியாத ஒன்று..

அவர் குடித்த பாத்திரத்தில் நீயும் குடிக்க விரும்புவாயோ ?

இன்று நமக்கும் எழுப்புதலுக்கும் நடுவே நிற்பது ஒரு கெத்சமனேயும் ஒரு சிலுவையும் மட்டுமே..

1904 ம் ஆண்டு..வேல்ஸில் ஈவன் ராபர்ட்ஸ் என்ற ஒரு வாலிபன்..அவன் அன்று நடத்திக் கொண்டிருந்த வாலிபர் கூட்டத்தில் 35 பேர் இருப்பார்கள்..

தன் கைகளை உயர்த்தி ஜெபிக்க ஆரம்பித்தான்.."தேவனே..
எங்களைத் தாழ்த்தும்..எங்களை நொறுக்கும்..எங்களை உடையும்..
சபையைத் தாழ்த்தும்..சபையை நொறுக்கும்.."

அதற்குப்பின் நடந்த ஓர் இரவுக் கூட்டத்தில் 1200 பேருக்கு மேல் இருந்திருப்பார்கள்..கர்த்தர் வெளியரங்கமாக அந்த வாலிபன் மேல் இறங்கினார்..

அந்தக் காட்சியைக் கண்டவர்.. அழகாக, அதே நேரம் நடுக்கத்தோடு எழுதுகிறார்...

" தான் சென்ற இடமெல்லாம் நாடு நகரமெல்லாம் அக்கினியைப் பற்றவைத்து..கூட்டம் கூட்டமான ஜனத்தைக் கர்த்தருக்கு நேரே திருப்பிய அந்த தேவ மனிதனும் ஒரு வெளியரங்கமான கெத்சமெனேயின் ஊடே கடந்து சென்றான்..

யாரோ ஒருவர் அவனை அடித்துப் பிழிந்து போட்டது போலத் தரையில் சுருண்டு விழுந்தான்.. அழுது புரண்டு கெஞ்சி சுக்குநூறாகிப் போனான்..

தனிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவியானவர் அவனை நொறுக்கியதை சுற்றியிருந்த கூட்டம் திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது..

யாரோ சொன்னார்கள்.."நாம் போய் அவருக்கு உதவி செய்வோம்.."வேறு யாரோ சொன்னார்கள்.."No..அவர் மேல் கைபோட வேண்டாம்..கர்த்தருடைய கரம் அவர் மேல் பலமாய் இறங்கியிருக்கிறது..”

சற்று நேரம் சென்று எழுந்து நின்றவன் முழுவதும் மாறிப் போயிருந்தான்..

அவன் முகத்தில் காணப்பட்ட மகிமை - முக்காடிட்டு மறைத்துக் கொள்ளும்படியாக இருந்தது..

அன்றிலிருந்து ஒரு புது வல்லமையின் யுகத்துக்கு,ஒரு புது ஆவிக்குரிய அதிகாரத்தின் உச்சத்துக்கு அவன் கடந்து சென்றான்..

யோவேல் 2 ம் அதிகாரத்தை இன்று திரும்ப ஒரு முறை வாசியுங்கள்..

நாம் அடிக்கடி சொல்கிறோம்..
"மாம்சமான யாவர் மேலும் அவர் தம் ஆவியை ஊற்றுவார்" என்று..

ஆனால் ஒரு நிமிஷம் நில்லுங்கள்..
அதற்கு முந்தின வசனங்களைப் படித்துப் பாருங்கள்..

வேதம் சொல்கிறது..
"ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழட்டும்..

ஆசாரியர்களே.. அலறுங்கள்.. நீங்கள் உள்ளே பிரவேசித்தவர்களாய் இரட்டுடுத்தி இராத்தங்குங்கள்.."

அதின் விலை பயங்கரமானது..

நான் சொல்லுவேன்..
"வாரத்துக்கு இரண்டு முறை 3 வாரங்கள் தொடர்ந்து ஆசாரியர்கள் ஆலயத்தில் இரவெல்லாம் இப்படி விழுந்து கிடந்து அலறட்டும்..

பிறகு சொல்லுங்கள்..
ஆவியானவர் நிரப்புகிறாரா இல்லையா என்று..

“அந்நிய பாஷையில்” அல்ல. .இது"கதறுதலின் பாஷையில்”

இதைத்தான் " வாக்குக்கடங்கா பெருமூச்சு" என்று ரோமர் 8 ல் வாசிக்கிறோம்.

இதைத்தான் இயேசு கெத்சமெனேயில் செய்தார்..இன்றும் பரலோகத்தில் நமக்காக செய்து கொண்டிருக்கிறார்..

நான் நம்புகிறேன்..
அவர் ஒரு ஆவிக்குரிய சுனாமியை, ஆவிக்குரிய பிரளயத்தை அனுப்பப் போகிறார்..அது சபைகளையும் ஜனங்களையும் புரட்டிப் போடப் போகிறது..

ஆனால் அதற்கு முன்..

நான் ஏற்கனவே சொன்னபடி..என் சபையிலுள்ள அந்தப் பெண் தந்த அந்த நாற்றமெடுத்த டீ கோப்பையைக் கண்டு நான் முகம் சுளித்து அதைக் கையில் வாங்கவே தர்மசங்கடப்பட்டேன்..

அவளோ கட்டாயப்படுத்தினாள்..
"குடிங்க பாஸ்டர்.."

அந்த நேரம் கெத்சமெனேயை நினைத்தேன்..
ஓ பிதாவே! உமக்குச் சித்தமானால் தயவு செய்து இது எனக்கு வேண்டாம்..

ஆனால் கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாயிருந்தார்..

இன்று கர்த்தர் உன்னை நொறுக்கச் சித்தமாயிருந்தால் நீ என்ன செய்வாய்?

உதவிக்கு யாருக்காவது போன் பண்ணுவாயோ ?
சபையை,பாஸ்டரைக் கூப்பிடுவாயோ ?

அல்லது "அவரே அதைத் தன் மேல் வைத்தார் என்று தனித்திருந்து மௌனமாய் உன் வாயைத் தூளில் நுழுந்துவாயோ?
(புலம்பல் 3:28,29)

இங்கே பார்!
ஏதோ சிறு பிள்ளைகளைப் பயிற்றுவிக்க தேவன் இங்கே வரவில்லை..
யுத்த வீரர்களைப் பயிற்றுவிக்க வந்திருக்கிறார்..

மிகச் சீக்கிரமே எதிர்பார்!
ஒருவேளை இந்த வாரமே ஒரு நாள் இந்தப் பாத்திரத்தைக்
கொண்டுவந்து உன் கையில் கொடுத்து "குடி" என்று சொல்லலாம்..

"நான் முழுகிய ஸ்நானத்தில் நீயும் மூழ்கி எழுவாயோ?" என்று
உன்னைக் கேட்கலாம்..

என் ஸ்நானம்-
என் துக்க ஸ்நானம்..
என் தனிமையின் ஸ்நானம்..
என் வலி, கூக்குரலின் ஸ்நானம்..

என் கைவிடப்படுதலின் ஸ்நானம்..
என் முகம் மறைக்கப்படுதலின் ஸ்நானம்..

ஓர் இருளின் ஸ்நானம் !
சகலமும் கலந்த ஒரு கசப்பின் பாத்திரம் !

குடிப்பாயோ ?
அல்லது எதுவும் சாக்குப்போக்குச் சொல்லி
தப்பித்து ஓடப் பார்ப்பாயோ?

அவர் கேட்பதெல்லாம் கீழ்ப்படிதல் மட்டுமே..
கீழ்ப்படிதல் ஒன்றே எல்லாவற்றுக்கும் திறவுகோல்!

இது ஒரு சீரியஸான விஷயம்.நேரம் மிக வேகமாக ஓடிக்
கொண்டிருக்கிறது..

இயேசுவோடு இறுதிவரை யாரும் நிற்கவில்லை. எல்லாரும் அவரை
விட்டு ஓடிப் போனார்கள்..

ஒருவேளை நீயும் எல்லாராலும் கைவிடப்படலாம்..ஒருவர் கூட
உன்னோடு நிற்காமல் போகலாம்..

இது ஒரு தன்னந்தனியே நடந்து செல்லும் வாழ்க்கை !
ஆனால் மிக மிக மகிமையான வாழ்க்கை !!



CHAPTER 10

401 வது தீர்க்கதரிசி

401 வது தீர்க்கதரிசி
Rev.Vance Havner

1 இராஜா 22

வேதத்தில் ஆகாபின் வாழ்க்கையையும் காலத்தையும் காட்டிலும் விநோதமானதும், வியப்பானதும், விபரீதமானதுமான காலம் வேறு எதுவுமில்லை.

பழைய ஏற்பாட்டு மிகச்சிறந்த கதாபாத்திரங்களும் மிக மோசமான கதாபாத்திரங்களும் அவன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்களே..

யேசபேல் என்ற அரக்கியும், எலியா என்ற அக்கினியும் வாழ்ந்த சமகாலமது.

காலம் கொடுமையாய் இருந்ததே தவிர மந்தமாக அல்ல.
ஒவ்வொரு நிமிடமும் எதுவும் எப்போதும் நடக்கலாம் என்ற விறுவிறுப்பான சூழ்நிலை..

அந்த நாட்களில் ஒரு முறை ராமோத் - கீலேயாத்துக்கு விரோதமாகப் படைகளைக் குவித்தான் ஆகாப். தன்னோடு யூதாவின் ராஜா யோசபாத்தையும் கூட்டிக் கொண்டான்.
நல்லவனே ஆனாலும் எளிதாகச் சிக்கிக் கொண்டு ஆகாப் வைத்த விருந்தில் மதிமயங்கிப் போனான் யோசபாத்.

போருக்குப் போகுமுன், எதற்கும் கர்த்தரிடத்தில் விசாரித்து விடுவோமே என்றான் அவன்.
ஆனால் அதற்குள் காலம் கடந்து,
ஏற்கனவே அங்கு 400 தீர்க்கதரிசிகள் கூடிவிட்டிருந்தனர்.

அவர்கள் வாக்கு ஏகவாக்காய் இருந்தது.
400 பேரும் சொல்லிவைத்தாற் போல ஒரே மாதிரி ஆகாபுக்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொன்னது யோசபாத்துக்கு எங்கேயோ இடித்தது..

" இவர்களை அல்லாமல் தேவனிடத்தில் விசாரிக்க கர்த்தருடைய (400 பிரசங்கிகள் ஒரு காரியத்தை ஒரே மாதிரி சொன்னால் யோசிக்கத்தான் வேண்டியிருக்கிறது..)
தீர்க்கதரிசிகள் யாரும் இங்கே இல்லையா ?"
(1 ராஜா 22:7) என்று சற்று கவலையோடு கேட்டான் யோசபாத்.

"இன்னும் ஒருவன் இருக்கிறான்.." என்றான் ஆகாப்.(கர்த்தருக்கு ஸ்தோத்திரம்..கர்த்தருக்காக நிற்கும் யாரோ ஒருவர் ஒவ்வொரு காலகட்டத்திலும் இருக்கவே செய்கின்றனர்!)

"அவனைப் பகைக்கிறேன்..அவன் என்னைப்பற்றி நன்மையாக அல்ல.. தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்கிறவன்.." என்றான் ஆகாப் வெறுப்போடு.

(உலகத்தின் கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிறதென்று நான் சாட்சி கொடுக்கிறபடியால் அது என்னைப் பகைக்கிறது.." (யோ 7:7) என்ற மகா தீர்க்கதரிசியானவரின் வார்த்தைகள் நினைவுக்கு வருகிறதோ ?)

ஒருவன் மிகாயாவை அழைக்கச் சென்ற போது, 400 பேரில் ஒருவனாகிய சிதேக்கியா இரும்புக் கொம்புகளை செய்து மாட்டிக் கொண்டு, "இதைப் போலவே நீர் சீரியர்களை முறிய அடிப்பீர்" என்று போட்ட நாடகம், ஹாலிவுட், பாலிவுட்டை மிஞ்சியது.

அன்றைய நாள் ஒரு கூட்டணியின் நாள். ஆகாபும் யோசபாத்தும் கலந்த கூட்டணி. 400 கள்ளத் தீர்க்கதரிசிகள் ஒன்று சேர்ந்து கூட்டு வைத்த கூட்டணி.

மிகாயாவைக் கூப்பிடப் போனவன் சொன்னான்..
"எல்லாருடைய வாக்கும் ஏகவாக்காய் இருக்கிறது.நீரும் அவர்களைப் போலவே சொல்லும்" என்று..

ஆனால் இந்தக் கட்டுக்குள் அடங்கி, கூட்டு சேர்ந்து வேட்டு வைக்க மிகாயா, எந்த அரசனுக்கும் ஆண்டிக்கும் கட்டுப்பட்டவனல்ல.. யாருடைய தாளத்துக்கும் ஆடுபவனுமல்ல..

ஆளுக்கேற்ப கலர் மாறும் பச்சோந்தியுமல்ல.. பத்தோடு பதினொன்றும் அல்ல அவன்..

ஜோசப் பார்க்கர் சொன்னார்.. "401வது தீர்க்கதரிசியை உலகம் வெறுக்கிறது. அப்படிப்பட்ட 401வது தீர்க்கரிசி தான் மிகாயா.."

அவன் சொன்னான்..
"கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்வேன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்கிறேன்.." என்று..
(1 இரா 22:14)

அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசி அல்லவா ?

அதற்காக அவனுக்குக் கிடைத்தெல்லாம் இடுக்கத்தின் அப்பமும் இடுக்கத்தின் தண்ணீருமே!

ஆகாபின் பந்தியிலே மாண்புமிகு மந்திரியாய் அமர்வதைக் காட்டிலும் இடுக்கத்தின் அப்பத்தோடும் தண்ணீரோடும் தலை நிமிர்ந்த தீர்க்கனாய் நிற்பது நலம் !

நமது இன்றைய நாட்கள் மிகாயாவின் நாட்களை விட மிகையானது அல்ல.ஆவிக்குரிய ஆகாபுகளும் யேகோவாவின் யோசபாத்துக்களும் கூட்டணி வைத்து கூடிச் செல்லும் காலமிது!

ஒரே உலக பொருளாதாரம்,ஒரே உலக மையம், ஒரே உலக சமயம் என்ற "ஒரே கூட்டணியில்" கூட்டு வைக்கும் காலமிது..

இப்படிப்பட்ட காலங்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை உருவாக்குவதில்லை.

தேவனுக்காக அவரது பட்சத்தில் நின்று பேசும் மனிதர்கள், தங்களைச் சூழ்ந்து நிற்கும் மாயையான ஆவிக்குரிய புகைமூட்டத்தோடு கலப்பதுமில்லை, அவற்றோடு கரைந்து போவதுமில்லை.

தன் காலத்தின் நாகரீகம்,கலாச்சாரம்,
வளர்ச்சி- இவைகளின் மத்தியில் அவைகளோடு அவைகளாகக் கலவாத ஒருவனாகத் தான் தனித்து நின்றான் நோவா..

"இன்னிக்கே உலகம் முடியப்போவுதுன்னு இம்மாம் பெரிய வீட்டைக் கட்றாண்டா இந்த மறகழண்டவன்.." என்றே அவன் காலத்தினர் நக்கலடித்திருக்க வேண்டும் நோவாவை..

யேசபேலின் பந்தியில் சாப்பிட்ட பாகாலின் தீர்க்கதரிசிகள் மத்தியில் துண்டாகத் தனித்து நின்றான் எலியா..

அவன் சவால் விட்டபோது அந்த "சோத்துக் கூட்டம்" பதில் பேசாமல் அமைதியாய் நின்றது.

தன் காலத்து மத- அரசியல் கூட்டத்துக்கு மத்தியில் தனித்தே நின்றான் தீர்க்கதரிசி ஆமோஸ்.

சமாதானம் இல்லாத தன் நாட்களில் "சமாதானம் சமாதானம்" என்று கூவிக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் தனித்து விநோதமானவனாகத் தான் தெரிந்தான் எரேமியா..

அவன் காலத்து சமாதானத் தூதுவர்களை இன்று கண்ணிலே காணோம். ஆனால் எரேமியா மட்டும் இன்றும் நம்முன் நிற்கிறான்..

விக்கிரக ஆராதனை நிறைந்த பாபிலோனிய ராஜ்யத்தின் மத்தியில் கர்த்தருக்காகத் தனியனாகக் குரல் கொடுத்த தானியேலுக்கு, சிங்கக் கெபியில் செலவழித்த ஒரே ஒரு இரவு, தேவனுடைய விரலால் சுவரில் எழுதப்பட்ட வார்த்தைகளைப் படிக்க விலையேறப்பெற்றதாகவே இருந்தது.

தன் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனை செய்து கொண்டிருந்து பழக்கமில்லாத பவுல், அவ்வப்போது தன் உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டிருந்தது, பரலோகத் தலைமைச் செயலகத்திலிருந்து..

ஏதோ ஒரு சபையில் உருவான சரக்கு அல்ல அவன்..
பிசாசுக்கு எதிரான அவனது "மாத்தி யோசிக்கும்" போர்த்தந்திரங்கள் எல்லாம் எருசலேமின் அனுபவமற்ற, தொலை நோக்கில்லாத கான்ஃபரன்ஸ் ரூமில் உருவானதல்ல..அவை எல்லாமே பரலோக ஒரிஜினல் "war room secrets.."

பெரிய கழுகுகள் கூட்டமாய் அல்ல,
தனித்தே பறக்கின்றன.உண்மைத் தீர்க்கதரிசிகள் தனிமை விரும்பிகள்..தனித்து தனித்தன்மையோடு நிற்பவர்கள்..அது அவ்வளவு எளிதல்ல..

மிகாயாவைக் கூப்பிடப் போனவன் மிகாயாவிடம்,
"எல்லாரது வாக்கும் ஏகவாக்காய் இருக்கிறது..உம்முடையதும் அவர்களைப் போல இருக்கட்டும்..இரண்டு பெரிய ராஜாக்களுக்கும் 400 தீர்க்கதரிசிகளுக்கும் முன்பாக வாய்ப்பு கிடைப்பது எவ்வளவு பெரிய விஷயம்!
நீர் ஏனய்யா வித்தியாசமா விநோதமா இருக்கணும் ? சும்மா சுமுகமா ஒத்துப் போயிருய்யா.." என்றே சொன்னான்..

"காலத்தோட ஒத்துப் போகணும்பா..எதுக்கு தேவயில்லாம நீ பாட்டுக்கு எதையெதையோ பேசிக்கிட்டிருக்கிற..?" என்ற நாலாபக்க ப்ரெஷர் தான் இன்று அநேக பிரசங்கிகளுக்கு.

ஆனால் இன்றைய தேவை காலத்தோடு ஒத்துப் போகிறவர்கள் அல்ல..மிகாயாவைப் போல துணிந்து நிமிர்ந்து நிற்பவர்கள் !

"கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிட்டு போக வேண்டியது தான்.." என்பது தான் இன்றைய சுலோகம்.

எதற்கு எதோடு அட்ஜஸ்ட் பண்ணனும்? உலகத்தின் எந்தக் காரியத்தோடு அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போக உலகத்தில் என்ன இருக்கிறது?

தேவனுடைய மனிதன், தன்னை அட்ஜஸ்ட் பண்ணிக்கொண்டு தன்னை அதற்கேற்ப மோல்டு பண்ணிக்கொள்ள வேண்டியதெல்லாம் தேவனுடைய வார்த்தையோடும், தேவனுடைய சித்தத்தோடும், தேவனுடைய திட்டத்தோடும் மட்டுமே !

காலத்துக்கேற்ற தாளம் போட வேண்டியது தீர்க்கதரிசியின் வேலையல்ல.." கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவு ஏது ? (2 கொரி 6:15)

பிரசங்கி தனித்து பிரத்யேகப்பட்டு நிற்பவன்! ஒத்துப் போவதும்,ஒத்துப் பாடுவதும்,ஒத்து ஊதுவதும் அவன் வேலையல்ல.

தங்கள் திட்டங்களையே தம்பட்டம் அடிக்கும் மேடை அல்ல பிரசங்கபீடம்..

“கீலேயாத்துக்குப் போம்..உமக்கு வாய்க்கும் .." என்று வாக்குத்தத்தங்களின் மேல் வாக்குத்தத்தங்களாய்ப் பொழிந்தாலும், அந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகளின் கும்பலோடு கோவிந்தா போடுபவன் அல்ல மிகாயா !

"தேவனிடத்தில் விசாரிக்க இவர்களையல்லாமல் இன்று நமக்கு வேண்டியது ஒரு நானுத்தி ஓறாவது தீர்க்கதரிசி !”

ஒரு தீர்க்கதரிசியின் குரல் வளையை நெரிக்க பல வழிகள் உண்டு.

உபத்திரவம் அவனை ஊமையாக்கும்.எப்போதுமே யோவான் ஸ்நானகன்களின் தலைகள் தட்டில் வைத்துக் கொண்டு வரப்படுவதில்லை..
இன்று அவனை முடிக்க பல நூதன வழிகள் உண்டு.

கதீட்ரல் தேவாலயத்திலே தீர்க்கதரிசிக்கு உயர்பதவிப் பிரமாணம் செய்து ஆளை உயர்த்தி வை. அதன்பின் ஆள் வாயே திறக்கமாட்டான்..

காலத்தின் கட்டாயமும், நாலாபக்க நெருக்கமும் அழுத்தமும் சோர்வும் அவனை "செத்தால் போதும்" என்று ஆக்கிவிட வாய்ப்பு உண்டு..

பெத்தேலின் கிழட்டுத் தீர்க்கதரிசி மாதிரி, உண்மையான வாலிபத் தீர்க்கதரிசியை நேர் வழியிலிருந்து திருப்பி, ஆளையே ஏமாற்றி, ஆவிக்குரிய வகையில் கொன்றுவிடும் பல கிழடு கட்டைகளும் உண்டு..

தன் வீட்டிலும் ஊரிலும் நாட்டிலும் உண்மைத் தீர்க்கனுக்கு எந்த மதிப்பும் மரியாதையும் கிடையாது.அரசியல் செல்வாக்கும் கிடையாது.

" எங்க இவன் மூஞ்சில முழிச்சி, இவன் வாயில விழுந்து, இவன் சொன்ன மாதிரியே ஏதாவது ஏடாகூடமா ஆயிடுச்சின்னா.." என்ற பயம் தான் ஆகாப், மிகாயாவை வெறுத்ததற்குக் காரணம்.

எலியாவோடு சேர்ந்து மழைக்காக ஜெபிக்கிறதை விட்டுவிட்டு ஆகாபோடு சேர்ந்து தேசத்திலே புல் கிடைக்காதா என்று ஒருபக்கமாக அலைந்து கொண்டிருந்த இன்னொரு தீர்க்கதரிசியும் அங்கு உண்டு.ரோட்டின் இரண்டு பக்கமும் ஒரே நேரத்தில் நடக்க முடியாது.ஏதாவது ஒரு வழி தான்..

பரிசேயக் கூட்டத்துக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் எப்போதுமே ஏழாம் பொருத்தம் தான்." உங்கள் பிதாக்கள் தீர்க்கதரிசிகளில் யாரை துன்பப்படுத்தாமலிருந்தார்கள் ?" (அப் 7:52) என்று கேட்டார் ஸ்தேவான்.

பரலோகத்தைத் தலைமையிடமாகவும் தேவனை சேர்மனாகவும் கொண்ட தீர்க்கதரிசி ஒருவனை, மனிதனால் நிர்வகிக்கப்படும் மதமோ ஸ்தாபனங்களோ சபைகளோ "அங்கீகரிப்பதுமில்லை - அங்கி அளிப்பதுமில்லை - அங்கமளிப்பதுமில்லை.."

அவன் அவர்கள் கட்டுக்குள் அடங்காதவனாதலால் - அவர்கள் அவன் மேல் கட்டுக்கடங்காத கோபம் கொள்கின்றனர்.

பிரபலமாக விரும்புகிற ஒருவனாவது, இந்த மிகாயா சப்ஜெக்டை கையில் எடுக்கவும் மாட்டான்..பிரசங்கம் பண்ணவும் மாட்டான். இப்படிப்பட்ட பிரசங்கத்தை இயற்கையில் எங்கும் கேட்கும் வாய்ப்பும் குறைவு.

ஆனால் நிறைந்த சபையில் உட்கார்ந்திருக்கும் ஒருவன் கூட இப்படிப்பட்ட பிரசங்கத்துக்குக் காது கொடுக்காமல், அதிலுள்ள ஏதோ ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த யாரோ ஒருவன் மட்டும் இதற்கு செவி கொடுத்து, புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியாக மாறுவானென்றால்,அந்த ஒரே ஒருவனுக்காகக் கூட இந்த மிகாயாவைப் பிரசங்கிப்பது வீண்போகவே போகாது.

இந்த விசித்திரமான மிகாயா, எண்ணிக்கை வரிசையிலும் 401வது ஆளாகத்தான் இருப்பான்..அவனது ஆகாரம் இடுக்கத்தின் அப்பமும் இடுக்கத்தின் தண்ணீரும் தான்..

அவனுக்கு மேலிருந்து வரும் உத்தரவு," கர்த்தர் சொல்வதையே சொல்.." என்பது தான்..

இவ்வளவு சொன்னபிறகும், இன்னும் நீ இப்படிப்பட்ட தீர்க்கதரிசன ஊழியத்தில் தான் இறங்குவேன் என்று அடம்பிடிப்பாயானால், பிரச்சனையை விலைக்கு வாங்க ஆயத்தமாகிக் கொள்!

இன்றைய அமசியாக்களாலும், தற்கால பெத்தேல் சபையின் தீர்க்கதரிசிகள் யாவராலும் நீ வெறுக்கப்படுவாய்..
மறந்து போகாதே !

யேகோவாவின் பலிபீடத்துக்குப் பக்கத்திலேயே பாகாலுக்குப் பலிபீடம் கட்டி, பூஜை செய்து கட்டில் போட்டு படுத்துக் கொள்ளும் செழுமை உபதேச பாகாலின் தீக்கதரிசிகளாலும் அவர்களது அம்மா யேசபேலாலும் முழுப்பகையாய் பகைக்கப்படுவாய்! உன் உயிரை வேட்டையாடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை..
யோசித்துக்கொள்!

நீ வாழும் நாட்களின் ஆவிக்குரிய வட்டாரத்தில் எதிலுமே பொருந்தாத, எதிலுமே சமரசமாகாத ஒரு அருவருப்பான ஜந்துவாக நீ பார்க்கப்பட்டு அழுக்கைப் போல துடைத்துப் போடப்படுவாய்..ஜாக்கிரதை !

இந்த உலகத்தில் உனக்கு தலைசாய்க்க இடமிருக்காது..பார்த்துக்கொள் !

பரலோகத்தின் ஹெட்குவார்ட்டர்ஸிலிருந்தும் அங்கிருக்கும் உன் மெயின் ஆஃபீஸுக்கும் தான் நீ ரிப்போர்ட் கொடுக்க வேண்டும்..
கவனம்!

இவ்வளவு தெரிந்த பிறகும், இல்லை நான் அப்படித்தான் ஆவேன் என்று இன்னும் பிடிவாதம் பிடித்தால் இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை..நன்கு யோசித்துக்கொள் !

ஒன்றுக்கு பத்து தடவை ஜெபி..அல்லது நீயும் போய் விடுவாய்..உன் ஊழியமும் போய்விடும்!
நீ தீர்க்கதரிசி ஆக மாட்டாய்! தீர்ந்தே போய் விடுவாய் !

இன்னொன்றும் ஞாபகம் வைத்துக் கொள்!

தீர்க்கதரிசிகள் மிக மிக அவசியமானவர்கள் தான்..ஆனால் அவர்கள் யாராலும் விரும்பி அழைக்கப்பட மாட்டார்கள்!

ஆனாலும், " இவர்களை அல்லாமல் நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறதற்கு இன்னொரு 401வது தீர்க்கதரிசி ஒருவன் எழும்பியே ஆக வேண்டிய அத்தியாவசியமான காலம் இது !








CHAPTER 11

சபை கண்டிருந்த
மா மகா ஜாம்பவான்கள்

சபை கண்டிருந்த ஆவிக்குரிய இராட்சதர்கள்

அமெரிக்காவின் ஆவிக்குரிய வரலாற்றுப் பக்கங்கள் புகழ்பெற்ற மன்றாட்டு வீரர்களின் பெயர்களை தன்னகத்தே பொன்னால் பொறித்து வைத்துள்ளது.

அமெரிக்காவின் நிழல் உலக கொலைக் குற்றவாளிகளின் பட்டியலில் அல்-கப்போன், ஜாண் டில்லிக்னர் மற்றும் ஜெசி ஜேம்ஸின் பெயர்கள் முன்னிலையில் இருக்குமானால், அதின் ஆவிக்குரிய மாண்புமிக்க வரிசையில், அதின் தேவத்துவ வானில் நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்கும் ஜொலித்துக் கொண்டிருக்கும் - ஜாண் ஹைடு, E.M.பவுண்ட்ஸ், எட்வர்ட் பேஸன், சார்ல்ஸ் ஃபின்னி, H.C.பெவிஸ்டன், டேவிட் ப்ரெயினார்ட் என்ற காலத்தால் அழியாத ஆவிக்குரிய ஜாம்பவான்களின் (மா மகா மனிதர்கள்) பெயர்களும் காணப்படவே செய்கிறது..

மன்றாட்டு ஜெபம் என்ற உன்னதக் கலையிலே உயரமாய் உயர்ந்து நின்ற இந்த மா மகா புருஷர்களாலே அமெரிக்க சபை சரித்திரத்திலே புதிய பக்கங்கள் எழுதப்பட்டன.

- "ஜெப அப்போஸ்தலனான ஜாண் ஹைடு வளர்ந்த, ஜெபத்தின் சூழலையே சுவாசமாகக் கொண்டிருந்த அவரது குடும்பத்தில் இயேசு கிறிஸ்துவே நிரந்தர விருந்தாளியாய்த் தங்கி விட்டார்" என்று Francis A. McGaw சொன்னார்.

ஜாண் ஹைடின் தகப்பனார் Dr.ஸ்மித் ஹாரிஸ் ஹைடு, தாமே ஒரு ஜெப வீரனாய் இருந்தார்..

இசை உலகின் முடிசூடா மன்னனாய் இருந்தான் ஜோஹன் ஸ்ட்ராஸ்..

ஆனால் அவனது மகனாகிய ஜோஹன் ஸ்ட்ராஸ் ஜுனியர் மிகச் சீக்கிரத்திலேயே தன் தகப்பனையும் தாண்டி முன்னுக்கு வந்தான்.. அவன் செய்த ரெக்கார்டு பிரேக்குகளுக்குக் குறைவே இல்லை.

அது போலவே ஜெபம் என்ற பயிற்சிப் பள்ளியிலே கரை கண்ட தன் தகப்பனாரையும் தாண்டி முன் ஓடி ஜாண் ஹைடு விட்டுச் சென்ற பதிவுகளும் சுவடுகளும் இந்திய மிஷினரி வரலாற்றுப் பதிவேட்டுப் பக்கங்களில் இன்றும் அழியாமல் நிற்கிறது !

ஜாண் ஹைடு இந்தியாவில் இருந்ததென்னவோ பத்தொன்பதே வருடங்கள் தான் ! ஆனால் என்ன மகிமையான ஆண்டுகள் அவை !

இந்த யாப்போக்குக் கரை யாக்கோபின் போராட்ட ஜெபத்தின் தூண்டுதலால் தூண்டப்பட்டவர்கள் தான் எத்தனை எத்தனை ! இந்த ஜாண் தன் தேவனோடு கழித்த மிக மிக நெருக்கமான நேரங்களை அறிந்திருந்த அவருக்கு நெருக்கமான சிலர் உண்டு..

பரிசுத்தவானாகிய இந்த ஜாண் ஹைடு கடந்து சென்ற ஒரு கெத்சமனேயும் அவருக்கு இருக்கவே செய்தது !

தேவன் ஜாண் ஹைடை அறிந்திருந்தார்..ஜாண் ஹைடும் தன் தேவனை நன்றாகவே அறிந்து வைத்திருந்தார்.நான் மறுபடியும் சொல்வேன்..
"இந்த உலகத்தில் தேவனுடைய வார்த்தையை அறிவதற்கும், அந்த வார்த்தையின் தேவனைத் தனிப்பட்ட முறையில் அறிந்து வைத்திருப்பதற்கும் ஒரு மிகப்பெரிய பார தூர வித்தியாசம் உண்டு..

ஜாண் ஹைடின் ஆத்துமாவின் இன்பம் ஒன்றே அவரை அடிக்கடி ஜெபத்தின் தனிமைக்கும் மறைவுக்கும் இட்டுச் சென்றது.அவரது குடியிருப்பே அதுவாகிப் போனது.

தன் நேசரின் சத்தத்தைக் கேட்டதும் செவிகொடுத்ததும் அவர் அங்கே தான் ! ஜெபத்தில் அவர் வளர்ந்ததும், அழுததும் புலம்பியதும் அங்கே தான் !

ஆவிக்குரிய உயர்ந்த உன்னத சிகரங்களுக்கு அவர் எழும்பியதும் அங்கே தான் ! தனது ஆவிக்குரிய தசை நார்களை முறுக்கேற்றி அவர் பெலன் கொண்டதும் அங்கே தான் !

காதலன் ஒருவன் தன் காதலியிடம் மனம் திறந்து பேசும் ஒரு மறைவிடம் போல ஜாணுக்கும் ஒரு மறைவிடம் இருந்தது - தன் நேசரின் நேசத்தில் மூழ்ககிக் களிகூர !
அங்கே அவரது ஆத்தும நேசரும் அவரில் களிகூர்ந்தார் !

இந்த ஜெபக்கலையிலே ஜாண் ஹைடு ஒரு கைதேர்ந்த கலைஞனாய் இருந்ததினாலேயே அவரைப் பற்றிய பதிவுகள் இன்றும் நம்மிடையே அழியாத பதிவேடுகளாய் உள்ளன !

"எருசலேமைப் பார்த்து கண்ணீர் வடித்த இயேசுவைப் போலவும், அப்போஸ்தலனாகிய பவுல் தன் நாட்களிலிருந்த உர நெஞ்சுள்ள பாவிகளுக்காக உருகி அழுதது போலவும் ஜாண் ஏங்கி ஏங்கி அழுவார்" என்று அவரது ஜெப அறையின் கதவுகளுக்கு வெளியே நின்று அவரது அழுகுரல் கேட்டவர்கள் சொல்வதுண்டு..

இந்தக் கண்ணீர்க் கலையை எந்த ஒரு பைபிள் காலேஜும் நமக்குக் கற்றுத்தர இயலாது. இவைகள் வாக்குக்கடங்கா பெருமூச்சுகள் என்று ஜாண் ஹைடு அறிவார்..

அவரை அடிக்கடி இந்தியாவில் சந்தித்த ஒரு பெண் என்னிடம் (ரேவன்ஹில்லிடம்) ஒரு முறை," அவர் ஏதோ வேறொரு உலகத்தில் சஞ்சரிப்பது போலவே சஞ்சரித்தார்.." என்று சொன்னார்.ஆனாலும் மனிதர்களின் ஆத்துமாவை நேசமாய் நேசித்தவர் ஹைடு..

"ஒரு நாளுக்கு ஒரு ஆத்துமாவைத் தாரும்" என்று ஆரம்பித்து, அது இரண்டாகி, மூன்றாகி பின்னர் "ஒரு நாளுக்கு நான்கு ஆத்துமாக்கள் வேண்டும் ஆண்டவரே !" என்று கேட்டு, ஒரு நாளில் நான்கு பேரையாவது கர்த்தருக்குள் நடத்தி விடும் John Hyde என்ற Praying Hyde ஐ பற்றி உங்களில் எத்தனை பேர் படித்திருப்பீர்களோ நான் அறியேன்..

தன் ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் வரை மணிக்கணக்காக தேவ சமூகத்தில் விழுந்து கிடப்பார் ஜாண். தான் கேட்ட கேள்விக்கு ஆம் என்றோ இல்லை என்றோ பதில் வரும் வரை சில நேரங்களில் 40 மணி நேரம் கூட முகங்குப்புற விடாப்பிடியாய் "உம்மை விடுவதில்லை" என்று விழுந்து கிடப்பார் அவர் !

இந்தியாவின் பஞ்சாபில் அவர் ஊழியம் செய்த நாட்களில் நடந்த கூட்டம் ஒன்றில் நடந்த நிகழ்ச்சி இது !

மணிக்கணக்காக தன் ஜெப அறையில் தனியே தேவனோடு இருந்து விட்டு கூட்ட மேடைக்கு வந்து நின்றார் ஜாண்..
அவர் பேசியதெல்லாம் உருதுவிலும் ஆங்கிலத்திலும் மூன்றே வார்த்தைகள் தான் !

"ஓ பரலோகப் பிதாவே !"...Ai Asmaani Baak !.. அவ்வளவு தான் !

அதன் பின் நடந்ததை யார் விவரிப்பது ? ஒரு சமுத்திரமே அந்த ஜனக்கூட்டத்தின் மத்தியில் பிரவாகம் எடுத்து வந்தது போலிருந்தது.. மகா புயல் காற்றில் மரங்கள் சாய்வது போல தேவ மகிமையின் பிரசன்னத்தில் மக்கள் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தனர் !

தேவ அன்பு ஒவ்வொரு இருதயத்திலும் ஊற்றாய் ஊற்றப்பட்டது ! உள்ளம் உடைந்து மக்கள் கதறினர் ! பாவ அறிக்கையின் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராய் மாறி, துதியாய் மேலெழும்பியது !

ஒரு மனிதனின் கீழ்ப்படிதலினாலே தேவன் என்னென்னவெல்லாம் செய்யக்கூடும் என்பதற்கு அன்றைய நாள் வரலாற்றில் இன்றும் ஒரு சாட்சியாய் நிற்கின்றது !

John Hyde உடன் இருந்த ஒரு மிஷினரி அவரைப் பற்றி எழுதுகிறார்..

மணிக்கணக்காய் தனிமையில் தேவனோடு..எந்த மனித முகங்களையும் பாராமல், மனித சத்தம் கேளாமல்..தேவனுடைய முகத்தை மாத்திரம் பார்த்தவராய், அவரது சத்தம் மாத்திரம் கேட்டவராய் நாட்கணக்கில் இருப்பார் அவர் - ஜாண் ஹைடைப் பொறுத்தவரை இது ஒரு மிகச்சாதாரணமான அன்றாட அனுபவமாகிப் போன ஒன்று..

தங்களை தேவன் தமது ராஜ்யத்தின் மேலும் அதின் காரியங்கள் மேலும் காவலாளிகளாய் ஏற்படுத்தியிருக்கிறார் என்று சிலர் தங்களைப் பற்றி நன்றாகவே அறிவார்கள்.

இன்னும் சிலர், தாங்கள் எப்போதெல்லாம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும் என்றும் எப்போதெல்லாம் இளைப்பாற வேண்டும் என்றும் சிறு சிறு காரியங்களில் கூட தேவனிடத்திலிருந்து கட்டளைகள் பெற்றுக் கொள்ளும் அளவு யேகோவா தேவனோடு மிக மிக நெருங்கி நடந்து சஞ்சரித்து அவரது சத்தத்தைக் கேட்பவர்களாகவும், தங்கள் அன்றாட காரியங்களில் கூட அவரிடமிருந்து கட்டளைகளையும் நடத்துதல்களையும் நேரடியாகப் பெறுமளவுக்கு அவரோடு ஒன்றிப்போயிருப்பார்கள்.

சிலர் நாட்கணக்காக இரவெல்லாம் விழித்திருந்து ஜெபித்துக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் தூங்காதபடி அவர்களது இமைகளை அவர் பிடித்து வைத்திருப்பது போலிருக்கும். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் ஜாண் ஹைடு..

ஆவி உற்சாகமாய் இருந்தாலும் ஜெபித்து ஜெபித்து சரீரம் பெலவீனப்பட்ட ஜாண் ஹைடை பரிசோதித்த மருத்துவர் சொன்னார்..
"இவரது இருதயம் மிக மோசமான நிலையில் உள்ளது..என் மருத்துவ அனுபவத்தில் இப்படி ஒரு கேஸை நான் பார்த்ததே இல்லை..இவர் எப்படி உயிரோடிருக்கிறார் என்பதே எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது..காரணம் இவரது இருதயமே இயற்கையான தனது இடது பக்கத்திலிருந்து நகர்ந்து வலது பக்கத்துக்கு வந்து விட்டது.."

காரணம்..

அங்கலாய்ப்பின் ஜெபம்..
கெத்சமனேயின் பிழிந்தெடுக்கப்பட்ட ஜெபம்..
இரவு பகலான ஜெபம்..
போராடி ஜெபிக்கும் ஜெபம்..
செத்தாலும் சாகிறேன் என்று ஜெபிக்கும் ஜெபம்..

இங்கிலாந்திலுள்ள Hereford ல் Dr.J.Wilbur Chapman ஒரு முறை பிரசங்கித்துக் கொண்டிருந்தார்.. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகிப் போய்க் கொண்டிருந்ததே தவிர, தேவனுடைய வல்லமையின் பிரசன்னமோ, பாவ உணர்வோ அவைகளின் சுவடோ கூட கூட்டங்களில் காண முடியவில்லை..

Wilbur Chapman சொல்கிறார்.."ஒரு நாள் ஜாண் ஹைடு அங்கே வந்தார்..அவர் வந்தது தான் தாமதம்..தேவனே அந்த ஊருக்கு வந்து இறங்கி விட்டது துல்லியமாகத் தெரிந்தது.."

" தேவனும் ஹைடும் ஒன்றாய் நடந்து வந்தார்கள்..அவர் வந்த நாளின் மாலைக் கூட்டத்தில் Chapman அறைகூவலிட்ட போது அன்று 50 பேர் கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தனர்.

"எனக்காக ஜெபிப்பீங்களா ?" என்று
Chapman ஹைடைப் பார்த்து கெஞ்சாத குறையாகக் கேட்க, இருவரும் ஒரு அறைக்குள் ஜெபிக்க முழங்காலிட்டனர்.

தனக்குப் பின்னே கதவைத் தாழிட்ட Hyde, தன் இருதயத்தைத் தேவனோடு தாழிட்டார்..
அவரது இருதயத்தின் ஊற்றுக்கண்கள் திறக்கப்பட்டன..

Chapman தொடர்கிறார்.."என் கண்களிலிருந்து கண்ணீர் வெந்நீராய் ஊற்றிக் கொண்டிருந்தது. நான் தேவனோடு இருப்பதை உணர்ந்தேன்.

தேவனை நோக்கி தன் முகத்தை உயர்த்தியவராய், கண்ணீர் பெருக்கெடுத்தோட, இரண்டே வார்த்தைகள் ஜாண் ஹைடின் வாயிலிருந்து வெளிப்பட்டன.."ஓ ! தேவனே !"

அடுத்த ஐந்து நிமிடங்கள் நிசப்தம்..
தேவனோடு பேசிக் கொண்டிருந்தவராய், என் தோள்களில் கை போட்டு என்னை அணைத்தவராய், எந்த மனிதனும் இது வரை கேட்டிராத விண்ணப்பங்களும் அங்கலாய்ப்புகளுமான ஜெபங்கள் அவரது இருதயத்திலிருந்து புறப்பட்டு வந்ததை முதல் முறையாகக் கேட்டேன்..

முழங்காலிலிருந்து அன்று எழும்பும்போது தான் அறிந்தேன்..
உண்மையிலே ஜெபம் என்றால் என்னவென்று !

மிக நீண்ட மன்றாட்டுகளுக்கும் விண்ணப்பங்களுக்கும் ஜெபங்களுக்குமெல்லாம் அவசியமே இல்லை என்று வாதாடுபவர்கள் உண்டு. ஆனால் " மிக அதிகமாய் தங்களை ஜெபத்திலும் விண்ணப்பத்திலும் ஊற்றியவர்களே மிக அதிகமாய் சாதித்தவர்கள் " என்ற காலத்தால் அழியாமல் நிற்கும் நிரந்தரமான பதிவை மட்டும் அவர்களால் அழிக்கவே முடியாது !

நீண்ட கால ஜெபங்களே நீண்டு நிலைத்து நிற்கும் எழுப்புதலைக் கொண்டு வருகின்றன..

தேவனை வனைவது அல்ல ஜெபம்..அது நம்மை வனைகிறது..

நாம் நினைக்கிறபடியெல்லாம் தேவனை நம் இஷ்டத்துக்கு வளைப்பது அல்ல ஜெபம்..
அது தேவனுடைய இருதயத்தை நாம் அறிந்து அவரது பரிபூரண சித்தத்துக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது..

தேவனின் நன்மதிப்பைப் பெறுவதோ, அவரிடமிருந்த காரியங்களை சாதித்துக் கொள்வதோ அல்ல ஜெபம்..

நாங்கள் ஏன் ஜெபத்தை அடிக்கடி இவ்வளவு வலியுறுத்துகிறோம் என்று நீங்கள் கேட்டால்," இயேசு அப்படியே ஜெபித்தார்.." என்றே சொல்லுவோம்.

இரட்சகர் இரவெல்லாம் ஜெபித்தார் என்று லூக்கா தனது சுவிசேஷத்தில் திரும்பத் திரும்ப எழுதி வைத்தார்.

நாம் அவரை விட மேலானவர்களோ ?

- அடுத்து, அமெரிக்காவின் எழுப்புதல் வரலாற்றுப் பதிவேடுகளில் ஆன்மீக இராட்சதராய் நிமிர்ந்து உயர்ந்து நிற்கிறார் சார்ல்ஸ் ஃபின்னி..

7 அடி உயரம் கொண்டவர் என்று அவரது சரீர உயரத்தைப் பற்றி சொல்லப்படுவது உண்மையானால், சரீர வளர்ச்சியிலும் அவர் ஒரு ஆஜானுபாகுவானவரே !

அறிவிலும் அவர் குறைந்தவர் அல்ல..
கல்வியிலும் அறிவாற்றலிலும் அவரது காலத்திலிருந்தவர்கள் அநேகரை விட அவர் உயர்ந்தே நின்றார்..

இந்த, ஆவியில் அனல் கொண்டு அபிஷேக அக்கினியால் தகித்துக் கொண்டிருந்த ஃபின்னியின் பிரசங்கத்தைக் கேட்டு எரிச்சலடைந்து யாரோ ஒருவனோ, அவன் பின்னாலேயே ஆலயத்தில் உட்கார்ந்திருக்கும் அனைவருமோ சில நேரங்களில் எழுந்து போய் விட்டாலும், பிரசங்கத்தை முடித்த கையோடு அடுத்த ஃபிளைட் பிடித்து அடுத்த மீட்டிங்குக்கு ஓடும் நம்ம ஊர் சுவிசேஷகர் அல்ல சார்ல்ஸ் ஃபின்னி..

ஒரு ஊரிலே எழுப்புதலும் மனந்திரும்புதலும் நடக்கும் வரை அந்த ஊரை விட்டு நகராத ஒரு இரும்பு மனிதர் அவர் !

தனது அனல் தெறிக்கும் கண்டிப்பான பிரசங்கத்தினால் கூட சில வேளை சிலரை அவர் இழக்க நேரிட்டாலும் தன் ஜெபத்தினால் அவர்களை மீட்டு தேவனிடம் திருப்பிக் கொள்ளுவார் இந்த ஆவிக்குரிய ஜாம்பவான் ! காரணம் ஜெபம் !

ஆரோனும் ஊரும் மோசேயின் கரங்களைத் தாங்கி நின்றது போல, Finney ஐயும் ஜெபத்தில் தாங்கி நின்றனர் Father Clery மற்றும் Father Nash என்ற இருவர்..

இங்கிலாந்திலுள்ள போல்ட்டனில் ஸ்காட்லாந்து சபையிலே Dr.Fawcett என்ற அருமையான தேவ மனிதருக்குக் கீழே உதவிப் போதகராக நான் (ரேவன்ஹில்) இருந்த நாட்கள் அவை.. பூர்வகால ஜெபவீரர்களின் ஜெப வாழ்க்கைகளையும் பிரசங்க வேந்தர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தி, ஆவிக்குரிய புத்தகங்களை நேசிக்கவும் படிக்கவும் எனக்குக் கற்றுத் தந்தவரும் அவரே !

அவரோடு ஊழியம் செய்து வந்த நாட்களில் நான் சந்தித்த வயதான பெண்மணி ஒருவர் சார்ல்ஸ் ஃபின்னி பற்றி சொன்ன சம்பவம் ஒன்று வருடக்கணக்காக சவாலாக இருந்தது !

அவர் சொன்னது இது தான்..

" ஒரு முறை போல்ட்டனுக்கு ஃபின்னி ஊழியத்துக்கு வந்தார். அவர் வருமுன், எங்கள் வீட்டு வாசலைத் தேடித் தட்டிக் கொண்டு நின்றனர் இருவர், தாங்கள் சில நாட்கள் தங்க இடம் கிடைக்குமா என்று..

ஏற்கனவே இடம் நெருக்கடியான நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் கடைசியில் ஒரு சிறிய அறையை அவர்களுக்கு வேறு ஒருவர் மூலம் ஆயத்தப்படுத்திக் கொடுத்தேன்..

அவர்களுக்குக் கிடைத்ததோ வாரம் 25 சென்ட் வாடகையில் ஒரு இருளடைந்த ஈரம் நிறைந்த அறை.அதை சந்தோஷமாக எடுத்துக் கொண்ட Father Clery மற்றும் Father Nash என்ற அந்த ஜெப வீரர்கள் இருவரும் Finney கூட்டம் நடத்திய இரண்டு வாரங்களும் அந்தகாரத்தின் வல்லமையோடு ஜெபத்தில் போராடிக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் வெற்றியும் பெயரும் Finney க்கு போனாலும், அவரைப் பின்னிருந்து தாங்கியவர்களோ இந்த இருவருமே ! அவர்களது கண்ணீரும் அங்கலாய்ப்பும் ஜெபமும் தேவனுடைய நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது !

- சபை கண்டிருந்த மா மகா மனிதர்களின் வரிசையிலே அடுத்து நமது கவனத்தை ஈர்ப்பவர் ஜெப வீரனான போர்ட்லாந்தின் Edward Payson..

தேவனோடு இடைவிடாத தொடர்பும் வலுமையான ஐக்கியமும் கொண்டிருந்த இந்த மனிதன், சபையின் முன் வெளிப்படுத்திய வல்லமையை யார் அளவிட முடியும் ?

ஆவிக்குரிய ஜாம்பவான்களும், ஜெபத்தில் இராட்சதரும், உன்னதங்களிலே கழுகு போல உயரப் பறக்கும் இவர்களுக்கெல்லாம் முன்னால், ஜெபத்தில் நாம் எல்லோரும் 'கீழிருக்கும் கிளைகளிலேயே சிறகடித்து வட்டமிட்டு வரும் சிட்டுக்குருவிகள்' தான் !

இந்தப் Payson ஐ ஜெபத்தில் ஜெயித்தவர் யாருமில்லை என்பேன் !

இந்த மகா மனிதரான Payson ன் சபைக்கு Lafayette என்ற பேர் பெற்ற மனிதர் ஒருவர் பிரசங்கிக்க வருகிறார் என்று கேள்விப்பட்ட ஒரு பெண், தன் அடக்க முடியாத ஆவலால், பிரசங்க மேடைக்குச் சென்று அவரைத் தேடினார்..

அங்கு அவரைக் காண முடியாமல் போன அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்தியது ஒரு குரல் ! அது வேறு எதுவுமில்லை.. பிரசங்க மேடையில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்துக் கொண்டிருந்த Payson ன் குரல் தான்..

அந்த ஜெபம் கேட்டு ஸ்தம்பித்து நின்று விட்ட அந்தப் பெண், ஜெபித்து முடித்த பேஸனிடம் கேட்டார்.." உங்கள் ஜெபத்தின் நகல் ஒன்று எனக்குக் கிடைக்குமா ?" என்று..

பேஸன் சொன்னார்..
"அது எழுதி வைத்து வாசிக்கப்பட்ட ஜெபம் அல்ல..ஜெபிக்க ஜெபிக்க அது காற்றோடு கலந்து பரலோகத்துக்குப் போய் சேர்ந்து விட்டது.."

இது வரை, தான் எங்குமே கேட்டிராத ஜெபம் ஒன்றையும், மன்றாட்டின் பெருமூச்சுகளையும், விண்ணப்பங்களில் துல்லியத்தையும் கண்ட அந்தப் பெண் மெய்மறந்து நின்றாள்.

பிரசங்க பீடமோ, ஜெபக்கூட்டமோ, வியாதிப்படுக்கையோ, திருமண ஆராதனையோ - எங்கெல்லாம் Payson ஜெபித்தாரோ, அவரது ஜெபங்கள், விண்ணப்பங்களிலிருந்த ஆவியும் அபிஷேகமும், அனலும் அங்கலாய்ப்பும் தனித்தன்மையும் நிகரற்றவையுமாய் இருந்தன. அவர் ஜெபிக்க ஜெபிக்க அவரை நிரப்பிக் கொண்டே இருந்த பரலோக அபிஷேகம் அவரை ஒரு வற்றாத ஊற்றாக்கி வைத்திருந்தது..

அவரது ஜெபங்களில் காணப்பட்ட ஒரு அசாதாரண வல்லமை - அந்த ஜெபத்தைக் கேட்கிற ஆத்துமாவின் கவனத்தைக் கர்த்தர் பக்கம் திருப்பி, அது, தன்னைக் கறைப்படுத்தும் உலகிலிருந்து தன்னை விடாப்பிடியாய்ப் பிரித்துக் கொள்ளுமட்டும் இறுகப்பிடித்தது.

தனிமையின் ஜெபத்தில் வெளிவந்த அவரது ஆழ்ந்த பயபக்தியான ஏங்கலும் கெஞ்சலுமான அவரது குரல், பொது இடத்தில் காணப்பட்ட வெளிப்படையான பலன்களில் எதிரொலியாய் தொனித்தது..

அவரது மிக நீண்ட அந்தரங்க ஜெபங்களின் தாக்கம், அவர் மூலமாய் அநேகரைப் பற்றிப் பிடித்து, அவர்களையும் ஜெப வீரர்களாய் மாற்றியது.

அவரது ஜெப அறைக்குள், ஜெபித்துக் கொண்டிருக்கும் Payson ஐ சற்று எட்டிப் பார்த்துக்கொள்ள விரும்பின சிலர், மகா பரிசுத்த ஸ்தலம் போன்ற பயபக்தியான அந்த இடத்தைக் கண்டு, "தாங்கள் நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்ற நடுக்கத்தோடு தங்கள் காலணிகளைப் போடத் துணியாமல் கழற்றிப் போட்டனர்..

“தேவனால் அழைக்கப்பட்டாலொழிய இந்தக் கனமான ஊழியத்துக்குத் தன்னை ஒருவனும் தானாய் ஏற்படுத்திக் கொள்வதில்லை" என்ற வார்த்தை இந்த மன்றாட்டு ஊழியத்துக்கும் தப்பாமல் பொருந்தும்.

நம்மை அசுத்தத்துக்கு அல்ல, பரிசுத்தத்துக்கே அழைத்த தேவன், நம்மைத் தமக்கு முன் விழுந்து மன்றாடும் மன்றாட்டு வீரர்களாகவும் அழைக்கிறார் என்றே நான் நம்புகிறேன்..

"பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்" கிறிஸ்துவும் நமக்காக மிக ஊக்கமாக மன்றாடினாரே ! கிறிஸ்துவின் இந்த வேதனையும் ஜெபமும் கண்ணீரும் பேஸனுக்கு கிறிஸ்துவால் நன்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது..

Payson ன் டைரியின் பக்கங்களை சற்று புரட்டிப் பாருங்கள் ! அவரது மன்றாட்டின் ஆவியும், ஏக்கப் பெருமூச்சுகளும், ஆவிக்குரிய போராட்டங்களும், கிறிஸ்துவின் சிங்காசனத்துக்கு முன் முகங்குப்புற விழுந்து கிடந்த விதமும் அங்கே தெளிவாய்க் காணப்படுகின்றன..

Payson ஐ பற்றி அவரது நண்பர் ஒருவர் எழுதுகிறார்..

"Payson ன் எல்லா குணநலன்களைப் பார்க்கிலும் மிக அழகாய் மேலோங்கி நின்றது ஒன்று உண்டானால் அது அவரது தாழ்மையே !”

“ஜெபத்தில் அவரது ஆத்துமா தன்னை மண்ணோடு மண்ணாய்த் தாழ்த்தி நின்றது.. நான் கேட்ட எல்லா மனிதரிலும் இதிலே தான் அவர் உயர்ந்து நிற்கிறார்.."

"எங்கள் எல்லாரையும் உயர உயர மேலே எடுத்துச் சென்று தேவ பிரசன்னத்தில் கொண்டு போய் நிறுத்திவிடுவார் பேஸன்.. தேவனை நோக்கி அவர் தன் கைகளை விரிக்கும் போது பரலோகமே பூமிக்கு இறங்கி வந்து தேவ மகிமை எங்கள் கூடாரத்தை மூடிக்கொண்டது போலிருக்கும்..." என்று தொடர்கிறார் அவரது நண்பர்.

இந்தப் பரிசுத்த மனிதன் தேவனோடு பேசிக்கொண்டிருக்கும் போது அவர் மேல் நிழலிட்ட மகிமையைக் கண்டு, இதுவே இப்படியிருக்குமானால், மறுரூப மலையில் இயேசுவின் மகிமையின் காட்சியைக் கண்ட பேதுரு எப்படி மெய்மறந்து நின்றிருப்பான் என்று சில வேளைகளில் நான் நினைத்ததுண்டு.."

Payson ன் வாழ்க்கையின் இப்பகுதியைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதின் காரணம், இந்த மன்றாட்டு ஜெபத்தின் கலையில் அவர் கைதேர்ந்த மாவீரராய் காணப்பட்டதே !

இந்த தேவன் நம்முடைய தேவன் - இந்த விசுவாச மா மகா வீரர்களான ஜாண் ஹைடு, சார்ல்ஸ் ஃபின்னி மற்றும் எட்வர்ட் Payson ன் ஜெபங்களைக் கேட்ட தேவன், நம்முடைய தேவன் - கர்மேல் மலையின் கொடுமுடியில் தனியனாய் நின்ற எலியாவின் ஜெபத்தைக் கேட்ட அதே தேவன், நாமும் அதே ஆவியில் ஜெபிக்கும் போதெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கிறார்.. ('ஆவியில்' என்ற வார்த்தை மிக முக்கியம்)

மா மகா வீரர்கள் அன்றும் இருந்தனர்..
இன்றும் அப்படிப்பட்ட மாவீரர்கள் இருக்கவே செய்கின்றனர்..

ஜெபத்தில் அசாதாரண மாவீரர்களாய் அவர்கள் நின்றதாலேயே அவர்கள் ஜெபமும் அசாதாரண பதில்களைக் கொண்டு வந்தன !

CHAPTER 12

பரலோகத்தில் பதிவாகும்
உன் வாழ்க்கை வரலாறு

பரலோகத்தில் பதிவாகும் "உன் வாழ்க்கை வரலாறு"

உன் வாழ்க்கை ஒவ்வொரு நாளும் பரலோகத்தில் பதிவாகிக் கொண்டேயிருக்கிறது..

வெளி அட்டையில் உன் பெயர் எழுதப்பட்ட புத்தகம் ஒன்று பரலோகத்தின் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது..

உன் வாழ்வில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் நுணுக்கமாய்ப் பதிவு செய்து வைக்க தேவன் கவனமாயிருக்கிறார்..

உன் நினைவுகள், விருப்பங்கள் நம்பிக்கைகள், நோக்கங்கள்,
ஜெபங்கள், பிரயாசங்கள், நீ கவனமாய் இருந்தவைகள் ,
உன் கவலையீனங்கள்..

எல்லாவற்றையும் ஒன்று விடாமல் சேகரித்துப் பதிவு செய்து வைத்துள்ளனர் தேவதூதர்கள்..

உன் எல்லா வார்த்தைகளும், எல்லா செயல்களும், எல்லா ஜெபங்களும், எல்லா அன்பின் கிரியைகளும்..
இவற்றோடு கூட இவைகளுக்கு முற்றிலும் எதிரான காரியங்களும் மிக மிக நுணுக்கமாகவே பதிவு செய்யப்பட்டு வருகின்றன..

உன் பூவுலக வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவும் பரலோகக் கண்ணோட்டத்தில் பதிவாகிக் கொண்டே இருக்கிறது..

ஒவ்வொரு நாளின் ரெக்கார்டும் எதுவொன்றும் விடப்படாமல் முழுமையாகப் பதிவாகிறது..

நீ நினைக்கலாம்..இன்று என் வாழ்க்கையில் பெரிதாக எதுவும் நடக்கவில்லையே என்று..ஆனால் முழு 24 மணிநேரமும் நீ செலவழித்திருக்கிறாய் என்பதை மறந்து போகாதே..

ஒருவேளை ஒரு நாள் முழுவதும் துக்கத்திலே கழிந்திருக்கலாம்..
ஆனால் அதையும் அப்படியே பதிவு செய்யும்-பரலோகப் பதிப்பு !

இன்றைய உனது நாள் நல்ல காரியங்களுக்காக மூலதனமாக்கப்பட்டதா? அல்லது வீணாக்கப்பட்டதா?

உன் நேரத்தை நீ பயனுள்தாக செலவழித்தாயா அல்லது வீணாய்க் கழித்தாயா?

உனக்குக் கொடுக்கப்பட்ட விலையேறப் பெற்ற சந்தர்ப்பங்களைக் கிறிஸ்துவுக்காகப் பயன்படுத்திக் கொண்டாயா அல்லது கைநழுவ விட்டாயா?

எல்லாமே உன் பரலோக வங்கிக் கணக்கில் பதிவாகிக் கொண்டே வருகிறது..

இங்கு வீணாக்கப்பட்ட எல்லாமே நித்திய நித்தியமாய் வீணானதாகவே காட்டப்படும் - அந்தக் கணக்கில்..

கர்த்தர் உன் செயல்களுக்காக நித்திய நித்தியமாய்ப் பலனளிக்கத் திட்டம் வைத்திருப்பதால் உன் வாழ்க்கை வரலாறு அவருக்கு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது..

ஆனால் இந்தப் பிரதிபலன்களும் பரிசுகளும் அன்றாடம் ரெக்கார்டு ஆகும் உன் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைப் பொறுத்தே அமையும் என்பதில் கர்த்தர் மிகவும் கண்டிப்பாய் இருக்கிறார்..

மற்றவர்களுக்கு நன்மை செய்ய நீ கர்த்தருக்காக எவ்வளவு ஏங்கினாய் ?

தேவராஜ்யத்துக்காக நீ எவ்வளவு ஜெபித்தாய்?

தேவனைப் பிரியப்படுத்தி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்க வேண்டுமே என்று எத்தனை பேர் பெயரை உன் ஜெபப் பட்டியலில் அன்றாடம் புதிதாகச் சேர்த்தாய்?

கர்த்தர் தரப் போகும் பலன்கள் எல்லாமே இவைகளைப் போல பல செக்-லிஸ்ட்டுகளின் அடிப்படையிலேயே மிகவும் ஸ்ட்ரிக்ட்டாக இருக்கப் போகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை!!

உன் வாழ்க்கை வரலாறு குறித்த பரலோகப் பதிப்பு நியாயத்தீர்ப்பு நாளுக்கு மட்டுமே உபயோகப்படுமோ?

ஓ ! எத்தனை கிறிஸ்தவர்களின் வாழ்க்கைப் பதிப்பில் ஜெபத்துக்கான பக்கங்கள் மிகக் குறைவாக இருக்கப் போகிறது !!

ஐயோ ! நமக்காகவே வாழ்ந்து, மகிழ்ந்து, அனுபவித்துக் கொண்டாடி வாழ்க்கையைத் தீர்த்து விட்டோமே, மற்றவர்களைக் குறித்து கொஞ்சம் கூட நினைக்கவோ, அக்கறை கொள்ளவோ, ஜெபிக்கவோ இல்லையே என்று தங்களது ரெக்கார்டுகள் புரட்டப்படும் போது தான் அநேகர் நெஞ்சில் அடித்துக் கொள்ளுவார்கள்..

தன் சபையாருக்கு முன்பாகத் தன் வாழ்க்கையின் பக்கங்கள் ஒவ்வொன்றாக வாசிக்கப்படும்போது தங்கள் பாஸ்டர் தங்களுக்காக உண்மையிலே ஜெபிக்க வேண்டியபடி ஜெபிக்கவில்லை என்று விசுவாசிகளுக்குத் தெரிய வரும்போது அநேக பாஸ்டர்கள் வெட்கி அவமானத்தால் கூசிப் போவார்கள் என்று நினைக்கும்போது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது

பவுலைப் போல இவர்கள் உண்மையிலே ஜெபத்தில் போராடியிருப்பார்களா?

நித்தியத்தின் ஜெப வீரர்கள் பட்டியலில் அநேகரது பெயர்கள் இருக்க வாய்ப்பில்லை என்று வருந்துகிறேன்..

பெயர் பெற்றவர்களும், அதே நேரம் பெயர் அறியப்படாதவர்களுமான அநேக பரிசுத்தவான்கள், சுவிசேஷகர்கள், மிஷினரிகள், தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களின் வாழ்க்கை வரலாறுகளின் "லைவ் ப்ரஸன்ட்டேஷன்" அநேகருக்கு முன்பாகக் காட்டப்படும் போது எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்!

யோசேப்பு,தாவீது , எசேக்கியா, அப்போஸ்தலர். யோவான்,பவுல் மற்றும் லூத்தர், ஜாண் வெஸ்லியோடு கூட..உன் வாழ்க்கை சரித்திரமும் "இதுவே உன் வாழ்க்கை" என்கிற டைப்பில் ப்ரஸன்ட்டேஷன் ஆகும் போது எப்படி இருக்கும் ? யோசித்துப் பார் !

உன் வாழ்க்கையின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதுமாகவோ போட்டுக் காட்ட தூதர்கள் விரும்புவார்களா?

உன் வாழ்க்கை வரலாற்றின் பரலோகப் பதிப்பில் ஏகப்பட்ட விஷயங்கள் ஏற்கனவே ரெக்கார்டாகி விட்டது என்பதை நினைவில் வைத்துக் கொள் !!

இந்த வாரம் உன் ஜெப வாழ்க்கை எப்படி இருந்தது என்பதும் லேட்டஸ்ட்டாக அங்கு பதிவாகி உள்ளது ..

ஏனென்றால் அங்கு பதிவு செய்ய உன்னை அறியால் நீயே உன்னைப் பற்றிய விபரங்களை தினமும் அங்கு கொடுத்துக் கொண்டே இருக்கிறாய்..

அங்கு ரெக்கார்டு ஆக ஆக.. பதிவு செய்யப்பட்ட எது ஒன்றும் ஒருபோதும் டெலிட் ஆகப்போவதே இல்லை..

எது ஒன்றையும் நீ மாற்றவும் முடியாது..

உன் வாழ்க்கையின் மீதிப் பகுதி எப்படிப் பதிவாகப் போகிறது ?

குறிப்பாக உன் ஜெப வாழ்க்கையின் ரெக்கார்டு எப்படி இருக்கும் என்பதை இன்றே முடிவு செய்ய இப்போதும் கூட உனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது..

இப்போதும் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை..

ஏற்கனவே, தான் மன்னித்துவிட்ட உன்னுடைய பாவங்களைத் தேவன் தமது பதிவிலிருந்து அழித்துவிட்டிருந்தாலும் உன்னுடைய ஒவ்வொரு நாளின் நடமாட்டத்தையும் அவர் பதிவு செய்து கொண்டு தான் இருக்கிறார்..

உன் அன்பையும், நேரத்தையும், ஜெபத்தையும், பிரயாசங்களையும் நித்தியத்துக்கென்று ஆயிரக்கணக்கான வழிகளில் மூலதனம் செய்ய உனக்கு ஒரு பாக்கியான வாய்ப்பு இன்னும் உண்டு..

உன்னையே நீ மாற்றிக் கொள்வாயா?

கர்த்தருடைய கைகளில் இன்னொரு முறை புதிய மனிதனாக உன்னையே ஒப்புக் கொடுத்து நித்தியத்துக்காக உன் ஆவிக்குரிய காரியங்களை ஒழுங்குபடுத்தி மூலதனம் செய்ய ஆரம்பிப்பாயா?

நீ தான் அதை முடிவு செய்தாக வேண்டும் !!

- WESLEY L.DUEWEL

CHAPTER 13

பாதாளத்தின் வயிற்றிலிருந்து.

பாதாளத்தின் வயிற்றிலிருந்து

" நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன்.."
[யோனா 2:2]

யோனாவின் (தனக்கான) கூக்குரல் ! -
தேவனின் (நினிவேக்கான) அழுகுரல் !
யோனாவின் தலையைச் சுற்றியிருந்தது - கடல்பாசி...
அவன் தலைக்கு மேலே இருந்தது - கடல் அலை..

அவன் சிறைப்பட்டிருந்தது -மத்தியதரைக்கடலின் இருண்ட தண்ணீர்களின் ஆழங்களின் மலையடிவார அஸ்திபாரங்களிலே வேர் கொண்டிருந்த தூண்களிலே கட்டப்பட்ட திமிங்கில வயிற்றுச் சிறைச்சாலையிலே...

" நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் அங்கேயும் நீர் இருக்கிறீர்.." என்பதையும், " அவரது சத்தம் பூமியின் கடையாந்திரங்களிலும் ஒலிக்கும்.." என்பதையும் யோனா படித்திருக்கவில்லையோ அல்லது படித்ததை மறந்து விட்டானோ ?

இவைகள் எல்லாமே அவன் கடினமாய்க் கற்றுக் கொண்ட பாடங்கள் ! யோனா பாதாளத்தின் வயிற்றுக்குள் இறங்கியது, ஏதோ விதியோ, விளையாட்டோ, விபரீதமோ, விசுவாசமோ அல்ல - தான் நன்றாகவே தெரிந்து வைத்திருந்த தேவனுடைய திட்டத்தைத், திட்டமிட்டே அவன் மீறியது தான் !

ஆனால் அங்கும் கூட - ஆளுகின்ற ஆண்டவர் தமது கையை பலமாக வைத்திருந்தார் !

பாதாளத்தின் வயிற்றில் அவனுக்கு நடந்ததை அலசுமுன், இந்த வரியை சற்று கவனியுங்கள் !

" கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார்.."
(யோனா 1:4)

அதைத் தொடர்ந்து..

"கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தி இருந்தார்.." (1:17)

"கர்த்தர் ஒரு ஆமணக்கு செடியை முளைக்கக் கட்டளையிட்டார்.."(4:6)

"தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்.."(4:7)
“தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்.."(4:8)

யோனாவைக் குறித்து யோனா 1:3 சொல்கிறது..
"யோனா கூலி கொடுத்து.." (டிக்கட் எடுத்தான்..)

யோப்பா துறைமுகத்தின் டிக்கட் கவுண்ட்டரிலே தர்ஷீசுக்குப் போக டிக்கட்டுக்குக் காசு எடுத்துக் கொடுத்தான் யோனா.. (இரண்டாம் யெரொபெயாமின் முகரூபம் பொறிக்கப்பட்ட நாணயமாய் இருக்கலாம்..)

ஆனால் அங்கிருந்த டிக்கட் கொடுப்பவரோ, ஏன், டிக்கட் எடுத்து தேவனுக்கு எதிராக எதிர்த்திசையில் எதிர்த்துச் செல்லும் எழுப்புதல் தீர்க்கனோ கூட உண்மையிலே அந்த டிக்கட்டின் உண்மையான விலைமதிப்பை அறிந்திருக்கவில்லை..

அது, வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத நினிவேயின் இலட்சக்கணக்கான ஆத்துமாக்களின் விலையேறப்பெற்ற விலையோ ?

அது, திமிங்கிலத்தின் அடிவயிற்றின் (மெத்தைப் படுக்கை அல்ல) குமட்டி எடுக்கும் நாற்றமும், மத்திய தரைக்கடலின் ஆழத்தின் கும்மிருட்டில் தண்ணீரில் உருண்டு புரண்டு கடல்பாசி தலையைச் சுற்றி குரல் வளையை நெருக்கி குலைநடுங்க வைக்கும் முதல் நீர்மூழ்கிக் கப்பல் பிரயாணத்தின் அனுபவ விலையோ ?

(எஜமானின் சித்தத்தை அறிந்தும் அதைச் செய்யாமல் தப்பித்து ஓடுகிற பின்மாற்றக்காரர் செலுத்தப் போகும் மொத்தக்கூலியின் மதிப்பையும் நித்திய நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்றே வெளிப்படுத்தும்)

வலி, வேதனை, தனிமை, பயம், நடுக்கம், கலக்கம் மற்றும் கடலின் பாதாளச் சிறைவாசம் என்னும் விலையைக் கொடுத்தே காசு கொடுத்து டிக்கட் எடுத்தான் யோனா..

தேவ சமூகத்திலிருந்து விலகிப்போனது மட்டுமல்ல, மனித சகவாசத்திலிருந்தும் தன்னை விலக்கிக் கொண்டு தேவனுக்கும் மனுஷருக்கும் உபயோகமில்லாமல் போனான் யோனா..

(நன்கு அறிந்து தெரிந்தே சாத்தானுக்குத் தோழனாகிவிட்ட ஒரு பின்மாற்றக்காரனின் ஆபத்தான முடிவும் இது தான் !)

கர்த்தருடைய வழிகளுக்கு கண் சொருகிப்போன யோனா, இப்போது கர்த்தருடைய சத்தத்துக்கும் தன் செவிகளை அடைத்துக் கொண்டான்.

இப்போது அவனது ஒவ்வொரு அசைவையும் அசையாமல் கவனியுங்கள்..ஒவ்வொன்றும் கீழ்நோக்கியே செல்கிறது..

He went down to Joppa..

1.அவன் கீழாக யோப்பாவை நோக்கிப் போய்..(1:3)

2.கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கி..1:5

3. பர்வதங்களின் அடிவாரங்கள் பரியந்தம் இறங்கினான்..(2:6)

தேவனை விட்டு விலகி விலகி தூரமாய்ப் போகும் பின்மாற்றக்காரனின் ஒவ்வொரு அடியும் சறுக்கலும் வழுக்கலும் விழுதலுமான இறங்குமுகம் தான் !

<u>யோனாவும் இன்றைய சபையும்:</u>

தன் கீழ்ப்படியாமையின் எல்லைக்கே போய்விட்ட யோனா, ஒரு பக்கம் கடல் கொந்தளித்துக் கொண்டிருக்க, மாலுமியும் கப்பல்காரர்களும் பயத்தால் தத்தளித்துக் கொண்டிருக்க, கப்பல் உடைந்து நொறுங்கி சுக்குநூறாகிப் போக இருந்த நிலையிலும் எந்தக் கவலையுமின்றி நிர்விசாரமாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

இந்த யோனா, கடைசிக் காலத்தின் இந்தக் கடைசி வினாடி நேரத்திலும் தூக்க மயக்கத்தால் நிறைந்து நிர்விசாரமாய்த் தூங்கிக் கொண்டேயிருக்கும் விசுவாசிகளுக்கு முன்னடையாளமோ ?

இப்போதைப் பார்க்கிலும் வேறு எப்போதாவது இந்த அளவுக்கு உலகம் கொந்தளித்துத் தத்தளித்து நடுங்கிக் குலுங்கி உடைந்து போயிருந்ததோ?

இன்றைய சபை, இவ்வளவு கணக்கற்ற ஆவிக்குரிய ஏதுக்களை வைத்துக் கொண்டும் இப்போது இருப்பது போல இந்த அளவு தூங்கிக் கிடந்ததாக சரித்திரம் உண்டோ ?

The Septuagint என்ற வேத மொழிபெயர்ப்பு சொல்கிறது.." யோனா குறட்டை விட்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.." என்று.

பயந்து நடுங்கிப்போன கடல் பயணிகள் கடல் கொந்தளிக்கக் காரணம் என்னவோ என்று கலங்கிக் கொண்டிருக்க, தன் கண்களில் சிக்கிய யோனாவைக் கண்டு, "நீ நித்திரை பண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக் கொள்..உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய் ? உன் தேசம் எது ? நீ என்ன ஜாதியான் ? என்று சரமாரியாகக் கேள்விகளால் துளைத்துக் கொண்டிருந்தான் அந்த கலவரப்பட்ட மாலுமி..

இதே கேள்வியைத் தான், தீவிரவாதத்தாலும், அணுகுண்டு அழிவினாலும், சீதோஷ்ண சீர்குலைவுகளினாலும், சோதோம் கொமோராவை விட சீர்கெட்டு சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் உலகமும், இன்று கீழ்ப்படியாமையிலும் பின்மாற்றத்திலும் தூங்கிக் குறட்டை விட்டுக் கொண்டிருக்கும் இன்றைய லவோதேக்கிய சபையைப் பார்த்து, "சபையே உன் வேலை என்ன ? பொறுப்பென்ன ? நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் ?" என்று எரிச்சலோடு கேட்கிறது..

யோனா அப்போதும் தன் தேவனை நோக்கிக் கூப்பிடவில்லை.அவன் இன்னும் அவிசுவாசிகள் முன் அசிங்கப்பட்டு வெட்கத்தால் கூனிக்குறுக வேண்டியிருந்தது.

யோப்பாவின் சந்து பொந்துகளுக்குள் இறங்கி, கப்பலின் கீழ்த்தட்டு வரைக்கும் இறங்கி, பர்வதங்களின் அடிவாரங்கள் மட்டும் இறங்கிப் போய்விட்ட அவன், இன்னும் கீழ்நோக்கி அடி ஆழத்தில் பாதாளத்தின் வயிற்றுக்குள்ளும் இறங்க வேண்டியிருந்தது..

யோபு சொன்னது போல," காரிருளும் மரண அந்தகாரமுமான இருண்ட இடமும், இருள்சூழ்ந்த ஒழுங்கில்லாத மரண அந்தகாரமுமுள்ள இடமும், ஒளியும் இருளாகும் இடமான போனால் திரும்பி வராத இடம் போன்ற (யோபு 10:21) பாதாளமாகிய அந்த மீன் வயிற்றிலிருந்து கடைசியாகத் தன் ஜெபத்தை ஏறெடுக்கிறான் யோனா..

இத்தனை பெரிதான இரட்சிப்பையும்,பரிசுத்த ஆவியானவரின் உண்மையான ஒரு மகா பெரிய எழுப்புதலையும் குறித்து கொஞ்சமும் அக்கறையின்றி கவலையற்றுக் கிடக்கும் சுதந்திர நாடுகளுக்கும் சபைகளுக்கும் விசுவாசிகளுக்கும் தம்மைக் குறித்த ஒரு நடுக்கத்தைக் கொடுப்பதற்காகவே, அந்தந்த நாடுகளை நடுங்கப்பண்ணும் சர்வாதிகாரிகளை எழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் தேவனுக்கு ஏற்படுமோ ?

யோனாவுக்கென்றே பெருங் காற்றையும், கொந்தளிப்பையும், பெரிய மீனையும், ஆமணக்குச் செடியையும், அரிக்கும் பூச்சியையும், உஷ்ணமான கீழ்க்காற்றையும் ஆயத்தப்படுத்தி, இவைகள் யாவற்றிற்கும் கட்டளையிட்டிருந்த தேவன், இன்றைய சபைகளை சரியான திசைக்குக் கொண்டு செல்ல பெரிய அளவில் ஏதோ ஒரு மகா கொந்தளிப்பைக் கட்டளையிட ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாரோ ?

அப்படி ஒரு இக்கட்டான, போனால் திரும்பி வராத இடத்துக்கும் நிலைமைக்கும் தள்ளப்பட்ட பிறகே, அப்படிப்பட்ட பாடுகளின் பாதாள வயிற்றிலிருந்து தான் கூக்குரலிட வேண்டிய நிலை நமக்கு ஏற்படுமோ ?

" பாதாளத்தின் வயிற்றிலிருந்து...உமது பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்.." என்று கதறிய யோனாவைப் போல, அப்படி ஒரு பயங்கரமான விலைக்கிரயத்தை செலுத்திய பிறகு தான் பாதாளத்தின வயிற்றிலிருந்து அவரது பரிசுத்த ஆலயத்தை நோக்கிப் பார்க்க வேண்டிய நிர்ப்பாக்கிய நிலை நமக்கு வரக்காத்திருக்கிறதோ ???

தேவன் தமது பரிசுத்த ஆவியானவரை நினிவே என்ற புறஜாதி மேல் ஊற்றப்போகிறார் என்றும், அந்தச் செய்தியை, ஏற்கனவே அவர்கள் மேல் கடுங்கோபத்தில் இருக்கும் தன்னைக் கொண்டே சொல்ல வைக்கப் போகிறார் என்றும், இனி தேவனின் முடிவில் தனது விருப்பு வெறுப்புகளுக்கு இடமே இல்லை என்ற தேவனது இடுக்கிப்பிடியுமே, யோப்பாவில் யோனாவை எரிச்சலின் உச்சத்துக்குக் கொண்டு சென்றது..

யோனா நினிவேயை முழுப்பகையாய் பகைத்தான்..

"என் கூக்குரலுக்கு இந்த ஜனம் காது கொடுக்கப் போவதே இல்லை என்ற எண்ணத்தாலே எப்போதும் நிறைந்திருக்கும் நான், இந்த 1,20,000 பேர் எங்கேயிருந்து மனம் திரும்பப்போகிறார்கள் " என்று நினைப்பது சரி தானே என்று அவன் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டான்..

"நினிவேக்கு சாதகமாய் தீர்க்கதரிசனம் சொன்னால் என் ஜனமாகிய இஸ்ரவேல் என்னைக் காறி உமிழாதோ ? அவர்கள் முகத்தில் நான் எப்படி விழிப்பேன் ?" என்பதே அவன் கவலையாயிருந்தது..

மேலும், இஸ்ரவேல் ஜெயிக்கப்பட்டு, பிடிக்கப்பட்டு, சிறையாக்கப்பட்டு, மூக்கிலே துறடு போடப்பட்டு, வாயிலே கடிவாளம் போடப்பட்டு, கை கால்களிலே விலங்கிடப்பட்டுக் கதறக் கதற இழுத்துச் செல்லப்பட்டு, இந்த நினிவேயின் குடிகளால் கர்ண கடூரமாய் கொல்லப்படும் என்று தேவனால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு, தீர்க்கமாய் தீர்மானம் பண்ணப்பட்டு, அவராலே ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட பட்டணமாகிய நினிவே இது அல்லவோ ?

இப்படிப்பட்ட நினிவே வெந்து அழிந்து சாம்பலாய்ப் போகும் என்ற தீர்க்கதரிசனத்தோடு, விட்டால் அக்கினியையும் இறக்கி அதைப் பஸ்பமாக்கியிருப்பான் இந்த யோனா !

அப்படிப்பட்டவனைப்போய்.. "நினிவேயின் குடிகளே ! உங்கள் மேல் தேவனது இரக்கத்துக்கு முடிவில்லை ! என்று அங்கே நின்று தீர்க்கதரிசனம் சொல் !" என்றால் ?? - அவனால் ஜீரணிக்கவே முடியாத ஒன்று அது !

"இன்னும் 40 நாள் உண்டு..அப்போது நினிவே கவிழ்க்கப்பட்டுப் போகும்..!" என்ற அவனது ஒரே பிரசங்கத்தில் அரசனும் ஆண்டியும் இரட்டுடுத்தி உபவாசித்து, மனிதனும் மிருகமும் புலம்பி அழுது மனந்திரும்பியபின், அதே நினிவேயைப் பார்த்து இந்த யோனா சந்தோஷத்தில் துள்ளிக் குதித்திருப்பான் என்று நீங்கள் நினைப்பீர்கள் !

ஆனால் அவன் ஒரு பைத்தியம் என்பேன் ! (என் வார்த்தையை அப்படியே எடுத்துக் கொள்ளாதீர்கள் !) யோனா 4:1 ஐ பாருங்கள் ! "யோனாவுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது. அவன் கடுங்கோபம் கொண்டான்.."

"தன் ஜனமாகிய இஸ்ரவேல் தேவனை விட்டுப் பின்வாங்கியிருந்த நிலையில், நினிவேயின் ஜனம் மனந்திரும்பி தேவனது இருதயத்தைக் குளிரப்பண்ணுவதைக் காட்டிலும், அது செத்து அழிந்து நரகக் குழிக்குப்போவதே மேல்!" என்பதிலேயே குறியாய் இருந்தான் அவன் !

ஆனால் இவை எல்லாவற்றின் மத்தியிலும் நினிவேயின் ஜனமோ வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத அஞ்ஞானத்திலேயே உட்கார்ந்திருந்தது.

இந்தக் காரியங்கள் அனைத்தையும் கொஞ்சம் ஆவிக்குரிய கோணத்திலும், இந்த நினிவேயை இன்றைய தேவனற்ற இஸ்லாமிய நாடுகளோடும், கிறிஸ்தவம் ஒடுக்கப்படும் கம்யூனிச தேசங்களோடும், மதமாற்றம் என்று கூச்சலிடும் இந்துத்துவ சக்திகளோடும் சற்று ஒப்பிட்டுப் பாருங்கள் பார்ப்போம் !

எங்கே நினிவேயில் எழுப்புதல் வந்துவிடப் போகிறதோ என்று அதை முழுப்பகையாய்ப் பகைத்துக் கொண்டிருந்த யோனாவைப் போலவே, கிறிஸ்தவர்களை அணுஅணுவாய் வதைத்து சித்திரவதை செய்து கொண்டிருக்கும் நாடுகளின் மேல் தப்பித் தவறி கூட தேவ இரக்கம் வந்துவிடக்கூடாது என்று மனமாற பிரார்த்தனை ஏறெடுக்கும் நவீன யோனாக்கள் எத்தனை பேர் இன்றைக்கும் உண்டு !!

" பிரசங்கித்தார் என்பதால் வாட்ச்மன் நீயின் நாக்கை வெட்டி, புத்தகங்கள் எழுதினார் என்பதால் அவரது வலது கையை வெட்டி, கிறிஸ்தவர்களை எலும்பு உடைக்கும் எந்திரங்களின் நடுவே கிடத்தி, அவர்கள் மேல் உருளையை உருட்டி, அங்கம் அங்கமாய் வெட்டிக் கூறு போடும் சைனாவின் இரட்சிப்புக்காவும்,

வெறி நாய்களை ஏவி கிறிஸ்தவர்களைக் குதறச்செய்து, மூக்கின் வழியே கொதிக்கும் மிளகுத் தண்ணீரை வயிற்றுக்குள் பீச்சியடித்து கால்பந்து போல் வயிறை உப்பப் பண்ணி,அவர்களது வாயிலும் மூக்கிலும் ஆசன வாயிலின் வழியாகவும் அந்த வெந்நீர் வெளியே வரும் வரை தரையில் அவர்களைப் பந்தாடும் வட கொரியாவுக்காகவும், புத்த வெறி கொண்ட ஜப்பானுக்காகவும்,

பகலெல்லாம் தலை கீழாய் தொங்கவிட்டு அடித்து இரத்தக்களறியாக்கி, இரவுகளில் சிறை அறைகளில் அவர்கள் மேல் பட்டினி போடப்பட்ட பெருச்சாளிகளை ஏவி விட்டு அவர்களை அவைகள் உயிரோடு தின்று தீர்ப்பதைப் பார்த்து ரசித்துக் களிக்கும் போலந்து, ருமேனியா தேசங்களில் ஹரலான் பாப்போவ் மற்றும் ரிச்சர்ட் உம்பிராண்ட் போன்ற போதகர்கள் அனுபவித்த வர்ணிக்க முடியாத வதைகள் நடந்த அந்த நாடுகளுக்காகவும்,

இன்று காவிக்கொடி படபடக்க, திரிசூலம் ஏந்தி ஜெய் ஸ்ரீ ராம் கோஷமிட்டு கிறிஸ்தவர்களுக்கு எதிரே அணிதிரண்டிருக்கும் இந்துத்துவ காவிப்படைக்காகவும் இருதயத்தைக் கிழித்து மன்றாடும் மனிதர்கள் உண்டோ ?

"உருளைக் கிழங்கின் தோலை உரித்தால் அதற்கு வலிக்குமே என்று உருளைக் கிழங்குக்காக கவலைப்பட்டு ஒருவன் உருளைக் கிழங்கு தின்னாமல் இருப்பானோ ?" என்று சொல்லிக் கொண்டே கிறிஸ்தவர்களை உயிரோடு தோலுரித்த நாடுகளை ஒருவன் சபியாமல் இருப்பானோ ?

இவை எல்லாவற்றிலும், இந்த நாடுகளையும் அதின் கொடுங்கோலர்களையும் சாபமாய் சபித்து அந்த நிஷ்டூரர்களுக்காக ஜெபிக்காமல் இருக்க ஒரு கோடி காரணமே இருந்தாலும்...

"ஆண்டவரே ! ஆவிக்குரிய அனாதைகளாய், பாவ நோய் கொண்டு, தங்கள் அசுத்த அருவருப்பிலே உச்சந்தலை முதல் உள்ளங்கால் மட்டும் தங்கள் சதையை தாங்களே தின்று, ஓட்டை எடுத்துத் தங்களையே சுறண்டிக் கொண்டு நியாயத்தீர்ப்பின் நாளுக்கென்று சகதியிலும் சாம்பலிலும் உட்கார்ந்து அரற்றிக் கொண்டிருக்கும் இந்த நாடுகளின் ஜனத்துக்கு இரங்கி ஒரு யோவான் ஸ்நானகனையோ, மார்ட்டின் லூத்தரையோ, ஜாண் நாக்ஸையோ, ஜாண் வெஸ்லியையோ தரமாட்டீரோ ?" என்று தமக்கு முன் கதறும் ஒரு மனிதனை கர்த்தருடைய கண்கள் இன்றும் தேடிக் கொண்டே தான் இருக்கிறது !

தேவனுடைய உக்கிர கோபாக்கினையின் பாத்திரத்தில் பானம் பண்ணி அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிக்க மட்டுமே பாத்திரமான இப்படிப்பட்ட இந்த நாடுகள் மேலும் அவரது இரக்கம் ஊற்றப்படுமானால் அதையும் ஜீரணித்து ஏற்றுக் கொள்ள யாராகிலும் இங்கே உண்டோ ?

ஆம் அப்படித்தான் பரிதபித்தார்.. பரிதபிக்கிறார் தேவன் !

நினிவேக்காக மட்டுமல்ல..வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாமல் இன்றும் இந்த நாடுகளில் இருளில் இருக்கும் ஜனத்துக்காக !

எவ்விலை கொடுத்தாகிலும் எழுப்புதலை வாங்க ஆயத்தமா ?

இந்த விஷயத்தில் அநேகர் என்னோடு ஒத்துக்கொள்வதில்லை.. ஆனால் தமது வருகைக்கு முன்பாக, எழும்பி அடிக்கப்போகும் ஒரு மகா பெரிய சுனாமி எழுப்புதலில் தமது சபை மகிமையின் சபையாக, வெற்றி கொண்ட, வீறுகொண்ட சபையாகத் தாம் வரும்போது, வெட்கப்படாமல் தமக்கு முன் நிற்பதைக் காணவே தேவன் விழைகிறார் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன் !

எழுப்புதலுக்காக எந்த விலையானால் என்ன, தலையையே தந்தாலும் தகும் !

"பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன்...அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது..(யோனா 2:2,7) என்று சொன்ன கவலையீனமும் எரிச்சலும் ஒருமிக்கக் கொண்ட தீர்க்கனைப் போல நாமும் சொல்வோமானால், அதற்காக அவன் அங்கே செலுத்திய அதே அதிபயங்கரமான விலையை நாமும் செலுத்தியே ஆக வேண்டும் !

கர்த்தருடைய கணக்கே தனி !

காலை முதல் மாலை வரைக்கும் மடிந்து,
கவனிப்பார் ஒருவருமில்லாமல் நித்திய
அழிவடைகிறார்கள். அவர்களிலிருக்கிற
அவர்களுடைய மேன்மை
போய்விடுமல்லவோ ?
ஞானமடையாமல் சாகிறார்களே !
(யோபு. 4: 20,21)


Revival

CHAPTER 14

எழுப்புதலுக்கான விலைக்கிரயம் செலுத்த நீ ஆயத்தமா ?

எழுப்புதலுக்கான விலைக்கிரயம் செலுத்த நீ ஆயத்தமா ?

(Rev.Wesley Duewel)

எழுப்புதலுக்காக எப்படிப்பட்ட விலைக்கிரயம் செலுத்த நீ ஆயத்தமாய் இருக்கிறாய் ?

நாம் செய்யும் தான தர்மங்களினாலோ, நற்கிரியைகளினாலோ சம்பாதிப்பது அல்ல தேவ ஆசீர்வாதங்கள் - மாறாக, "எந்த நன்மையான ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்தே உண்டாகி, ஜோதிகளின் பிதாவினடத்திலிருந்தே இறங்கி வருகிறது.." (யாக் 1:17)

ஆனாலும் தேவன் செய்யப்போகும் பலத்த கிரியைகளில், ஏதோ ஒரு வகையில் பங்கு கொள்ள விசேஷித்தை அழைப்பைப் பெற்றிருக்கும் நாம், அதற்கென்று விலைக்கிரயம் ஒன்றையும் செலுத்தியே ஆக வேண்டியிருக்கிறது. அப்படித் தான் தேவன் வைத்திருக்கிறார்..

நாம் தேவனுடைய உடன் வேலையாட்களாய் அவரால் அழைக்கப்பட்டிருப்பது அவருடைய கிருபையே ! ஜனங்களின் இரட்சிப்புக்காகவும் தேவ ராஜ்யத்தின் வளர்ச்சிக்காகவும் விலைக்கிரயம் செலுத்த நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பது அவரது
கிருபையால் நமக்குக் கிடைத்த மேலான கனமும் சிலாக்கியமுமே ஆகும்.

இப்போது சொல் ! எப்படிப்பட்ட விலைக்கிரயம் செலுத்த நீ ஆயத்தமாய் இருக்கிறாய் ?

ஒவ்வொரு ஆசீர்வாதத்திற்கும் ஒரு விலைக்கிரயம் உண்டு. நமது இரட்சிப்பை நிறைவேற்ற, தேவனாலே மாத்திரமே நமது இரட்சிப்புக்கான முடிவில்லா விலைக்கிரயத்தை செலுத்த முடியும்.

பிதாவாகிய தேவன் மட்டுமே செலுத்த வேண்டிய விலையில்லாத விலை ஒன்று அவருக்கு இருந்தது.

தமது மீட்பின் திட்டத்தினிமித்தம் தமது ஒரே பேரான குமாரனை பூமிக்கு அனுப்பியே ஆக வேண்டியது, பிதாவாகிய தேவனுக்கு ஒரு அற்பமான காரியமாய் இருந்ததோ ?

அந்தக் குமாரன், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாய், மரத்திலே தூக்கப்பட்டு சாபமானபோது, தமது நேச மகனிடமிருந்து தமது முகத்தை மறைத்துக் கொண்டது அவருக்கு மிக சாதாரணமானதாகவும், தமது பார்வைக்கு ஒன்றுமே இல்லாதது போன்ற ஒரு காரியமாய் இருந்ததோ ?

சிலுவையிலே சம்பாதித்த விடுதலைக்கும் இரட்சிப்புக்கும் திரித்துவ தேவனான மூவருமே முடிவில்லா விலைக்கிரயம் ஒன்றை செலுத்தவே செலுத்தினர்..

தேவன் தமது விலைக்கிரயத்தை செலுத்தித் தீர்த்து விட்டார். அது முடிந்தது.

ஆனால் நீயும் நானும் செலுத்த வேண்டிய விலை ஒன்று உள்ளது.

பவுலின் நாட்களில் பவுல் செலுத்த வேண்டிய விலை ஒன்று அவருக்கு இருந்தது.
அதை அவர் சந்தோஷமாய் செலுத்தினார்.

தேவனது கிரியைகளைக் காணத் துடிக்கும் ஒவ்வொரு காலகட்டமும் ஒவ்வொரு தலைமுறையும் ஒரு புதிய பலியையும் தியாகத்தையும் செய்தே ஆக வேண்டும். புதிய நாள் ஒவ்வொன்றும் கர்த்தருக்காக ஏதோ ஒரு புதிய விலைக்கிரயத்தை செலுத்த அதை எதிர்பார்த்தே காத்திருக்க வேண்டியுள்ளது. தனது திட்டத்தில் பரலோகம் அதை அப்படித்தான் நிர்ணயித்துள்ளது.

தேவனுடைய வெற்றிகளும் அவரது ராஜ்யமும் ஒரு போதும் மலிவு விலையில் வலிய வருவதில்லை..

மிகப்பெரிய விலைக்கிரயம் ஒன்று செலுத்தப்படாமல் எந்தத் தலைமுறையும் ஒரு போதும் தேவனுடைய அசைவைக் கண்டதுமில்லை, தேவனுக்காய் எதையும் சாதித்ததுமில்லை..

ஏசாயாவின் நாட்களில் நடந்தது அதுவே !
திரியேக தேவன், "யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் ?" என்று ஏங்கி அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்..

எசேக்கியேலின் நாட்களில் நடந்ததும் அதுவே ! தேவனுடைய நியாயத்தீர்ப்பு தேசத்தின் மேல் வந்து அவர் அதை அடித்து அழிக்காதபடி திறப்பிலே நிற்கவும் சுவரைஅடைக்கவும் தக்க ஒரு மனிதனை தேவன் தேடிக் கொண்டிருந்தார் !

பவுலின் நாட்களில் நடந்ததும் அதுவே ! எல்லோரும் தங்கள் தங்கள் சுகத்தையும், தங்கள் சுயலாபத்தையும், தங்களுக்கு நலமான தங்களுக்குரியவைகளையுமே தேடிக் கொண்டிருந்த போது, அப்போஸ்தலனோ, அழியும் ஆத்துமாக்களுக்கான தனது போராட்டத்தில் அநேக நேரம் தனியாகவே போராடிக் கொண்டிருந்தார் !

இன்று நடப்பதும் அதுவே ! கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் சொல்லிக் கொள்ளும்படியானவர்கள் அல்லர்..
விலைக்கிரயம் என்ற ஒன்று இருக்கிறது என்பதே அவர்கள் சிந்தனைக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கிறது !

இன்னும் ஒரு பெரிய ஆவிக்குரிய கூட்டம் தூங்கியே காலம் கழிக்கிறது ! தாங்கள் செலுத்த வேண்டிய பலியும் தியாகமும் விலையும் ஒன்று உண்டு என்பதே அவர்கள் அகராதியில் கிடையாது !

ஆவிக்குரிய பஞ்சம் ஒன்று இன்று தலைவிரித்தாடுகிறது ! எத்தனை கூட்டங்கள் ! எத்தனை மாநாடுகள் ! கிறிஸ்தவர்களை உந்தி எழுப்பி உற்சாகப்படுத்த எத்தனை தான் தலைகீழ்ப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டாலும், நாம் ஆவலாய் ஏங்கித் தவிக்கும் எழுப்புதலை இன்னும் நமது கண்கள் காணாமலிருப்பதற்கு காரணம் ஒன்று இருக்கவே செய்கிறது..

தேவனிடம் எந்த நன்மைக்கும் வரங்களுக்கும் வல்லமைக்கும் எப்போதும் பஞ்சமே இருந்ததில்லை..அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை இன்றும் மிக வலிமையாகக் கிரியை செய்யவே செய்கிறது !

மனசாட்சியின் காலம்,நியாயப்பிரமாணத்தின் காலம் என்றெல்லாம் கடந்து போன காலங்களையும் யுகங்களையும் காரணம் காட்ட எந்தக் காரணத்துக்கும் இடமே இன்றி, நாம் இப்போது இருப்பதோ மிக உன்னதமான கிருபையின் காலத்திலேயே ! இது பரிசுத்த ஆவியானவரின் காலம் !

அற்புதங்களை நடப்பிப்பதோ, பாவத்தை உணர்த்துவிப்பதோ, பரிசுத்தமாக்குவதோ, எழுப்புதலை அனுப்புவதோ - எதற்கும் தடையின்றி, எதையும் அவர் செய்ய ஆயத்தமாய் இன்னும் கிரியை செய்து கொண்டே தான் இருக்கிறார் !

நாம் வாழும் இந்தக் காலம், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டுக் கொண்டிருக்கும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட "இளைப்பாறுதலின் காலங்கள்.." (அப் 3:19)

தேவனது தரப்பிலிருந்து இவைகள் எல்லாம் எந்தக் குறைவுமின்றி பொழிந்தருளப்பட்டுக் கொண்டிருந்தாலும், இவைகளுக்கும் மத்தியிலும் ஒரு மிகப்பெரிய ஆவிக்குரிய வெற்றிடமும் தேவையும் இருந்து கொண்டு தான் இருக்கிறது..

கிருபையின் ஆசீர்வாதங்கள் ஏராளம் ! ஆனால் தேவனின் மகத்தான அசைவுகள் அரிதாகவே காணப்படுகிறது !

முன் எப்போதையும் விட நல்ல கிறிஸ்தவர்களுக்குக் கணக்கில்லை.. ஆனால் ஆவிக்குரிய ஜாம்பவான்கள் எங்கே ?
ஆவிக்குரிய வட்டாரங்களில் எழுப்புதலை வாஞ்சிக்கும் விசுவாசிகள் அநேகர் ! ஆனால் அதற்கான விலைக்கிரயம் செலுத்தத் தங்களையே விலையாய் செலுத்துவோர் எங்கே ?

ஏற்கனவே சொன்னது போல் எங்கு பார்த்தாலும் ஆவிக்குரிய பஞ்சம் ! பற்றாக்குறை !

இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும் ஜெபங்களும் ஜெபவீரர்களும் காணக்கிடைக்காத பஞ்சம் ! உபவாசம் என்ற போராயுதத்தைக் கையில் எடுக்கும் உபவாச வீரர்கள் இல்லாத பற்றாக்குறை !

விதைக்கப்பட்ட விதைகளுக்குக் குறைவில்லை..ஆனால் கண்ணீரோடு விதைக்கப்படாததால், கெம்பீரமாய் அல்ல, கொஞ்சமாகவே அறுத்தோம்..

"இயேசுவை ஏற்றுக் கொள்ளுங்கள்.." என்ற குரல் எங்கும் ஒலித்தாலும், "சிலுவை சுமப்பது.."என்ற சத்தம் எங்குமே கேட்கப்படுவதில்லை..
"விசுவாச" மாநாடுகளுக்குப் பஞ்சமில்லை..ஆனால் மலைகளைப் பேர்க்கத்தக்க விசுவாசம் தான் காணக்கிடைப்பதில்லை !

ஜெபத்தில் போராடும் ஜெப வீரர்களுக்கும் புலம்பி அழும் குமாரத்திகளுக்கும் தாய்மார்களுக்கும் இன்று பஞ்சம் இல்லையோ ?

இயேசுவோடு சரிசமமாய், சமரசமாய் உரையாடுவதே அநேகருக்கு ஜெபம் என்று ஆகிவிட்ட போது, கெத்சமனியின் அங்கலாய்ப்பும் பலத்த சத்தமும் கண்ணீரும் விண்ணப்பமும் எங்கே ?

நீ ஒரு நல்ல பக்தியுள்ள கிறிஸ்தவன் தான்..சபையிலும் ஊழியத்திலும் உன்னால் இயன்ற உன் பங்கை நீ செய்து வருகிறாய்..நல்லது - ஆனால் இவை மாத்திரம் போதுமா ?

ஒரு வேளை உன்னுடைய துணிகரமான பாவத்தினால் கடந்த நாட்களில் கிறிஸ்துவை நீயே சிலுவையில் அறையாமல் இருந்திருக்கலாம்..

ஆனால், கிறிஸ்துவோ அடிக்கடி உன்னைப் பார்த்து, "நீ இன்னும் நித்திரை செய்கிறாயோ ? போதும், வேளை வந்தது.." என்று சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறாரே ?..

வரப்போகும் நாட்களிலும் நீ உனது கடந்த நாட்களைப் போலவே தான் எல்லா வகையிலும் இருக்கப்போகிறாய் என்பது நன்றாகவே தெரிகிறது என்பதை நான் துக்கத்தோடே சொல்ல வேண்டியுள்ளது..உன் கடந்த நாட்களையும் நடக்கைகளையும் கவனித்துப் பார்க்கும் போது, வரும் நாட்களிலும் அதில் ஒன்றும் விசேஷமான மாற்றம் காணப்படப்போவது போலத் தெரியவில்லையே ?

இவற்றிற்கு சாக்குப்போக்கு சொல்வது மிக எளிது!ஏற்கனவே நீ இருந்து வந்தது போலவே தான் உன் அன்றாட காரியங்களில் இனியும் நீ இருக்கப் போகிறாய் என்பதற்கு கணக்கற்ற காரணங்கள் நன்றாகவே தெரிகிறது..

"விலைக்கிரயத்தைப்" பற்றியெல்லாம் நினைத்துப் பார்க்கக்கூட உனக்கு நேரம் ஏது ? உன்னால் அதைத் தாங்கவும் முடியாது ! அதின் விலை அவ்வளவு அதிகம் !

உன் நண்பர்களுடன் நீ செலவழிக்கும் நேரத்தை நீ தியாகம் செய்ய வேண்டிய விலைக்கிரயமாய் அது இருக்கலாம் ! அல்லது சமூக வலை தளங்களான முகநூல் மற்றும் வாட்ஸப்பில் செலவழிக்கும் நேரத்தையோ டிவிக்கு முன்னால் மணிக்கணக்கில் கழிக்கும் நேரத்தையோ, கிரிக்கெட் பார்க்கும் நேரத்தையோ விட்டுவிட வேண்டிய ஒரு விலைக்கிரயமாய் அது இருக்கலாம் !

அல்லது உன் அதிகாலைத் தூக்கத்தையோ, மதிய நேர உறக்கத்தையோ, உணவு வகைகளின் மேலுள்ள உன் ஆகார மோகத்தையோ விட்டுவிட்டு உபவாசத்தோடு ஜெபிக்க வேண்டிய கட்டாயம் என்ற விலைக்கிரயமாய் இருக்கலாம் !

நீ அதிகமாய் விரும்பி நேசிக்கும் நட்பையோ, உன் மனம் லயிக்கும் யாரோ ஒருவரது அளவுக்கு அதிகமான உறவையோ கூட கர்த்தருக்காகத் துண்டித்துவிட வேண்டிய நிர்ப்பந்தம் என்னும் விலையாய் இருக்கலாம் !

உனது சில பழக்க வழக்கங்களையோ அல்லது நீ மிகவும் அதிகமாய் விரும்பிச் செய்யும் காரியங்களையோ, "என்னை விட்டால் வேறு யாரும் செய்ய முடியாது.." என்று நீ நினைத்துக் கொண்டிருக்கும் காரியங்களையோ கூட விட்டு விட வேண்டிய ஒரு விலைக்கிரயமாய் இருக்கலாம் !

மொத்தத்தில் விலைக்கிரயம் என்பது நீ நினைப்பது போல் அல்ல..அது மிக மிக அதிகமானது ! ஆனால் என்ன விலையானால் தான் என்ன ? "நீ அதை செலுத்திப்பார் !" என்று நான் உனக்கு சவால் விட்டுச் சொல்கிறேன் !

ஜெபத்துக்கும் தேவ ராஜ்யத்துக்கும் முதலிடம் கொடுக்கத்தக்கதாக சில அதிரடி மாற்றங்களை உன் அன்றாட வாழ்வில் நீயே செய்து தான் பாரேன் !" என்று தைரியமாய் உனக்குச் சொல்லுகிறேன் ! எல்லாவற்றுக்கும் மேலாக கெத்செமனேக்கு முதலிடம் கொடுத்துப் பார் என்று என்று சொல்லுகிறேன் !

"உன்னை விட, உன் நண்பர்களை விட, உன் எல்லாவற்றையும் விடஜெபத்தில் தனியறை தேடி உன்னை நீயே ஒளித்துக் கொள்வதற்கு முக்கியமும் முதலுமான இடத்தைக் கொடுத்துவிடு !" என்று உன்னை சவாலிடுகிறேன் !

இதில் நீ உடனடியாய், அதிரடியாய், தீவிரமாய் ஒரு முடிவோடு இறங்கிவிடு என்று தேவனை முன்வைத்துச் சொல்லுகிறேன் !

இன்று இல்லையேல் இது என்றுமில்லை !

இன்றே, இப்போதே இந்த விலைக்கிரயத்தை எழுப்புதலுக்கென்று செலுத்த உன்னை நீ ஒப்புக்கொடுப்பாயா ?



CHAPTER 15

டேவிட் – ஸ்வீயா – தேவனின் கோதுமை மணிகள்

டேவிட் - ஸ்வீயா - தேவனின் கோதுமை மணிகள்

1921...
மிஷினரித் தம்பதிகள் டேவிட் மற்றும் ஸ்வீயா Flood தங்கள் 2 வயது மகனோடு பெல்ஜியன் காங்கோ என்ற ஆப்பிரிக்க நாட்டுக்கு மிஷினரியாகப் புறப்படுகின்றனர்...

வழியில் ஸ்கேன்டிகேவியாவைச் சேர்ந்த இன்னொரு மிஷினரித் தம்பதிகளான எரிக்சனும் இவர்களோடு சேர்ந்து கொள்கின்றனர்...

காங்கோவில் அவர்களது மிஷன் வளாகத்திலிருந்து வெகுதூரத்திலுள்ள ஒரு காட்டுப் பகுதிக்குள் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல கிறிஸ்துவின் அன்பு அவர்களை நெருக்கி ஏவியது.

இது அவர்கள் விசுவாசத்தில் எடுத்து வைக்கும் மிகப்பெரிய காலடி.

என்டோலேரா என்ற அந்த கிராமத்தின் தலைவன் தன் குல தெய்வங்களுக்குப் பயந்து மிஷனரிகளை தன் ஊரிலிருந்து துரத்தி விடுகிறான்...

இரு தம்பதிகளும் அந்த இடத்திலிருந்து அரை மைல் தூரத்தில் மேடான ஒரு இடத்தில் மண் குடிசை கட்டி அந்த கிராமத்துக்கு சுவிசேஷம் கொண்டு செல்ல ஏதாவது ஒரு அதிசயம் நடந்து வழி திறந்து விடாதா என்று காத்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை.

அந்த கிராமத்தோடு அவர்களுக்கிருந்த ஒரே தொடர்பு ஒரு சிறு பையன்தான். வாரத்துக்கு 2 முறை சிக்கனும், முட்டைகளும் அவர்களுக்கு சப்ளை பண்ண அனுமதிக்கப்பட்டிருந்தான்.

ஸ்வீயா வெறும் நாலடி எட்டு அங்குலம் உயரம் தான்.

அந்த அம்மா நினைத்தார்கள்... ஆப்பிரிக்காவில் நமக்குக் கிடைத்த ஒரே தொடர்பு இந்தப் பையன்தான் என்றால், நான் ஏன் இவனுக்கு இயேசுவைப் பற்றி சொல்லக்கூடாது? என்று முடிவு செய்தவர்களாய் அவனை அழகாய் இயேசுவிடம் நடத்தினார்கள்....

அதில் வெற்றியும் கண்டார்கள். ஆனால் அதைத் தவிர வேறு எதுவுமே அவர்களால் செய்ய முடியாமல் போனது.

இதற்கிடையில் அந்தச் சின்னக் குழுவில் ஒவ்வொருவரையாக மலேரியா தாக்கவே, எரிக்ஸனும் மனைவியும் கீழே மிஷன் ஸ்டேஷனுக்கு திரும்ப முடிவு செய்துவிட்டனர். டேவிட்டும் மனைவி ஸ்வீயாவும் என்டோலெராவில் தனியே விடப்பட்டனர்.

இவை ஒரு பக்கமிருக்க.... இந்த நேரத்தில் ஸ்வீயா நிறைமாத கர்ப்பமாயிருந்தார். சுற்றிலும் கடுங்கானகம்...

அவருடைய பிரசவ நேரம் வந்தபோது கிராமத் தலைவன் ஏதோ மனமிரங்கி செவிலித்தாயை உதவிக்கு அனுப்பி வைத்தான். பெண் குழந்தை பிறந்தது.

ஏய்ன் என்று பெயரிட்டார்கள். ஏற்கனவே மலேரியாவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த ஸ்வீயா மகப்பேறு சமயத்தில் இன்னும் பெலவீனப்பட... அவருக்கு உடலில் எஞ்சியிருந்த பெலன் எல்லாம் போய் 17 நாட்களில் இறந்து போனார் ஸ்வீயா...

எல்லாம் சேர்ந்து டேவிட்டுக்குத் தாங்க முடியாதபடி அடி... அவருக்குள்ளே வித்தியாசமாய் ஏதோ ஒன்று கிரியை செய்ய ஆரம்பித்தது.

தன் கையாலே குழி வெட்டி தன் 27 வயது இளம் மனைவியை அந்தக் காட்டில் புதைத்து விட்டுக் கைக்குழந்தையுடன் மிஷன் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்.

எரிக்ஸன் தம்பதியிடம் தன் குழந்தையைக் கொடுத்துவிட்டுச் சொன்னார். “நான் ஸ்வீடனுக்கு திரும்பிப் போகிறேன். என் மனைவியை இழந்துவிட்டேன். இந்தப் பிள்ளையை இனி என்னால் வளர்க்க முடியாது. தேவன் என் வாழ்க்கையையே நாசமாக்கி விட்டார்.”

சொல்லிவிட்டுத் தன் அழைப்பை மட்டுமல்ல..... கர்த்தரையே உதறித் தள்ளிவிட்டுத்தன் சொந்த நாட்டுக்குத் திரும்பினார் டேவிட்.

இதன்பின் எட்டு மாதங்களுக்குள்ளே இனம் புரியாத ஏதோ ஒரு காரணத்தால் எரிக்சனும் மனைவியும் உடனுக்குடன் ஒருவர் பின் ஒருவராக இறந்த விட்டனர்.

கைக்குழந்தை ஏய்ன் ஒரு அமெரிக்கத் தம்பதியரின் கைக்கு வந்து சேர அவர்கள் அதின் ஸ்வீடன் பெயரை கொஞ்சம் மாற்றி **Aggie** என்று வைத்தனர்.

மூன்று வயதான **Aggie**யை ஆப்பிரிக்காவுக்கு கொண்டு சென்றால் சட்டரீதியான பிரச்சனை வருமோ என்று பயந்து மிஷனரிப் பணியிலிருந்து மாறி அவர்கள் சபைப் பொறுப்பை எடுத்துக்கொண்டு அமெரிக்காவிலே செட்டிலாகி விட்டனர்....

வளர்ந்து பெரியவளான **Aggie,** மின்னபோலிஸில் பைபிள் காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது தேவேஹர்ஸ்ட்டைத் திருமணம் செய்து கொண்டு இருவரும் கர்த்தருடைய ஊழியத்தை சந்தோஷமாய் செய்து வந்தனர்.

வருடங்கள் கடந்தன. இருவருக்கும் ஒரு மகனும் மகளும் பிறக்கின்றனர். அதே நேரம் ஹர்ஸ்ட், சியாட்டில் ஏரியாவிலுள்ள கிரிஸ்டியன் காலேஜில் பிரஸிடென்ட் ஆக....

அந்தப் பகுதியில் ஸ்வீடன் நாட்டினர் ஏராளமாய்க் குடியேறி இருந்ததை உன்னிப்பாகக் கவனிக்கிறார் **Aggie**

ஒருநாள் அவரது வீட்டுத் தபால் பெட்டியில் ஸ்வீடன் மொழியிலுள்ள ஒரு கிறிஸ்தவப் பத்திரிகை வந்திருந்தது. முன்பின் தெரியாத யாரோ அனுப்பியிருந்தார்கள். மொழி தெரியாவிட்டாலும் பத்திரிக்கையை மெதுவாகப் புரட்டிக் கொண்டிருந்தார் **Aggie.**

திடீரென்று அவரது கண்கள் பத்திரிக்கையில் காணப்பட்ட ஒரு போட்டோவில் பட்டு சட்டென்று நின்றது. அந்த போட்டோவில்.... காட்டுக்குள்ளிருந்த ஒரு கல்லறை... கல்லறையின் மேல் ஒரு வெள்ளைச் சிலுவை... சிலுவையின் மேல் ஆங்கிலத்தில் ஒரு பெயர் **SVEA FLOOD**

உடனே பத்திரிகையை எடுத்துக்கொண்டு
காலேஜுக்கு ஓடினார் ...

ஸ்வீடன் மொழி தெரிந்த ஒரு காலேஜ் புரொஃபசரிடம் அந்தச் செய்தியைப் படிக்கச் சொன்னபோதுதான் அவருக்கு முழுத் தகவலும் தெரியவந்தது.

ஏற்கனவே தான் ஸ்வீடனைச் சேர்ந்த மிஷரித் தம்பதி டேவிட்-ஸ்வீயாவின் மகள் என்று அறிந்திருந்தார் **Aggie**.

மிஷனரித் தம்பதிகள் என்டோலேராவுக்கு வந்தது, குழந்தை பிறந்தது, தாய் இறந்தது.. ஆப்பிரிக்கப்பையன் கர்த்தருக்குள் நடத்தப்பட்டது. மிஷனரிகள் வெளியேறியது. அதன்பின் அந்தப் பையன் வளர்ந்து கிராமத் தலைவனிடம் பேசி அந்தக் கிராமத்தில் ஒரு ஸ்கூல் கட்டிக் கேட்க... அந்தப் பள்ளியிலுள்ள ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்குள் நடத்தினான் அந்தப்பையன்...

நாட்கள் நகர....
இப்போது அந்தக் கிராமத்தில் மட்டும் 600 விசுவாசிகள் அந்தக் கிராமத்தலைவனையும் சேர்த்து....

இவை எல்லாமே டேவிட்-ஸ்வீயாவின் தியாகத்தினால்...
கேட்டுவிட்டு அதிர்ச்சியில் உறைந்தார்...

கொஞ்ச நாட்களில் ஹர்ஸ்ட் **Aggie**யின் 25வது **Wedding Anniversary** வந்தது.

அவர்களுக்கு வெகுமதியாக அந்தக் காலேஜ் அவர்கள் இருவருக்கும் இலவசமாக ஸ்வீடன் சென்று வர அனுமதி தந்தது. ஸ்வீடன் வந்த **Aggie**, தன் நிஜ தகப்பனாரைத் தேடிச் சென்றார்.

இதற்குள் மறுதிருமணம் செய்து 4 பிள்கைளும் பிறந்து வயதாகி விட்டிருந்தது டேவிட்டுக்கு. அவருக்கு வாழ்க்கையே மாறிப்போயிருந்தது.

கடவுளும் வேண்டாம்...
ஊழியமும் வேண்டாம் என்று பின்மாறிப் போய் குடி போதைக்கு அடிமையாகிக் கிடந்த டேவிட்டை சமீபத்தில் பக்கவாதமும் தாக்கியிருந்தது.

அவரது வீட்டில் எழுதப்படாத ஒரு விதி.....
என்னிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக்கொண்ட கடவுள் என்ற பெயரே இந்த வீட்டில் உச்சரிக்கப்படக் கூடாது என்பதே அது....

இப்படிப்பட்ட வீட்டில் கால் வைத்தார் Aggie.. தன் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளைச் சந்தித்தவர், தன் அப்பாவையும் சந்திக்க விருப்பம் தெரிவித்த போது அவரிடம் அழைத்துச் செல்லப்பட்டார்...

ஒரு அழுக்கடைந்த அபார்ட்மென்ட்...வீடெல்லாம் விஸ்கி பாட்டில்கள்...

ஒரே நாற்றம். ஒரு ரூமில் அழுக்குக் கட்டிலில் முடங்கிக் கிடந்தார் 77 வயது டேவிட்... கண்ணீர் முட்டிய Aggie.. அப்பா என்று கூப்பிட...

அம்மா ஏய்ன்.... என்று தன்னையறியாமலேயே சத்தமிட்டார் டேவிட்.

மகளே....
நான் உன்னை யாருக்கோ கொடுத்துவிட நினைக்கலம்மா...
என்று நா தழுதழுக்க, அதனால என்னப்பா
கர்த்தர் என்னைப் பார்த்துக்கொண்டார்....
என்று அப்பாவைத் தன் கையினால் தாங்கினார் ....

அந்தப் பேரை மட்டும் திரும்பச் சொல்லாதம்மா....
என்று விறைப்பானார் டேவிட்.

எல்லாமே அந்தக் கடவுளால தான் வந்தது..
நம்ம வாழ்க்கையே நாசமாப் போச்சு....

உண்மையிலே அவர் ஒரு அன்பான கடவுளா இருந்தா இப்படி நம்ம குடும்பம் சிதறியிருக்குமா? என்று சொன்ன அப்பாவைத் தன் கையினால் அமைதிப்படுத்தி....

அப்பா நான் உங்களுக்கு ஒரு சம்பவத்தைச் சொல்லட்டுமா? இது உண்மையா நடந்தது.... என்று சொல்லிவிட்டு அந்தப் பத்திரிக்கையிலுள்ள சம்பவத்தை விவரிக்க ஆரம்பித்தார் **Aggie**

Aggie தன் அப்பாவிடம் சொன்னார்....

நீங்க ஆப்பிரிக்கா போனதோ அம்மா அங்க இறந்ததோ எதுவுமே வீணா போகலப்பா...

நீங்க ஒரு சின்ன தம்பியைக் கர்த்தருக்குள் நடத்துனீங்களே...

அந்த தம்பி வளர்ந்து முழு கிராமத்தையும் கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்தியிருக்கிறான் அப்பா...

அந்த கிராமத்தில் இப்ப மொத்தம் 600 விசுவாசிகள். அது மட்டுமல்ல உங்களை ஊருக்குள்ள வரக்கூடாது என்று சொன்ன அந்த ஊர் தலைவனே விசுவாசியாகி, அந்த ஊர்ல ஸ்கூல் கட்டி கொடுத்திருக்கிறார்..

அதிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் இன்னிக்கு விசுவாசத்தில் இருக்கிறாங்க...

நீங்க போட்ட ஒரு விதை வளர்ந்து இன்னைக்கு ஒரு பெரிய மரமாயிருக்குது... அப்பா, இயேசப்பா உங்களை ரொம்ப நேசிக்கிறாங்க.... அவங்க உங்களை வெறுக்கலப்பா....
சொல்ல சொல்ல கேட்டுக்கொண்டே இருந்த அந்த வயதான மனிதன்....
அப்படியே தன் மகளைப் பார்க்கத் திரும்பினார்.

எத்தனையோ வருடங்களாக கல்லாகிப் போயிருந்த அந்த இருதயம் மிருதுவாக ஆரம்பித்தது. அன்றைய தினமே டேவிட் தன் நேசர் பக்கமாய் மனந்திரும்பினார். அடுத்த சில நாட்கள் தன் மகள் மருமகனுடன் சந்தோஷமாய் இருந்த டேவிட்.... கொஞ்ச நாட்களிலேயே கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

Aggieயும் கணவர் ஹர்ஸ்டும் அதற்கு முன்பே அமெரிக்கா திரும்பிவிட்டனர். இதன்பின் லண்டனில் பெரிய கான்ஃபரன்ஸில் Zaire என்ற பெல்ஜியன் காங்கோவிலிருந்து அங்குள்ள நேஷனல் சர்ச்சின் பொதுச்செயலாளர் வந்து கர்த்தர் செய்யும் பெரிய காரியங்களையும் எப்படி தன் சபை இன்று 1,10,000 பேர் கொண்ட சபையாய் மாறியது என்றும், சுவிசேஷம் எப்படி அந்த நாட்டில் பரவியது என்றும் மிகத் தெளிவாக சொல்லிக் கொண்டிருந்தார்.

கான்ஃபரன்சிஸ் முடிந்ததும் தன்னை அடக்க முடியாமல் **Aggie** அவரிடம் சென்று உங்களுக்கு டேவிட்-ஸ்வீயா பற்றி தெரியுமா? என்று கேட்டார்.

அவர் சொன்னார்.......
“யெஸ் மேடம் ஸ்வீயா ஆன்ட்டியின் முதல் கனி நான்தான்..”
அவர்களுக்கு வேண்டிய ஆகார பதார்த்தங்கள் கொண்டு
வந்த பையன் நான்தான் என்று சொல்ல...

இருவரும் கட்டிப்பிடித்து வெகு நேரம் அழுதார்கள்.

அந்த மனிதன் சொன்னார்....
நீங்கள் காங்கோ வந்து பார்க்க வேண்டும்.
உங்க அம்மாவையும் அப்பாவையும் நாங்களும் எங்கள் மக்களும் எவ்வளவு நேசிக்கிறோம் எவ்வளவு கனமாய் எண்ணுகிறோம் என்று...

சீக்கிரமே **Aggie**யும் ஹர்ஸ்டும் காங்கோவின் அந்த கிராமத்திற்கு போனார்கள். அவர்களுக்கு அந்த கிராமத்தினர் தந்த வரவேற்பே தனி.

அது மட்டுமல்ல... சில நாட்களே ஆன கைக்குழந்தையாய் இருந்த தன்னை, தன் அப்பாவுடன் சேர்ந்து மலைக்கு கீழே தொட்டிலில் கட்டி தூக்கி வந்த மனிதனையும் காண வாய்ப்பு கிடைத்தது **Aggie**க்கு.

எல்லாவற்றுக்கும் மேலாக அந்த பாஸ்டர், **Aggie** யை அவரது தாய் ஸ்வீயாவின் கல்லறைக்கு அழைத்துச் சென்றார்.

கல்லறையில்தன் தாயின் பெயர் பொறித்த வெள்ளைச் சிலுவையைக் கண்டு தரையில் குனிந்து கர்த்தரைக் கண்ணீரோடு துதித்தார் **Aggie**
அந்த நாள் மாலையில் அந்தக் கிராமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது ஒரு ஜெபக்கூட்டம்.

கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து....
செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். (யோ 12:24) என்ற வார்த்தையும் கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள். (சங் 126:5) என்ற அந்த வார்த்தையையும் பகிர்ந்து கொண்டார் அந்த போதகர்.


Standing in the GAP
Ezekiel 22:30

CHAPTER-16

ஒரு மனிதனை இன்னும் தேடிக்கொண்டேயிருக்கும் தேவன்

ஒரு மனிதனை இன்னும் தேடிக்கொண்டேயிருக்கும் தேவன்

நெகேமியா சிறையிருப்பிலே பிறந்து வளர்ந்திருந்தாலும் தன் முற்பிதாக்களின் விசுவாசத்தைக் கைவிடவுமில்லை, அவர்களுக்கு முன் பிரத்தியட்சமாய் விளங்கியிருந்த தேவ மகிமையின் காட்சிகளை அவன் மறந்துவிடவுமில்லை. சிறையிருப்பிலே மீந்திருந்த யூதர்களின் நிர்ப்பாக்கிய நிலையை அங்கிருந்து வந்த சிலர் அவனது சொந்தத் தாய்மொழியிலேயே சொல்ல நெகேமியா கேட்டபோது அவனது இருதயம் துக்கத்தால் நிறைந்தது என்று வரலாற்று ஆசிரியர் ஜோசப்பஸ் தன் விளக்கவுரையில் எழுதுகிறார்.

“சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது.” (நெ.கே 1:3) என்று அவர்கள் சொன்னார்கள்.

இதைக் கேட்டவுடன் நான்கு காரியங்கள் செய்தான் நெகேமியா.

1. உட்கார்ந்து அழுதான்.
2. சிலநாளாய் துக்கித்தான்.
3. உபவாசித்தான்.
4. பரலோகத்தின் தேவனை நோக்கி மன்றாடினான்.

அது ஒரு அவசரகதி ஐந்து நிமிட ஜெபமல்ல.. "இரவும் பகலும் உமக்கு முன்பாக மன்றாடி" என்று சொல்லிவிட்டு "ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்குப் பயப்படவேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக..." என்று ஜெபித்தான் அவன். (நெகே 1:6,11) இங்கே ஒரு மனிதன், தன் தேசத்தின் முந்தின ஆலயத்தின் மகிமையை முன்பின் கண்டிராதவன்... அது போலவே, கடந்த எழுப்புதலின் காலங்களிலே, மகிமையின் தேவன் மனிதர்களைக் கொண்டு என்னென்ன செய்தார் என்று நமது காதுகளால் மட்டுமே இதுவரை கேள்விப்பட்டிருக்கும் ஒரு சந்ததி நாம். ஆனால் நமது சொந்தக் கண்களால் இதுவரை நாம் அதைக்கண்டு ருசித்ததில்லை.

அநேகமுறை தேவனது ஜனங்கள், தேவன் தங்கள் மத்தியில் இறங்கி வருவதைத் தாங்களே தடைசெய்து விட்டனர். பாபிலோனிலே யூதர்கள் தாங்கள் சிறைப்பட்ட நாள் முதல் கோரேஸ் அவர்களை விடுதலையாக்கின நாள் மட்டும் அவர்கள் அனுபவித்தது 70 வருட கொடுமையான சிறைவாசம். ஆனாலும் அவர்கள் தங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று கதவு திறந்து விடப்பட்டபோது, பாபினோலிருந்து வெளியேற விரும்பியவர்கள் வேறும் 50,000 பேர் மட்டுமே. வாக்குத்தத்த தேசத்தைச் சுற்றிப்பார்க்க அனுப்பப்பட்டவர்களில், தாங்கள் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை அவர் நமக்குக் கொடுப்பார்.... என்று நற்செய்தி கொண்டுவந்தவர்கள் இரண்டே பேர் மாத்திரமே! இவர்கள் தங்கள் இஸ்ரவேலின் தேவனை, சமுத்திர ஜலங்களைப் பிளந்து சத்துருவின் கைகளிலிருந்து மீட்டவராகவே கண்டார்கள். ஆனால் மற்ற பத்துப்பேர் கண்டு பின்வாங்கியதோ, ஏனாக்கியரையும் அவர்களது அரணிப்பான, பெரிய பெரிய பட்டணங்களையுமே!

இதை அப்படியே பெந்தகோஸ்தே நாளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! உயிர்த்தெழுந்த இயேசு ஒரே வேளையில் ஐநூறுக்கும் அதிகமான சகோதரருக்குத் தரிசனமானார். அவர்கள் எல்லாருமே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படப் போகும் அந்த விவரிக்க இயலா அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள மேல் வீட்டறைக்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்று நான் நிச்சமாய்ச் சொல்வேன். ஆனாலும் மேலறைக்கு வந்து சேர்ந்த அந்த 120 பேர் தவிர, மற்ற 380 பேர் வேண்டாம் என்றே இருந்துவிட்டனர்.

தேவனுடைய வீட்டின் அலங்கங்கள் இடிந்து, நமது வாலிபரின் வாழ்க்கையின் வாசல்கள், இரகசியப் பாவங்கள் மற்றும் இச்சைகள் என்ற அக்கினியாலும் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறது. ஆனாலும் சாத்தானின் அந்தகார வல்லமைக்கு எதிர்நின்று யுத்தம் செய்வது நம்மில் வெகுசிலரே. நமது ஜனத்தைக் கட்டியிருக்கும் அக்கிரமங்களைக் கண்டு சுக்குநூறாகும் இதயங்கள் இன்று எங்கே? "தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி அக்கினி இறங்குமாப் போலவும், உருக்கும் அக்கினி எரியுமாப் போலவும் இறங்கும்.”
(ஏசா 64:2) என்று பிரசங்க பீடத்திலிருந்து தனது இருதயத்தைக் கிழித்து கடைசியாக எப்போது உங்கள் பாஸ்டர் ஜெபித்தார் என்று நீங்கள் சொல்லக் கூடுமோ? அல்லது ஜீவனுள்ள தேவனை நோக்கி என் மாம்சமும் இருதயமும் கதறுகிறது.... என்றும் ராகேலின் கண்ணீரின் ஜெபத்தைக் கடன்வாங்கி, எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் சாகிறேன்.... என்று அவர் ஜெபித்தது எப்போது என்றும் உங்களால் சொல்ல முடியுமா?

உலகத்தார் "உல்லாச ஓடத்தில்" "உயிரே" படம் பார்த்துக் கொண்டே நரகக் கடலுக்குள் பிரயாணிக்க, கிறிஸ்தவர்களோ, எவ்விலை கொடுத்தாவது "சமாதான வெண்புறாப் படகில்" நியாயத் தீர்ப்பை நோக்கித் தீவிரிக்கின்றனரே! இது ஒரு கலப்பும் சமரசமும் கலந்த செத்த சுவிசேஷம்! பரிசேயர் சதுசேயர் அற்ற ஆசீர்வாதக் காலங்களில் நாம் வாழ்ந்து வருகிறோம் என்று நமக்குள்ளே நமக்கு ஒரு குதூகலம்! ஆனால் வேறொரு பெயரில் அவர்கள் இங்கே வலம் வருகிறார்கள் என்பதே உண்மை! இந்த நவீன பரிசேயர், நமது இரட்சகரின் மரணத்தையும், வல்லமையின் உயிர்த்தெழுதலையும் கேலிக்கூத்தாக்குபவர்கள்.

ஜோசப் ஸ்மித் என்ற மார்மன் தீர்க்கதரிசியின் இந்த இறையியல் குப்பையைக் கொஞ்சம் படித்து பாருங்கள்!

"ஒரு காலத்தில் நம்மைப் போன்ற மனிதனாக இருந்த ஒரு மனிதனையே நாம் வானங்களில் உயர்த்தி உட்கார வைத்திருக்கிறோம்... அதுதான் உண்மையும் இரகசியமும்... ஆனால் நாமோ "தேவன் ஏதோ நித்திய நித்தியமாய் இருப்பவர்" என்று கற்பனை செய்து வைத்திருக்கிறோம். நான் இதை வன்மையாக மறுக்கிறேன்.''

(Journal of Discourses V6, P.3, 1844)

சகல கள்ள உபசேதங்களுக்கும் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் விரோதமான ஒரு புனிதப் போரை நாம் தொடுத்தே ஆக வேண்டும். கையில் எடுத்தே ஆக வேண்டும்!

அதற்கு முதலாவது நாம் செய்ய வேண்டியது, தேவனுடைய வீட்டைக் கொஞ்சம் அடைத்து, அதைப் பெருக்கித் துடைத்துக் கழுவியெடுக்க வேண்டும். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் இருந்தல்லவோ துவங்கப் போகிறது? (1 பேதுரு 4:17). அதன் பின்னரே பரிசுத்த வைராக்கியத்தோடு ஜெபத்தில் அக்கினியாய், அரண்களை நிர்மூலமாக்க நாம் இறங்கியாக வேண்டும்.

ஒரு தேசம் போருக்கு ஆயத்தமாகி, தன் இராணுவத்துக்கு வீரர்களை சேர்க்கத் துவங்கும் போது, குடும்பங்கள் சிதைகின்றன. மனைவி பிள்ளைகள் கண்ணீரோடு விடை கொடுக்கின்றனர். அன்றாடத் தொழில் வணிகங்கள் அடைக்கப்படுகின்றன. பள்ளிகள், கல்லூரிகள் காலவரையற்று மூடப்படுகின்றன. தொழிற்சாலைகள் தங்களைப் போர்க்கருவிகள் உற்பத்திக்குத் தயார் செய்யும்படி, ஆயத்தப்படுத்திக் கொள்கின்றன. உணவுப் பொருட்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. எவ்வித அசௌகரியங்களுக்கும் மக்கள் தங்களை உட்படுத்திக் கொள்கின்றனர். - எல்லாமே போருக்காகவே!

உள்நாட்டுப் போருக்கும், உலக மகா யுத்தத்துக்குமே தேசங்கள் தங்களை இப்படி ஒடுக்கி நொறுங்கி இவ்விதமாய் ஆயத்தப்படுத்திக் கொள்ளுமானால், வரலாற்றுப் போர்களுக்கு எவ்விதத்திலும் குறையாத இந்த ஆவிக்குரியவைகளுக்கும், ஒழுக்கத்துக்கும், பரிசுத்தத்துக்கும் விரோதமாய்க் கொத்தளங்கள் போடப்பட்டு, சிலுவைக்கு வெளியே துவங்கியிருக்கும் இந்தக் கடைசிக்கால ஆவிக்குரிய யுத்தத்துக்கு நாம் எப்படி எப்படியெல்லாம் ஆயத்தமாகி நிற்க வேண்டும்?

பாரமான யாவற்றையும் நாம் தள்ளி விடுவோம். சில வருடங்கள் முன்புவரை டெலிவிஷன் ஒன்றுமட்டுமே நமது நேரத்தைத் திருடும் மிகப்பெரிய பிசாசாய் இருந்தது. இப்போதோ, வீடியோவும், இன்ட்டர்நெட்டும் மனிதர்களை, ஏன் ஊழியர்களைக் கூடக் கட்டி வைத்திருக்கிறதே! சில சினிமாக்கள், தியேட்டர்களில் சென்று பார்க்க ஏற்றவைகளாய் இல்லாதிருப்பதால், மனைவி, பிள்ளைகள் தூங்கிய பின் இரவின் பிந்திய நேரங்களில் அந்த நீல நிர்வாணப் படங்களை வீட்டுக்குள்ளேயே பார்த்து ரசிக்கும் வசதிகளை நாமே அமைத்துகொண்டோம்.

தேவன் தமது கிரியைகளை தமது ஆவிக்குரிய தலைவர்களில் துவக்கி, நெடுக இறக்குகிறார். "இப்பொழுதும் ஆசாரியர்களே! இந்தக் கட்டளை உங்களுக்குரியது. நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன். நீங்கள் அதை சிந்தியாமல் போனதினால், அவைகளை சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்....'' என்று மல்கியா (2:12) எச்சரிக்கிறார்.

அடுத்த அதிகாரத்திலேயே அவர் சொல்கிறார்... "அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலை நிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டு.... லேவியின் புத்திரரை சுத்திகரித்து.... (மல் 3:2). அவர் அமலேக்கியரையோ, எமோரியரையோ சுத்திகரிப்பேன் என்று சொல்லவில்லை. ஆனால் அவர் தமது லேவியராகிய ஆசாரியரையே சுத்திகரிப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

“ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயஞ்செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள். பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பிக்காமலும் இருந்து, என் ஓய்வு நாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் நடுவிலே நான் கனம் பண்ணப்படுகிறேன்...''
(எசே 22:26) என்று எசேக்கியேல் சத்தமிடுகிறார்.

இன்றைய ஆவிக்குரிய பஞ்சத்துக்கும் ஆவிக்குரிய வறட்சிக்கும் நடுவே இருதயத்தைக் கிழிக்கும் காரியம் ஒன்றை தேவன் அங்கே சொல்வதைப் பாருங்கள்!

“அதிலுள்ள தீர்க்கதரிசிகள் அதின் நடுவில் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள். கெர்ச்சிக்கிற சிங்கம் இரை கவ்வுகிறது போல, ஆத்துமாக்களை அவர்கள் பட்சிக்கிறார்கள். திரவியத்தையும் விலையுயர்ந்த பொருட்களையும் வாங்கிக் கொள்கிறார்கள். அதில் நடுவில் அநேகரை விதவைகளாக்குகிறார்கள்” என்ற இந்த எசேக்கியேலின் 22ம் அதிகாரத்தின் 25ம் வசனத்தை, நீங்கள் உங்கள் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடும் உங்கள் பிரபல டிவி பிரசங்கியாளர்களுக்கு அனுப்பிவையுங்கள்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு சுவிசேஷகனும் போதகனும் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மாதத்துக்காவது உரக்கப்படிக்க வேண்டிய வசனம் இந்த அதிகாரத்தின் 30, 31ம் வசனங்கள் "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்.” ஆகையால், நான் அவர்கள் மேல் என் கோபத்தை ஊற்றி, என் மூர்க்கத்தின் அக்கினியால் அவர்களை நிர்மூலமாக்கி அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலையின் மேல் அமரப் பண்ணுவேன்” என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

தேவனுடைய பட்சத்தில் நிற்பவர் யார்? துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் துணிந்து நின்று யுத்தம் செய்யும் ஜெபவீரர்கள் எங்கே? அவர் வந்து தமது கோபத்தின் அக்கினியினால் நம்மைப் பட்சித்துப் போடுமுன்பு, இவ்வுலகத்தின் பாவ வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும்படியாக அவரை அடைக்கவும், தேவனுக்கு முன்பாகத் திறப்பிலே நிற்கவும் போகிறவன் நம்மிலே யார்?

பிரசங்கியே !
விளையாட்டை நிறுத்து! முழங்காலை முடக்கு! நீ கொண்டாடியது போதும்! உன் உபவாசத்துக்குத் திரும்பு. மனிதரோடு அளவாய்ப் பேசி தேவனோடு அளவளாவிக் கொண்டிரு! மனிதன் பேசுவதை மட்டாய் கேள். தேவசத்தத்துக்கு செவிகொடு! இடைவிடா ஓட்டத்தை நிறுத்து! அங்கலாய்த்து அழ ஆரம்பி!

நீ ஒரு சபைத்தலைவனாயிருந்தால், உன் சபையின் ஆவிக்குரிய நிலைக்கு நீயே பொறுப்பு! ஜெபமில்லாப் போதகரைப் பெற்றிருப்பதாலேயே சபையும் ஜெபமற்றுப் போனது! போதகர்களும் மூப்பர்களுமானவர்களின் கண்களில் கண்ணீர் இல்லாமல் போனதாலேயே சபையார் கண்களிலும் கண்ணீரைக் காணோம்!

"என் கண்ணீரை உம்முடைய துருத்தியிலே வையும்”
என்றான் சங்கீதக்காரன். நரகத்தில் தள்ளப்பட்டுப்போன ஆத்துமாக்களுக்காக, உலகம் முழுவதும் ஒரு வாரம் முழுவதும் சிந்தப்பட்ட கண்ணீரையெல்லாம் ஒன்று சேர்த்தால் ஒரு சிறிய வாளி நிறைய நிரப்பலாம் என்றே நான் நிச்சமாய் சொல்லுவேன்!

நான் உங்களுடையதையல்ல..
உங்களையே தேடுகிறேன்..
(2 கொரி 12:14)

CHAPTER-17

ட்ரோஜன் குதிரை

ட்ரோஜன் குதிரை

Rev. B.H. Clendennen

அப்போஸ்தலர் 2:2ல் பார்க்கிறோம்.
“அவர்கள் அப்போஸ்தல உபதேசத்திலும் ஐக்கியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபத்திலும், **“உறுதியாய்த் தரித்திருந்தார்கள்”.**

“முடிவு வரை நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்....” என்று கர்த்தராகிய இயேசு சொன்னார். (மத் 10:22)

“உறுதியாய்” என்ற வார்த்தை, அப்போஸ்தலர்கள் **ஏதோ ஒன்றை** எதிர்த்து நின்றார்கள் என்று காட்டுகிறது.

“உறுதியாய்த் தரித்திருந்தார்கள்” - இது அவர்கள் தாங்கள் இருக்கும் நிலையில் தரித்து நிற்க, அதைத் தக்க வைத்துக் கொள்ள, எதையோ கடினமாய் எதிர்த்து நின்றார்கள் என்பதைக் குறிக்கிறது.

அவர்களுக்கு எதிர்ப்பு இருந்தது. ஏதோ ஒன்று அவர்களைக் கீழே தள்ள விடாப்பிடியாய் முயன்று கொண்டிருந்தது.

ஏதோ ஒன்று, உள்ளே நுழையவும் அவர்களை மற்ற எல்லோரையும் போல மாற்றவும் கடுமையாக முயற்சித்துக் கொண்டிருந்தது.

ஆதித் திருச்சபையைக் குறித்து வேதம் சொல்கிறது
“அவர்கள் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.”
அவர்கள் திடமாய் வைராக்கியமாய் நின்றார்கள்.

அவர்கள் எழுப்புதலைக் கண்டார்கள். தேவனே இறங்கி கிரியை செய்வதைக் கண்டார்கள்.

வேதத்தின் இந்த முறையை நீங்கள் மாற்றவே முடியாது.

ஆனால் வேத வசனத்தோடு சமரசம் பண்ணிக்கொள்ள சத்துரு சபைக்குள் நுழைந்து விட்ட பிறகு, சபை தன் வல்லமையை இழந்து தன் ஆதி நிலையைப் பறி கொடுத்தது.

அது கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் இழந்து இருண்ட நாட்களுக்குள் போனது.

எங்கேயோ ஓரிடத்தில் விட்டுக்கொடுத்து விட்டாலோ அல்லது ஏதோ ஒரு விஷயத்தில் கூட ஒத்துப்போக ஆரம்பித்து விட்டாலோ இன்றோ, பிறகோ என்றாவது ஒரு நாள் எல்லாவற்றிலும் விழுந்து போவது நிச்சயம். இது ஒரு மறுக்க முடியாத உண்மை.

நம் பிதாக்களில் சிலர் புறக்கணித்துத் தள்ளிவிட்ட வேதத்தின் ஆளுகையையும் மகத்துவத்தையும் அதினால் வரும் பலாபலன்களையுமே நாம் இன்று அனுபவிக்கிறோம்.

இன்று சபையின் நிலையை சற்று நோக்கிப் பாருங்கள்
விபச்சாரம் காணப்படவில்லையா?
ஓரினச் சேர்க்கை இல்லையா?
போதைப்பழக்கம் காணப்படவில்லையா?
குடியும் வெறியும் போஜனப்பிரியமும் உலகத்தோடு ஒத்துப்போகும் வாழ்க்கையும் வெளிப்படையாகக் காணப்படவில்லையா?

இன்டர்நெட்டின் அசுத்தங்கள் உள்ளே வரவில்லையா?

“இதிலென்ன இருக்கிறது? “என்ற பாவனையோடு பழகும் ஆண்-பெண் உறவுகள் இங்கே இல்லையா?

கர்த்தருடைய வார்த்தை இன்றும் சொல்கிறது...

“நான் என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால்
ஆண்டவர் எனக்கு செவி கொடார். (சங். 66:18)

சுத்தமுள்ள கைகளும் இருதயத்தில் பரிசுத்தம் உள்ளவர்களுக்குமே தேவனின் ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. (சங் 24:4)

சபை இன்று மாறிவிட்டது.
கர்த்தரோ மாறாதவராய் இருக்கிறார்.

கர்த்தர் இன்று தம் சபையோடு வழக்காட விரும்புகிறார்.

மனித மூளை, புத்திசாலித்தனமான திட்டங்கள் மற்றும் உலகத்தின் முறைமைகளைக் காப்பியடித்து, சபை தன்னைத்தானே உயிரோட்டத்துடன் வைத்துக் கொள்ள முயற்சிக்கிறது.

ஆனால் இவைகளையெல்லாம் தேவன் கொஞ்சமும் விரும்புவதில்லை. மனிதன் தனக்குத் திட்டம் வகுத்துக் கொடுப்பதையோ ஆலோசனை கொடுப்பதையோ கர்த்தர் ஏற்றுக்கொள்வதே இல்லை.

சுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தை சபை பகுத்தறிந்தே ஆகவேண்டும்.

பழங்கால "ட்ராய்" நகரை முற்றுகையிட்ட கிரேக்க நாட்டின் ஏத்தன்ஸ் வீரர்களின் வரலாறு ஒரு பெரிய ஆவிக்குரிய பாடத்தை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

12ம் நூற்றாண்டில் கிட்டத்தட்ட 10 வருடங்கள் ட்ராய் நகரை முற்றுகையிட்டிருந்தனர் கிரேக்க வீரர்கள்.

எவ்வளவோ முயன்று பார்த்தும் அந்நகரின் அலங்கத்தைத் தகர்த்து அதின் தடைகளை உடைத்து அவர்களால் நகருக்குள் நுழைய முடியவில்லை.

கிரேக்க நாடுகள் யாவும் சேர்ந்து தங்களது இந்த அவமானத்தைத துடைத்தெறிய 1184ல் முடிவெடுத்தனர்.

வானளாவிய அலங்கத்தைத் தொடும் பெரிய பெரிய ஏணிகள் செய்து அலங்கத்தில் ஏறி நகரைச் சுட்டெரிக்க முயற்சித்தனர்.

பெரிய கவண் கற்களை எறிந்து நகரின் மக்களைக் கொல்ல அவர்கள் எடுத்த எல்லா முயற்சிகளும் வீணானது.

ட்ராய் மக்கள் 10 வருடங்களாக கிரேக்கர்களின் சகல தந்திரங்களையும் வெற்றிகரமாய் முறியடித்து தங்கள் நகரத்துக்குள் அவர்களை நுழைய விடாமல் தடுத்து வைத்திருந்தனர்.

10 வருடங்கள் சென்று தங்கள் வெளிப்படையான யுத்தம் பலன் தரப்போவதில்லை என்று அறிந்த கிரேக்கர்கள் ஒரு நூதன யுக்தியைக் கையில் எடுத்தனர்.

அவர்கள் ஒரு பெரிய மரக்குதிரையை செய்து ஒருநாள் அதை ட்ராய் நகரின் முக்கிய நுழைவாயிலின் முன் நிறுத்திவிட்டுத் தங்கள் படையுடன் தங்கள் கப்பல்களுக்குத் திரும்பி விட்டனர்.

அந்தக் காலத்தில் யுத்தத்தின் போது இப்படி ஒரு பரிசுப்பொருள் போன்ற ஒன்றை நுழைவாயிலில் விட்டுச் செல்வது என்பது இதற்கு மேல் எங்களால் முடியாது, நாங்கள் தோற்றுவிட்டோம் என்பதைக் குறிக்கும் அடையாளமாய் இருந்தது.

அப்படியே கிரேக்கர்களும் ட்ரோஜன் ஹார்ஸ் என்றே பிரபலமாக அழைக்கப்பட்ட இந்த மரக்குதிரையை, தாங்கள் பின்வாங்கிவிட்டோம் என்பதைக் காட்டும் வகையில் நகரின் முக்கிய நுழைவாயிலுக்கு வெளியே நிறுத்திவிட்டுப் போய்விட்டனர்.

ஆனால் ட்ராய் மக்களுக்கு தெரியாத வகையில் குதிரையின் வயிற்றுப்பகுதியில் மறைந்திருந்தனர், கிரேக்க இராணுவ வீரர்கள்.

சில நாட்களாக அந்தக் குதிரையை ஆர்வத்தோடே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர் ட்ராய் மக்கள்.

சிறிது நாட்கள் சென்று கிரேக்க இராணுவம் தங்களுக்கு அருகில் தென்படாததால் யுத்தம் ஓய்ந்தது என்று இறுதியாக முடிவு செய்த அந்தத் துரோவா பட்டணத்தார். அந்த பிரம்மாண்டமான மரக்குதிரையைத் தங்கள் ஊருக்குள் நகர்த்திக் கொண்டுவந்தனர்.

போரின் வெற்றிக் களிப்பு ஊரெல்லாம் காணப்பட்டது பத்து வருட முற்றிகையில் தங்கள் ஊருக்குள்ளேயே அடைக்கப்பட்டிருந்தவர்கள் அல்லவா?

அன்றிரவு நகரமே குடியிலும் வெறியிலும் ஆனந்தக்களிப்பிலும் மிதந்திருக்க, குதிரையின் அடிவயிற்றில் மறைந்திருந்த கிரேக்க வீரர்கள் வயிற்றின் அடிப்பகுதியை திறந்து வெளியே வந்து ஊரின் கதவைத் திறந்துவிட்டனர். இதற்கென்றே காத்திருந்து ஆங்காங்கே ஒளிந்திருந்த கிரேக்க இராணுவம் பட்டணத்திற்குள் படையாய் நுழைந்து முழுப்பட்டணத்தையும் துவம்சம் செய்து தீக்கிரையாக்கியது.

அந்த இரவின் பயங்கரங்களை வெளியுலகத்துக்குச் சொல்ல அங்கிருந்து தப்பியவர்கள் வெறும் இரண்டேபேர் தான் என்கிறது வரலாறு.

இந்த சம்பவம் வரலாற்றின் வேதனையான பக்கங்களில் ஒன்று.

ஆனால் நான் இதன்மூலம் சொல்லப்போகும் உண்மை இதைவிட வேதனை நிறைந்த ஒன்று என்பதுதான் வேதனையிலும் வேதனை.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆவியானவரின் அபிஷேகம் உலகெங்கும் ஊற்றப்பட்ட, முதல் 50 வருடங்களில் பெந்தேகோஸ்தே எனப்பட்ட நமது சபைகள், பிசாசின் சகல தந்திரங்களையும் போராட்டங்களையும் நரகத்தின் வல்லமைகளையும் ஒருசேர முழுமூச்சாய் எதிர்த்து நின்றார்கள்.

சமரசம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது.

நாம் நமது பக்திவைராக்கியம் என்ற பிரம்மாண்ட கதவுகளை விக்கிரக ஆராதனைக்கோ அசுத்தத்திற்கோ உலக மாயைகளுக்கோ சற்றும் திறந்து உள்ளே வர இடம் தராமல் இறுக்கமாய்ப் பூட்டி வைத்திருந்தோம்.

இந்த ஒரு காரணத்தினால், எவ்வளவுதான் நாம் எள்ளி நகையாடப்பட்டாலும் தூஷித்து எறியப்பட்டாலும் காறி உமிழப்பட்டாலும்,

தேவனுக்குப் பிரியமில்லாத அல்லது வசனத்துக்கு ஒவ்வாத எந்தக் காரியத்துக்கானாலும் ஓர் இம்மியளவு கூட இடம் கொடுக்க மறுத்து மல்லுக்கு நின்றோம்.

நம்முடைய பேச்சு, நடை உடை செயல்கள் யாவும் மற்றவர்களைவிட மிக வித்தியாசமாகவும், விகற்பமாகவும் காணப்பட்ட ஒரே காரணத்தால் கெட்ட குமாரனைப்போல எல்லோராலும் வெறுத்து ஒதுக்கி வைக்கப்பட்டோம்.

“நீங்களும் எங்களைப் போலாகுங்கள். அப்பொழுது உங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் செய்வோம்...” என்று உலகம் சபையின் கதவை பலமாய்த் தட்டிக் கொண்டிருந்தது.

“கொஞ்சம் விட்டுக் குடுத்து போங்க.. இதுல என்ன இருக்குது... நீங்க மட்டும் கொஞ்சம் ஒத்துப்போனா எவ்வளவு பேர் சபைக்குள் வர வாய்ப்பு உண்டு தெரியுமா?” என்று அவர்கள் நம் காதில் ஓதியது நமக்கு நன்றாகவே கேட்டது.

பின்மாரியின் ஆரம்ப நாட்களான அந்தக் காலத்தில், சமூகத்தின் வெவ்வேறு தரப்பினரை தேவன் அனுதினமும் சபைகளில் சேர்த்துக்கொண்டு வந்தார்.

அந்த நாட்களுக்கு சற்று முன்பு தான் சபை செத்துக் கிடந்தது.

தேவப்பிரசன்னம் காணக்கிடைக்காத இருண்ட நாட்கள் அவை.

ஆனால் அப்படிப்பட்ட நாட்களில் தான் தேவன் கிரியை செய்ய ஆரம்பித்தார்.

ஒரு பெரிய எழுப்புதல்,
20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் உண்டானது.

வயல்வெளிகளிலும் கிராமங்களிலும் சந்தை வெளிகளிலும் மந்தை வெளிகளிலும் நாடு நகரங்களிலும் பெயர்க் கிறிஸ்தவ சபைகளிலுமிருந்து ஒரு பெரிய கூட்டத்தைத் தேவன் தெரிந்துகொண்டு தம் ஆவியை அளவில்லாமல் ஊற்றிய அற்புத நாட்கள் அவை.

அந்த நாட்களில்....
அவர்கள் தங்களையே கர்த்தருக்கென்று வேறு பிரித்துக்கொண்டனர்.

தங்கள் ஆண்டவர் இந்த உலகத்திலிருந்தும் உலகக் காரியங்களிலிருந்தும் முற்றிலும் வித்தியாசப்பட்டவர் என்பதை அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

உலகம் தங்களது பரம எதிரி என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

கிறுக்கர்கள் என்றும் படுமோசமானவர்கள் என்றுமே முத்திரை குத்தப்பட்டிருந்தனர் விசுவாசிகள்.

மேலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருந்த அனுபவத்தால், அடிப்படைவாதிகள் என்றும், வெறிகொண்ட பிசாசு பிடித்தவர்கள் என்றுமே அவர்கள் தங்கள் காலத்தில் அழைக்கப்பட்டனர்.

ஆனால் உலகம், மாமிசம், பிசாசு இவைகள் எல்லாவற்றையும் தாண்டி அவர்கள் இந்தப் பூமியை சுவிசேஷத்தினால் நிரப்பினார்கள்.

உண்மையிலே அவர்கள் ஒரு வகையில் தீவிரவாதிகள்தான்...

மிருகத்தின் முத்திரையாக இருந்து விடக்கூடுமோ என்று அஞ்சியே அவர்கள் ஒரு சபையின் அங்கத்தினராகக் கூட ஆகாமலே இருந்தனர்...

அவர்கள், இருதயத்தில் பரிசுத்தத்தை மட்டுமல்ல.. நடக்கையில் பரிசுத்தத்தையும் வலியுறுத்திப் போதித்தார்கள்.

அவர்கள் தேவனையும் அறிந்திருந்தார்கள்... பிசாசையும் அறிந்திருந்தார்கள்....

தாங்கள் எங்கேயிருந்து வந்தோம் என்றும் எங்கே போகிறோம் என்றும் அறிந்திருந்தனர்.

அவர்களின் அநேகர் பைபிள் காலேஜ் முடித்துவிட்டு வந்தவர்கள் அல்ல. ஆனால் தங்கள் தேவனைத் தனிப்பட்ட முறையில் தெரிந்து அறிந்து வைத்திருந்தவர்கள்...

சமரசப் போக்குக்கும் ஒத்துப்போகும் ஆவிக்கும் இம்மியளவு இடம் தர மறுத்தவர்கள் அவர்கள்.

தேவமனிதர்களாய், சத்தியத்துக்கும் பரிசுத்தத்துக்கும் களங்கமற்ற தன்மைக்கும் தங்களையே ஒப்புக்கொடுத்து அவற்றுக்காகவே தேவ வைராக்கியமான வைராக்கியத்தோடு நின்றவர்கள்.

தங்கள் வார்த்தையால் மட்டுமல்ல வாழ்க்கையாலும் வாழ்ந்து காட்டியவர்கள்.

அவர்கள் பிரசங்கித்தது மட்டுமல்ல சத்தியம்...
ஆனால் தாங்களே அந்த சத்தியமாய் நடமாடினவர்கள்.

அவர்கள் மிக மிக மிக வித்தியாசமாய் இருந்தனர்.
ஆகவே உலகம் அவர்களை முழுப்பகையாய்ப் பகைத்தது.

அவர்களுக்குக் கிறிஸ்துதான் வாழ்க்கை, உயிர் எல்லாம். மற்றவை எல்லாம் அவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு பொருட்டே அல்ல.

Rev. B.H.Clendennen 1970களில் எழுதிய செய்தி என்ற கண்ணோட்டத்தில் படிக்கவும்.

இன்று சபைக்கு எதிரிகள் என்று சொல்லிக்கொள்ள யாருமில்லை (மதத் தீவிரவாதிகள் தவிர்த்து) ஏனெனில் உலகத்துக்குக் கொடுக்க சபையிடம் சுத்த சுவிசேஷம் இல்லை.

அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த பரிசுத்த சுவிசேஷத்தின் களங்கமற்ற கற்பு நிலைக்கு இன்று மறுபடியும் சபையைத் தூக்கி எடுத்து நிலை நிறுத்தவே நீ அழைக்கப்பட்டிருக்கிறாய்.

50 வருடங்களாக இறுக மூடிப் பாதுகாக்கப்பட்டிருந்த சபையின் அலங்கத்தின் மேல் முட்டி மோதிப் பார்த்த சத்துரு திரும்பத் திரும்ப துரத்தியடிக்கப்பட்டான்.

நம் கன்வென்ஷன்கள் எல்லாம் பெந்தேகோஸ்தே மயமாகத்தான் இருந்தன.

உலகத்தின் பின் நாம் போகவே இல்லை. நாம் அவர்களைப் போல குடிக்கவோ புகைக்கவோ இல்லை. அவர்கள் நடுவில் நாம் தேவ மனுஷராகவே நடமாடி வந்தோம்.

நாம் வித்தியாசமானவர்கள் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

கிறிஸ்து நமக்குள்ளும் நம் நடுவிலும் இருந்ததாலேயே அவர்களது பகைக்கும் கசப்புக்கும் நாம் ஆளானோம்.

இந்தக் கிரகத்தில் நாம் அந்நியரும், பரதேசிகளுமாய் இருந்தோம். நமது ஒரே வாஞ்சையும் விருப்பமும் கிறிஸ்து மாத்திரமாகவே இருந்தார்.

உலகமும் பெயர்க்கிறிஸ்தவக் கூட்டமும் நம்மைக் கண்டு, நாம் இந்த 20ஆம் நூற்றாண்டில் வாழத் தகுதியில்லாத பத்தாம்பசிலிகள் என்று ஏளனம் செய்து எள்ளி நகையாடியது.

1970களில் இருபதாம் நூற்றாண்டின் பெரிய சபை ஒன்றில் நான் பிரசங்கித்துக்கொண்டிருந்தேன்.

அந்த நாட்களில் மிகப்பெரிய தேவ மனிதராக விளங்கிய டாக்டர். மேயோ என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட சபை அது.

ஒரு நாள் டாக்டர்.மேயோ என்னைப் பார்த்து.... “பிரதர், தேவன் என்னை இந்த சபையிலிருந்து 20 வருடங்களுக்கு முன்பாகவே வெளியே கொண்டு போயிருந்திருக்க வேண்டும்....” என்று சொன்னார்.

“ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் Bro.மேயோ” என்ற நான் கேட்டேன்...

அவர் சொன்னார்.... “ஏனென்றால் இப்போது உள்ள சபைக்கு நான் ஒரு ஒவ்வாத ஆளாக காலாவதியாகிப் போனவனாக இருக்கிறேன்.” (Because I don’t fit)

நான் சொன்னேன்.... “பிரதர் நானும் நீங்களும் ஒவ்வாதவர்களாய் இருக்கிறபடியால்தான் இங்கே இருக்கிறோம்.”

“இன்று சபை இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப அதற்கு ஒவ்வாத, ஒத்துப்போகாத ஒருவர் தான் தேவனுக்குத் தேவையாய் இருக்கிறார்.

இன்றைய சபையின் கண்ணோட்டத்துக்கு நேர் மாறாய் தேவனைப் போல யோசிக்கவும் செயல்படவுமே தேவன் உங்களை வேறு பிரித்து, அதோடு ஒட்டாத, ஒவ்வாத, ஒத்துப்போகாத ஒரு நபராய் உருவாக்கி வைத்திருக்கிறார்....” என்றேன்.

20ம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் உருவான பெந்தேகோஸ்தே சபைகள் முதல் 50 வருடங்கள் தங்கள் சோதனைகளையும் நெருக்கத்தையும் தாக்குப் பிடித்து எதிர்த்து நின்றன.

உலகம் நம்மை பிசாசு என்றே வர்ணித்தது.

1956ல் முதல் உலக மகா கரிஸ்மேட்டிக் எழுப்புதல் மாநாடு நடந்தது. அந்த நாளில்தான் குதிரை நம் கூடாரத்துக்குள் நுழைந்தது.

ஒரு நாள் காலை நாம் கண்விழித்துப் பார்த்தோம். நிசப்தமாய் இருந்தது.

நம் அலங்கத்தைச் சுற்றி போர்வீரர்களோ, யுத்த சத்தமோஎதிரிகளின் தாக்குதலோ ஒன்றும் காணப்படவில்லை.

எங்கும் ஒரே அமைதி. போர் முடிந்தது போலிருந்தது. ஆச்சரியத்தோடு சுவரின் மேலிருந்து எட்டிப்பார்த்தோம். ஓ! அங்கே ஆவிக்குரியவர்கள் என்று சொல்லப்பட்ட உலகத்தாரால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அழகிய குதிரை ஒன்று நின்றுக்கொண்டிருந்தது.

அதில் விசேஷம் என்னவென்றால் அந்தக் குதிரை அந்நிய பாஷை பேசியது.

நாம் கேள்வியே கேட்காமல் கதவுகளை விரிய திறந்து கொடுத்தோம்.

1956ல் கரிஸ்மேட்டிக் எழுப்புதல் என்ற பெயரில் சத்தமே இல்லாமல் சபைக்குள் நுழைந்தது குதிரை.

கதவு திறந்து கொடுக்கப்பட ஒரு பிளவு ஏற்படுத்திக் கொடுக்கப்பட, கெம்பீரமாய் நுழைந்தது குதிரை.

ஆவியில் தேவனோடு சம்பாஷிப்பதைப் போல மிக மேலான ஓர் அனுபவமோ கிருபையோ வேறெதுவும் இல்லை.

பரிசுத்த ஆவிக்குள்ளாகி, அபிஷேகத்தால் நிறைந்து அந்நிய பாஷையில் ஜெபித்து ஆவிக்குரிய உன்னத நிலையைத் தொட்டு தேவனோடு சஞ்சரிக்கும் அனுபவத்தைப் போன்ற ஆழமான ஒன்று வேறெதுவும் இல்லை.

அந்த வரத்தைப் பற்றியோ அனுபவம் பற்றியோ பேச நான் அஞ்சுகிறேன். ஏனென்றால் அதை நான் அவ்வளவு மேன்மையாகவும் பயபக்தியாகவும் நினைக்கிறேன். ஆனால் நாம் பரிசுத்த ஆவியானவரோடு விளையாட முடியாது. அந்நியபாஷை என்பது அவருக்குள் நாம் ஜெபிக்க நமக்கு அவரால் அருளப்படும் வரம்.

நாம் ஆவிக்குள் ஜெபிப்பதைப் பிசாசு அறிந்து கொள்ள முடியாததால் உண்மையான வரத்தையும் உண்மையான அபிஷேகத்தையும் அவன் வெறுக்கிறான்.

50 வருடங்களாகப் போராடிப் பார்த்துத் தோற்றுப் போன சத்துரு, கடைசியாக நம்மைப் போலவே ஆவிக்குரிய வேடம் தரித்து நம்மில் ஒருவனைப் போல மாறி உள்ளே நுழைந்தான்.

அவன் ஒரு பாப்டிஸ்ட்டாக அல்ல. மெத்தடிஸ்ட்டாக அல்ல. ரோமன் கத்தோலிக்கனாகவும் அல்ல... ஆனால் அவன் ஒரு பெந்தேகோஸ்தேகாரனாகவே வந்தான். நம்மைப் போலவே அவன் மாற வேண்டியிருந்தது.

அவன் ஒரு காலத்தில் தேவ வல்லமையையும் வரங்களையும் அறிந்தவனாயிருந்தும் உலக நேசத்திலும் ஆசீர்வாத வாழ்க்கையிலும் பொருளாசையிலும் பின் வாங்கிப் போய் ஆதிநிலையை இழந்து போயிருந்தான்.

ஆனாலும் இவைகளில் ஒன்றும் வெளியே தெரியாத வகையில் தன்னை ஒளித்துக் கொண்டு ஆவிக்குரிய போர்வையில் உள்ளே நுழைந்தான் சத்துரு.

வெளித் தாக்குதல்களிலிருந்து நம்மை வலுவாக பாதுகாத்து வைத்திருந்தது எதுவென்று பிசாசு நன்றாகவே அறிந்திருந்தான்.

நமக்குள் ஊடுருவ நரகம் செய்யும் தந்திரமே உண்மையைப் போலவே பொய்யைச் சித்தரித்து நம்மை வஞ்சிப்பது தான்.

வெளிப்படையாய்க் காணப்பட்ட உலகத்தின் எல்லாப் பாவங்களையும் வெறுத்து நம் பிதாக்கள் அவைகளுக்கு எதிர்த்து நின்றார்கள்.

விக்கிரக ஆராதனை நாம் நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்றாய் இருந்தது.

உலகத்தின் ஒவ்வொரு காரியத்தையும் நம் போதகத்திலும் வாழ்க்கையிலும் எதிர்த்து நின்றோம்.

ஆனால் இந்த விநோதக்குதிரை வந்த அன்றே எல்லாம் மாறிப்போனது.

ஓ! மினி ஸ்கர்ட்டும் டைட்ஸும் போட்டுக்கொண்டு இந்த விநோதக் குதிரை இன்று அந்நிய பாஷையில் பேசிக் கொண்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெறுவதைப் பற்றி வலியுறுத்தப்படுவதில்லை.

ஆனால், அந்நிய பாஷை பேசு என்று வலுக்கட்டாயப்படுத்தப்படுகிறது.

உண்மைக்கும் போலிக்கும் வித்தியாசம் தெரியாத அளவு பரிசுத்த ஆவியையே காப்பியடிக்கும் ஒரு வஞ்சிக்கிற ஆவி, ஒரு போலித்தனமான ஆவி, அதுவும் ஆவியானவரின் வரமான அந்நிய பாஷையின் ரூபத்திலேயே உள்ளே நுழைந்தது.

அந்த அழகுக் குதிரையின் வயிற்றில் ஒளிந்திருந்தது அவ்வளவும் வஞ்சிக்கிற ஆவிகள்.

குதிரை உள்ளே வந்ததுதான் தாமதம். அதில் வயிற்றுக்குள் ஒளிந்திருந்த அத்தனை ஆவிகளும் நமக்குள் ஊடுருவ ஆரம்பித்தன.

அந்தக் குதிரையை உள்ளே வர அனுமதித்த அன்றே, துதி ஆராதனை என்ற பெயரில் ஆட்ட பாட்ட கொண்டாட்டம் ஆரம்பித்துவிட்டது.

நாம் கேட்பது எது என்று தெரியாமலேயே பாடல்கள் என்ற பெயரில் எதை எதையோ கேட்கும் எல்லைக்கு இன்று நாம் வந்து நிற்கிறோம்.

இந்தத் " துதி ஆராதனை " நுழையாத இடம் என்று எதுவும் இன்று இல்லை.

ரோமன் கத்தோலிக்கர்கள் அந்நிய பாஷையில் இன்று ஜெபமாலை உருட்ட அதையும் உண்மை என்கின்றனர் பெந்தகோஸ்தே விசுவாசிகள்...

பூரண சுவிசேஷ சபை கன்வென்ஷன் ஒன்றில் ஒரு பெண் சாட்சி சொல்கிறாள்.

" இன்றிரவு நான் இங்கு வருமுன் இரண்டு பாட்டில் காக்டெயில் அடித்தேன். மூன்றாவது பாட்டிலைத் திறக்கும்போது பரிசுத்த ஆவியானவர் சொன்னார்...." போதும் மகளே.... இரண்டோடு நிறுத்திக் கொள்... ரொம்பக் குடிக்காதே".

ஐயா! உங்களில் யாராவது உண்மையான பரிசுத்த ஆவியைக் காட்டுவீர்களா?

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்துக்காக தைரியமாய் நின்று போராடும்படி நீ அழைக்கப்பட்டிருக்கிறாய்.

"நீங்கள் எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்துகொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குத் துணை நிற்பார்" என்பதே இன்று பரவலாகக் கேட்கப்படும் செய்தி.

எது எப்படியோ, கடைசியாகக் குதிரையை உள்ளே வரவிட்டு விட்டோம். அடைப்பைப் பிடுங்கி விட்டோம். பாம்பு கடித்து விட்டது.

இதைக் குறித்து நீ ஏதாவது செய்ய மாட்டாயா என்ற தேவன் உன்னை நோக்கி அங்கலாய்த்துக் காத்திருக்கிறார்.

அன்றொரு நாள் பாபிலோனிலே மூன்று எபிரேய வாலிபரிடம் பிசாசு வந்தான்.

ஏதெனில் ஆதாம் ஏவாளிடம் சொன்ன அதே வார்த்தையைத்தான் இவர்கள் காதிலும் ஓதியிருப்பானோ என்ற நான் நினைக்கிறேன்.

ஏன் தேவையில்லாமல் நீங்க சாகணும்?
எல்லோரையும் மாதிரி வணங்கிட்டுப் போங்க.
என்ன கெட்டுப்போச்சி?
உங்க பக்தியெல்லாம் உங்க மனசுக்குள்ள வச்சுக்குங்க.
ஏன் இதையெல்லாம் பெரிசு படுத்திகிட்டு...?

ஆனால் அவர்கள் இடம் கொடுக்கவே இல்லை.

ஒரு வகையில் நான் ஒரு ஆவிக்குரிய தீவிரவாதியாய் இருப்பதையே தேவன் விரும்புவது மட்டுமல்ல. அவர் என்னிடம் எதிர்பார்க்கவும் செய்கிறார்.

வசனக்கலப்படங்கள் ஆவிக்குரிய பித்தலாட்டங்கள்.... தீர்க்கதரிசன பொய்ப்புரட்டுகள், வார்த்தையின் வர்ணஜாலங்கள் ஆகிய ஒவ்வொன்றுக்கும், விரோதமாய் நான் எதிர்த்து நிற்கவே தேவன் என்னை அழைக்கிறார்.

ஆவிக்குரியவை என்று சொல்லக்கூடிய எல்லாவற்றையுமே ஏறக்குறைய நாம் இழந்து விட்டோம் அல்லது இழந்து கொண்டிருக்கிறோம்.

**இந்தக் குதிரையை வெளியே தள்ளிக்
கதவைப் பூட்ட நம்மில் ஒருவருமில்லையோ?**

**நம்மில் யாரோ ஒருவர் எழுந்து வராவிட்டால்
அடுத்த தலைமுறை என்னவாகும்?**

இது ஒன்றும் அவ்வளவு லேசான காரியமல்ல.

அதே நேரம் நரகம் போவதும் அத்தனை எளிதானதோ????

இந்தக் கடைசி நிமிட நேரத்தில் சபையானது எழுந்து நின்றே ஆகவேண்டும். சகலவித கீதவாத்திய சத்தத்தைக் கேட்டவுடனே நேபுகாத்நேச்சார் நிறுத்தின சிலைக்கு எதிரே முழு தேசமும் மண்டியிட்டு பணிந்து கிடந்தபோது சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ என்ற மூன்று எபிரேய வாலிபர் மட்டும் துணிந்து தனியே நிமிர்ந்து நின்றனர்.

எழுபதுகளுக்கு முன்னான 50 ஆண்டுகளில் நாமும் அப்படியே ஆள் அண்டாப் பிறவிகளாக அனைவராலும் கழித்துக்கட்டப்பட்டுக் கிடந்தாலும் எதற்கும் தலைவணங்காமல் துணிந்து தான் நின்றோம். திடீரென எல்லாம் மாறியது. ஒரே நாளில் பாப்புலராகிவிட்டோம். திடீரென்று உலகம் நம்மை நேசிக்க ஆரம்பித்துவிட்டது. ஒரு காலத்தில் இறையியல் தலைகள் எழுதியது நம்மை பற்றியேதான். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நாம் வெறியர்களாகவே காணப்பட்டோம்.

உலகத்தாரைப் பொறுத்தமட்டில் நாம் ஒரு பேய் பிடித்த கூட்டமே. எப்போது இந்தக் குதிரை உள்ளே வந்ததோ அப்போதிலிருந்து, ஒரு காலத்தில் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்த நாம், பேய் பிடித்தவர்கள் என்று யாரால் வர்ணிக்கப்பட்டோமோ அவர்களுடனே இணக்கமாகி, ஒன்றரக்கலந்து கரைந்து போனோம்.

நேபுகாத்நேச்சாருக்கு அடிபணிந்த வெகுஜனத்துக்கு நடுவே அந்த மூன்று எபிரேய வாலிபர்களும் கொல்லக் குறிப்பார்க்கப்பட்டிருக்கும் இலக்காய்த் தனித்து நின்றனர். பாபிலோனிய சிப்பாய்களால் இழுத்துச் செல்லப்பட்ட அவர்களை அரசன் மிரட்டினான். அவர்களோ அப்போதும் அடிபணியவில்லை.

அவர்கள் தலைவணங்காததாலேயே தழலால் பொசுக்கப்படவும் முடியவில்லை.

நாம் எதற்கும் சமரசம் செய்து கொள்ளாத அந்தக் காலங்களில் உலகம் நமது வாசற்கதவை அறைந்து கொண்டே நின்றது. நம்மைப் பேயர்கள் என்றது.

அந்த நாட்களில் நீங்கள் பெந்தேகோஸ்தே என்ற பெயரை மட்டுமே கூட கொண்டிருந்தால் போதும், இந்த உலகத்தால் குப்பையைப் போலத் துடைத்துப் போடப்பட.

பிரதர் பிஷப் அவர்கள் செகுயினுக்குச் சென்றபோது அந்த நகரின் ஷெரிஃப் ஊருக்கு வெளியே ஐந்து மைல் தொலைவிலேயே அவரைத் தடுத்து நிறுத்தி, உன்னைப் போன்ற குப்பை கூளங்களையெல்லாம் எங்கள் நகரத்தில் நாங்கள் கூட்டிக் குவித்து வைப்பதில்லை.... என்று வெளியே தள்ளினார்.

அந்தக்காலத்தில் நாட்டுமிராண்டிகளான ஜிப்ஸிகளாய் ஜந்துக்களைப் போல அருவருப்பாய்ப் பார்க்கப்பட்டனர் பெந்தேகோஸ்தேயினர்.

இந்த உலகத்துக்கு சுவிசேஷத்தைக் கொடுக்க நமது முன்னோடிகள் பட்டபாடு, நிந்தை, அவமானங்கள் எல்லாம் நமது மூளைக்கு அப்பாற்பட்டவைகளே....

ஊருக்குள் ஒரு நிலத்தைக் கூட வாங்க இயலாத அளவு அவர்கள் ஊரைவிட்டு விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். டெக்ஸாஸ் நகரத்திலே இந்த சுவிசேஷ விதையை விதைப்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. பெந்தேகோஸ்தே என்பது வாழ்க்கையையே புரட்டிப் போடும் ஒரு நவ செய்தி! நற்செய்தி தேவ கிருபையும் தேவனின் வெற்றியின் செய்தியும் அல்லவோ அது! அதுவே நமது நாட்களின் செய்தி! அதைத்தவிர வேறல்ல. அதுவே தேவனது இறுதி வெளிப்பாடு!

அதுவே பின்மாரி! அப்போஸ்தலர் நடவடிக்கைகளுக்குப் பின் அதுபோன்ற ஒரு எழுப்புதல் இருந்ததில்லை.

பெந்தேகோஸ்தே என்பது எல்லாக் கலப்படங்களுக்கும் அப்பாற்பட்டது. ஆனால் உலகம் அதற்குள் புக முடிந்ததும், புகுந்துவிட்டதும் பெந்தேகோஸ்தே என்ற முகமூடியுடன் மட்டுமே.

பட்டயம் நமது கையோடு கையாக ஒட்டிக்கொள்ளுமட்டும் நாம் பாபேலின் பாபிலோனுடன் உயிரைக்கொடுத்து யுத்தத்தில் சமர் நின்றோம். கைகுலுக்கிக் கட்டியணைக்கும் கிறிஸ்தவமெல்லாம் நமது கற்பனைக்கு அப்பாலே, நினைத்துப் பார்ப்பதே பாவம் என்ற ஒன்றாய் இருந்த காலமது.!

பரிசுத்த வேதம் அல்லாத எந்த ஒன்றுக்கும் நாம் எதிராளிகளாய் எதிர்த்தே நின்றோம். அப்போதுதான் அந்தக்குதிரை நமது அடைக்கப்பட்டிருந்த கோட்டைக்கு வெளியே வந்து நின்றது-நம்மை முட்டாள்களாக்கின அந்த கள்ளப்பெந்தேகோஸ்தே கறுப்புக் குதிரை.

அதுவரை நாம் போராடி நின்றோம். நாம் போராடிக் களைத்த போதோ அது தன் ரூபத்தைக் காட்டி நின்றது.

"இதோ பார்.... நானும் உன்னைப்போலவே, பாஷை பேசுகிறேன்" என்று அபிஷேக பாஷை, ஆராதனை பாஷை, அந்நிய பாஷை, ஆவியின் பாஷை, அல்லேலூயா பாஷை என்று நம்மையே மிரள வைத்தது.

நாமும் நிராயுதபாணிகளாய், கண்சொருகிப் போய்க் கோட்டைக் கதவைத் திறந்து வரவேற்று அதை உள்ளே வரவிட்டோம்.

"அவரோ" கெம்பீரமாய் உள்ளே நுழைந்தார்.

நாம் நினைத்தோம், அது நம்மோடு இணைந்தது என்று. ஆனால் அதுவோ நம்மைக் கொலைக்களத்துக்கு இட்டுச் சென்றது.

50 வருடமாய் நாம் பெற்றிருந்த பாசறைப் பயிற்சிகளையும் போர் நுணுக்கங்களையும் யுத்த அனுபவங்களையும் நமக்குண்டான யாவற்றையும் இந்த வேறொரு இயேசுவும் வேறொரு சுவிசேஷமும், வேறொரு ஆவியும் பெற்று ஆடிக்களித்த, பாடிக்களித்த ஒரு உலகக்கூட்டத்துக்கு நஷ்டம் பாராமல் விற்றுப்போட்டோம்!!.

நமது வஞ்சிக்கப்பட்டுப்போன நயவஞ்சகத்தையும், அடைந்த துரோகத்தையும், விரய நஷ்டத்தையும் எந்தக் கணக்கில் சேர்ப்பது? யார் அதற்கு உத்திரவாதி? அதை ஈடுகட்டுபவன் யார்?

உலகத்தின் பாவமும் அருவருப்புகளுமான சகல குப்பை கூளங்களும் இன்று சபையிலே மண்டிக்கிடக்கவில்லையோ?

தேசம் ஒழுக்கக்கேட்டின் உச்சத்தில் நிற்கிறது. அதின் சீர்கேட்டைக் குணமாக்க வேண்டிய பரிசுத்த சபையோ, "கைதூக்கி முன்னே வாருங்கள்.... உங்கள் பாவங்கள் உடனே மன்னிக்கப்பட்டுவிடும்..." என்று சமாதானமாய் மேல்பூச்சுப் பூசுகிறது.

"இத்தனைபெரிய இரட்சிப்பு என்பது வெறும் சபைக்குப் போய் வருவதோடு, விலையேறப்பெற்ற பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது, "ஏதோ சொல்லிக்கொடுக்கப்பட்ட ஒரு கிளிப்பிள்ளை பாஷையோடும் இன்று நின்று போய் நிற்கின்றது!!

அந்தக் குதிரையை நம்மால் மாற்ற முடியவில்லை.. ஆனால் அது நம்மைத் தலைகீழாய் மாற்றிவிட்டது.

இதைத்தான் நாம் இன்றுவரை எழுப்புதல் எழுப்புதல் என்று கூச்சலிட்டுக் கொட்டடித்துக்கொண்டு திரிகின்றோம்!!.

- Rev. B.H.Clendennen

CHAPTER 18

ஜார்ஜ் வில்லட்
தேவனின் இருதயத்துக்கேற்ற மனிதன்

ஜார்ஜ் வில்லட் தேவனின் இருதயத்துக்கேற்ற மனிதன்

நமக்கு ஞாபகமோ நினைவோ இருக்க வாய்ப்பில்லாத காலங்களில் ஒரு நாள்..

கம்பர்லாண்ட் பிரிஸ்பிட்டேரியன் சபை தனது நெருக்கடியான நாட்கள் ஒன்றில், தனது சபை உறுப்பினர் ஒருவரின் பரந்து விரிந்த குடோன் ஒன்றில் கூடியது..

அங்கிருந்த அநேகரது அன்பு தணிந்து ஐஸ் கட்டியாகிப் போன நிலை..பிரிவினைகள் வெளிப்படையாகவே தெரிந்தது..

சபையின் ஸ்தாபகர்களும், அதைத் தாங்கிய தூணாய் நின்றவர்களும் விலகிப் போயிருந்த நிலையில், அங்கே மிச்சமிருந்ததெல்லாம் குழம்பிப் போயிந்த ஒரு கூட்டம் மட்டுமே ! சபையின் எதிர்காலமே இருளாயிருந்தது..

உபதேசத்திலும் சபையின் கொள்கைகளிலும் புரட்சிகரமான மாற்றங்கள் வராதபட்சத்தில் சபையை மூடிவிடுவோம் என்று ஒரு கோஷ்டியினர் கொடி பிடித்துக் கொண்டிருந்தனர்..

வருடத்துக்கு இரு முறை கூடும் அந்தக் கூட்டத்தின் ஓர் ஓரத்தில் வயதில் மூத்தவர்களும் முதிர்ச்சியும் அனுபவமுமுள்ள சிலரும் இருந்தனர்..

அந்தப் பெரிய குடோனில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் கூடிய கூட்டம் வழக்கத்துக்கு மாறாக நிரம்பியிருந்தது.

கர்த்தருடைய ஊழியத்துக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்தவர்களை சந்திக்கும் ஒரு நேர்காணல் நேரமிது !

கிறிஸ்தவ வாழ்வின் புயல்காற்றில் அலசடிப்பட்டு அனுபவப்பட்ட மூத்த மூப்பர்கள் ஓரம்கட்டப்பட்டு, இரட்சிப்பின் அனுபவமே இல்லாத இளந்தலைகள் மத்தியில் தங்களை ஊழியத்துக்கு ஒப்புக்கொடுக்க வந்த சில விரல்விட்டு எண்ணக்கூடியவர்களைக் காணும்போதே, அங்கே சபையின் ஆவிக்குரிய தரம் குறைந்து பெலனற்றுப் போய் குறுகிக் கிடப்பதைக் காண முடிந்தது..

அப்பொழுது கூட்டத்தின் நடுவர் எழுந்து, "உங்களில் யாருக்கு தன்னால் பிரசங்கிக்கும் ஊழியம் செய்ய முடியும் என்று தோன்றுகிறதோ அவர்கள் முன் வரலாம்" என்று சொல்ல.. கூட்டத்தின் நடுவிலிருந்து மூன்று பேர் முன்னால் வந்தனர்.

முதலில் வந்த இருவரைக் குறித்து நாம் பார்க்கப் போவதில்லை.அவர்கள் இருவரும் தங்களைப் பற்றி சொல்லி முடித்ததும், அந்த அறையின் பாதி வெளிச்சமும் பாதி இருட்டுமான ஒரு பகுதியில் நின்று கொண்டிருந்த மூன்றாவது மனிதன் வெளியே வந்தான்.

அவனது தோற்றமும், அழுக்கும் அருவருப்புமாய் அவன் உடுத்தியிருந்த விதமும், அதிகம் படித்தவர்களில்லாத அந்தக் கூட்டத்தைக்கூட முகம் சுளிக்க வைத்தது..

நெடு நெடுவென்று மரமாய் வளர்ந்து நின்ற அந்த மலைநாட்டு மனிதனைப் பார்க்க வேண்டும் ! வயதைப் பார்த்தால் வாலிபன் தான்..

ஆனால் அந்தக் கூட்டத்துக்கே சம்பந்தம் இல்லாத காட்டுவாசியாய்க் காணப்பட்ட அவன் முன்னால் வந்ததும், தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்..

சிறிது நேரம் சென்று எப்படியோ தன் அழுகையை நிறுத்தி, தன் தோளில் தொங்கிய எதையோ ஒன்றை வைத்து மூக்கைத் துடைத்துக் கொண்டு ஒரு நிமிடம் அமைதியாய் நின்றான்.

"இவன் யார் ? எங்கிருந்து வந்தான் ? இந்த மீட்டிங்கில் இவனுக்கென்ன வேலை? இங்கே வந்து என்ன பேசப் போகிறான் " என்பது போல அங்கிருந்த கண்கள் ஒவ்வொன்றும் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன..

தன் தொண்டையை செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தான்.." இந்தக் கூட்டத்தில் வந்த நான்..." மேலே பேச முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டு மறுபடியும் கண்ணீர் ஊற்ற ஆரம்பித்தது..

அங்கிருந்த மூப்பர் ஒருவர், " சொல்லு மகனே ! அவசரமில்லை..மெதுவா சொல்.." என்றார்.

அவனுக்குள் பொங்கி எழுந்ததை சொல்ல முயற்சித்து முயற்சித்து மூன்று முறை தோற்றுப் போய், நாலாவது முறையும் கண்ணீர் தாரை தாரையாய் ஊற்றியது. "இவனிடம் தனியாகக் கேட்டுக் கொள்ளலாமே" என்று அங்கிருந்த யாரோ ஒருவர் சொன்னார்..

அவனோ,"இல்ல..இல்ல.. தேவன் உதவி செய்வார்.." என்று சொல்லிவிட்டு, தான் எப்படித் தோற்றமளிக்கிறேன் என்றோ, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றோ எதைப்பற்றியும் கவலைப்படாதனாய் மறுபடி எழுந்து நின்றான் அந்த மலைவாசி..

அதன்பின் பேச ஆரம்பித்த அவனது வாயிலிருந்து விழுந்த ஒவ்வொரு வார்த்தையும் கூட்டத்தைப் பேச்சு மூச்சின்றிக் கட்டிப்போட்டது..

அங்கே இருந்தவர்களிலேயே வயதான ஒருவர் பிறகு சொன்னார்.." அவன் வார்த்தைகள் தெறித்து விழுந்த இடமெல்லாம் நெருப்புத் துண்டங்களாய்க் கொட்டிக் கிடந்தது.."

அந்த முரட்டுப் பையனின் இருதயத்துடிப்பு அந்த இடமெங்கும் எதிரொலித்தது..

சரி.. யார் இந்த மலைவாசி ? இவனுக்கு என்ன ஆனது ? இவன் யார் ?

சில மாதங்கள் முன்பு இவன் வசித்த மலைப்பக்கம், பாதை தவறி மலைக்காடுகளில் மாட்டிக்கொண்டார், ஆங்காங்கே சென்று சுவிசேஷம் அறிவிக்கும் ஒரு சுவிசேஷகர்..

பாவம், ஆத்துமா, இரட்சிப்பு, அழிவு, நரகம், நித்தியம் - இவைகளில் ஒன்றின் பெயரைக்கூட கேட்டிராத அவனையும் அவன் தோற்றத்தையும், அவன் அறியாமையையும் கண்ட அந்த சுவிசேஷகர், தான் பாதை தவறிப் போனதைக்கூட மறந்து, அவனது நிலையையும், இரட்சிப்பின் அவசியத்தையும், இயேசுவின் அன்பையும், கல்வாரி காட்சியையும் கண்ணீரோடு விவரித்தவராய், அங்கிருந்த மரத்தடியில் முழங்கால்படியிட்டு அந்த ஆத்துமாவுக்காகத் தன் ஆத்துமாவை ஊற்றி ஜெபிக்க ஆரம்பித்தார்..

சில நாட்கள் சென்றபின் ஒரு நாள் அவனுக்குள்ளிருந்து ஒரு குரல்.. "மனந்திரும்பு ! மனந்திரும்பு ! நீ ஏன் சாக வேண்டும் ?" என்று பலமாய் ஒலித்தது..

மலையிலேயே பிறந்து வளர்ந்த அவன் தனக்குள்ளேயே மலை போன்ற ஏதோ ஒன்று தன் மேல் விழுந்து தன்னை நசுக்குவதை முதன்முதலாய் உணர்ந்தான்..

தூக்கம் தூரம் போனது..மரம் வெட்டும் வேலையை மறந்தான்.. அவனது கோடரி துருப்பிடிக்க ஆரம்பித்திருந்தது.. தோளில் எப்போதும் கிடக்கும் நாட்டுத் துப்பாக்கி சுவரில் தூசிபடிந்து தொங்கிக் கொண்டிருந்தது..

அக்கம்பக்கத்திலிருந்த அவனைப் போன்ற அனாடிகள் "இவனுக்கு என்னாச்சு " என்று ஒருமாதிரி அவனைப் பார்க்க ஆரம்பித்தனர்..

" ஏய் ! இவன் யார்கிட்டயோ வசமா மாட்டியிருக்காண்டா.." என்று கண்ணடித்தனர் அவனது கூட்டாளிகள்..

"இப்பெல்லாம் பையன் சரக்கு கொஞ்சம் ஜாஸ்தியாவே அடிக்கிறான் போலிருக்குது.." என்று கிசுகிசுத்தனர் சிலர், அவனுக்குள் நடக்கும் போராட்டத்தை அறியாமல்..

ஆலயம் என்ற ஒன்றை எங்கெல்லாம் கண்டானோ அங்கெல்லாம் போவான்..கேட்பான்..
தேடுவான்.. ஆனால் அவனுடைய இருதய பாரம் மட்டும் இறங்கினபாடில்லை.

தான் தூக்கிலிடப்போகும் நாளுக்காகக் காத்திருக்கும் ஒரு மனிதன், திடீரென்று ஒரு நாள் காலையில் தன்னைத் தூக்கிலிட அங்கே வந்து கொண்டிருக்கும் அந்த சிறைக்காவலர்களின் காலடி ஓசையைக் கேட்டு முகம்வெளிறிப் பேதலித்துப் போய் மூலையில் பயந்து நடுங்கி உட்கார்ந்திருப்பவனைப் போல, ஆலயத்தின் முன் பெஞ்சில் அநாகரீகமாக அவ்வப்போது வந்து உட்காரும் அவனை பின்நாட்களில் பல சபைகள் நினைவுகூர்ந்தன..

எங்கோ ஒரு நாள் நடந்த கேம்ப் மீட்டிங்கில் தன் மேல் வீசிய ஒளியைக் கண்ட அவன், மின்சாரம் தாக்கியதைப் போல," நான் கண்டு கொண்டேன்" " நான் கண்டு கொண்டேன் !" என்று கூச்சலிட ஆரம்பித்தான்..

தன் ரதம் பூட்டி காற்றாய்ப் பறந்த யெகூவைப் போல, கண்மூடித்தனமாய் ஓடிச்சென்று கண்ணில் பட்டவர்களுக்கெல்லாம் கர்த்தர் தன் ஆத்துமாவுக்குச் செய்ததை கண்கள் விரிய சொல்லிக்கொண்டே போனான்..

தன் இரட்சிப்பின் ஆனந்தத்தை அடக்கிக் கொள்ள முடியாத அவன், தன் அன்றாட வேலைகளை மறந்து, கூடாரங்களிலும் குடிசைகளிலும், மரம் அறுக்கும் குடோன்களிலும் குகைகளிலும் சென்று தன் புதுப்பிறப்பின் மகிழ்ச்சியை பொங்கி வழிய வழிய சொல்லிக் கொண்டிருந்தான்..

பாவத்தை விட்டு மனம் திரும்பி தேவனது நாமத்தைப் பற்றிக் கூப்பிட கூவி அழைத்த, தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதனாய் மாறிப் போன அவனை, அந்த மலைவாசிகள், வனாந்திரத்தில் கூப்பிடுகிற சத்தமாகிய தங்கள் யோவான் ஸ்நானகனாகவே ஆச்சரியமாய்ப் பார்த்தனர்.."

தனக்கு முன் பேச்சுமூச்சின்றி அசைவற்று அமர்ந்திருந்த அந்தக் கூட்டத்தின் முன் தன்னுடைய இந்தக் காரியங்கள் ஒவ்வொன்றையும் மூச்சுவிடாமல் அவன் சொல்லி முடித்த போது, குளிருக்கு அங்கே மூட்டப்பட்டிருந்த நெருப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அணைய ஆரம்பித்திருந்தது..ஆங்காங்கே எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்திகள் உருகி உருக்குலைந்திருந்தன..

அவனது பேச்சில் நாகரீகம் இல்லை..

அவனது பாவனையில் முரட்டுத்தனம் தோன்றியது..

ஆனாலும் அழுகையும் ஆனந்தமும் கலந்த அவனது சத்தம், அந்த மலைக்காட்டில் எதிரொலித்து, அங்கே கூடியிருந்த ஒவ்வொரு இருதயத்தையும் அன்பின் கயிறுகளால் இறுகக் கட்டிப்போட்டது..

கூட்டத்தை நடத்திய நரைத்த நடுவர் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார். அவன் பேசப்பேச சிலரது ஆமென் சத்தங்கள் ஆங்காங்கே கேட்டன..

உடனே கூடிய உறுப்பினர்கள், தங்களுக்குள் பேசி, இப்படிப்பட்ட ஒருவருக்கு தங்கள் சபை ஊழிய உரிமம் மறுப்பது எப்படி என்று முடிவு செய்ய, GEORGE WILLETS என்ற மலை நாட்டு மனிதன், அந்த பிரிஸ்பிட்டேரியன் சபையின் ஊழியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டான்..

அதன் பின் வந்த பத்து வருடங்களுக்குப் பின்னும், இந்தக் கரடுமுரடான பையன், அழிந்து போனவர்களைத் தேடுவதில் அல்லும் பகலும் இளைப்பின்றி அலைந்து திரிகிறவனாய், இடைவிடாமல் இருதயத்தை ஊற்றி ஜெபிக்கிறவனாய், கர்த்தருடைய மனதுருக்கத்தால் நிறைந்தவனாய், அதே நேரம் எதற்கும் பின்னிடையாத சிங்கம் போன்று கெர்ஜிக்கிறவனாய், பயம் சிறிதுமின்றி தன் முழு பெலத்தோடு பிரசங்க பீடத்தில் தீப்பந்தாய், எரிகிற அக்கினிக் கொள்ளியாய் பற்றி எரிந்து கொண்டிருந்தான்..

பரலோகத்தைப் பற்றி அவன் பேச ஆரம்பித்தால், ஜனங்கள் தாங்கள் தேவனுடைய நகரத்திலேயே வந்து சேர்ந்து விட்டதைப்போல உணர்ந்தனர்.

பாவிகளின் அழிவையும் நித்திய நரக அக்கினியையும் அவன் பேச ஆரம்பிக்கும்போதே, கேட்டுக் கொண்டிருந்தவர்கள், தங்களுக்குக் கீழே பூமி உருண்டையே பிளந்து, அடியில்லா பாதாளத்தின் வாசல் தன் வாயை ஆவென்று விரிவாய்த் திறந்து அதின் புகை மேலெழும்பி வந்து தங்களை உயிரோடு விழுங்குவது போன்று முட்டி மோதி அழ ஆரம்பித்தனர்..

அசைந்து கொடுக்காத ஆண்கள், சிறுபிள்ளைகளைப் போல அழ ஆரம்பித்தனர். ஆடம்பரமான பெண்கள் கத்திக் குத்துப்பட்டவர்கள் போல கூச்சலிட்டனர்..

தேவனே நிர்மாணித்த நித்திய அஸ்திபாரங்களுள்ள நகரத்திலிருந்து நேரடியாக வந்தவனைப் போல பிரதிபலித்து பிரகாசித்துக் கொண்டிருந்தான் அவன்...

வானத்தை நோக்கி அவன் விரல் நீட்டும் போதெல்லாம் பரலோகத்தையும் பூலோகத்தையும் பிரிக்கும் மேகங்கள் சற்று விலகிக்கொடுத்து, மன்னிக்கும் தேவனின் பாதங்களை மனிதர் பிடித்துக்கொள்ள வழி திறந்து கொடுத்தன..

அவனது இருதயத்திலிருந்து புறப்பட்ட கொதித்துக் கொப்பளிக்கும் வார்த்தைகள் கேட்பவரின் மனதைக் கலக்கி, பரலோகத்தை நோக்கி இரக்கத்துக்காகக் கெஞ்ச வைத்தது. புலம்பி அழும் அவர்களை அன்பினால் முன்னால் அழைப்பான்.

ஒரு முறை தங்கள் இருதயத்தில் ஆவியின் பட்டயத்தால் குத்துண்டவர்கள் 500 பேர் இப்படி தங்களை ஒப்புக்கொடுத்து முன்வந்தனர்.

GEORGE WILLETS ன் அநாகரீகமான ஆடையையோ தோற்றத்தையோ பாவனையையோ இன்று யாரும் பின்பற்றப் போவதில்லை..

ஆனால் அவனுக்குள்ளிருந்த ஆவியிலும், தகதகக்கும் அனலிலும், அன்பிலும் நாம் இன்று இன்னும் ஒரு முறை மூழ்கி எழுந்து ஞானஸ்நானம் பெறாமல் போனால், நமது பிரசங்க பீடங்கள் மேலே அக்கினி அல்ல.. ஐஸ் கட்டிகள் கட்டி கட்டியாய் உறைந்து தொங்கப் போவது உறுதி !

CHAPTER-19

நீயோ என்னை முத்தஞ்செய்யவில்லை

நீயோ என்னை முத்தஞ்செய்யவில்லை

லூக். 7: 36-47

இங்கே இயேசு குஷ்டரோகியாகிய சீமான் வீட்டில் பந்தியிருக்கையில் அவனைப் பார்த்து சொல்கிறார்..

“ சீமோனே..

“ நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை..”

“ நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை.. ”

“ நீ என்னை முத்தஞ்செய்யவில்லை ”

சகோதரரே..
நாம் தேவனுக்கு முன்பாக நிற்கப்போகிற நாளில் இப்படித்தான் நடக்கப் போகிறது..

கர்த்தரின் மதிப்பீடுகள் நாம் நினைப்பது போல் அல்ல..

நான் ஏதோ பல புத்தகங்கள் எழுதிவிட்டதாலோ,
நிறைய பிரசங்கங்கள் செய்துவிட்டதாலோ,
அதின் அடிப்படையில் அவர் எனக்கு பலன் தரப்போவதில்லை..

நாம் இயேசுவுக்காக ஏதாவது செய்து கொண்டிருப்பதையே
எப்போதும் முதன்மைப்படுத்துகிறோம்..

ஆனால் அது அப்படி அல்ல.. தேவன் கேட்கும் முதன்மையானதும் முக்கியமானதும் நாம் அவருக்காக செய்யும் கிரியைகள் அல்ல.. அல்லவே அல்ல..

அங்குமிங்கும் ஓடுவதும்,
கூட்டங்கள் நடத்துவதும்,
மிகவும் பிஸியாக இருப்பதும்,
நாளின் கடைசி நேரத்தில் சோர்ந்து போய் வீடு வந்து சேர்ந்து...

ஐயோ நாளைக்காலை flightஐ பிடிக்க வேண்டுமே, இவ்வளவு பேர் எனக்காகக் காத்திருப்பார்களே...என்று சொல்லி இப்போது இருப்பது போல் எப்போது ஊழியர்கள் ஓடிக்கொண்டே இருந்தததில்லை. அவர் பாதம் அமராமல்...

நான் சொல்வது உங்களுக்குப் புரிணீறதா?

அருமையான, ஆழமான ஆவிக்குரிய புத்தகங்கள் படிப்பதால் நாம் பரிசுத்தவான்களாகி விடுவோம் என்று நாம் நினைக்கிறோம்..

நான் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன்.. வேத புத்தகத்தைப் படிப்பதால் கூட ஒருவன் பரிசுத்தவானாகி விடமாட்டான்..

அது நம் இரத்த நாளங்களில் ஏறி ஊறியிருக்க வேண்டும்!!

இன்று நான் ஒரு பெரிய சுவிசேஷக் கூட்டம் நடத்தலாம்.. கூட்டத்தின் முடிவில் அழைப்பு கொடுக்கும்போது நூற்றுக்கணக்கானோர் முன் வந்து தங்களை ஒப்புக் கொடுக்கலாம்..

ஆனால் நாளின் முடிவிலோ.. இயேசு என்னைப் பார்த்து..
“நீயோ என்னை முத்தஞ்செய்யவில்லை”என்று சொல்லக்கூடும்..

ஏன் தெரியுமா?

ஏனென்றால் அவரது ஊழியத்தில் நான் எப்போதும் பிஸி, ஓட்டம்,
ஓடிக்கொண்டே இருக்கிறேன்..

அவருக்குக் கொடுக்க வேண்டிய கணிசமான நேரத்தைக் கொடுத்து
அவர் பாதம் அமர்ந்து அவரை ஆராதித்து அவரது இருதயத்தைக்
குளிரப் பண்ணித் தவறிவிட்டேன்..

நம் வாழ்வில் அவர் விரும்பும் முதலும் முழுமையான காரியமே அவர்
பாதத்தில் அமர்ந்து அவரை நேசித்து ஆராதிப்பதைத் தான்..
மற்றதெல்லாம் அதன் பிறகே!

நீங்கள் சொல்லலாம்....
“பிரதர்.. மற்ற எல்லாரையும் விட நான் அதிகமாய்ப்
பிரயாசப்படுகிறேன்..”

ஆனால் அவர் சொல்வார்
" என்ன பிரயோஜனம்? "
நீ வண்டியைத் தவறவிட்டுவிட்டாயே? ”
(கைவிடப்பட்டு விட்டாயே!)

நண்பனே...
நான் உலகம் முழுவதும் சில தடவைகள் சென்று வந்திருக்கிறேன்...
அதனால் அவர் எனக்குத் தன்னருகே முதலிடம் தரப்போவதில்லை.

என்னுடைய சில புத்தகங்கள் மிக அதிகமாக விற்பனையாகிறவை.

அதற்காக நான் கர்த்தரது பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றவன் என்று அர்த்தமல்ல.

நான் இந்த சீமோனை சற்று உற்றுப் பார்க்கிறேன்....
இயேசு அவனைப் பார்த்துச் சொல்கிறார்...

"சீமோனே, நீ எல்லாம் செய்தாய் சரிதான்...
ஆனால் செய்யவேண்டியதைச் செய்யாமல் தவறிவிட்டாயே...

கடைசியாகச் சொல்கிறேன் நான் எவ்வளவு பிரசங்கங்கள் செய்தாலும், வெவ்வேறு ஊழியங்கள் செய்தாலும், கர்த்தர் கணக்கே வேறு.

அவர் சொல்வார்... மகனே நீ இன்று இலட்சக்கணக்கானவர்களுக்கு
டிவியில் பிரசங்கித்தாய்... கூட்டம் நடத்தினாய்...
வியாதியஸ்தரை சந்தித்தாய்...

இவையெல்லாம் எனக்குப் பெரிதல்ல..

ஆனால் மகனே...இவ்வளவுக்கும் மத்தியில் நீ என்னை முத்தஞ்செய்தாயா?

மகனே... நீ இன்று மிகவும் பிஸியாக, ரொம்ப சுறுசுறுப்பாக,
மிக வேகமாக இருந்தாய்..

“நீ மிகவும் அழகாகப் பிரசங்கம் பண்ணினாய்” என்று எல்லாரும் உன்னைப் புகழ்ந்தார்கள். புதிதாக நிறைய பேரை சந்தித்தாய்...

ஆனால் என்னைப் பார் மகனே!
நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை..
நீ என் தலைக்கு எண்ணெய் பூசவில்லை..
நீ என்னை முத்தஞ்செய்யவில்லை..

You gave Me No KISS !!

(அதாவது நீ எல்லாம் செய்திருந்தும், உனக்காகவே காத்துக் கிடக்கும் என்னைச் சந்திக்கவோ என்னோடு நிதானமாய் அமர்ந்து உட்கார்ந்து பேசவோ உன்னிடம் எனக்காக நேரமில்லை..)

என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து,
என் கதவு நிலையருகே காத்திருந்து,
எனக்குச் செவி கொடுக்கிற
மனுஷன் பாக்கியவான்.
(நீதி 8:34)

.... என் புறாவே !
உன் முகரூபத்தை எனக்குக் காண்பி,
உன் சத்தத்தை நான் கேட்கட்டும்;
உன் சத்தம் இன்பமும்,
உன் முக ரூபம் அழகுமாயிருக்கிறது.
(உன் 2:14)


The Apostle Paul

CHAPTER-20

சவுலுக்குள்ளிருந்து ஒரு பவுல்

சவுலுக்குள்ளிருந்து ஒரு பவுல்

அவனோடு பிரயாணம் பண்ணின அவனது காவலர்கள் "சத்தத்தைக் கேட்டும் ஒருவரையும் காணாமல்" பேச்சுமூச்சற்று உறைந்து நின்றனர். (அப் 9:7). இப்போது சற்று நேரம் முன்புவரை தங்கள் தலைவர், ஆண்டவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கு விரோதமாய் வழியெங்கும் மூச்சிரைக்க மிரட்டல் விட்டுக் கொண்டு வந்ததை அவர்கள் கண்டிருந்தனர். தன் குரோதத்தினால் ஏற்கனவே கண் சொருகிக் குருடாகிப்போய்க் கிடந்த இந்த அடக்குமுறையாளன், ரோமச் சித்ரவதையாளர்களைத் தூக்கியெறிய அலையாமல், கிறிஸ்தவக் கூட்டத்தையே கூண்டோடு நசுக்கப் புறப்பட்டிருந்தான்.

இவனது பயோ-டேட்டாவை சற்றுப் பாருங்கள்! இவன் ஒன்றும் ஒரு கொள்ளைக் கூட்டத் தலைவனல்ல.... இவன் ஆபிரகாமின் சந்ததியும், பென்யமீன் கோத்திரத்தான் என்றுமே இவனது பிறப்புச் சான்றிதழ் சான்று பகர்கிறது. பரிசேயப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று வெளிவந்த நம்பர் ஒன் இவன்.

இவனது தகப்பனாரும் பரிசேயரே. ரோமக்குடியுரிமை பெற்று அந்த சிலாக்கியத்துக்குரியவனாகப் பிறந்தவன் என்று அவனது பாஸ்போர்ட் மற்றும் அவனது ரெக்கார்டுகள் சொன்னது. இப்பூச்சக்கரத்திலேயே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டிருந்த தன் ஜனங்களின் ஆதியோடந்தமான அப்பழுக்கற்ற சரித்திரம் முழுவதையும் அப்படியே ஒப்பிப்பான் இவன்! தலை முழுவதும் இறையியல்... இருதயமோ இறுமாப்பினாலும் வெறுப்பினாலும் நிரம்பி வழிந்தது.

தம்படிக் காசின்றி, தலைசாய்க்க இடமுமின்றித் திரிந்த இயேசு என்னும் தீர்க்கதரிசி எருசலேமின் அமைதியையே குலைத்துக் கொண்டிருந்தார். தலைநகரின் ஜனத்துக்குத் தன் அற்புத வல்லமையின் முன் ருசியைத் தந்திருந்தவர், அதின் தாக்கத்தினால் தனக்குப் பின்னே சீஷர்படை ஒன்றையும் உருவாக்கிவிட்டிருந்தார். அவர்களும் இயேசுவைப் போலவே, நோயின் மீதும், பேயின் மீதும், சாவின் மீதும், வாழ்வின் மீதுமான அந்த வல்லமையின் வீச்சைத் தங்கள் மேல் சுமந்து ஒரே திரிந்தனர்.

ஆனால் பவுல் என்ற இந்த சவுலின் முற்பிதாக்களின் முற்றிலும் வித்தியாசமான விசுவாசமோ, இவைகளினால் பரியாசமும், அவமானமுமாய் அந்தரத்தில் அன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைத் தாங்காமல் எழுந்த இவனது ஆக்ரோஷமோ, சீஷர்களின் விசுவாசத்தையே உலுக்கி உதிர்த்து விடுவதாய் இருந்தது. அதற்காக அவன் வகுத்திருந்த, யாராலும் தகர்க்க முடியாத நீண்டகாலத் திட்டம், “என்னை யாரும் முட்டாளாக்க முடியாது...” என்று சொல்லாமல் சொல்லியது. அவனது அங்கி மறைவினுள் கையெழுத்திடப்பட்டு மடித்து மறைத்து வைக்கப்பட்டிருந்த முத்திரையிடப்பட்ட கடிதங்களைக் கிழித்தெறியும் தைரியமும் அதிகாரமும் யாருக்கு உண்டு? ஆனால் அவனை உலுக்கியெடுக்க அவன் முன் அவ்வப்போது வந்துபோகும் ஒரு வாலிபனின் முகமும், அந்த வாலிபனைக் கல்லெறிந்து கொல்லும்போது, தான் காவலுக்கு நின்ற நேரம், அவனது முகம் தேவதூதன் முகம் போன்று பிரகாசித்த ஞாபகமும், தன் முகத்தில் அறைந்து விட்டுச் செல்வதை அவன் தனக்குள்ளே ஒளித்து வைக்க, தான் படாதபாடு படுவதையும் தான் மட்டுமே அறிவான் அவன். இதற்குள், அவர்கள் பெருமைகொண்டாடி வந்த இஸ்ரவேலின் தேவன் தன்னை மறைந்துக் கொள்ள, இயேசுவின் வாலிபப் பட்டாளமோ, இஸ்ரவேலின் மூப்பர்களையும், தலைவர்களையும், அங்கி அதிகாரிகளையும், “மகிமையின் ஆண்டவரை நீங்களே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்! ” என்று பகிரங்கமாய் பயமின்றிக் குற்றம் சாட்டி நின்றது.

இந்த நினைவுகளோடு, தமஸ்கு நோக்கி விரைந்தவனின் கண்கள் திடீரென்று இமைக்க மறுத்து நின்றன. தரையிலே வீசியெறிப்பட்ட அவன், ஆண்டவரே நீர் யார்? என்று கத்திக் கொண்டிருக்க, அவனது கமாண்டோக்கள், இதற்குள் குருடாகி விட்டிருந்த அவனை கைத்தாங்கலாகத் தமஸ்குவுக்கு நடத்திச் சென்றனர். ஓ! தன் வாழ்நாள் முழுவதும் திறந்த கண்களால் தான் பார்த்திராதவைகளை எல்லாம் தன் குருட்டின் இருட்டுக்குள் அவன் நிச்சயம் பார்த்திருப்பான் என்று திட்டமாய்ச் சொல்லுவேன்.

"பரிசுத்தவான்களில் பலரை சிறைச்சாலைகளில் அடைத்து, அவர்கள் கொலை செய்யப்படுகையில் என் கையும் அதில் உடனிருந்தது" என்று தன் பின்னாட்களில் அவன் சாட்சி சொன்ன, அவனால் சித்ரவதைப் படுத்தப்பட்ட இரத்தம் தோய்ந்த பரிசுத்தவான்களின் முகங்கள், அந்தக் குருட்டுக் கண்களுக்குள் திரும்பத் திரும்பத் தோன்றி அவனை வதைத்தெடுத்திருக்கும்.

குற்ற உணர்வும், பயங்கர நினைவுகளும் புரட்டி எடுக்க, குருட்டின் இருட்டிலே மயங்கி விழுந்த சவுல், எழுந்து ஜெபித்தான். முடிவில்லா இரக்கங்களின் நித்தியதேவன் அவனது சத்தத்தைக் கேட்டார். தமது சிங்காசனத்திலிருந்து கீழ்நோக்கி, அண்டசராசத்தில் பூமி என்ற புள்ளியிலிருந்து, தவறுதலாகத் தன்னை வெகு வைராக்கியம் கொண்டவனென்று எண்ணிக்கொண்டு, இப்போதோ ஆவிக்குரிய ஒட்டுத்துணியின்றி கதறிக்கொண்டிருக்கும் ஒருவனைக் கண்டார் தேவன்.

இந்த வல்லமையின் தேவன், அன்றைய நாளில் கூட்டத்தால் நிறைந்து வழிந்த கொலோசியத்துக்கு ரோம ராயனிடத்தில் ஒரு தூதனை அனுப்பியதாகவோ, பிரதான ஆசாரியனின் அன்றைய நாளின் ஆராதனைச் சடங்குகளில் குறுக்கிட்டதாகவோ, பரிசேயர்களின் பரிசுத்த கூடுகையைக் கலைக்க ஒரு தூதனை அனுப்பியதாகவோ, நான் எங்கும் படிக்கக் காணேன்... மாறாக, தமஸ்கு வீதியிலே தாகமுள்ள ஒரு மனிதனைத் தேடி அன்று வந்தார் அவர். அவன் மாயையான வைராக்கியத்தோடு அலைந்தாலென்ன? பசி தாகம் அவனுக்குள் இல்லையோ என்று அவனை சந்திக்க இறங்கி வந்தார் அவர். பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அல்லவோ?

இதோ !

விசுவாசத்தையே நசுக்கிப் பிழிந்து கொண்டிருந்த இவன் சீக்கிரமே தன் விசுவாசத்துக்காக நசுக்கிப் பிழியப்படப் போகிறான்...

ஸ்தேவான் கல்லெறியப்படும் போது முகத்தில் சலனமின்றிப் பார்த்துக்கொண்டிருந்த இவன் சீக்கிரமே, தாம் கல்லெறியப்படப் போகும்போது சத்தமும் சலனமுமின்றிப் போகப்போகிறான். பயங்கரமான ஆபத்துகளில் மற்றவர்களைத் தள்ளிய அவன், சீக்கிரமே, அதிலும் அதிபயங்கர ஆபத்துக்களை சந்திக்கப்போகிறான்.

"மனுஷன் தான் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்" என்று பின்னாட்களில் கலாத்தியருக்கு எழுதிய பவுலான அதே சவுலே இப்போது அதற்கு மிகச்சிறந்த உதாரணமாகி நிற்கின்றான்.

பவுல், தான் குருடாகிக் கிடந்த அந்த மூன்று நாட்கள் ஜெபித்த ஜெபத்தின் விபரம் எனக்குக் கிடைத்தால் எவ்வளவு நலம் என்பேன்! ஓ! அப்படிக் குருடாகிப் போன நிலையில் ஒவ்வொருவரும் அப்படி ஒரு உபவாசத்தோடு கூடிய ஜெபத்தை ஏறெடுத்தால் எப்படியிருக்கும்? பிரசங்கியே! அப்படி ஒன்றை முயற்சித்துத் தான் பாரேன்! உனது டிவிக்கும், வீடியோ விளையாட்டுகளுக்கும், இணையத்தளத்துக்கும், உனது சபையின் சோஷியல் ஆட்டபாட்டங்களுக்கும் உன்னையே குருடாக்கிக் கொண்டு அப்படி ஒரு ஜெபத்தில் இறங்கிப்பார்! இவைகளிலேயே மூழ்கிப் போய்க் கிடக்கும் உன்னை சந்திக்க தேவன் வருவாரானால், இறையியல் உனக்குக் கற்றுத்தராத வெற்றியின் சிகரங்களுக்கு தேவன் உன்னை இட்டுச் செல்வார் என்று துணிந்து தைரியமாய் உனக்கு சவாலிட்டுச் சொல்லுவேன்!

ஆண்டவருக்கு முன்பாகத் தன் பாவங்களுக்காகக் கதறிக்கொண்டிருந்த தங்கள் நிகரில்லாப் பரிசேய நண்பனுக்கு என்ன ஆனது என்று அவனது காவலர்கள் குழம்பிக் போயிருப்பார்கள் என்றே நான் நினைக்கிறேன். தன்னைப் போலவே முழு இஸ்ரவேல் குடும்பமும் ஆண்டவருக்கு முன்பாகக் கீழே தள்ளப்பட்டு, தாங்கள் சிலுவையிலறைந்து கொன்ற தங்கள் ஆண்டவருக்கு முன், அவர்களிலிருந்து மனந்திரும்புதலின் வெள்ளமொன்று பெருக்கெடுத்து ஓடாதோ என்று பவுல் ஜெபித்திருப்பான்.

அனனியாவும் ஒரு ஜெபிக்கும் மனிதனாகத் தான் இருந்திருப்பான். அன்று அவன் வெறுமெனே தேவனிடத்தில் பேசிக்கொண்டிருக்கவில்லை. ஆனால், தேவன் தன்னோடு என்ன பேசுகிறார் என்பதைக் கேட்கக் காத்திருந்தான் அவன். இப்படி நாம் காத்திருப்பது எவ்வளவு அரிதான ஒன்று! ஒருவேளை நமக்கு வெகு அருகிலோ, பக்கத்து ஊரிலோ இருக்கும் யாரிடமோ தேவன் நம்மை அனுப்ப நினைத்திருக்கலாம். நாமோ, தேவனுடைய சத்தத்தைக் கேட்கக்கூடாத அளவு நம் அன்றாட அலுவல்களிலும், அந்நிய அலுவல்களிலும் மூழ்கித் திரிகிறோம். தேவனுக்கும் மேலாக நம் வாழ்வில் முக்கியத்துவம் பெறுவது யார்? எது?

பவுல் தேவனிடம் படித்த பல்கலைக்கழகப் படிப்பு முடிந்தது அரேபியாவிலே... அங்கே தான் அவன் மூன்றாம் வானம் வரை எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுஷர் பேசப்படாததும், வாக்குக் கெட்டாததுமான வார்த்தைகளைக் கேட்டான். இப்படிப்பட்ட வெளிப்பாடு பெற்ற ஒருவன் பூமிக்குத் திரும்பி வந்து சொல்வான்... “நாம் இங்கே குப்பை மேடுகளை அணைத்துக் கொண்டு கிடக்கிறோம்...” என்று. அப்படிப்பட்டவன் உலகத்தின் ஆசாபாசங்களையும், மாடமாளிகைக் கோபுரங்களையும் குஷ்டரோகமாய் அருவருத்து ஆரோசிப்பான்!. “ஒன்று செய்கிறேன்....” என்று பவுலோடு சேர்ந்து சொல்லும் அவன் பவுலைப் போலவே பின்வாங்கவும் மாட்டான்.

தமஸ்கு வீதியினே பவுல் ஜெபித்த சங்கிலித் தொடர் ஜெபம் இன்று வரை நீண்டு நிற்கிறது. கோடி கோடி ஜெபங்களைக் கொட்டி ஜெபித்தான் அவன். அன்று அவன் பிறப்பித்த மிஷனரி இயக்கத்தின் தாக்கத்தை இன்று வரை நமது இயக்கங்கள் சமன் செய்ய முடியவில்லையே! என் இனத்தாராகிய சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டு சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே" என்று மிகுந்த துக்கத்தோடும் மனவேதனையோடும் ஜெபத்தில் அனுபவப்பட்டுவிட்ட அவன், தன் ஜெபத்துக்கு சாட்சியாகவும், “அது பொய்யல்ல, உண்மையென்று....” சாட்சி பகரவும், ஆசீர்வதிக்கப்பட்ட ஆவியானவரையே அழைக்க வேண்டியிருந்தது.

ஊழியனே! உன் சபையைப் பார்த்து, “நானோ ஜெபத்திலும் தேவ வசனத்தைப் போதிக்கும் ஊழியத்திலும் மாத்திரமே தரித்திருப்பேன்.
(அப் 6:4) என்று, இன்றிலிருந்து பவுலைப் போல நான் ஒரு புதிய ஏற்பாட்டு ஊழியனாய், ஆவியானவர் சொல்வதை மட்டுமே செய்வேன் என்றும் தைரியமாய் சொல்வாயோ? சர்வ வல்ல தேவன், இரத்தம் தோய்ந்த கைகளையுடைய ஒரு கொலைகாரனின் ஜெபத்தையே கேட்டிருப்பாரானால், நமது கண்ணீரின் மன்றாட்டுகளுக்கு செவி கொடுக்க மாட்டாரோ?

அங்கே தமஸ்கு வீதியிலே நடப்பது என்னவென்று பார்க்கவும், கேட்கவும் தமது சிங்காசனத்தை விட்டு அன்று இறங்கி வந்தார் இயேசு. நமது மாம்சத்தின் மமதைகளை விட்டெறிந்து, நமது பட்டங்களையும், படிப்புகளையும் படிப்பறையின் குப்பைப்பெட்டியில் விசிறியெறிந்து, ஆவியானவரின் ஆராய்ந்து பார்த்தலுக்கு நம்மையே உட்படுத்தி, ஒப்புக்கொடுத்து, நித்தியத்தின் நடுக்கத்தினால் அவர் முன் விழுந்து கிடப்போமானால், நாம் இதுவரை கண்டிராத ஒரு வல்லமையோடு நம்மை சந்திக்க இன்றும் இறங்கி வருவார் அவர்!

இப்பொழுது நாம் நமக்கென்றே பிடித்து வைத்திருக்கிற எக்கச்சக்கமானவைகளை எவ்வளவோ காலமாய் இறுக்கிப்பிடித்து வைத்துக்கொண்டு விட்டோம்.

ஒரு மாபெரும் மாற்றத்துக்கான நேரம் வந்துவிட்டது !

தனிப்பட்ட வாழ்வில்.. சபைகளில்..தேசத்தில்..
ரிக்டர் அளவுகளால் அளவிடமுடியாத ஒரு ஆவிக்குரிய பூகம்பம் வெடித்தே ஆக வேண்டும் !

அதின் காரணகர்த்தா நீயாக ஏன் இருக்கக்கூடாது ?
ஆனால் அதின் விலைக்கிரயம் நீ நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று !

நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை,
நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்........
நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும்
உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும்
நான் உங்களை ஏற்படுத்தினேன்.
(யோ 15:16)

An open letter to an evangelist

CHAPTER-21

சுவிசேஷகன் ஒருவனுக்கு மனம் திறந்து ஒரு மடல்

சுவிசேஷகன் ஒருவனுக்கு மனம் திறந்து ஒரு மடல்

(ஆலோசனை கேட்டு எழுதிய ஒரு கடிதத்திற்கான பதில்)

எனது பிரிய சகோதரனே,

நீ ஒரு சுவிசேஷகன் என்பதாக உனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாய், மிக்க மகிழ்ச்சி.

சுவிசேஷகர்களில் அநேக விதமானவர்கள் இந்நாட்களில் இருக்கின்றபடியால் நீ அவர்களில் எந்த வகுப்பைப் சேர்ந்தவன் என்று முதலில் நான் அறிய ஆசைப்படுகிறேன்.

நீ எவ்வித சுவிசேஷகன் ?

பணம் தேடி ஓடி அலையும் ஒருவனா அல்லது கட்டுக்கதைகள் விட்டுத் திரிபவனா அல்லது பெயருக்காகவும், புகழுக்காகவும் சுற்றி நடப்பவனா அல்லது மனிதருடைய புகழ்ச்சிக்காகவும் அவர்களுடைய மெச்சுதல்களுக்காகவும் பேராசை பிடித்து அலைபவனா?

ஒரு சுவிசேஷகனின் பணி ஆபத்தானதும் விலையுயர்ந்த அழைப்புமாயிருக்கிறது.

ஓ! இந்த ஒப்பற்ற பணியை ஒரு பிரசங்க பீடமின்றி, ஒருவேளை உணவின்றி, உன்னைத் தாங்க ஒரு ஸ்தாபனமின்றி நீ ஒருவனாகப் பெரும் வெற்றியுடன் செய்யலாம்.

இதற்கான செலவு, நீ கர்த்தரோடு தனித்து நிற்கும்
தனிமையும் அழியும் ஆத்துமாக்களுக்காக
நீ வடிக்கும் கண்ணிருமேயாகும்.

வயிற்றுக்கும் ஆகார மோகத்துக்கும் தங்களை
விற்றுப் போட்டுக் கொழுத்துக் கிடக்கும்
அநேகக் குருவானவர்களையும் போதகர்களையும்
சுவிசேஷகர்களையும் போல அல்லாமல்..

உன்னை உபவாசத்தால் நீயே ஒடுக்கிக்
காத்துக்கொள்ள வேண்டும்.

வேதாகம ஒழுங்கின்படி நீ ஊழியம் செய்வதானால் அதில் பலாபலன் இரத்தம், வியர்வை மற்றும் கண்ணீரேயின்றி வேறொன்றுமில்லை.

எல்லா எச்சரிப்போடும் நான் உனக்கு சொல்லும் ஆலோசனை என்னவெனில் நீ ஒரு சுவிசேஷகன் என்ற நிச்சயத்தை முதலில் நீ பெற்றிருக்க வேண்டும்.

இது சம்பந்தமாக நான் உனக்குச் சொல்லுவது என்னவென்றால்
உன் வேதாகமத்தை மட்டும் எடுத்தவனாய்க் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் நீ ஒளித்துக்கொண்டிரு.

இந்நாட்களில் நீ தேட வேண்டும்.
தேடிக்கொண்டே இருக்க வேண்டும். எதை?

ஆம். தேவனின் பரிபூரண சித்தத்தையும் அவரது அபிஷேகத்தையும் மட்டுமே நீ தேட வேண்டும்.

உனது இந்த 6 மாத பத்முதீவு அனுபவத்திற்குப் பின்னும் உன் உள்ளத்தில் அக்கினி பற்றி எரிந்து கொண்டிருக்குமானால்

அதாவது....
சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காவிட்டால் எனக்கு ஐயோ!
என்று அங்கலாய்க்கும் நிலையில் நீ இருந்தால்....

மனிதருக்கோ பிசாசுகளுக்கோ அஞ்சாமல் தேவ வார்த்தைகளைப் பிரசங்கிக்க இப்பொழுது நீ தைரியமாய் புறப்பட்டுச் செல்லலாம்.

ஏராளமான சுவிசேஷ ஊழியங்களைச் செய்து குவித்துள்ளோம் என்று சொல்லும் அநேக சுவிசேஷகர்கள் இந்த நாட்களில் நம் சபைகளில் உண்டு.

ஆகிலும் மகனே....
உன் ஊழியத்தின் உரைகல் எதுவெனில் நீ ஊழியம் செய்த ஒரு சபையை ஆறு மாதங்கள் கழித்து சந்திப்பாயானால் இயேசுவுக்கு தங்களை உன் ஊழியத்தின் மூலம் ஒப்புகொடுத்தவர்கள் எத்தனை பேர், இன்னும் தேவ அன்பில் நிலை கொண்டிருக்கின்றனர் என்று கவனி.

அதுவே உண்மையான கனிகளின் அடையாளம்..

நீ சந்திக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் நியாயத்தீர்ப்பின் நாளிலே நீ சந்திக்கப்போகிறாய் என்பதை மறவாதே!

மக்களுக்குப் பெரும்பாலும் மனந்திரும்புதலைப் பற்றியே பேசு!

நித்திய பாதுகாப்புகளை தாராளமாக மக்களுக்கு அள்ளி வழங்காதே.

அநேக இரக்கமுள்ள சுவிசேஷகர்களை நான் அறிவேன். சுவிசேஷக் கூட்டங்களில் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போருக்கு இவர்கள், “கர்த்தர் இமைப்பொழுது உங்களைக் கண்ணோக்கினார்...

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன... இனி நீங்கள் பரலோகத்துக்குப் பங்காளிகள், பரலோகில் சீயோன் மலை மேலே உங்களுக்கு வாசஸ்தலம் உண்டு... ஒரு பொற்கிரீடம், பத்துப் பட்டணங்கள் மேல் உங்களுக்கு ஆளுகை, ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்தில் பங்கு, இவை அனைத்தும் உண்டு” என்று வெகுதாராளமாகக் கூறிவிடுகின்றனர்.

மகனே.... இவ்விதமான தவறான உபதேசங்களைப் பிரசங்கியாதே...

பாவிகளுக்கு தேவையானது எதுவென்று தேவன் விரும்புகிறாரோ அதையே அவர்களுக்குப் பிரசங்கிக்கக் கவனமாயிரு.

கடைசியாக...

1. காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்...

2.வாரத்தில் குறைந்தபட்சம் ஒரு நாளையாவது உபவாசத்தில் செலவிடு.

3. சுவிசேஷத்தை ஆதாயத் தொழிலாக்காதே.

4.உன்னை அழைத்தவர் பரிசுத்தராய் இருப்பது போல நீயும் பரிசுத்தம் உள்ளவனாயிரு.

5. சுவிசேஷப்பணி அழிந்து கொண்டிருக்கும் உலகிற்கு தேவன் அனுப்பும் கடைசிச் செய்தியாகும்.

6. தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக நான் எதை செய்கிறேனோ அதையே பிரசங்கிக்கிறேன்... என்று சொல்ல தகுதி உள்ளவனாயிரு.

என் ஆலோசனையை நாடினாய்.
இதோ உனக்கு முன்பாக வைத்துள்ளேன்.
மிகவும் கடினமான ஒன்று தான்...

இருப்பினும் தேவன் விரும்பும் நிலைக்கு குறைவான அளவிலோ தரத்திலோ நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது எப்படி?

கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக?

நித்தியத்தில் நான் உன்னைக் காண்பேன்.!

ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும்
தெரிந்து கொள்ளுதலையும்
உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்;
இவைகளைச் செய்தால்
நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.
(2 பேதுரு 1: 10)


DAYS OF REVIVAL
being the
History of Methodism
in Ireland

CHAPTER-22

கிதியோன் ஒஸ்லே

நாட்டுப்புறங்களைக் கதிகலக்கிய தேவனின் தண்டாயுதம்

கிதியோன் ஓஸ்லே

அயர்லாந்தின் ஜாண்வெஸ்லி (1762-1841)

1762லே அயர்லாந்தின் கால்வே நகருக்கு, இரண்டாவது முறையாகத் தன் ஆவிக்குரிய போர்ப்படைகளோடு வந்து இறங்கியிருந்தார் ஜாண்வெஸ்லி. ஆனால் அங்கே அந்த நாட்டின் தூரமான மூலை ஒன்றில் அதே நேரத்தில் ஆண் குழந்தை ஒன்று தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அக்குழந்தை தான் பிற்காலத்தில் தாம் தமது பணிவிடை ஓட்டத்தை முடிக்கும்போது, தம்மைப் போன்ற அசுரபெலத்தோடும், அக்கினியில் மூழ்கி எழுந்த ஸ்நானத்தோடும் தமக்குப் பின் எழுந்து வரும் என்று அப்போது அந்த மெத்தடிஸ்ட் வீரர் ஜாண் வெஸ்லி அறியாதிருந்தார். தேவனால் நிரம்பிய அந்த ஆத்தும ஆதாய வீரன் பிறந்தது அயர்லாந்தின் டன் மோரிலே. பெப்ரவரி 24, 1762ல்

பெயர்: கிதியோன் ஓஸ்லே

கிதியோன் ஓஸ்லேயின் தகப்பனின் ஒருவித கல்ட் க்ரூப்பான "தெய்வத்துவத்தின் கொள்கைகளிலிருந்து தன் மகனை மிகக்கவனத்தோடு பாதுகாத்து வைத்திருந்தார் அவனது தாய். அவன் ஒவ்வொரு நாளும் படுக்கைக்குச் செல்லுமுன், அவர் அவனுக்குப் படித்துக் காட்டியதெல்லாம் Tillotsonன் பிரசங்கக் குறிப்புகளும், Young என்பவரின் "இரவின் நினைவுகள்" மற்றும் "கடைசிநாள்" போன்ற புத்தகங்களையே. அவைகள் அந்த இளம் மனதை விட்டு காலத்தால் அகலாமலேயே இருந்தன.

ஆனால், தானும் ஒரு மனந்திரும்பாத பாவி என்பதை Fourth Royal Irish Dragoo guards மற்றும் தேவசேனை என்ற இரண்டு இராணுவங்களிலும் இணைந்து ஒரே நேரத்தில் போரிட்டுக் கொண்டிருந்த இராணுவ வீரன் ஒருவன் மூலம் எழுப்புதலடையாத வரை கிதியோன் ஓஸ்லே அறியாமலே இருந்தார். அவரது முதல் விழிப்புணவு வந்தது, பெயர் தெரியாத இவர் மூலமாகவே.

அதன் பின் அவர் சந்தித்த ஜாண் ஹர்லியின் பிரசங்கங்களும், அவரது அபிஷேகம் நிறைந்த வேத பாடங்களும் கிதியோனை ஆழமாய் அசைத்தன. 1791, மே மாத மத்தியில், தனது 29ம் வயதில் "இதோ, எனது பாவத்தை சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டி இதுவே" என்று இயேசுவை அவர் கண்டு கொண்டபோது, அவரது பாவ இருளும் பாரமும் நீங்கி, நீண்ட நாளாய் அவர் தேடிக்கொண்டிருந்த தேவ சமாதானம் அவரைத் தேடி வந்தது.

ஒருநாள் தன் வேத வகுப்புக் கூட்டங்களில் ஜாண் ஹர்லி, "உன் பாவங்களைக் கர்த்தர் மன்னித்து விட்டாரென்று நீ விசுவாசிக்கிறாயா? என்று கேட்க, "ஆம், என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது... என்று சொன்னான் ஒஸ்லே.

அதன்பின் நடந்ததை விவரிப்பவன் யார்?

"அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட
கொள்ளிகளே!

இயேசுவின் இரத்தத்தினால் தாகம் தணிக்கப்படுவீர்களோ? என்ற ஜாண் வெஸ்லியின் பாடலை இந்தப் புரவியிலே (குதிரையில்) பிறந்த பிரசங்கி, (அதிகமாய், குதிரையிலேயே பிரயாணம் செய்பவர் என்பதால் இப்பெயர்) அயர்லாந்தின் அழகான கிராமப்புறங்களிலே குதிரையின் மேல் பாடிக்கொண்டு செல்லச்செல்ல, அங்கிருந்த வாயில்லா ஜீவன்களும் தங்கள் வேலிகளிலிருந்து தலைதூக்கிப் பார்க்குமாம்.

நான் சொல்லும் இந்த ஐரிஷ் ஊழியனுக்கு இருந்ததோ ஒரே ஒரு கண்.

ஆனால், “மனந்திரும்பாமல் ஒரு தரம் மரிக்கும் மனிதன் என்றென்றைக்கும் மரித்தவனே!” என்று மிகத் தெளிவாய் நித்தியத்தைப் பார்த்த இந்த ஒற்றைக் கண் மனிதனைப் போன்ற பார்வை எந்த இரட்டைக் கண் மனிதனுக்கும் இருந்ததில்லை.

அவனைப் பொறுத்தவரை, மனிதர்கள் மனிதர்களல்ல. தசையாலும், இரத்தத்தாலும் மூடப்பட்ட ஆத்துமாக்கள். கிறிஸ்து தன்னுயிர் தந்த ஆத்துமாக்கள் - (எந்த ஆத்துமாக்களுக்காக கிறிஸ்து உயிர் கொடுத்தாரோ அந்த ஆத்துமாக்கள்). அவன் அவர்களைக் கிறிஸ்துவின் சிரசில் மணிமகுடமாகவும், அதே நேரம் நரக அக்கினிக்கு எரிபொருளாகவுமே பார்த்தான்.

அந்த அயர்லாந்தின் கரடுமுரடான பாதைகளிலே "இன்று இல்லையேல் என்றும் இல்லையே" என்று மனிதர்களைத் தேடி அவன் தலைதெறிக்க ஓடிய ஓட்டம், அவன் ஏறிச்சென்ற பாயும் குதிரையின் நாசியின் அக்கினிப்பொறிகளிலும், அவைகளின் நுரைதள்ளும் வாயிலும், வியர்த்து ஓடும் அதன் மேனியிலும் தெரிந்தது. ஒன்று, இவன் நரகத்தின் முன்னோட்டக் காட்சி ஒன்றை முன்னமே பார்த்திருக்க வேண்டும் அல்லது "அடுத்த 24 மணிநேரத்துக்குள் உலகமே உருண்டு பாதாளத்துக்குள் போகப்போகிறது" என்று இப்போதுதான் காபிரியேலே வந்து இவனிடம் துண்டுச்சீட்டு கொடுத்துவிட்டு போயிருக்க வேண்டும் என்று ஒருவன் நினைக்குமளவுக்கு இருந்தது அவனது ஓட்டமும் அணையாத ஆத்தும பாரமும். உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று இந்த ஆசீர்வதிக்கப்பட்டவன் சொல்வானானால் அதில் எந்த சந்தேகமும் இல்லை.

அமெரிக்காவின் பால் ரெவரோ, இங்கிலாந்தின் ஜாண் கில்ப்பினோ இவர்கள் இருவருமே அயர்லாந்தின் வெஸ்லி என்று அழைக்கப்பட்ட கிதியோன் ஓஸ்லேயின் அணையாத தாகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது என்பேன். ஒருவேளை இங்கிலாந்தின் ஜார்ஜ் ஒயிட் ஃபீல்டுக்கும், அமெரிக்காவின் கில்பர்ட் டென்னென்ட்டுக்கும் இணையாக இவனை இணைக்கலாம். உறவின்படி, ஆவியில் இவன் இவர்களின் சொந்தம் தான். இவனது ஐக்கியம் கிறிஸ்தவ வட்டங்களையெல்லாம் தாண்டி நிற்கும் அசாதாரண ஐக்கியமது. அது இதயம் கொளுந்துவிட்டு எரிபவர்களின் அணையாத ஐக்கியம்.

லண்டனிலே புனித பவுல் தேவாலயத்தில் இருந்தது ஒரு மிக அழகான மார்பிள் பிரசங்க பீடம். அதே லண்டனிலிருந்த சிட்டி ரோடு ஆலயத்திலே ஜாண் வெஸ்லிக்கு இருந்தது மிக அழகாய் பாலிஷ் செய்யப்பட்ட பிரசங்க பீடம் ஒன்று. இயேசுவோ, கிணற்றின் மேல் உறை வட்டத்தையே பிரசங்க பீடமாக மாற்றியிருந்தார். ஆனால் நமது ஹீரோ ஓஸ்லேயின் பிரசங்க பீடமோ குதிரையின் முதுகிலிருக்கும் சேணமோ அல்லது கால் வைத்துக்கொள்ளப் பயன்படும் பாதமிதியோதான்.

அந்தக் காலங்களின் அயர்லாந்திய வனப்புற கிராமப் பகுதிகளின், அந்தக் கல்வியறிவில்லாத மக்கள் மத்தியில் ஜெபத்தில் மூழ்கி எழுந்த ஓஸ்லேயின் மிஷினரிப் பயணம் ஒன்றை இங்கே சற்று கவனியுங்கள். அந்த நாட்களில் என்ன நடந்தது பாருங்கள்.

அங்கே கிராமப்புற ஆலயம் ஒன்றின் வெளியே குருவானவர் ஒருவர் மணமக்களின் வருகைக்காக நின்று கொண்டிருக்கிறார். சற்று நேரத்தில் மணமகனையும் மணமகளையும் சுமந்து வந்த சாரட் வண்டி அங்கே வந்து நிற்க, அந்தப் பக்கமாய்ப் போய்க்கொண்டிருந்த நமது பிரசங்க வேந்தர் அவர்களை நோக்கி வருகிறார். அந்தத் திருமண நாளன்றே, அவர்களது திருமணத்துக்கும், உலக மகிழ்வு திளைப்புகளுக்கும் மேலான நித்திய வாழ்வின் தீவிரத்தையும், இரட்சிப்பின் மேன்மையையும் மென்மையாக அவர்களுக்கு உணர்த்த, அவரது வார்த்தைகளால் தொடப்பட்ட மணமக்கள், தங்கள் திருமண வார்த்தைப்பாட்டுக்கு முன்பாகவே, முழந்தாள் படியிடுகின்றனர், பிழம்பாய் நிற்கும் அந்தப் பிரசங்கியின் முன் ஜெபிக்கும்படியாக...

அங்கிருந்து முன்னே செல்கிறது அவரது குதிரை.... அங்கே ஒரு கல்லறைத் தோட்டம். அதின் மதில் சுவரிலிருந்து எட்டிப் பார்க்கிறார். தங்களுக்கு அன்பானவர்கள் தங்களை விட்டு எங்கே போனார்கள் என்ற பயத்தில் விறைத்து ஏங்கி ஏங்கி அழுது நிற்கும் மனிதர்களைப் பார்க்கிறார்.

சரீரம் உறைந்து போகும் அவர்களது அழுகைச் சத்தத்தையும் தாண்டி ஒலிக்கிறது அவர்களுக்காக அவர் செய்த அவரது ஜெபத்தின் ஓங்கிய சத்தம்.

அடுத்து பாருங்கள்! சந்தைவெளியில் கிதியோன் ஓஸ்லே நிற்பதை! அங்கே பட்டப்பகலிலே வெட்ட வெளியிலே பெருங்கூட்ட நடுவிலே மனிதன் ஒருவன் தூக்கிலிடப்படக் காத்திருக்கிறான். நேரே அவனை நோக்கி தூக்கு மேடைக்கு ஓடுகிறார், நமது பிரசங்கி. கை கால் நடுநடுங்க நின்று கொண்டிருக்கும் குற்றவாளிக்குக் கிறிஸ்துவின் அன்பையும் மன்னிப்பையும் நித்திய நம்பிக்கையையும் சுருக்கமாய் சொல்லி, அங்கேயே அவனைக் கிறிஸ்துவுக்கு நேராய் வழி நடத்திவிட்டு, அந்தத் தூக்கு மேடையையே பிரசங்க மேடையாக்கி, அங்கே வேடிக்கை பார்க்க வந்த ஆயிரங்களை நோக்கி, தேவனற்ற நித்திய ஆக்கினையின் அழிவை இடியாய் முழங்குகிறார்.

அவர் பேசப்பேச, தூக்கிலிடப்பட்ட மனிதனின் சரீரம், தூக்குக் கயிறுகளில் துடிதுடித்து ஊசலாடி இறங்குகிறது. கண்ணெதிரே நின்ற சாவின் முன், கவலையற்ற பாவிகளுக்கு நித்திய மரணத்தையும், நரக பாதாளத்தையும் பிரசங்கிக்கிறார் நமது பிரசங்கி. தேவனன்றி நம்பிக்கையற்ற நிலையில் மரிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும் நித்தியத்தில் கதறும் கதறலையும் அலறலையும் அவர் அவர்களுக்கு முன் படமாய் விவரிக்க, காட்டுக் களியாட்டமாய் வந்த கூட்டம் அழுகையும் கண்ணீருமாய் புலம்பி மார்பில் அடித்துக் கொண்டு திரும்புகிறது.

அன்று ஒஸ்லே பேசியதை நேரில் கண்ட ஒருவர் பிறகு சொல்கிறார். "ஓ! அன்று அவர் பிரசங்கித்ததை நான் எப்படி விவரிப்பேன்? அங்கே அந்தக் கூட்டத்துக்கு முன், சாவு கூத்தாடிக் கொண்டிருக்க, உடைந்த அந்தப் பிரசங்கயின் அன்பின் பிரவாகமும், உள்ளத்தைத் தொடும் அவரது குரலின் மென்மையும், ஏங்கிய பார்வையும், ஊற்றாய் பெருக்கெடுத்த கண்ணீரும், இரட்சகரண்டை அவர் விடுத்த அழைப்பின் கெஞ்சல்களும் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவை !

இந்த கிதியோன் ஒஸ்லே, பிரசங்கிப்பதற்காகவே முழு இங்கிலாந்தையும் தன் குதிரை மீது அமர்ந்தே ஒரு தடவைக்கு மேல் பல தடவைகள் சுற்றி வந்திருக்கிறார். அயர்லாந்தைப் போலவே இங்கிலாந்திலும் தேவ வல்லமை, மனந்திரும்புதலில் மட்டுமல்ல, கிரியைகளிலும் பலமாய் வெளிப்பட்டது. அவர் பிரசங்கிப்பதைக் கேட்ட கூட்டம் மகுடிக்கு அடங்கிய பாம்பாய் மயங்கி நின்றது. அவரது அன்பின் அழைப்புக்கோ, உரத்த சத்தத்துக்கோ, அதிர்ந்த குரலுக்கோ அசைவின்றி செத்தது போல் சில நேரம் கல்லாக உட்காந்திருக்கும் அந்தக் கூட்டம், சிறிது நேரத்திலேயே "இரட்சிப்பின் சமாதானத்துக்கு" விழித்தெழுந்து நின்றது!

பற்றியெரிந்து பிரசங்கிக்கும் அந்த ஆத்துமா, சந்தைவெளி, மந்தைவெளியிலிருந்து மட்டுமல்ல, ஆலய பீடங்களிலிருந்தும் அடிக்கடி அடித்துத் துரத்தப்பட்டது. அவர் காலத்துக் குருக்களும் மதவாதிகளும் அவர் போகுமிடமெல்லாம் தடைக்கற்களாய் நின்று முட்டுக்கட்டை போட, அவரோ அவைகளையெல்லாம் அனாயாசமாகத் தாவித் தாண்டிப் போய்க்கொண்டே இருந்தார்.

நாட்களும் காலங்களும் செல்லச் செல்ல, அவரது ஆவி உற்சாகமாயிருந்தாலும், அவரது மாமிசமோ பலவீனமாகிப் போய்க்கொண்டேயிருந்தது. இருந்தும், குதிரைச் சவாரியையும் தெருப்பிரசங்கத்தையும் நம் ஆள் விடுவதாய் இல்லை. காட்டுப் பிரயாணங்கள், கானக ஆகாரங்கள், கணக்கில்லாக் கண்விழிப்புக்கள், கடின மனிதர்கள்-இவைகள் யாவும், தங்கள் காலத்தின் தாக்கத்தை அவரது சரீரத்தில் காட்டத் துவங்கின. ஆயினும் தன் 75ஆம் வயதிலும் கூட, தெருக்களிலேயும் சந்தை வெளிகளிலேயும் நின்று, "வருங்கோபத்துக்குத் தப்பி ஓடுங்கள்" என்று ஆங்கிலத்திலும், சிலவேளை தனக்கு லாவகமான தன் தாய்மொழி ஐரிஷிலும் கூவிக்கூவிக் கூட்டத்தை அழைத்துக்கொண்டிருப்பார் ஒஸ்லே.

அவரது 76ம் வயதில், (ஊழியரே, இதை நன்றாய்க் குறித்துக்கொள்ளும்!) “கடந்த 16 நாட்களிலும் 36 தடவை பிரசங்கித்தேன்” என்று ஒருநாள் சொல்கிறார்.

“எனது 77ம் வயதை நெருங்கும் இந்த ஆகஸ்ட் 27 ஞாயிற்றுக்கிழமை முதல் செப்டம்பர் 21 வியாழன் காலை வரைக்குள் 54 முறை பிரசங்கிக்க தேவன் எனக்குக் கிருபை தந்தார்” என்று பின்பு ஒருமுறை எழுதுகிறார்.

தனது 80வது பிறந்த நாளுக்கு சில நாட்கள் முன்பு, பூரண ஞானத்தோடும், பூரண கிருபையோடும், தன் நாட்கள் பூரணமாகி மரித்தார் கிதியோன் ஒஸ்லே. பக்தியான மனிதர்கள் அவரை சுமந்து சென்று மவுண்ட் ஜெரோமிலுள்ள கல்லறை பூமி ஒன்றில் அடக்கம் செய்தனர். அங்கே அவரது மண்ணான சரீரம் தன் தாய் மண்ணுக்குத் திரும்ப, அந்த அயர்லாந்தின் அருமை மைந்தரை அந்த மண்ணின் பசும்புல், போர்வையாய்ப் போர்த்தித் தனக்குள் பொதிந்து கொண்டது.

CHAPTER 23

ஆரம்பகால மெத்தடிஸ்ட் பிரசங்கிகள்

ஆரம்பகால மெத்தடிஸ்ட் பிரசங்கிகள்

மெத்தடிஸ்ட் திருச்சபை அமெரிக்காவில் முளைத்தெழும்பிய ஆரம்பகாலம் அது..

அந்நாட்களில் ஒரு மனிதன் நீண்ட ஒரு பயணத்தைத் தன் குதிரை மீதோ அல்லது கால்நடையாகவோ மேற்கொள்ள விரும்பினால் அதை அவன் தன் உயிரைப் பணயம் வைத்தே செய்ய வேண்டிய தாயிருந்தது..

இயற்கைக்கு சவால்விட்டே அவன் தன் பயணத்தைத்
தொடங்க வேண்டியதாய் இருந்தது..

பேரிரைச்சலோடு ஓடும் ஆறுகள்..
அவயங்களை விறைத்து மரத்துப்போகச் செய்யும் கடுங்குளிர்..

பயங்கர வனவிலங்குகள்,
மனிதனைத் தின்னும் நரமாமிச செவ்விந்தியர்கள்..

இன்னும் எத்தனையோ இடர்பாடுகளை அவன் தன் வழியில் சந்திக்க வேண்டியிருந்தது..

மனித சஞ்சாரமுள்ள ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்ல அந்த நாட்களில் ஒரு நாளாவது தேவைப்பட்டது..

ஆனால் ஆச்சரியமான காரியம் ஒன்று என்னவென்றால்..
எங்கெல்லாம் மனிதர்கள் வாழ்ந்தார்களோ..
அங்கெல்லாம் மெத்தடிஸ்ட் ஊழியர்களும் இருந்தனர்..

அக்காலங்களில் அமெரிக்க விவசாயிகளின் வாயில்
அடிக்கடி ஒரு பழமொழியைக் கேட்கலாம்..
அது உண்மையில் மிகப்பொருத்தமானதும் கூட..

கடுங்குளிர் காரணமாக நீரோடைகளின் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து குளிரின் கொடுமை தாளாமல் மிருக ஜீவன்கள் ஒளிப்பிடம் தேடி ஓடி மறைகையில்..

மனிதர்கள் வெளியே சென்று வேலை செய்யக்கூடாதவர்களாய் அனல் அடுப்பின் அருகில் அமர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருக்கையில் அந்தப் பழமொழியைக் கூறுவார்களாம்..

“மனிதனாலும் மிருகங்களாலும் சகிக்க முடியாத கடுங்குளிர்....” என்று சொல்லிக்கொண்டே..

“அண்டங்காக்கைகளும் மெத்தடிஸ்ட் பிரசங்கிகளும் மட்டுமே காலம் தள்ளக்கூடிய சீதோஷ்ணநிலை” என்பார்களாம்..

உண்மைதான்..

அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பின் கிறிஸ்துவுக்காகத் தங்களைத் தியாகம் செய்து தேவ ராஜ்யத்திற்கென்று அயராது உழைத்தவர்கள் இந்த மெத்தடிஸ்ட் ஊழியர்கள்தான்..

மெத்தடிஸ்ட் சபையின் ஒரு ஊழியராக மாறுவது என்பது அந்த நாட்களில் அத்தனை சுலபம் அல்ல..

அந்தப் பிரசங்கிகள் அநேக ஆவிக்குரிய தேர்வுகளில் (Practical Test) தேர்ச்சி அடைய வேண்டியது மிக மிக அவசியமாய் இருந்தது.. ஒரு பிரசங்கி தனது பொறுப்பான ஊழியத்துக்குத் தன்னை எவ்வாறு பயிற்சிப்பான்?

ஆம்.. தேவனோடு நெருங்கி சஞ்சரித்து, அவரது ஊழியத்தை மிகவும் கண்ணியமாகத் தன் இருதயத்தில் எண்ணி, தேவனின் பரிசுத்த கட்டளைகளை உணர்ந்து அவற்றை நேசிப்பதின் மூலமாகத்தான்..

பிரசங்கியாகிய நீ...

- **உன் கரத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தைப் பற்றி பூரண தெளிவுடன் இருக்கிறாயா ?**
- **ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியையும் சுத்த மனசாட்சியுடன் நிறைவேற்றுகிறாயா ?**
- **உன்னை மேற்கொள்ள முயற்சிக்கும் உலகத்தை நீ வெகு ஜாக்கிரதையாகக் கண்காணித்து வருகிறாயா ?**
- **உனது சுயம் மற்றும் உன்னைக் கறைப்படுத்தும் பாவம் இவற்றைக் குறித்து நீ விழிப்புடன் இருக்கிறாயா ?**

- உன்னை நீ வெறுக்கின்றாயா?

- பயனற்ற ஆசைகளை உன்னில் உருவாக்கும் உணர்ச்சிகளையும் வீண் எண்ணங்களையும் நீ அடக்கிக் கீழ்ப்படுத்துகிறாயா?

- எல்லாக் காரியங்களிலும் நீ நிதானமானவன் தானா?

- ஒவ்வொரு சாப்பாட்டு நேரத்திலும் தேவையான அளவுக்கு மிஞ்சி நீ அதிகமாய் சாப்பிடுகிறாயா?

- சாப்பிட்ட பின் மயக்கமும் பெருந்தீனி உண்டதால் ஆயாசமும் ஏற்படுகிறதா?

- உன் சிலுவையை நீ தினமும் சுமக்கிறாயா?

- எத்தனை கொடிய பாடுகளை அச்சிலுவை தன்னிலே கொண்டிருந்த போதிலும் தேவனிடமிருந்து வெகுமானமாகப் பெற்றுக்கொண்ட அந்தச் சிலுவையின் மூலம் மிகுந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள அதனை மனமகிழ்ச்சியுடன் சுமந்து வருகிறாயா?

- தேவனை எப்பொழுதும் உனக்கு முன் வைத்திருக்கிறாயா?

- தேவனின் கண்கள் தொடர்ந்து உன்னை நோக்கிக் கொண்டிருக்கிறது என்று மனத்தெளிவு உனக்கு உண்டா?

வீண் ஆடம்பரம், விளையாட்டுத்தனம், அலட்சியம், சோர்வு, உற்சாகமின்மை ஆகியவைகளால் சுவிசேஷகர்களாகிய அநேகர் இந்நாட்களில் அடிமைப்பட்டு இருக்கின்றனர்..

ஆனால் ஒரு மெத்தடிஸ்ட் பிரசங்கியாகிய நீயோ.. கடின வாழ்வை உடையவனும்.. சுயத்தை வெறுத்தவனும்.. தன்னையே தியாகம் செய்பவனும்..

தேவனை உண்மையாய் நேசிப்பவனும்.. சுவிசேஷத்துக்காகத் தன் ஜீவனையும் மகிழ்ச்சியுடன் அர்ப்பணிக்க ஆயத்தமுடையவனாய் இருப்பவனாகவும் இருக்க வேண்டும்!!

மெத்தடிஸ்ட் ஊழியர்களுக்கென்று ஜான் வெஸ்லி நியமித்த பன்னிரண்டு ஒழுங்குகள்

ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவனாயிரு.. ஒருபோதும் சும்மாயிராதே.. உன் கரங்கள் எப்போதும் ஏதாவது ஒரு பயனுள்ள வேலையில் ஈடுபட்டிருக்கட்டும்..

காலத்தை வீணாக்காதே.... தேவையான இடத்தில் அவசியமான அளவு நேரத்தை விட எவ்விதத்திலும் கூடுதலான நேரத்தைச் செலவிடாதே..

மிகவும் விழிப்புள்ளவனாயிரு....
"கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்பதே உன் வாழ்வின் சட்ட வாக்கியமாய் இருக்கட்டும்.. எல்லா வெதுவெதுப்பையும், கேலி பேசுதலையும், முட்டாள்தனமான பேச்சையும் உன்னை விட்டு அகற்று..

பெண்களுடன் உரையாடுகையில் உன் உரையாடல் மிகவும் சுருக்கமானதாகவும் குறுகிய நேரமுடையதாகவும் இருக்கட்டும்.. முக்கியமாக இளம் பெண்களுடன் நீ சம்பாஷிக்கையில் மிகவும் ஞானத்தோடு நடந்து கொள்..

கிறிஸ்துவுக்குள்ளான உன் சகோதரர்களிடம் ஆலோசனை கேட்காமல் உன் திருமண காரியத்தில் எந்த முடிவும் எடுத்துவிடாதே..

உன் சொந்தக் கண்கள் காணதிருக்க, யாரைக் குறித்து பேசப்படும் தீமையானவற்றை ஒருபோதும் நம்பாதே.. எல்லாவற்றையும் அடிப்படையிலிருந்து சோதித்துப் பார்..

எந்த மனிதனைக் குறித்தும் தீமையானதைப் பேசாதிரு.. உன் வார்த்தைகள் கேன்சரைப் போல அரித்துப்போடும் என்பதை நினைவில் வைத்துக்கொள்.. சம்பந்தப்பட்ட ஆளைச் சந்திக்கும் வரை உன் எண்ணங்களை உனக்குள்ளாக அடக்கி வைத்துக்கொள்..

யாரிடமாவது தவறைக் கண்டால் உடனடியாக நேருக்கு நேர் சுட்டிக்காட்டு.. உன் மனதிலிருந்து பகை என்னும் நெருப்பை மிகச் சீக்கிரம் எடுத்துப்போடு..

பாவத்தைத் தவிர வேறு எதற்கும் வெட்கப்படாதே..

அழியும் ஆத்துமாக்களைக் காப்பதே உன் தலையாயக் கடமை.. எனவே இதற்காக நீ செலவு செய்வதுடன் செலவு செய்யப்படு..

எல்லாவற்றையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்.. எல்லாவற்றிலும் ஒழுங்கைக் கடைப்பிடி.. அவைகளை தேவ கோபாக்கினைக்கும் சபையின் கட்டுப்பாட்டுக்கும் பயந்து அல்ல.. மனசாட்சியினிமித்தம் பற்றிக்கொள்..

எல்லாக் காரியத்தையும் தேவ சித்தத்தின்படி செய்..

கவனி!
பல தடவைகள் பிரசங்கிப்பது மட்டும் உன் கடமையல்ல.... எத்தனை ஆத்துமாக்களை மீட்க முடியுமோ அத்தனை பேரையும் மீட்டு அவர்களை மனந்திரும்புதலுக்கு நேராக வழி நடத்தி, உன் முழு பெலத்தோடும் அவர்களைப் பரிசுத்தத்தில் ஊன்றக்கட்டு.. ஏனெனில் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்க முடியாதே!!

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்...
ஆவியிலே அனலாயிருங்கள்...
கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்...
நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்...
உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்...
ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்...
(ரோ.12:11,12)

PRESTIGIOUS QUOTES OF

Leonard Ravenhill



CHAPTER 24

ரேவன்ஹில் தீக்கணைகள்

இயேசுவை எல்லோரும் தனியே
விட்டு விட்டு நிற்கதியாக்கினர்..
ஒரு வேளை உன்னோடும்
ஒருவரும் நில்லாமல் போகலாம்..
இது ஒரு தனிமையின் வாழ்க்கை..
ஆனால்
மகிமையான வாழ்க்கை !

நீ இது வரை
எட்டியிராத ஆவிக்குரிய
எல்லையை எப்போது நீ கடந்து...
நீ இது வரை தொட்டிராத உன்னத
சிகரங்களை எப்போது நீ தொடப்போகிறாய் ?

ஆதித் திருச்சபை
அறிந்திருந்ததெல்லாம்..
பசி பட்டினி... கட்டுகள் காவல்கள்..
உபத்திரவங்கள் உபாதைகள்..
இன்றைய சபை அறிந்ததெல்லாம்..
வளமை.. செழுமை..
கொழுமை.. இளமை..

ஒரு மாபெரும் மாற்றத்துக்கு
நேரம் வந்து விட்டது..
தனிப்பட்ட வாழ்வில்..
சபைகளில்..தேசத்தில்..
ரிக்டர் அளவுகளால் அளவிட
முடியாத ஒரு ஆவிக்குரிய
பூகம்பம் வெடித்தே ஆக வேண்டும் !
அதின் காரண கர்த்தா
நீயாக ஏன் இருக்கக்கூடாது ?
ஆனால் அதின் விலைக்கிரயம்
நீ நினைத்து பார்க்க முடியாத ஒன்று !

இயேசு
கிறிஸ்துவில்
நீ முன் வைக்கும்
ஒவ்வொரு
அடியும் பிசாசை
உக்கிர
மூட்டுகிறது...

ஒரு மனிதனுடைய
ஜெப வாழ்க்கை
எப்படியோ அப்படியே
தான் அவனும்..
அதற்கு மேல் அல்ல..

தேவனோடு
சஞ்சரிக்கும் மனிதன்,
மனிதருடைய
முகத்துக்கு
அஞ்ச வேண்டிய
அவசியமில்லை...

இன்று ஊழியர்கள்
பிரசங்கிக்கும் இதே
செய்தியை அன்று
இயேசு கிறிஸ்து
பிரசங்கித்திருப்பாரானால்,
அவர் சிலுவையில்
அறையப்பட்டிருக்கவே
மாட்டார்...

உலகம் வேதத்தை
விசுவாசிப்பதில்லை..
சபை அதற்குக்
கீழ்ப்படிவதில்லை !

கிறிஸ்து எனக்குள்
வாழ்கிறார் என்றால்,
அவரை நான்
என்னோடு எங்கெங்கே
கொண்டு செல்கிறேன்
என்பதில் மிகுந்த
ஜாக்கிரதையாய்
இருப்பேன்..

மகிழ்ச்சிக்கு பிசாசு கொடுத்திருக்கும்
மறுபெயர் பொழுதுபோக்கு..
கர்த்தருக்குள் நீ எவ்வளவு
களிகூறுவாயோ.
அவ்வளவாய் பொழுதுபோக்குக்கு
உனக்கு அவசியமே இராது!

நரகத்துக்குள்
உட்செல்ல
கோடி வழிகள்
இருக்குமானால்...
அதிருந்து வெளியேற
ஒன்று கூட இல்லை !

ஜெபத்தில்
தோல்வி
என்றால்
எங்கும் எதிலும்
தோல்வி தான் !

தேவனைத் தவிர
சுத்த இருதயம்
தருபவர் வேறுயாரும்
உனக்கு இருக்கப்
போவதில்லை !

உங்களுக்குத்
தெரியுமா?
மிக ஊக்கமான
ஜெபக் கூட்டங்கள்
நரகத்தில் தான்
நடக்கின்றன !

வல்லிய வல்லூறுகள்
தனித்தே பறக்கும்...
ராஜ சிங்கங்கள்
தனித்தே வேட்டையாடும்...
ஆவிக்குரிய மாமனிதர்கள்
தனித்தே நடப்பார்கள்...
தேவனோடு !

ஒரு கிறிஸ்தவனுக்கு
இந்த உலகத்தில்
உபத்திரவம் இல்லை
என்றால் எங்கோ ஏதோ
அவனில் சரியில்லை
என்று அர்த்தம் !

ஆண்டவரே,
என் பெலவீனம் எங்கே
அதிகமோ அங்கே என்னை
பெலப்படுத்தும்.. என் பெலன்
எங்கே அதிகமோ அங்கே
என்னை
பெலவீனப்படுத்திவிடும் !

ஜெபத்தின்
ரகசியம்,
ரகசியத்தில்
ஜெபிப்பதே !

முழங்காலை
முடக்காத
போதகர்
கைமுடக்கிக்
கொண்டு
உறங்குகிறார்..

பிசாசின்
" MOST - WANTED "
பட்டியலில்"
நானும் ஒருவனாய்
காணப்படுவதே
என் வாழ்வின்
முக்கிய நோக்கம் !

தேவனுக்கு
முன்பாக
முழங்காலில்
நிற்கும் மனிதன்,
மனிதருக்கு முன்பாக
நிமிர்ந்து நிற்பான் !

தேவனுக்காக
மனிதர் முன்பு நிற்பது என்பது ஒன்று..
ஆனால் மனிதருக்காக
தேவனுக்கு முன்பாக விழுந்து கிடப்பது
என்பது முற்றிலும்
வித்தியாசமான ஒன்று !

இரு வகையான
மக்களே உண்டு ! ஒன்று
பாவத்துக்கு
மரித்தவர்கள்...
இன்னொன்று
பாவத்தில்
மரித்தவர்கள் !

எந்த ஒரு மனிதனாவது..
ஒரு வாரம் மட்டும், தனி அறையில்
தன்னையே அடைத்துக் கொண்டு..
அப்பமும் தண்ணீரும் மட்டும் உட்கொண்டு..
வேதத்தைத் தவிர வேறு எந்தப்
புத்தகமும் இன்றி.. பரிசுத்த ஆவியானவரைத்
தவிர வேறு எந்த நபரின்
சகவாசமும் இன்றி..
தேவனுக்கு முன்பாக
விழுந்து கிடக்கட்டும்!
நான் சவாலிட்டுச்
சொல்லுவேன்.. ஒன்று..
அவன் உடைந்து வருவான்..
அல்லது உடைத்தெறிய வெளிவருவான்!

நீ மரித்த ஐந்தாவது நிமிடத்தில்,
நீ எப்படிப்பட்ட வாழ்க்கை
வாழ்ந்திருக்க வேண்டும்
என்று தெரிந்து கொள்வாய் !

எழுப்புதலுக்கு என்ன
விலையானால் என்ன ?
தலையையே
தந்தாலும் தகும் !
REVIVAL

தேவனின் பிரியமும்
மகிழ்ச்சியும் உன் மேல்
இருக்குமானால் மனிதனின்
எரிச்சலால் உனக்கு
ஆகப்போவது என்ன ?

அங்கலாய்த்து
அழும் ஆத்துமாவின்
கண்ணீரும் வியர்வையும்
இரத்தமுமே
ஜெபத்தின் உச்சநிலை !

தேவனையே
இணங்கி இறங்கி
வரச்செய்யும்
வல்லமை, ஜெபம்
ஒன்றுக்கு
மாத்திரமே உண்டு !

யுத்தத்திற்கான
ஆயுதமல்ல
ஜெபம் !
ஜெபமே
யுத்தம் தான் !

பாவம் செய்கிற மனிதன்
ஜெபிக்க மாட்டான்..
ஜெபிக்கிற மனிதன்
பாவம் செய்ய
மாட்டான்...

என் மேல்
இருக்கும் அபிஷேக
சால்வையை மட்டும்
வாஞ்சிப்போர் ஏராளம்..
ஆனால் நான் உடுத்திய இரட்டு
உடையையோ, தலையில்
அள்ளிப் பூசியிருக்கும்
சாம்பலையோ
யாரும் விரும்புவதே
இல்லை

தேவனுக்காக
நாம் அதிகமாய்
உபயோகப்பட
வேண்டுமானால்,
தேவனோடு
நாம் அதிகமாய்
இருந்தாக
வேண்டும் !

போராடி ஜெபிக்கும் ஜெபத்துக்கு
ஈடான ஜெபம் வேறொன்றுமில்லை –
அது வல்லமையை வரவழைக்கும்!
அது அக்கினியை இறக்கும்!
அது மழையைப் பொழியும்!
அது ஜீவனைத் தரும்!
அது தேவனையே நம் மத்தியில்
வந்து இறங்கச் செய்யும்!

கண் போன
போக்கிலே
ஜெபிக்காதவர்களின்
கால் போகும்!

பொகேமியாவுக்குத் தேவை இன்னொரு ஜான் ஹஸ் !
ஜெர்மனிக்குத் தேவை இன்னொரு மார்ட்டின் லூத்தர் !
இங்கிலாந்துக்குத் தேவை இன்னொரு ஜான் வெஸ்லி!
அமெரிக்காவுக்கு தேவை இன்னொரு யோனத்தான் எட்வர்ட்ஸ் !

எனக்கோ தேவை...
என் ஆவிக்குள் பாய்ச்சப்படும்
புது மின்சாரம் !

எனக்கோ தேவை...
என் கண்களில் - அழியும்
ஆத்துமாக்களுக்கான
புதிய தரிசனம் !

எலியா... தேவனோடு சஞ்சரித்தான்..
தேவனைப் போலவே
சிந்தித்தான்..
தேவனைப் போலவே
துக்கித்தான்..
தேவனைப் போலவே
குரலெழுப்பினான்
அப்போது எப்படியோ..
இப்போதும் அப்படியே..
தேவன் யாரோ ஒரு மனிதனின் செவியையும்
இருதயத்தையும் சிந்தையையும் தமக்காகப் பிடிப்பார்..

ஏசாயா 64ன் படி,
“தேவரீர் வானங்களைக்
கிழித்திறங்கி...” என்று தொண்டை
கிழிய நீ ஜெபிக்கிறாய் ! ஆனால்
தேவனோ.. உங்கள் வஸ்திரங்களை
அல்ல.. உங்கள் இருதயங்களை
கிழித்து என்னிடம் திரும்புங்கள்
என்று பதிலடி தருகிறார்..

தம்மிடமிருந்த
மேலானதைக்
கொடுத்ததாலேயே
நம்மிடமுள்ள
மேலானதைக் கேட்கிறார்
தேவன் !

ஆசிர்வதிக்கப்பட
வேண்டுமென்று ஜெபிக்கிற
கிறிஸ்தவர்கள் பலர்...
ஆனால் தாங்கள்
நொறுக்கப்பட
வேண்டுமென்று
ஜெபிக்கிறவர்கள்
வெகு சிலரே !

எழுப்புதல்
தாமதிக்கிறது..
ஏனெனில் ஜெபம்
தேய்கிறது..

தேவனின் வார்த்தையை
நீ அறிந்திருக்கிறாய்..
ஆனால்..
அந்த வார்த்தையின்
தேவனை நீ அறிவாயோ?

நீ எழும்பிப்
பிரகாசிக்காத
வரை எழுந்து
பிரசங்கிக்காதே!

வெள்ளம் போல
சத்துரு
வந்துள்ளான்..
அவனுக்கு
எதிராகக்
கொடியேற்ற
தேவனுடைய
சர்வாயுதவர்க்கத்தைத்
தரித்துக் கொண்ட,
ஆவியினால்
நிறைந்த மனிதன்
ஒருவன் இங்கு
இல்லையோ ?

"எழுப்புதல்"
என்ற வார்த்தையின்
கற்பையும் கருத்தையுமே
நாம் அழித்து, அதைச்
சிதைத்து, சீரழித்து
சின்னாபின்னமாக்கி
விட்டோம் !

தேவனுக்காக
அக்கினியாகி விடு..
நீ கொழுந்துவிட்டு
எரிவதைக் காண
கூட்டம்
அலைமோதும் !

பெந்தெகொஸ்தே
நாளையே மிஞ்சிவிடும்
இன்னொரு பெந்தெகொஸ்தே
ஒன்றை நமது
பெந்தெகொஸ்தே
நாளாய் நமது கண்களால்
நாம் காணப்போகிறோம் !

பலிபீடம் நிற்பது
இரண்டு
காரணங்களுக்காகவே !
ஒன்று சாகடிக்கப்படுதல்..
இன்னொன்று
சுட்டெரிக்கப்படுதல்..

இந்தத் தலைமுறையில்
பாவத்தில் வாழ்பவர்களுக்கு
இந்தத் தலைமுறையின்
ஊழியர்களே பொறுப்பு !

சபை வரலாற்றையே படித்துப் படித்து
நான் இளைத்துப் போனேன்..
தேவ கிருபையால் நாமே வரலாறு ஒன்றைப்
படைத்தால்தான் என்ன ?

CHAPTER 25

ரேவன்ஹில் கவிதைச் சரங்கள்

ஜீவ விசுவாசம்
சகலமும் ஜெயிக்கும்..
மலைதனைப் பெயர்க்கும்..
அன்பினைப் பெருக்கும்..
இயேசுவை அழைக்கும்
எவரையும் மீட்கும்..
தானே நம்பும்..
சாட்சியும் பகரும்..
கேட்கும் எவரும்
பெற்றிடும் சுவாசம் - அது
ஜீவ விசுவாசம் -
அதைத் தூண்டிடுமே !
அனல் மூட்டிடுமே !
~ Charles Wesley

தீவிரமாய் வாருமே!

மல்கியா 3:1

கர்த்தாவே வாருமே !
தீவிரமாய் வாருமே !
தீவிரித்து வாருமே !

உமக்காகவே காத்திருக்கும்
உம் ஆலயம் வாருமே !
உம் வார்த்தையின்படியே வாருமே !
கதறுகிறோம் வாருமே !

மகிமையின் ஆவியே !
பரிசுத்த ஆவியே !
நாங்கள் அடைந்தே ஆக வேண்டிய
எழுப்புதலை
அனுப்பியே தாருமே !

நீர் எங்களுக்கு எவ்வளவாய்
வேண்டும் என்று
சொல்லத் தெரியவில்லையே !

நீர் எங்களுக்கு
எவ்வளவாய்த் தேவை என்று
விவரிக்க இயலவில்லையே !

எங்கள் பாவமும் உலக நேசமும்
பறந்து போகுமே !
கழுவி நிரப்புமே ! கதறுகிறோம் வாருமே !

ஓ பரிசுத்த ஆவியானவரே !
இப்பொழுதே வாருமே !
உம் முன் தாழ விழுகிறோம்...
வேண்டியதெல்லாம்
எங்களுக்கு நீரே ! நீரே ! நீர் ஒருவரே !

எழுப்புதல் அக்கினி
பற்றிப் பரவட்டுமே !
பிடித்து எரியட்டுமே !

ஆதி நாட்கள் போல
வந்து இறங்குமே !
ஏங்கி நிற்கும்
எங்கள் தாகம் தீருமே !

தீவிரமாய் வாருமே !
பிரசன்னம் தாருமே !
ஆத்தும நேசரே !
தீவிரித்து வாருமே !

- Wesley L.Duewel

(1964 செப்டம்பர் 24 அன்று Wesley L.Duewel அவர்களால், வேல்ஸ் தேச மோரியா சிற்றாலயத்தில் எழுதப்பட்டது இது... இதே மோரியா சிற்றாலயத்தில் தான் 1904 ஆம் ஆண்டு ஈவன் ராபர்ட்ஸ் என்ற வாலிபர் மூலம் எழுப்புதல் வெடித்துச்

இது உங்களுக்கு ஒன்றுமில்லையா ?

அவரது அக்கினி
எலும்புகளில் எரிகிறதே !
இது உங்களுக்கு ஒன்றுமில்லையா ?

இந்த உலகத்தைப் பாவம் கசக்கிப் பிழிகிறதே ?
இது உங்களுக்கு ஒன்றுமில்லையா ?

இன்னும் அறிவிக்கப்படாத கோடிகள் உண்டே ?
இது உங்களுக்கு ஒன்றுமில்லையா ?

இவ்வுலகம் தலைகுப்புற நரகத்துக்குத் தீவிரிக்கிறதே ?
இது உங்களுக்கு ஒன்றுமில்லையா ?

இவைகளுக்கு மத்தியிலும் சபை
குறட்டையில் இருக்கிறதே ?
இது உங்களுக்கு ஒன்றுமில்லையா ?

இதை எப்படி இவ்வளவு சர்வசாதாரணமாக
உங்களால் எடுத்துக்கொள்ள முடிகிறது ?
யாராவது எனக்கு இதைச் சொல்ல
மாட்டீர்களோ ?

நானோ... மதவாதிகளின் மத மமதையையும்,
விசுவாசிகளின் மதிமயக்கத்தையும் கண்டு
நொந்து நோகிறேன்...

- Leonard Ravenhill

பொன்னுமில்லை
வெள்ளியுமில்லை
என்னிடம்...
என் ஆசை அபிலாஷைகளில் நான்
மூழ்கித் திளைக்க...

ஆனாலும் தேவனே...
உமது பரிசுத்த அக்கினியைப் பிழம்பாய்ப்
பிரதிபலிக்கும் வாழ்வு ஒன்றுக்காகவே
ஏங்குகிறேன் இறைஞ்சுகிறேன்..

தேவனது பரிசுத்த மனிதர்
சிலிர்த்தெழுந்து ஆர்த்தெழுந்து
தேவையுள்ள தேசமதை அசைத்துவிடும்
அந்நாளை நான் காணும் வரை
என் மன பாரங்கள் ஒழிவதுமில்லை...
என் கையில் என் எழுதுகோல்
உறங்குவதுமில்லை...

- LEONARD RAVENHILL

இரத்தசாட்சிக் கிரீடம்

அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு...
நெருக்கப்பட்டு
கழுமரம் ஏறினர்
அந்நாள் பரிசுத்தர்...

நெருப்பின் நாவுகள்
பாதங்களைப் பதம்பார்த்தன...
ஆயினும் விடுதலை பெறச்
சம்மதியாத இவர்...
தம் சாட்சியோடு
தம்மையும் இரத்த சாட்சியாக்கினர்...

சாட்டையடியோ
காய்ச்சிய கம்பியோ...
முறுமுறுப்பின்றி
முதுகைத் தந்தனர் நம் முன்னோர்..
ஜீவன் ஒரு பொருட்டல்ல..
மனைவி மக்களும் ஒரு தடையல்ல..
எதற்கும் சமரசம் செய்ய
நம் சான்றோர் இவர்...

வெந்தீயில் வறுத்தெடுக்கப்பட்ட நேரம்...
தூதர் எழுதினர்...
அவரவர் பெயரை...
கர்த்தரின் புத்தகத்தில்...
ஒரு நாள் சிங்காசனம் முன்
திறந்து வாசிக்கப்பட...

முடிசூடும் நாளில் பெறுவர் இவர்
தம் விலையில்லா இரத்தசாட்சிக் கிரீடம்...
கூடவே நாமும் காண்போம்
அவர்களோடே கூடச் சென்ற
அவர்கள் அன்பின் கிரியைகளை...

நசுக்கப்பட்ட நொறுக்கப்பட்ட
பிளக்கப்பட்ட... இவர்களின்
தலைகளில் சூடுவார் தேவன்...
தம் சொந்தக் கைகளால் பொற்கிரீடம்...

பெருமையோடும் பெருமிதத்தோடும்
சொல்வார்... "நல்லது.."
உண்மையும் உத்தமமுமானவனே !
நல்ல போராட்டத்தைப் போராடினாய் !
ஓட்டத்தை ஜெயமாய் முடித்தாய் !

உலக ஓட்டத்தில்..
மனிதப் பார்வையில்
நீ ஒரு பைத்தியம் தான்...
உலகத்தால் துடைத்துப் போடப்பட்ட
குப்பைதான் ! ஆனால் நீ என் பார்வைக்கு
அருமையானபடியால்
கனம் பெற்றாய் !
நானும் உன்னை சிநேகித்தேன் !

எனக்கு உரியவனே !
என்னுடையவளே !

உலகத் தோற்றமுதல்
உனக்காகவே ஆயத்தம்
பண்ணப்பட்ட என்
உன்னத வீட்டில்
உன் ஆத்தும நேசரோடு
நித்திய நித்தியமாய்
வாழ்ந்து சுகிக்க இதோ
வரவேற்க வந்தேன்...

வா என் மகனே !! வா என் மகளே !!

- LEONARD RAVENHILL

வரலாறு காணா எழுப்புதல்
ஒன்றை அனுப்பமாட்டீரோ ?

அழியும் உலகை நான் காண்கிறேன்...
அது அழுகி அழிய நான் காண்கிறேன்...

சபையை நான் காண்கிறேன்...
கல்வாரி அன்பும் அனலுமற்று அணைந்து கிடக்க
அதை நான் காண்கிறேன்...
அவள் மோகித்து அணைக்கும் லோக மோகத்தையும்
சுகித்து முகரும் ஆலிங்க சல்லாபங்களையும்
கண்கூடக் காண்கிறேன்...

ஆலயத் தழுவணைகளின் அரவணைப்பில்...
கதகதப்பில்... இத சுகத்தில்...
சக மானிடரின் நிலை மறந்து கண் சொருகி...

நரகத்துக்குத் தீவிரிக்கும் தீயோரைத் தீயினின்று இழுத்துவிட...
இரக்கமின்றி... இரட்சிப்பின் அறிவிப்பின்றி...
சோம்பிக் கிடக்கும் இச்சபைக்காகவோ...
மனுமகனே ! நீர் இரத்தம் சிந்தினீர் ?

அக்கினியில் முழுக்காட்டுவேன் என்றல்லவோ நீர் வாக்களித்தீர் ?
ஆனால் நாங்களோ இங்கே சோம்பலின் சகதியில் மூழ்கி முழுகிக்
கிடக்கிறோமே !

புசித்துக் குடித்துக் கொழுத்துப் பழுத்து
படுத்துக்கிடக்கும் எங்களைக் குத்தி எழுப்பினாலோ
எம்பி எம்பி ஸ்தூலித்து உதைக்கிறோமே ?

மன்னியும் தகப்பனே ! மன்னியுமே !

பெந்தெகோஸ்தே வல்லமையின் உன்னத உயரங்களில் எழுந்து
நிற்க... எழும்பி நடக்க... உலுக்கி விடுமே ! எங்களை எழுப்பி விடுமே !

சத்துவமற்ற சபை இந்நாளில் தன் சத்துருவுக்கு சமர் நிற்குமோ ?

கறைதிரையற்ற கன்னிகை அவளைக் கட்டியணைக்க நீர் வருமுன்னே..
கரை காணா அலைமோதும் அகில உலக எழுப்புதல் ஒன்றை எம்
கண்ணாரக்கண்டு களிகூரக் கர்த்தாவே ! கருணை செய்யுமே !

- Leonard Ravenhill

விழித்திரு ! ஜெபித்திடு !!

கண்விழித்து ஜெபிக்கும்
கலை தனைக் கற்றுத்தர
தேவன் என் இரவுகளைப் பகலாக்கினால்...
அதுவே அவர் வழியானால்... வகையானால்...
அதில் வியப்பொன்றும் எனக்கில்லையே !

பரந்த தரிசனம் ஒன்றைப்
பரமன் எனக்குத் தந்தால்...
பறந்த என் நினைவுகளுக்குப்
பரிமாணம் புதிதொன்று தந்தால்...
உடைந்த உள்ளம் ஒன்றைப் பரிசாகத் தந்தால்....
“இவ்விடம் விட்டுப் போ, என் மகனே !”
என்ற வார்த்தை எனக்குள் வந்தால்...

மற்றவர் கண்ணுறங்க...
நானோ கண்விழிக்க...
அவர்கள் அங்கே நகைத்தாட...
நானோ கதறி ஜெபிப்பேனே ! தனிமையில் புலம்பி அழுவேனே !

அநேகர் இங்கே ஆடிப்பாடிக் களித்திட...
நானோ அவர் நடுவினின்று நழுவிச் சென்று முழங்காலிட...
விசுவாசக்கூட்டம் பைத்தியம் என்றென்னைப் பரிகசித்திட...
நானோ நியாயத்தீர்ப்பு நாளிலே வெட்கி நில்லேனே
தலைகவிழ்ந்திட...

- Leonard Ravenhill

உம் பாத்திரத்தில்
நான் பருகட்டுமே !

ஓ ! கல்வாரிக் கிறிஸ்துவே !

வதங்கிட்ட கிளையென்னைக் கிளை நறுக்குமே !
கனியற்ற மரமென்னை உரமிடுமே !
காய்ந்திட்ட துரவென்னைத் தூர் வாருமே !

மங்கிய விழியென்னில் தீருக்கரம் தொடுமே !
திக்கிய நாவென்னில் (அபிஷேகத்) தைலம் வாருமே !
துவங்கிய கிரியை என்னில் முடித்துத் தாருமே !
என் அன்பின் ஆண்டவரே ! என் அருமை நேசரே !

சுமை தாங்க பெலன் தாருமே !
சித்தம் செய்ய சுத்தம் செய்யுமே ! - உம்
கோலும் தடியும் என்னை சீர் செய்யுமே !
இன்னும் இன்னும் பின்னும் உம்மை நேசிப்பேனே !

உம் பாடுகளால் கர்த்தாவே
என்னை நிரப்பிடுமே ! நிறைத்திடுமே !
உம் பாத்திரத்தில் பானம் பண்ணி
உம்மைப் பின்பற்ற அருள் தாருமே !

- Leonard Ravenhill

அக்கினியை அனுப்புமே !

ஓ ! எரிந்து பிரகாசிக்கும் கிறிஸ்துவே !
சுத்திகரிக்கும் ஜுவாலையே !
அக்கினியை அனுப்புமே !

உம் இரத்தத்தால் சம்பாதித்த பரிசாய்
இன்று இறைஞ்சிக் கேட்கிறோம்...
அக்கினியை அனுப்புமே !

ஆவலாய்க் காத்திருக்கும் கூட்டமிதைக்
கண்ணோக்கிப் பாருமே !
வாக்களித்த பரிசுத்த ஆவியை அனுப்பித் தாருமே!
இன்னொரு பெந்தெகோஸ்தே ஒன்றைத் தந்தே தீருமே !
அக்கினியை அனுப்புமே !

அக்கினி வேண்டுமே ! அக்கினியின்றி
வேறேதும் வேண்டாமே !
அக்கினியை அனுப்புமே !

எங்கள் ஜெபத்தின் பதிலாய்...
தேவைக்கு நிறைவாய்...
அக்கினியை அனுப்புமே !

நேர்வழி நடக்க பெலனாய்...
போர்வழி ஜெயிக்க அரணாய்...
தூய்வழி செல்லத் துணையாய்...
அக்கினியை அனுப்புமே !

ஓ ! தகனமாய்த் தந்தோம் பலிபீடம் வைத்தோம்...
எம்மையும் வாழ்வையும் யாவையும் பலியாய்ப் படைத்தோம்...
ஜீவபலியாய் ஏற்க உலக மேன்மை யாவையும்
உம் பாதம் வைத்தோம்...
அக்கினியை அனுப்புமே !

- William Booth



நித்திய இரவு

நித்திய இரவே ! நித்திய இரவே !
ஒளியாம் இறையில்லா கோடி கோடிகளுக்கு
அந்நாள் இரவின் பாதாள இருள் எப்படியிருக்கும் ?
என்னில் வீசும் உலகின் ஒளியைத்
தாங்களும் காண அவர்களுக்கும் உரிமையில்லையா ?

கிறிஸ்துவின் நியாயாசனம் முன்பாக நாங்கள் நிற்கும்போது
கிறிஸ்துவின் இரத்தத்தாலே இரட்சிப்பைக் கேள்விப்படாத
அவர்கள் நிலை கண்டு நாங்கள் தள்ளப்பட்டுப் போவோமே !
அவ்வேதனையை என்னென்று சொல்வது ?

நித்திய நித்தியமாய் அந்தக் கோடிகள், கோரமாய்
நித்திய நெருப்பில் தகித்துக் கதற... அலற...
இரத்தத்தால் கழுவப்பட்டு விடுதலை பெற்ற நான் மட்டும்
சிங்காசனம் முன்பு நியாயம்
தீர்க்கப்படாது நிற்பதெப்படி ?

கர்த்தருடைய புயமே ! எழும்பு ! எழும்பு !
சபைதனைத் திரும்பவும் கழுவிட மாட்டாயோ ?
உம் பூரண சித்தம் செய்ய
சபைதனை உலகத்துக்குள் உந்தித் தள்ளிட மாட்டயோ ?

- Leonard Ravenhill

என் தேவனின் மனம் கவர...

மனம் திறந்து சொல்லுமே !
மனவிருப்பம் விளம்புமே !
திருச்சித்தம் காட்டுமே !
திருவுளம் காண்பனே ! - உம்

தாகமதைத் தீர்ப்பேனே !
மனம் குளிரச் செய்வேனே !
வேறொன்றும் வேண்டேனே !

கோல் கொள்ளும் !
தடி கொள்ளும் !
என் மனம் குடி கொள்ளும் !
உம் மனம் கவர்ந்திட
துள்ளிடும் எனதுள்ளம் !

- Leonard Ravenhill

நியாயத்தீர்ப்பு

நியாயாசனத்தின் மீதும்
நியாயத்தீர்ப்பின் மேலுமே கண் பதித்து
நாளைய நாளை நோக்கி
இன்று வாழும் வாழ்வே..
இன்றைய வாழ்வை
இன்றியமையாது வாழ ஒரே வழி !

நியாயாசனம் கௌரவப் பட்டங்களை அல்ல – அது
நாம் பட்ட பிரயாசங்களுக்குப்
பலனையும் பிரதிபலனையும்
அள்ளித்தரும் தர்மாசனம் !

பூமியனைத்துக்கும் நியாயாதிபதி
நியாயஞ்செய்யாதிருப்பாரோ ?
அவர் பரிதானம் வாங்குபவருமல்ல..
அங்கே யார் மீதும் பரிதாபப்படுபவருமல்ல !

ஐசுவரியவானும் லாசருவும்
இருவருமே – பிச்சாண்டிகள் தான் !
ஒருவன் இங்கே பூமியிலே பிச்சையெடுத்தான் !
அடுத்தவன் அங்கே பாதாளத்திலே பிச்சையெடுத்தான் !

- LEONARD RAVENHILL

இரண்டாம் வருகை

முதலாம் முறை
"தேவ ஆட்டுக்குட்டியாய்" வந்தார்...
மீண்டும் வரும்போதோ,
"யூத ராஜ சிங்கமாய்" வருவார் !

முதலாம் முறை
"இரட்சிக்க" வந்தார்...
மீண்டும் வரும்போதோ,
"இராஜரீகம்" பண்ண வருவார் !

முதலாம் முறை
"மரித்து உயிர்க்க" வந்தார்...
மீண்டும் வரும்போதோ,
"மரித்தோரை உயிர்ப்பிக்க" வருவார் !

முதலாம் முறை
"யூதருக்கு ராஜாவாக" வந்தார்...
மீண்டும் வரும்போதோ,
"ராஜாதி ராஜாவாக" வருவார் !

முதலாம் முறை
"முள் கிரீடம்" சூட்டப்பட்டார்..
மீண்டும் வரும்போதோ,
"பொற்கிரீடம்" சூட்டப்படுவார் !

முதலாம் முறை
"தாழ்மை" தாங்கி வந்தார்...
மீண்டும் வரும்போதோ,
"மாட்சிமை" பொருந்தியவராய் வருவார் !

- Leonard Ravenhill

வெற்றி வீரரின் பாதை !

என் ஆண்டவரே !
உம்மையன்றி வாழ என்னால் முடியுமோ?
உம்மைப் பிரிந்து வாழ முயல இயலுமோ?
என்னால் கடக்க இயலா
பதுங்கு குழிகள் பதிவிடைகள்
பல்லாயிரங்கள் பூமியில் உண்டே !

ஆனாலும் அன்பின் ஆண்டவரே !
உம் வாக்கைப் பிடித்து..
உம் தூய பிரசன்னத்திலே..
வெற்றி வீரரின் வெற்றிப் பாதையிலே..
உயர உயர எழும்பி எழும்பி
மேலேறிச் செல்வேனே!

- Leonard Ravenhill

உமது பண்டகசாலையிலே...

உமது பண்டகசாலையிலே
வளங்கள் கொழித்துக் கிடக்க..
நாங்களோ தரித்திரப்
பிச்சைகளாய்க் கையேந்தி
நிற்பதென்ன?

உமது பொக்கிஷ சாலையிலே
வல்லமையும் வரங்களும்
கொட்டிக் கிடக்க..
எங்கள் அழகு வாசல்களிலும்
ஆட்டு வாசல்களிலுமோ சப்பாணிகளின்
கூட்டம் குவிந்து கிடப்பதென்ன?

உமது பண்டகசாலையிலே
ஞானமும் அறிவும் நிரம்பிக் கிடக்க..
நாங்களோ அறியாமை இருளிலே
தட்டுத்தடவித் திரிவதென்ன?

உமது பொக்கிஷசாலையிலே
எழுப்புதல் அலைகள்
எழும்பியடிக்க..
எங்களைச் சுற்றியோ கோடி ஜனம்
அழிந்து சாவதென்ன?

உமது பண்டகசாலை
விடுதலையால் நிறைந்திருக்க..
உமது ஜனமோ இன்னும்
விடுதலையின்றிக் கட்டுண்டு
கிடப்பதென்ன?

உமது பொக்கிஷசாலை
மகிமையால் ஒளிவீசிக்
கொண்டிருக்க..
எங்கள் சபைகளோ இருள் மண்டிக்
கிடப்பதென்ன?

உமது பண்டகசாலையிலே
அன்பின் பிரவாகம் புரண்டோடிக்
கொண்டிருக்க..
உமது ஜனமோ அன்பின்றிக்
காய்ந்து கிடப்பதென்ன?

உமது பொக்கிஷசாலையிலே
மனதுருக்கம் வழிந்தோடிக்
கொண்டிருக்க..

என் நேச இரட்சகரே ! உம் ஜனமோ
கல்நெஞ்சாய்.. கண் நீரற்ற
பாழ் நிலமாய், பாலை நிலமாய்
இன்னும் வறண்டு கிடக்கக்
காரணமென்ன ?

ஏன் ? ஏனென்று சொல்வீரோ
என் ஆண்டவரே ?

- Leonard Ravenhill

நித்தியம் !

தேவனின் ஏந்திரச் சக்கரங்கள்
மெதுவாய் சுழலும் !
ஆனால் அக்கடிகாரச் சக்கரங்கள்
எப்போதும் சரியாகவே சுழலும் !

கடைசி நாட்கள் தான் இந்நாட்கள்...
ஆனால் எந்நாள் வரை நீளும் இந்நாட்கள் ?

நித்தியத்தின் சக்கரச் சுழற்சியைச் சுற்றியே
தன் பிரசங்கத்தைச் சுற்றி வைக்கும்
பிரசங்கியைக் கேட்க கூட்டமொன்று
எப்போதும் சுற்றி நிற்கும் !

நித்திய நித்தியமாய் இளமையில்
ஊஞ்சலாடத் துடிப்போர்..
"நித்திய வாழ்வை" மட்டும்
உதறித்தள்ளத் துடிப்பதெப்படி ?

- Leonard Ravenhill

கிரிக்கெட் வீரன் கிறிஸ்துவின் வீரன்
C.T. Studd

சார்ல்ஸ் தாமஸ் ஸ்ட்டட் என்ற C.T.ஸ்ட்டட்..
சார்லி என்று சுருக்கமாய்.. செல்லமாய்..
மேட்டுக்குடியின் கிரிக்கெட் கிங்ஸ்டன்..
மேற்கத்தியரின் மனங்கவர் கேப்டன் !
பௌலர்களின் சிம்ம சொப்பன சார்லி..
பௌண்ட்ரியும் சிக்ஸரும் கலந்து எதிரணியே காலி !

ஆண்டவர் அணியில் அழைப்பு வர..
மட்டையும் கட்டையும சட்டையும் துறந்து..
"அல்லேலூயா" என்றவர் விடைதர..
விடைபெற்றது இங்கிலாந்து !
சார்லி கண்ட பரம தரிசனம்.. பரந்த தரிசனம் முன்..
லார்ட்ஸ் கண்ட பரந்த மைதானம் எம்மாத்திரம் !
லாபமான யாவற்றையும் நஷ்டமென்றெண்ணி..
பரந்த சீனாவுக்கு சிட்டாய்ப் பறந்த மிஷினரி C.T...

எழுப்பினார் தன்னோடு..
"எழுப்புதல் எழுவர்" என்ற "கேம்ப்ரிட்ஜ் ஸெவன்.."
ஒருவன் ஆயிரமானால், எழுவர் எத்தினாயிரமோ?
"கார்ன் வால்" முதல் "கிரேட் வால்" வரை
ஸ்மித்தோடும் போல் ஹில்லோடும் குழுவோடும்
சீனாவின் நெஞ்சைக் கிழித்து..
உள் நுழைந்த உள்நாட்டு மிஷனில்
சார்லியின் சாதனைகள் எத்தனை எத்தனை !!

காலம் கடக்க.. வயது 53ஐக் கடக்க..
சீனாவில் சேவை நிறைவேற்றி முடிக்க..
"இனி என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் ?"
என்றவர், தன்னையும் தன் ஆண்டவரையும் கேட்க..
"உன் சேவை ஆப்பிரிக்காவுக்குத் தேவை" என்று
ஆப்பிரிக்கக் காங்கோ அவரை வருந்தி அழைக்க..
"அடியேனை அனுப்பும் !" என்ற சார்லி..
அவ்வயதிலும் கப்பலேறினார்.. கர்த்தருக்குக் கீழ்ப்படிய !

தேவனுக்குப் பைத்தியமான சார்லி..
செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும்
தன்னையும் தனதனைத்தையுமே தானம் தந்த சார்லி..
சொன்னதோ சொல்லெழுத்தல்ல.. பொன்னெழுத்து !
"தேவனாயிருந்தும் தன்னையே தானமீந்த
கல்வாரிக் கிறிஸ்தேசுவின் இரத்த தான ஜீவதானம் முன்
நம் தானமெல்லாம் வெறுந்தானம் வெட்கம் தானல்லோ ?"

விசுவாச துரோகம் மலிந்து சரிந்து
விழுந்து கிடக்கும் நாட்களில்
பற்றியெரியும் ஆயிரமாயிர ஸ்ட்டட்டுகளை - சபைகள்
பாரெங்கும் எழுப்பி அனுப்பாதோ ?
இருண்ட கண்டங்கள் ஜீவ ஒளி காணாதோ ?
சபையாம் பேரிடர் மீட்புப்படை - உயிரோடு
குழியிறங்கும் கோடாகோடிகளைக் குழியிறங்கி மீட்காதோ?

~ Leonard Ravenhill

அடிமை நான் ஆண்டவரே!

நான் ஒரு அடிமை !
விடுதலை பெற மனமோ இல்லை !
விடுமுறையோ விருப்புவெறுப்போ
வீடுவாசலோ எனக்கென்று இல்லை !

நான் ஒரு அடிமை !
என் எஜமானின் அன்புக்கு நானடிமை !
எஜமானின் பெயரோடு
காதுகுத்தின நானவர் அடிமை !
மகிழ்வேன் அழுவேன்
மன்னவனோடே.. இம்மனங்கவர் அடிமை !

நான் ஒரு அடிமை !
எனக்காய் அழேன்..
விடுதலை வேண்டேன் !
கட்டிவைத்துக் கொண்டேன்..
கர்த்தரோடென்னை.. கல்லறை வரை !

எனைக் கொண்ட எஜமானே !
உம் நாமம் தொழுவேனே !

- Leonard Ravenhill

ஜெபமே என் இருதயத்தைக்
கசக்கிப் பிழியுமளவும்...
ஜெபமே என் துதியாய் தூபமாய்
மேலெழும்புமளவும்...
ஜெபமே என் ஆனந்த பலியாய் மாறுமளவும்...
உலுக்கிக் குலுக்கிக் கலக்கி என்னை
உம்மோடு கரைத்து விடுமே !

ஜீவனுள்ள நாளெல்லாம்
என் இதயமும் எண்ணமும்
ஏக்கமும் நோக்கமும்
உமதாகி உம்மிலேயும் உமக்காகவுமே
உபயோகமாகும் வரை...
உலுக்கிக் குலுக்கிக் கலக்கி என்னை
உம்மோடு கரைத்து விடுமே !

ஜெபத்தின் ஆழ அகல நீள உயர
சிகரங்களைக் கற்றக் கொள்ளும் வரை...
ஜெபத்தில் காத்திருப்பதின் இரகசியத்தை
இரகசியமாய் காத்திருந்து
கற்றுக் கொள்ளும் வரை...
உலுக்கிக் குலுக்கிக் கலக்கி என்னை
உம்மோடு கரைத்து விடுமே !

- Mrs.A.HEAD

இரத்தசாட்சிகளாய் மடிவோம்

இரத்தசாட்சிகளாய் மடிவோம் – நல்
கோதுமை மணியாய் மடிவோம் – மடிவோம்

கல்லெறியப்பட்ட ஸ்தேவான் – நாடு
கடத்தப்பட்டானே யோவான்
கத்தியாலே குத்துண்ட மத்தேயு
கால்கள் பிளவுண்ட மாற்கு – மாற்கு

கழுமரம் ஏறிய லூக்கா
ஈட்டியாலே குத்தப்பட்ட தோமா
பட்டயத்தால் வெட்டுண்ட யாக்கோபு
வாளால் அறுப்புண்ட ததேயு – லபேயு

தோலுரியுண்ட பர்த்தலோமே
சிலுவையில் அறையுண்ட பிலிப்பே
தலைகீழாய் அறையுண்ட பேதுரு
தலை வெட்டப்பட்டானே பவுலே – சவுலே

ஜீவ பலியாய்த் தருவோம்
செத்தாலும் சாகிறோம் என்போம்...
இயேசுவின் பாதையில் செல்வோம்
அவருக்காய் ஜீவனைத் தருவோம் – மடிவோம்

(சீனாவின் இரகசிய சபைகளின் பாடல்)

அடைபட்ட
அக்கினி

98106 46981

பாஸ்டர்.
ரொமில்ட்டன்

இப்புத்தக மொழிபெயர்ப்பாளரைப்பற்றி...

Holy of Holies ஊழியங்களின்
பாஸ்டர் **ஏனோக்கு ஜேம்ஸ்** அவர்களின்
வார்த்தைகளில்...

~~~~~

டெல்லியில் மிஷினரி பாஸ்டராகக் கடந்த முப்பது வருடங்களாகக் குடும்பமாக ஊழியம் செய்து வரும் பாஸ்டர் ரொமில்ட்டன், எனது ஆத்ம நண்பர்.

கிறிஸ்தவ இலக்கியம் மற்றும் எழுத்துப் பணிகளில் தீராத ஆர்வம் கொண்டவர் இவர். கர்த்தருடைய பாரத்தைத் தனது நெஞ்சில் சுமந்து திரியும் இவர், கடந்த பத்து ஆண்டுகளாக உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல், இன்றைய தமிழ்க் கிறிஸ்தவ உலகால் அறியப்படாத இரத்த சாட்சிகளின் சரித்திரங்கள், மிஷினரி வரலாறுகள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் சம்பந்தமான அரிய பல புத்தகங்கள் மற்றும் தேசத்தின் சமகால சம்பவங்களை வேதத்தின் சம்பவங்களோடு இணைத்து எச்சரிப்பின் செய்திகளாகக் கட்டுரைகளாகவும் புத்தகங்களாகவும் படைத்துப் பதிவிட்டு வருகிறவர்.

இவர் ஒரு அசாதாரண ஆவிக்குரிய எழுத்தாளர். நூல் மொழிபெயர்ப்பாளர். இவரது எழுத்து வீச்சும், மொழி (பெயர்ப்பு) நடையும் பிரமிக்க வைப்பவை. நேரடியாய் நெஞ்சைக் குறிவைக்கும் வாள்வீச்சு வார்த்தைகள் இவருடையவை. எளிதாய் யாரும் தொட்டுவிடத் துணியாத அல்லது தொட்டுத் தோல்வி கண்ட லியோனார்டு ரேவன்ஹில் (எழுப்புதல் தாமதிப்பது ஏன்) போன்றோரது சாகச மற்றும் சவாலிடும், செறிவுள்ள ஆங்கில மொழிநடைக்கு சரிநகராய் சமர் புரிந்து வெற்றி கண்ட எழுத்து இவருடையது. ("என்று தணியும் இந்த எழுப்புதல் தாகம்?" என்கிற இவரது இப்புத்தகத்தலைப்பே சேதி பல சொல்லும்.)

ரேவன்ஹில் படைப்புகளின் இந்தத் தமிழ் மொழியாக்கம் இவரது கைவண்ணம். எழுப்புதல், எழுப்புதல் என்பதே இவர் சுவாசமும், ஜீவனுமாகும்.

ஹெரலன் பாப்போவ் – ஒரு கைதியின் டைரி, கேட்டகோம்ஸ் இரத்த சாட்சிகள், நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன், கொலையுண்ணப் போகிறவர்களை விடுவி, உடைத்தெறி, ரேவன்ஹில் தீக்கணைகள், ரேவன்ஹில் பேஜஸ் (Part 1 & 2), எழுப்புதல் ஏவுகணைகள் (Vol 1-5) மற்றும் எழுப்புதல் எழுத்துக்கள் போன்ற மொழிபெயர்ப்புகளின் வரிசையின் முன்னணியில் இப்போது...

"என்று தணியும் இந்த எழுப்புதல் தாகம்?"

"I admire your writings and it's very much connected with today's events..."
- Bro. D. Augustine Jebakumar -

"It's all fire..." - Bro. R. Stanley -

"உங்கள் பேனா முனையைப் பினொகாசின் ஈட்டி முனையாய்க் கண்டு, அது அப்படியே துலங்கி விளங்கிட ஜெபிக்கிறேன்..." - Sis. Padma Mudhaliyar -
~~~~~